சாத்தன்குளம்
அ. இராகவன்
## நூற்களஞ்சியம்
### பதினைந்து தொகுதிகள்


**சமூகச் சீர்திருத்தம்**
குடியரசுக் கட்டுரைகள்

**பண்பாட்டு வரலாறு**
தமிழர் பண்பாட்டில் தாமரை
தமிழ்நாட்டுத் திருவிளக்குகள்
தமிழக சாவகக் கலைத் தொடர்புகள்
இறைவனின் எண்வகை வடிவங்கள்
வேளாளர் வரலாறு

**தொழில் நுட்ப வரலாறு**
நம் நாட்டுக் கப்பற்கலை
தமிழ்நாட்டு அணிகலன்கள்
தமிழ்நாட்டுப் படைக்கலன்கள்
தென்னிந்தியக் கோயில் கட்டிடக்கலை
இசையும் யாழும்

**தொல்பொருள் ஆய்வு**
கோநகர் கொற்கை
ஆதித்தநல்லூரும் பொருநைவெளி நாகரிகமும்

**பொது**
அறிவு இதழ்க் கட்டுரைகள்
ஆய்வுக் கட்டுரைகள்






சாத்தன்குளம் அ. இராகவன் நூற்களஞ்சியம்

3

அமிழ்தம் பதிப்பகம்
B11,குல்மோகர் அடுக்ககம்
15,தெற்கு போக் சாலை
தியாகராயர் நகர்
சென்னை - 600 017

சாத்தன்குளம்
அ. இராகவன்
## நூற்களஞ்சியம்
### தொகுதி - மூன்று
### பண்பாட்டு வரலாறு

# தமிழ்நாட்டுத் திருவிளக்குகள்



அமிழ்தம்

# தமிழ்நாட்டுத் திருவிளக்குகள்

***சாத்தன்குளம் அருணாசலக் கவிராயர் இராகவன்*** *(1902 - 1981) எழுதிய நூல்களில் குறிப்பிடத்தக்கது* தமிழ்நாட்டுத் திருவிளக்குகள் *என்னும் நூலாகும். மனிதர்கள் நெருப்பை தொல் பழங்காலத்தில் வழிபடத் தொடங்கினார்கள். இவ்வழிபாடு பின்னர் விளக்குகளாக வடிவம் பெற்றது. தொல் பழங்கால மனிதர்கள் கல் விளக்கைப் பயன்படுத்தினார்கள். பின்னர் உலோகப் பயன்பாடு வந்தபொழுது உலோகங்களில் விளக்குகளைச் செய்யத் தொடங்கினார்கள். குறிஞ்சி, முல்லைத் திணைகளில் கல் விளக்குகளும் மருதத் திணையில் மண் விளக்குகளும் நெய்தல் திணையில் சங்கு விளக்குகளும் பயன்படுத்தப் பட்டதை இந்நூல் சிறப்பாக வெளிப்படுத்துகிறது. விளக்குகள் சிற்ப முறையில் உருவாக்கப்பட்டிருப்பதையும் அறிகிறோம். கோயில்களில் உருவாக்கப்பட்ட தூண்கள், கருவறை, கோபுரம் ஆகிய பிற இடங்களில் விளக்குகள் எவ்வகையில் பயன்படுத்தப்படுகின்றன என்பதை இந்நூல் சிறப்பாக ஆய்வு செய்திருப்பதைக் காண முடிகிறது. கல்வெட்டுக்களில் திருவிளக்குப் பணிகளுக்காக தானங்கள் வழங்கப் பட்டதை இந்நூல் மூலம் அறிய முடிகிறது. காலப்போக்கில் விளக்குகள் வளர்ச்சி பெற்று மின் விளக்குகளாக திகழ்வதையும் இந்நூல் வெளிப்படுத்தியுள்ளது.*

*பண்பாட்டு வரலாறு*

*நூற்களஞ்சியம் - தொகுதி மூன்று*

# தமிழ்நாட்டுத் திருவிளக்குகள்

சாத்தன்குளம்
**அ. இராகவன்**

அமிழ்தம் பதிப்பகம்

***தமிழ்நாட்டுத் திருவிளக்குகள்*** | சாத்தன்குளம் அ. இராகவன் |
*பதிப்பாளர்* : இ. வளர்மதி | *முதல் பதிப்பு :* 1964 | *மறு பதிப்பு :* 2005 |
*தாள் :* 18.6 கி மேப்லித்தோ | *அளவு :* 1/8 தெம்மி | *எழுத்து :* 10.5 புள்ளி |
*பக்கம் :* 32+192 = 224 | *நூல் கட்டமைப்பு* : இயல்பு (சாதாரணம்) |
*விலை :* உருபா. 210 | *படிகள் :* 1000 | *நூலாக்கம் :* சரவணன், *அட்டை வடிவமைப்பு :* இ. இனியன், பாவாணர் கணினி, தியாகராயர் நகர், சென்னை – 17 | *அச்சிட்டோர் :* வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்ஸ் ஆயிரம் விளக்கு, சென்னை – 6 | *வெளியீடு :* அமிழ்தம் பதிப்பகம், பி–11, குல்மோகர் குடியிருப்பு, 15, தெற்கு போக்கு சாலை, தியாகராயர் நகர், சென்னை – 600 017 | *கிடைக்குமிடம்* : தமிழ்மண் பதிப்பகம், 2 சிங்காரவேலர் தெரு, தியாகராயர்நகர் சென்னை – 600 017, தொ.பே: 2433 9030

இந்நூலாக்கத்திற்கு உதவியவர்கள் :
பேரா. வீ. அரசு மற்றும் ஆய்வாளர், இர. பிருந்தாவதி.

# பதிப்புரை

தமிழ்மொழிக்கும் தமிழினத்திற்கும், வளமும் வலிமையும் சேர்க்கின்ற நூல்களை வெளியிடுவதை நோக்கமாகக் கொண்டு எம் பதிப்பகம் தொடங்கப் பட்டது. தமிழிசை அறிஞர் ஆபிரகாம் பண்டிதர், மொழிஞாயிறு பாவாணர், பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார், தமிழீழ அறிஞர் ந.சி. கந்தையா, செந்தமிழ் அந்தணர் இரா. இளங்குமரனார், பண்டித வித்துவான் தி.வே. கோபாலையர், முனைவர் இரா. இளவரசு போன்ற அறிஞர் பெருமக்கள் எழுதிய நூல் களையும், ஒல்காப் புகழ் தொல்காப்பியத்தையும் ஒரு சேர வெளியிட்டுத் தமிழ்நூல் பதிப்பில் தனிமுத்திரைப் பதித்ததைத் தமிழுலகம் அறியும்.

அந்த அடிச்சுவட்டில் தமிழ்மொழிக்குப் பெருமை சேர்க்கின்ற நூல்களை மீள்பதிப்பு செய்வதற்கு எம் பணியைத் தொடர்ந்த நேரத்தில் நுண்கலைச்செல்வர் சாத்தன்குளம் அ. இராகவன் அவர்கள் எழுதிய நூல்கள் அனைத்தையும் எம் பதிப்பகம் வெளியிட்டால் மொழிக்கும் இனத்திற்கும் யாம் இதுவரையிலும் செய்த பணிக்கு அது மேலும் வலிமை சேர்க்கும் என்றும் அவருடைய நூல்கள் வெளிவருவது மிகமிக இன்றி யமையாதது என்றும் சென்னைப் பல்கலைக்கழக தமிழிலக்கியத்துறையின் தலைவர் பேரா. வீ. அரசு அவர்கள் தெரிவித்தார். அவரின் வழிகாட்டுதலின் பேரில் இந்நூல்கள் வெளிவருகின்றன.

நுண்கலைச் செல்வர் இராகவன் அவர்கள் எழுதி அவருடைய காலத்தில் நூல்களாக வெளிவந்தவற்றைப் பொருள் வாரியாகப் பிரித்து நூற்களஞ்சியமாக உங்கள் கைகளில் தவழவிட்டுள்ளோம். மரபு கருதி மூல நூலில் உள்ளவாறே வெளியிட்டுள்ளோம். இவை மட்டுமன்றி ‘குடியரசு’, ‘ஜனசக்தி’, ‘அறிவு’, ‘தமிழ்முரசு’ இதழ் களில் வெளிவந்த அவருடைய கட்டுரைகளையும் தொகுத்து விரைவில் வெளியிடவிருக்கிறோம்.

இந்த நூல்கள் செப்பமாகவும் நல்ல வடிவமைப் போடும் வருவதற்கு உரிய வழிகாட்டுதல் தந்து பல்லாற் றானும் துணை இருந்து உதவியவர் பேரா. வீ. அரசு ஆவார். மேலும், அவரே இந்நூல்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே மதிப்புரை அளித்துச் சிறப்பு செய்துள் ளார். இவருக்கு எம் நெஞ்சார்ந்த நன்றி என்றும் உரியதாகும். செல்வி இர. பிருந்தாவதி, பேரா. அரசு அவர்களின் ஆய்வு மாணவர். இவர் பேராசிரியரின் வழி காட்டுதலோடு பல்வேறு வகையில் பங்காற்றியும் இந் நூல்கள் பிழையின்றி வருவதற்கு மெய்ப்புப் பார்த்தும் உதவினார். செல்வி பிருந்தாவதி அவர்களை நன்றி யுணர்வோடு பாராட்டுகிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த புலவர் முத்துராமலிங்கம் அவர்கள் பாவாணர் நூல்கள் வெளியிட்டபோது பல்லாற்றானும் துணை யிருந்த பெருமைக்குரியவர். அவர் இந் நூலாசிரியரின் தங்கை வீரலக்குமி அம்மையாரிடமும், மகன் இரா. மதிவாண னிடமும் உரிமையுரை வாங்கி உதவியதோடு இத் தொகுதிகள் வெளி வருவதற்குப் பெரிதும் துணை இருந்தார். அவருக்கும் எம் நன்றி. இந்நூல் தொகுதி களைக் கணினி ஆக்கம் செய்து உதவிய திருமதி. செல்வி (‘குட்வில்’ கணினி) அவர்களுக்கும், மெய்ப்புப் பார்த்து உதவிய கி. குணத் தொகையன், செல்வி பிருந்தாவதி, செல்வி கலையரசி, செல்வி கோகிலா ஆகியோர்க்கும், நூல்கள் நன்முறையில் வருவதற்கு மிகவும் உதவியாக இருந்த குமரேசன், இராமன், சிறந்த வகையில் வடிவமைத்து ஒழுங்குபடுத்திய கணினி இயக்குநர் சரவணன், மேலட்டையை அழகுற வடிவமைப்பு செய்த இனியன் மற்றும் பிற வகைகளில் துணை இருந்த வெங்கடேசன், தனசேகரன், சுப்ரமணியன் ஆகி யோர்க்கு எம் நன்றியும், பாராட்டும்.

இந்நூல் தொகுதிகள் தமிழ் ஆய்வாளர்களுக்கும் தமிழ் உணர்வாளர்களுக்கும் பெரிதும் பயன்படத்தக்க அரிய நூல்களாகும். எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நூல்களைத் தொடர்ந்து வெளியிடுவதில் உறுதியாகப் பணியாற்றுவோம்.

**பதிப்பாளர்**

# உரிமையுரை

*நுண்கலைச் செல்வர் சாத்தன்குளம் அ. இராகவன் அவர்கள் தமிழ்க்கலைகள் பற்றி விரிவாக ஆய்வு செய்து நூல்கள் எழுதியவர். அவர் எழுதிய நூல்கள் இப்பொழுது மீண்டும் அச்சாவது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. இந்நூல்கள் மீண்டும் அச்சாகுமா? என்ற ஐயத்தில் இருந்த எங்களுக்கு இச் செயல் மிகுந்த மகிழ்ச்சி அளிக்கும் செயலாகும். தமிழர் பண்பாட்டு வரலாறு, கலை வரலாறு, தொழில் நுட்ப வரலாறு, தொல்பொருள்ஆய்வு வரலாறு ஆகிய பல துறைகளில் நுண்கலைச் செல்வர் இராகவனார் எழுதிய நூல்களைத் தமிழுலகம் போற்றிப் பாராட்டும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.*

*பல நூல்கள் கிடைத்தும் சில நூல்கள் கிடைக் காமலும் இருந்ததைக் கண்டு கவலை அடைந்த எங்களுக்கு அமிழ்தம் பதிப்பகத்தார் மூலம் இந் நூல்கள் வெளி வருவது எங்கள் குடும்பத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் பெரும் சிறப்பு என்றே கருதுகிறோம். தமிழ்மண் பதிப்பக உரிமையாளர் கோ. இளவழகன் அவர்களுக்கு எங்களது நன்றி என்றும் உரியது. அமிழ்தம் பதிப்பகத்தின் மூலம் இந்நூலை வெளியிடும் திரு இ. இனியன் அவர்களை நாங்கள் பெரிதும் போற்றிப் பாராட்டுகிறோம். அமிழ்தம் பதிப்பகத்தார் நுண்கலைச் செல்வர் நூல்களை வெளியிடுவதை வாழ்த்தி வரவேற்று மகிழ்கிறோம்.*

***இரா. மதிவாணன்***
*(அறிஞர் அ. இராகவனின் மகன்)*
***கா. வீரலட்சுமி அம்மையார்***
*(அறிஞர் அ. இராகவனின் தங்கை)*

*திருநெல்வேலி*
*30.12.2005*

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| மதிப்புரை - வீ. அரசு | | x |
| 1. | விளக்கின் தோற்றம் | 3 |
| 2. | முச்சுடர் வழிபாடு | 18 |
| 3. | தீபத் திருநாள் | 28 |
| 4. | கை விளக்குகள் | 46 |
| 5. | விளக்கின் சிற்ப நுட்பம் | 57 |
| 6. | கோயில் குத்துவிளக்குகள் | 73 |
| 7. | வீட்டுக் குத்துவிளக்குகள் | 81 |
| 8. | கிளை விளக்குகள் | 93 |
| 9. | தூக்கு விளக்குகள் | 104 |
| 10. | தூண் விளக்குகள் | 116 |
| 11. | பாவை விளக்கு | 124 |
| 12. | திருவிளக்குப் பணி | 137 |
| 13. | சாசனச் சான்றுகள் | 147 |
| 14. | மின் விளக்குகள் | 156 |
| 15. | முடிவுரை | 171 |
| படங்களின் விளக்கம் | | 175 |
| இந்நூல் எழுத உதவியாக இருந்த நூல்கள் | | 187 |

# மதிப்புரை

### சடங்கு – சிற்பம்– கலை வரலாறு

> "மக்கள் தம் முன்னோர் வரலாற்றை ஆராய்ந்து அவர்கள் பெற்ற வெற்றியையும் தோல்வியையும் நன்குணர்ந்து தம் வாழ்க்கையில் வெற்றி பெறுமாறு தம் வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொள்வதே முன்னேற்றம் அடைந்த நாட்டிலுள்ள அறிவுடைய மக்கள் கண்ட அநுபவமுறை; ஆனால் தமிழர்கள் தமிழ்நாட்டின் வரலாற்றை இன்றும் சீரிய முறையில் எழுதி முடிக்கவில்லை என்பதை நான் நன்குணர் வேன். என்றாலும், தமிழர்கள் தம்நாட்டின் வரலாற்றோடு தங்கள் நாட்டின் மொழி, இசை, நாடகம், நாட்டியம், அணி, ஆலயம், ஆடை, இலக்கியம், உறைவிடம், குடை, செருப்பு, சமயம், காசு, விளக்கு போன்றவைகளின் வரலாற்றையும் நன்குணரவேண்டும் என்பது எனது பேரவாவாகும்."

*அறிஞர் இராகவன் அவர்கள், இந்நூலின் 'தோற்றுவாய்' என்னும் பகுதியில் மேற்குறித்தக் கருத்தைப் பதிவு செய்துள்ளார். அவர் பதிவு செய்துள்ளவற்றில், இசை, அணி, காசு, விளக்கு ஆகிய துறைகள் சார் வரலாற்றை அவரே எழுதியுள்ளார். இப்பின்புலத்தில், விளக்குகள் குறித்த வரலாறாகத் 'தமிழ்நாட்டுத் திருவிளக்குகள்' என்னும் இந்நூல் அமைகிறது.*

*மனிதர்கள், தங்கள் வாழ்க்கையில் பயன்படுத்தக் கற்றுக்கொண்ட பொருள்களில், அற்புதமானது நெருப்பு. இயற்கையில் உள்ள வேதிப்பொருட்கள், தம்முள் ஏற்படுத்திக் கொள்ளும் எதிர்வினைகள் சார்ந்தே நெருப்பு உண்டாகிறது. மனிதர்கள் நெருப்பை அறியாத காலம் ஒன்றிருந்தது. நெருப்பை அறியத் தொடங்கிய போதுதான்; இயற்கைப் பொருளைச் செயற்கையாக உருவாக்கும் கலையைக் கற்றுக் கொள்ள முடிந்தது. இதில் உணவு*

சமைத்தல் முதலிடம் பெறுகிறது. நெருப்பு மூலம் கிடைக்கும் ஒளியை நிலையாகப் பிடித்து வைத்துக்கொள்ள மனிதன் மேற்கொண்ட முயற்சியே விளக்கு. தொல்பழம் வரலாற்றுத் தொடர்ச்சியுள்ள தமிழ்ச் சமூகத்தில், நெருப்பைப் பயன்படுத்தும் முறைகளில் ஒன்றான விளக்கிற்கும் தொடர்ச்சியான வரலாறு இருப்பதைக் காண்கிறோம். ஐம்பூதங்களில் ஒன்றான நெருப்பு, மனிதர்களின் வழிபடு பொருளாக வடிவம் பெற்ற போது, அதன் விளைவாகவே விளக்கு வடிவமைக்கப் பட்டது. வழிபாடுகளுக்கு விளக்கு பயன்படுத்துவதற்கு முன்பு, மனிதர்களுக்கு அது எவ்வகையில் பயன்பட்டது என்பது குறித்து அறிவதற்கு தமிழ் இலக்கியங்கள் காட்டும் திணை வாழ்க்கை முறை நற்சான்றாக அமைகிறது.

குறிஞ்சி மற்றும் முல்லை நிலங்களில் கல்லால் உருவாக்கப்பட்ட விளக்கு; மருதநிலப் பகுதியில் மண்ணால் செய்யப்பட்ட விளக்கு; நெய்தல் பகுதியில் சங்கால் செய்யப்பட்ட விளக்கு ஆகியவை, புழக்கத்தில் இருந்தமை குறித்து இந்நூல் சிறப்பாக ஆய்வு செய்திருப்பதைக் காண்கிறோம். மனிதர்கள் தாங்கள் வாழும் பகுதிகளில் கிடைக்கும் பொருட்களையே தங்கள் தேவைகட்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதை இதன் மூலம் நாம் உணர முடிகிறது. தமிழ் இலக்கியம் காட்டும் திணை சார் வாழ்க்கை மரபு என்பது இயற்கை நெறி சார் வாழ்முறையோடு கொண் டுள்ள உறவையும் இதன்மூலம் புரிந்துகொள்ளலாம்.

இயற்கைப் பொருளான நெருப்பை, செயற்கை யாக உருவாக்கப்பட்ட விளக்கு என்ற அமைப்போடு மனிதர்கள் இணைத்திருக்கிறார்கள். இந்த இணைப்பின் மூலம் பல்வேறு புதிய வளர்ச்சிக்கும் வழி கண்டிருப் பதைக் காண்கிறோம். இவ்விளக்கு மனிதர்களின் நம்பிக்கையைப் புலப்படுத்தும் சடங்குகளாக வடிவம் பெற்றுவிட்டன. சடங்குகளாக வடிவம் பெறும்போது, சடங்குப்பொருள், பௌதீகப் பொருளாகவும் உருப் பெறுகிறது. அப்போது உருவங்கள் உருவாக்கப்படு கின்றன. இதன்மூலம் ஓவியங்களும் சிற்பங்களும் உறுப்பெறுகின்றன. திராவிடச் சிற்பக்கலை வளர்ச்சி யில் விளக்குகள் பல்வேறு நுட்பங்களைக் கொண்ட தாக அமைந்துள்ளன. இவ்வகையில், தமிழகச் சிற்ப வகைகளில், விளக்குச் சிற்பத்திற்கு முதன்மையான

இடம் இருப்பதை அறிகிறோம். இந்நூல் இவ் வரலாற்றைச் சிறப்பாகப் பதிவு செய்திருப்பதைக் காண் கிறோம். கைவிளக்குகள், குத்து விளக்குகள், தூக்கு விளக்குகள், தூண்விளக்குகள், பாவை விளக்குகள் ஆகிய பிற விளக்குகளின் அமைப்புகள், மேற்குறித்தப் பின்புலத்தில் புரிந்து கொள்ள ஏதுவாக இருப்பதைக் காண்கிறோம்.

மனிதர்களின் நம்பிக்கை சார்ந்த நிலைகளில் ஒளி x இருட்டு என்ற இருமை ஆழமாக இடம்பெற் றிருப்பதைக் காண்கிறோம். மனித வாழ்க்கையின் குறியீடாக இவ்விருமைப் பயன்படுத்தப்படுகிறது. பழங்காலத்தில் இளம்பெண்ணை விளக்கு முன் அமர வைத்து, அவளது கழுத்தில் திருமண நாண் பூட்டி னார்கள். இச்செயல் ஒளிக்கும் மனித வாழ்க்கைக்கு மான நம்பிக்கை, மனிதர்களிடம் இடம் பெற்றதை உறுதிப்படுத்துகிறது. இவ்வகையான, புரிதலுக்கு இந்நூலில் காணப்படும் பல செய்திகள் உதவுகின்றன. இயற்கை நிகழ்வு - மனித நம்பிக்கை மற்றும் சடங்கு - நெருப்பின் இடம் - மனிதர்களின் வாழ்க்கை - இதன் வழி கட்டமைக்கப்படும் பண்பாடு என்பதில் விளக்கின் இடத்தை நாம் புரிந்து கொள்ளலாம்.

அறிஞர் இராகவன், தமிழகத்தில் விளக்குப் பயன்படுத்தப்பட்ட முறைகளை வரலாற்றுப் போக்கில் பதிவு செய்துள்ளார். இப்பதிவின் மூலம் பல செய்தி களை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. திணைசார் பண்பாட்டு வளர்ச்சி, விளக்கில் உருவாகும் சுடர் களைக் கொண்டு வழிபடும் முறை, ஒளி வழிபாடு என்பது எவ்வகையில் பின்னர் விழாவாக வடிவம் பெற்றது ஆகிய பிற செய்திகளை இந்நூல் விரிவாக விவாதிக்கிறது. இந்நூல் புலப்படுத்தும் செய்திகளைக் கொண்டு, எவ்வகையான பண்பாட்டு வரலாற்றைக் கட்டமைக்க முடியும் என்பது இந்நூற் பயனாக அமையும்.

மனித சமூக வரலாறு; தொல் பழம் கால மனிதர்கள், பின்னர் படிப்படியாக வளர்ச்சியடையும் மாற்றங்கள், அதன் மூலம் ஏற்படும் விளைவுகள் என்றே அமைவதைக் காண்கிறோம். இப்போக்கில் மனிதர்கள் பயன்படுத்தும் பொருட்களே, மேற்குறித்த வரலாற்றை அறிவதற்கு அடிப்படைகளாக அமைகின்றன. இப்

பொருட்கள், அடிப்படையில் இயற்கையில் உள்ள நிலம், நீர், காற்று, நெருப்பு, வானம் ஆகியவற்றைச் சார்ந்தே அமைகின்றன. இவை ஒவ்வொன்றும் மனித சமூகத்தின் வரலாற்றில், பல் பரிமாண வளர்ச்சி பெறுவதைக் காண்கிறோம். இந்நூல் அவ்வகையில், நெருப்பு குறித்த வரலாற்றை அறியும் அடிப்படைத் தரவுகளைக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். இத் தரவும் தமிழக வரலாற்றுப் பின்புலத்தை அடிப்படை யாகக் கொண்டே விவாதிக்கப்படுகின்றன. இப் பொருளை, இக்கண்ணோட்டத்தில் விவாதிக்கும் முதல் நூலாகவும் இந்நூல் அமைகிறது. சமூக வரலாற்று மாணவர்கள், சிற்பிகள், ஓவியர்கள், நவீன இளம் அறிவியல் அறிஞர்கள் ஆகிய பல்துறைச் சார்ந்த வர்களுக்கும் உதவும் வகையில் இந்நூல் செய்திகள் உள்ளன. மேற்குறித்த ஒவ்வொருவரும் அவரவர் கோணத்தில் புரிந்து கொள்ளவும் இந்நூல் உதவும்.

குறிப்பிட்ட தேசீய இனத்தின், பண்பாட்டு வரலாற்றை அறிவதற்கு, அவ்வினம் வாழும் நிலப் பகுதிகளில் இடம் பெற்றுள்ள பொருட்களே முதன்மைத் தரவுகளாக அமைகின்றன. திராவிடக் கட்டிடக்கலை மரபை அறிவதற்குச் சிற்பங்களின் பல்வேறு கூறுகள், அடிப்படைகளாக அமைகின்றன. சிற்பங்கள் உருவாக்கப்பட்டுள்ள முறைமை என்பது ஒரு புறமிருக்க, எந்தெந்த வடிவங்களை, உருவங்களை சிற்பிகள் தங்களது சிற்பநுட்பத்தைக் காட்ட எடுத்துக் கொள்கிறார்கள் என்பதும் முக்கியமாக அமைகிறது. தமிழகத்தின் சிற்பங்களில் மிக விரிவாக இடம் பெற்றிருப்பது விளக்குகளே ஆகும். கடவுளர்கட்கு கொடுத்த அடைமொழியான ‘திரு’ என்பதை விளக்கு களுக்கும் கொடுத்திருக்கும் இம்மரபில், அவ்விளக்கு களைச் செதுக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட நுட்பங் களும் சிறப்பாக அமைவதைப் புரிந்து கொள்ள முடிகிறது. எனவே, விளக்குகள் பற்றிய இந்நூலின் விவாதம் என்பது, தவிர்க்க இயலாத வகையில், அவற்றை உருவாக்கும் வடிவங்கள் பற்றிய ஆய்வோடும் இணைந்து கொள்கிறது. சிற்பமும் ஓவியமும் இவ்வகை யில் முதன்மையாக அமைகின்றன. மனிதர்கள், தம் வாழ்விடங்களுக்கான வடிவ அமைப்பை உருவாக்கிக் கொள்வதில் பல்வேறு முறைகளைப் பின்பற்று கிறார்கள். காற்று, ஒளி ஆகியவை அவ்விடங்களில்

எவ்வகையில் இடம்பெற வேண்டும் என்பதில் அக்கறையாக இருக்கிறார்கள். இதில் இயற்கை ஒளிக்கான அமைப்பையும், செயற்கை ஒளிக்கான அமைப்பையும் வேறுபடுத்தி அமைக்கிறார்கள். வாழ்விட வெளிகளில், விளக்கு ஒளி எப்படி அமைய வேண்டும் என்பதின் வடிவமாகவே, விளக்குகள் அமைக்கப்படுகின்றன. இவ்வகையில், தேவை-பொருளின் வடிவம்-சிற்பத்தின் நுட்பம் ஆகியவை தமக்குள் கொண்டுள்ள உறவை அறிய முடிகிறது. இந்நூலில் பேசப்பட்டுள்ள பல்வேறு விளக்குகளின் அமைப்பு முறைகளை, மேற்குறித்தப் பின்புலத்தில் அணுக முடியும். அவ்விதம் அணுகும் போது, தமிழ் நிலப்பகுதியில் வாழ்ந்த மக்களின் வாழ்விட அமைப்பிற்கும் அவர்களால் உருவாக்கப்பட்ட சிற்ப அமைப்பிற்குமான உறவைப் புரிந்து கொள்ள முடியும். இப்புரிதலுக்கு விளக்குகள் குறித்த இந்நூல் தகவல்கள் பெரிதும் உதவுகின்றன. தமிழர்களின் இவ்வகையான மற்றும் பல புழங்கு பொருட்களைப் புரிந்து கொள்ளவும் இவ்வடிப்படை உதவக்கூடும்.

தொல்பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட விளக்குகளின் மரபு எவ்வகையில், நவீன விளக்குகள் உருவாக்கத்தில் உதவுகிறது என்பதும் முக்கியமாகும். மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, அண்மைக் காலங்களில் உருவாக்கப்படும் விளக்குகளின் வடிவங்கள், தொல்மரபின் செல்வாக்கை உள்வாங்கியிருப்பதைக் காண்கிறோம். ஒளியை உமிழும் இழைகள் ஒன்றாக இருப்பினும், அவ்விழைகளைச் சுற்றி அமைக்கப்படும் வடிவங்கள், பல்வேறு வகையில் இருப்பதைக் காண்கிறோம். இவை நமது சிற்பக் கலையின் தொடர்ச்சியாகவே உள்ளன. உலகின் பல்வேறு இடங்களில் உள்ள விளக்குகளின் அமைப்பிற்கும், அதைப் பயன்படுத்திய மக்கள் கூட்டத்தின் நம்பிக்கை மற்றும் சடங்கு சார்ந்த உறவுகளுக்கும் இடையே உள்ள தன்மைகளையும் மானிடவியல் கண்ணோட்டத்தில் புரிந்து கொள்ள விளக்குகள் உதவுகின்றன. இவ்வகையில், இந்நூல் தனித்தன்மையுடன் இருப்பதைக் காண்கிறோம்.

கலை வரலாறு பற்றிப் பேசும்போது, பேசப்படும் செய்திகளுக்கான தரவுகளைக் காட்சி வடிவில் அநுபவிப்பது அவசியம். இதனை நிறைவேற்றும் வகையில் இந்நூலில் அமைந்திருக்கும் படங்கள்

உள்ளன. தாம் 200 மேற்பட்ட விளக்கு வகைகளைச் சேகரித்து வைத்திருந்ததாகவும் இராகவன் கூறுகிறார். மேற்குறித்த செய்திக்கு, இச்செயல் மேலும் வலு வூட்டும் வகையில் அமைந்துள்ளது.

'தமிழ்நாட்டுத் திருவிளக்குகள்' எனும் இந்நூல், இன்றைய சூழலில், எந்தெந்தக் கூறுகளில், நமது கவனத்துக்குரியதாக அமைகிறது என்பதும் முக்கியம்.

- தமிழர்களின் வழிபாட்டு வரலாற்றில் ஒளிக்கும் அதனை வெளிப்படுத்திய விளக்குக்கும் இருந்த முக்கியத்துவத்தை அறிய முடிகிறது. இயற்கை வழிபாடே தமிழர்களின் வழிபாடு என்ற கருத்தாக்கத்தை உறுதி செய்து கொள்ள இந்நூல் அடிப்படையாக அமைகிறது.
- தமிழர்களின் சிற்ப வரலாற்றில், அவர்களது நம்பிக்கைகளுக்கும் அவை சார்ந்த சடங்கு களுக்கும் உள்ள உறவை அறியவும் இந்நூல் பெரிதும் உதவும்.

அறிஞர் இராகவன், தமிழர்களின் கலை வரலாற் றின் பல கூறுகளை ஆவணப்படுத்துவதில் அக்கறை செலுத்தியுள்ளார். கலை வரலாற்றின் மூலமே பண் பாட்டு வரலாற்றைக் கட்டமைக்க இயலும். இவ்வகை யில் தமிழர் பண்பாட்டு வரலாற்றை கட்டமைத்து, அதன் மூலம் தமிழ்ச் சமூக வரலாறு எழுத உதவும் அரிய தரவுகளில் ஒன்றாக இந்நூல் அமைகிறது.

இந்நூலை வெளியிடும் அமிழ்தம் பதிப்பகத்தின் முயற்சியை பெரிதும் பாராட்ட வேண்டிய கடமை நமக்கு உண்டு.

**வீ. அரசு**

பேராசிரியர், தலைவர்
தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்.

# தோற்றுவாய்

விளக்கு தமிழர்களின் வரலாற்றோடு தொடர்புடைய இன்றியமையாத பொருள். அது பண்டு தொட்டு இன்றுவரை தமிழர்களின் இல்லத்தில் ஒரு மதிப்பிற்குரிய மங்கலப் பொருளாக மதிக்கப்பட்டு வருகிறது.

இந்த இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு சிற்றூருக்கும் மின் விளக்குகள் வந்துவிட்டன. எண்ணெய் வார்த்து எரிக்கும் பழைய விளக்குகளுக்கு அவசியமில்லாத நிலை ஏற்பட்டுவிட்டது.

என்றாலும் இன்று ஒவ்வொரு தமிழரின் வீட்டிலும் பழைய விளக்குகள் இருந்தே வருகின்றன. அவைகள் வெறும் காட்சிப் பொருளாக வைக்கப்படவில்லை. ஒவ்வொரு நாளும் மாலையில் அவைகளை நன்றாய் விளக்கி எண்ணெய் வார்த்துத் திரியிட்டுப் பூவிட்டு நெருப்பேற்றி வணங்கிப் பிரார்த்திக்கின்றனர். அதன் பின்னர்தான் மின் விளக்கேற்றுவர். திருவிளக்கேற்றிய பின்னர்தான் பிள்ளைகள் பாடம் படிக்க ஆரம்பிப்பர்; விளக்கேற்றிய பின்தான் வீட்டின் தலைவி இரவில் செய்ய வேண்டிய தனது காரியங்களைக் கவனிப்பாள்.

தமிழர்கள் பெரும்பாலும் சைவராகவோ வைணவராகவோ இருப்பர். இவர்கள் இல்லங்களில் சிவனுடைய உருவங்களோ, திருமாலின் உருவங்களோ இல்லாமல் இருக்கலாம்; ஆனால் திருவிளக்கு இல்லாமல் ஒரு இல்லமும் இராது.

திருவிளக்கைச் சைவர்கள் சிவனுடைய சின்னமாகவும், வைணர்கள் திருமாலின் சின்னமாகவும் எண்ணி வழிபடுகின்றனர். ஆனால் எல்லோரும் திருவிளக்கை, விளக்கு நாச்சியார் என்றும் தீபலட்சுமி என்றும் அழைக்கின்றனர்.

சைவர்களுக்கும் வைணவர்களுக்கும் பொதுவான தெய்வமாக ‘அரி அரன்’ இருப்பது போல் இரு சமயத்தார்க்கும் திருவிளக்குப் பொதுவான தெய்வமாக இருந்து வருகிறது.

தமிழர்கள் விளக்கைத் தெய்வச் சின்னமாக மதித்து வழி பட்டு வருகின்றனர். அதோடு மேனாட்டினர் கண்ட மெழுகு வர்த்தி விளக்கைப் போல் வைக்காது அதில் கலைநயம் பொலிய அழகுற அமைத்திருக்கின்றனர்.

தமிழ் மக்கள் விளக்கை திருவிளக்கு என்றனர் அதில் கலை அம்சத்தைப் புகுத்தினர்; போற்றினர்; வணங்கினர். ஆனால் அதைப் பற்றி தமிழர்கள் இதுவரை ஒரு நல்ல நூல் இயற்றினர் என்று கூறுவதற்கில்லை.

எனவே, நீண்ட நாளாக விளக்கைப் பற்றி ஒரு நல்ல ஆராய்ச்சி நூல் வெளிவர வேண்டும் என ஆசைப்பட்டுக் கொண்டு இருந்தேன். இப்பொழுது தான் அதை நிறைவேற்றும் வாய்ப்புக் கிடைத்தது.

**திருவிளக்கின் கலைச் சிறப்பு**

விளக்கின் விரிந்த வரலாறாக நான் இங்கு எதுவும் வரைய விரும்பவில்லை. விளக்கின் விரிவான வரலாற்றை எழுத எண்ணி னால் மனிதன் செயற்கை முறையில் நெருப்பை உண்டாக்கிய விதத்தையும், அப்பால் அவன் எண்ணெயைக் கண்ட முறையை யும், அப்பால் கல்விளக்கு, மண் விளக்கு, உலோக விளக்குப் போன்றவைகளை உருவாக்கிய முறைகளையும் உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டிலும் விளக்குப் பரிணமித்த விதங்களையும் விளக்க வேண்டும்.

நான் விளக்கின் தோற்றத்தைப் பற்றியும் நெய்யின் அபி விருத்தியைப் பற்றியும் ஒருவாறு ஆராய்ந்துள்ளேன். என்றாலும் தமிழ்க் கலையை வளர்க்க முன் வந்து நிற்கும் எனக்குத் திருவிளக்கில் காணும் கலை அம்சமே என்னைப் பெரிதும் கவர்ந்துள்ளது. என்றாலும் வரலாறும் என்னை விட்டு விடவில்லை.

ஆங்கிலத்தில், தேசிய விளக்குகள் - அதாவது தெரு விளக்குகள் வந்த வரலாற்றைப் பற்றியும் அனைத்துலக விளக்கின் கதைகளைப் பற்றியும் பல கட்டுரைகளும் நூற்களும் வெளி வந்துள்ளன. அவற்றை நான் நன்கு படித்துள்ளேன். என்றாலும் நான் அறிந்த வரையில் ஆங்கிலத்தில் கூட நிறைவுடைய நூல்கள் வெளிவந்திருப்பதாகத் தெரியவில்லை.

திரு.எம்.டபிள்யூ. இராபின்ஸ் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ‘விளக்கின் வரலாறும், மெழுகுவர்த்தி விளக்கு

களும்' என்ற ஒரு நூலைப் பார்த்திருக்கின்றேன். அந்நூலைக்கூட எல்லாக் காலங்களிலும் எல்லா நாடுகளிலும் எழுந்த எல்லா விளக்குகளையும் விளக்கேற்றும் சாதனங்களையும் விஞ்ஞான ரீதியாக எழுதப்பட்ட ஒரு நிறைவான விளக்கின் கலைக் களஞ்சியம் என்று கூறமுடியாது.

**என் வீட்டில் 200 விளக்குகள்**

நான் எனது இல்லத்தில் சேர்த்து வைத்திருக்கும் 200க்கு மேற்பட்ட விளக்குகளையும் தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம் முதலிய நாடுகளிலுள்ள கோயில்களிலும் வீடுகளிலும் தொல் பொருள் காட்சிசாலைகளிலுமுள்ள ஆயிரக்கணக்கான விளக்கு களையும் பார்த்து ஆராய்ந்துள்ளேன்!

500க்கு மேற்பட்ட அரிய விளக்குகளின் நிழற்படங் களையும் சேகரித்து வைத்துள்ளேன். இவைகளைப் பற்றித் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதிய பல கட்டுரைகளையும் அரசாங்கத் தொல் பொருள் காட்சிசாலையிலிருந்து வெளி யிடப்பட்ட அறிக்கைகளையும், விளக்கைப் பற்றிய வெளி நாட்டுப் பிரயாணிகள் எழுதிய குறிப்புகளையும் பல சமயச் சான்றோர்கள் எழுதிய பாட்டுகளையும் விளக்கிற்காகப் பல பக்தர்களும், மன்னர்களும் எழுதிவைத்த சாசனங்களையும் மானியங்களையும் பற்றி ஆராய்ந்திருக்கின்றேன்.

1955ஆம் ஆண்டு முதல் விளக்கைப் பற்றி ஒரு நல்ல நூல் எழுத வேண்டும் என்ற அவாவோடு பல குறிப்புகளை எழுதி வைத்துள்ளேன். எனவே இதுவரை விளக்கைப் பற்றி நான் பல்வேறு சமயங்களிலும் எழுதி வைத்த குறிப்புகளையும் அறிஞர் களின் மொழிகளையும் பிற சாதனங்களையும் ஆராய்ந்து விளக்கைப்பற்றி ஒரு நல்ல ஆராய்ச்சியை இங்கு எழுத முன் வந்துள்ளேன்.

முப்பது ஆண்டுகளுக்கு முன் நான் தமிழ் நாட்டுப் பகுத்தறிவுச் சங்க அமைச்சராகவும் 'அறிவு' என்ற பத்திரிகை ஆசிரியராகவும், சுய மரியாதை இயக்க'ப் பிரமுகராகவும் இருந்தேன். அன்று எனக்குக் கலை, கைப்பாக இருந்தது. "கோயில்கள் குச்சுக் காரிகளின் இல்லம் போல் காணப் படுகிறது" என்று கூறிய வார்த்தைகள் செவிக் கமுதாய் இருந்தது. சமய ஞானிகளெல்லாம் சோற்றுக்காகப் பிதற்றும் பித்தர் களாகக் காணப்பட்டார்கள்.

என்றாலும் வடலூர் இராமலிங்கம் பிள்ளை எனக்கு ஒரு சமரச சன்மார்க்க ஞானியாகவும் உண்மையை உரைக்கும் உயர் நெறியாளராகவும் உத்தமராகவும் காணப்பட்டார்.

எனவே எனது உழுவலன்பர் சாமி சிதம்பரனார். எங்கள் கருத்துக்கிசைந்த இராமலிங்க சுவாமிகளின் பாடல்களைத் திரட்டி அச்சிடும்படி கொடுத்தார். அதனை இராமலிங்க சுவாமிகளின் பாடல் திரட்டு என்ற பெயருடன் அன்று குடி அரசுப் பதிப்பகத்தின் மூலம் ஒரு சிறு நூலை வெளியிட்டேன்.

அது முதல் இராமலிங்க சுாவமிகளை நாங்கள் சுய மரியாதைக்காரரில் ஒருவராக மதித்து வந்தோம். இன்றும் மதித்து வருகிறோம். அவரது பாடலில் எனது உள்ளத்தைக் கவர்ந்த பாடல் ஒன்றுண்டு. அதனை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. அது வருமாறு :

**அருட்பாவில் விளக்கு**

***"அருள்ஒளி விளங்கிட ஆணவ மெனுமோர்***
***இருளற என்னுளத் தேற்றிய விளக்கே***
***துன்புறு தத்துவத் துரிசெலாம் விளக்கே நீக்கிநல்***
***இன்புற என்னுளத் தேற்றிய விளக்கே***
***மய லற வழியா வாழ்வு மேன் மேலும்***
***இயலுற வென்னுளத் தேற்றிய விளக்கே***
***நடுவெளி நடுவே நாட்டிய விளக்கே***
***கரு வெளி யனைத்துங் கதிரொளி விளங்கிட***
***உருவெளி நடுவே ஒளிதரு விளக்கே"***

இப்பாடலே பகுத்தறிவு வாதியாய் இருந்த எனக்கு விளக்கைப் பற்றி எழுத ஊக்கம் அளித்தது.

நிற்க, செயற்கை முறையில் ஒளியை உற்பத்தி செய்து அதைப் பயன்படுத்தும் முக்கிய விசயங்களையும் குடும்பத்திலும், சமூகத்திலும், வாழ்க்கையிலும், சடங்கிலும், செயற்கை ஒளிக் குள்ள முக்கியத்துவத்தையும் அதனுடைய அறிய வரலாற்றிற்கு நாம் அளித்திருக்கும் சொற்பக் கவனத்தையும் சிந்தித்த போது, அது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

பல்வேறு நாடுகளிலும், பல்வேறு சகாப்தங்களிலும் விளக்கின் ஒளியைப் பற்றிய கருத்துகளை விளக்கமாக எழுதப் பட்ட முற்காலக் குறிப்புகள் எதுவும் இதுவரை நமக்குக் கிட்ட

வில்லை. தற்காலக் குறிப்புகள் கூட நமக்குச் சரிவரக் கிடைக்க வில்லை. மேலும், வண்ண ஓவியர்களும், உருவெழுதுகிறவர் களும் தங்களது காலங்களில் தொடர்ச்சியாய் மேனாட்டு இரவு வாழ்க்கையைப் பற்றி அறிந்த குறிப்புகளைக் கொண்டு அரிய ஓவியங்கள் பல தீட்டியுள்ளார்கள்.

தமிழ் நாட்டிலோ சங்கிலும், கல்லிலும், மண்ணிலும், வெண்கலத்திலும் விளக்குகளின் வடிவங்கள் தீட்டப்பட்டிருக் கின்றன.

ஓவியத்தில் வெளிச்சத்தின்.... தோற்றத்தைக் காட்டாமல் இரவு வாழ்க்கையை விவரிக்க முடியாது.

உலாந்தர முறையில் கலை பயின்ற ஓவிய வல்லுநர்கள் தங்களின் உட்புறக் காட்சியின் நுணுக்கத்தை வெளிக்காட்டத் தாங்கள் தீட்டிய படங்களில் விளக்கின் ஒளியை நன்றாகக் காட்டுகின்றார்கள். பெரும்பாலான அறைகளில் வெளிச்சம் தரும் கருவிகளின் பகுதிகளை ஓவியர்கள் காட்ட மறுப்பதே இல்லை. சில சமயங்களில் விளக்கிற்கு அவசியம் இல்லாமல் இருந்தாலும் ஒரு மூலையில் ஒரு சிறு விளக்கைத் தீட்டத் தவறுவதே இல்லை.

மனித சமூக வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்திலிருந்து இன்று வரை - அதாவது மக்கள் இனத்தின் காட்டுமிராண்டி வாழ்க்கையிலிருந்து இன்றைய நனி சிறந்த நாகரிக வாழ்க்கையின் உச்ச நிலை வரை, ஒளியும் அதிலிருந்து அரும்பிய அகல்விளக்கும் வாழ்க்கைக்கு வேண்டிய இன்றியமையாத அரிய சாதனமாக இலங்குகின்றன.

ஒளி தரும் திருவிளக்கு, உலகின் இருளை அகற்றி இரவைப் பகலாக மாற்றுகிறது. அஞ்ஞானத்தை அகற்றி மெய்ஞ் ஞானத்தை விளக்குகிறது.

மக்களின் இருண்ட உள்ளத்திற்கு அறிவுச் சுடர் ஊட்டும் ஞாயிறாகத் திகழ்கிறது. வாழ்க்கைக்கு, உணர்ச்சியும், ஊக்கமும், உற்சாகமும் ஊட்டுகிறது. குளிர் காலத்தில் கொடிய பனியால் நடுநடுங்கும் மக்களுக்கு ஒளி சூடேற்றி உடம்பிற்கு ஒரு தெம்பை உண்டாக்குகிறது.

மக்களுக்கு வேண்டிய உணவைப் பக்குவப்படுத்தி உடம்பை உரஞ் செய்ய உதவுகிறது. ஒளியே உலகில் மக்களுக்கு உயிராக ஒளிர்கிறது. மக்கள் உடம்பில் ஒளியின் வெப்பம் இல்லா

விட்டால் அவர்கள் இறந்து விட்டவர்களாகக் கருதப்படு கிறார்கள்.

எனவே, பண்டைத் தமிழன் ஒளியை இறைவனாகக் கண்டான். 'சோதியே' சுடரே, சூழ் ஒளி விளக்கே' என்று புகழ்ந்து பாடினான். இறைவனை 'விறகில் தீயினன்' என்றும், 'மறைய நின்றுளான் மாமணிச் சோதியான்' என்றும் இறைஞ்சினான்.

மனித வாழ்விற்கு வளம் அளிக்கும் மகளை அவன் குடும்ப விளக்கு என்று கூறினான். ஒளியால் இரவிலும் இருண்ட மேகங்கள் சூழ்ந்த பகலிலும் அவன் வாழ்வு செம்மையாய் நடை பெறுகிறது. இரவிலும் இயந்திரங்களில் உணவையும், உடையை யும் மலை மலையாய்ச் செய்து குவிக்க ஒளியே உதவுகிறது.

மக்கள் முன்னேற்றத்திற்கு ஒளியே வழிகாட்டும் விடி வெள்ளியாகத் திகழ்கிறது. தமிழர்கள் மாரிகாலத்தில், இருண்ட கார் மேகங்கள் சூழ்ந்த கார்த்திகைத் திங்களில் விளக்கீட்டுத் திருநாளை ஏற்படுத்தினர். அன்று எங்கும் ஜெகஜோதியாக விளங்கக் கோடானு கோடி விளக்குகளை ஏற்றி மகிழ்ச்சிப் பெருக்கால் கொண்டாடிய அத்திருநாள் பெரும் பொருள் உள்ளதாக இருக்கிறது. அதனை, அறிஞர்கள் புகழ்வதில் ஆச்சரியமில்லை.

**வாழ்க்கையுடன் ஒன்றியது விளக்கு**

நாம் இன்று விளக்கின் பெருமையைச் சரிவர உணரா விடினும் அது நமது வாழ்விலும், 'தாழ்விலும் நமது சடங்கு களிலும், விழாக்களிலும் பெரும் பங்கு பெற்று வருகிறது. நாம் ஒளியின் உயர்வைச் சரிவர உணராவிடினும் அது, நம்மை அறியாமலே நாம் அதன் உயர்வை ஏற்றுக்கொள்ளும்படி செய் திருக்கிறது.

விஞ்ஞானத் துறையிலே இந்தியா இறுதி நிலையில் நின்றது. அத்திபூத்தாற்போல் இந்தியாவில் ஒரு விஞ்ஞானி எழுந்தான். அவன் தமிழ்நாட்டிலே பிறந்து தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு, தமிழ்ப்பண்பாட்டின் நடுவிலே தலைதூக்கிய திரு. சி.வி. இராமன். அவன் உலகிலே எண்ணற்ற விஞ்ஞானத் துறைகள் இருக்க, ஒளியைப்பற்றி ஆராய்ந்த உலகப் புகழ்பெற்ற ஒப்பற்ற விஞ்ஞான மேதையாய் விளங்குகிறான். ஒளியைப் பற்றித் தமிழர்கள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக ஆராய்ந்துவந்த பாரம்பர்யத்துவந்தான் சர்.சி.வி. இராமனிடம்

ஒளி ஆராய்ச்சியாகப் பரிணமித்திருக்கிறது என்று கூறினால் அது மிகையாகாது என்று எண்ணுகிறேன்.

விளக்கின் விளக்கமான வரலாற்றினின்றே நமது தத்துவ சாஸ்திரங்கள் அரும்பியுள்ளன. எனது உரைகளை ஆழ்ந்து சிந்திக்கிறவர்கள் விளக்கின் வரலாற்றையும் அபிவிருத்தியையும் உணருவதோடு அதன் தத்துவத்தையும் உணர்ந்து இத்துறையில் சீரிய ஆராய்ச்சியில் இறங்குவார்கள் என்ற எண்ணத்தோடே இந்நூலை எழுத முனைந்தேன்.

மக்கள் தம் முன்னோர் வரலாற்றை ஆராய்ந்து அவர்கள் பெற்ற வெற்றியையும், தோல்வியையும் நன்குணர்ந்து தம் வாழ்க்கையில் வெற்றி பெருமாறு தம் வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொள்வதே முன்னேற்றம் அடைந்த நாட்டிலுள்ள அறிவுடைய மக்கள் கண்ட அனுபவ முறை. ஆனால் தமிழர்கள் தமிழ்நாட்டின் வரலாற்றை இன்னும் சீரிய முறையில் எழுதி முடிக்கவில்லை என்பதை நான் நன்குணர்வேன். என்றாலும், தமிழர்கள் தம் நாட்டின் வரலாற்றோடு தங்கள் நாட்டின் மொழி, இசை, நாடகம், நாட்டியம் அணி, ஆலயம், ஆடை இலக்கியம், உறைவிடம், குடை, செருப்பு, சமயம், காசு, விளக்கு போன்ற வைகளின் வரலாற்றையும் நன்குணர வேண்டும் என்பது எனது பேரவாவாகும்.

வரலாறு, வாழ விரும்பும் மக்களுக்கு நல்ல பாடமாகும்; வரலாறு கஷ்ட காலங்களில் கைகொடுக்கும்; நாம் செய் வதின்னதெனத் தெரியாது தயங்கி நிற்கும் பொழுது நமக்கு அறிவுச் சுடர்காட்டும். மனிதன் இயற்கையின் போக்கிற்கேற்பத் தன்னையும், வாழ்க்கை முறையையும் மாற்றியமைத்துக் கொண்டதாலே வளம் பெற்று வாழ்கிறான். அவன் இயற்கைக்கு முரணாகத் தன் வாழ்க்கையை மாற்றியமைக்க முற்பட்ட பொழுதெல்லாம் இடருண்டு வீழ்ந்திருக்கிறான். இதுவே அவனது வரலாற்றில் காணப்படும் உண்மை.

பழங்கால வாழ்க்கை முறைகளிற் சில இக்கால மக்களின் வாழ்க்கை முறைக்கு ஒத்துவராத போதினும் அவற்றை நாம் அறிந்திருப்பதில் தவறொன்றும் இல்லை. பண்டைக்கால வாழ்க்கை முறைகூடச் சில சமயங்களில் நமது உயிருக்கு உறுதுணையாக நிற்கும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

எடுத்துக்காட்டாக 1914ஆம் ஆண்டில் நடைபெற்ற ஐரோப்பிய மகா யுத்தத்தில் ஒரு சமயம் நேசதேசப்படைகள்

பகைவர்களின் தாக்குதல்களினால் சிதறுண்டு போயின. ஒருசில போர்வீரர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

**விளக்கினால் உயிர்தப்பினர்**

அவர்கள் ஒரு காட்டில் நீண்ட நேரம் மறைந்திருக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. அவர்களிடத்தில் போதிய உணவில்லை. சிறிதளவே இருந்தது, அதுவும் உண்பதற்கு உகந்ததாக இல்லை. பசியோ அவர்களை வாட்டி வதைத்தது. அவர்கள் பச்சைப் புல்லையும் தின்று பசியாறத் தயாராயினர். ஆனால் அவர்களிட மிருந்த சொற்ப அளவுள்ள குளிர்ந்த உணவைச் சூடு உண்டாக்கினால் உண்ணலாம். ஆனால் அதை எப்படிச் சூடு உண்டாக்குவது என்பதே பெரிய பிரச்சனையாக இருந்தது. ஒருவருக்கும் ஒன்றும் புரியவில்லை.

அவர்களில் ஒருவன் பழங்கால வரலாற்றை நன்கு படித்தவன். எனவே அவன் உடனே தம்மிடத்தில் இருந்த தகர டப்பாவை விளக்காகச் செய்து விட்டான். டப்பாவின் மூடியின்மீது துவாரமிட்டுப் பழந்துணியைத் திரியாகத் திரித்து அத் துவாரத்தில் புகுத்திடப்பாவினுள்ளே தம்மிடமிருந்த மீன் எண்ணெயைவிட்டு ஒரு விளக்கை உருவாக்கிவிட்டான்.

அவன் தன் முன்னோர்கள் எத்தகைய விளக்குகளை உபயோகித்து வந்தனர் என்பதை வரலாற்று நூல்களில் படித் திருந்தான். எனவே அவன் இப்பொழுது விளக்கை உருவாக்கி னான். அதை அடுப்பாக ஆக்கித் தன்னிடமிருந்து உணவிற்குச் சூடு உண்டாக்கினான், சுவையுண்டாக்கினான், எல்லோர் உயிரையும் காப்பாற்றினான்.

இந்தியப் தேசியப் போராட்டத்தில் சிறைசென்ற தேச பக்தர்கள் சிறையில் பீடி, சுருட்டுகள் புகைப்பதற்குத் திண்டாடி னார்கள். ஆனால் வரலாற்றை நன்கு படித்தவர்கள் இருந்ததி னால் கற்களைக் கொண்டும், கம்பிகளைக் கொண்டும் சிமிண்டுத் தரையில் உராசி நெருப்புப் பொறிகளை உண்டுபண்ணி அதைக் கந்தைத் துணிகளில் விழச் செய்து இரவில் அதிகாரிகளுக்குத் தெரியாது புகைத்து இன்பந்துய்த்து வந்தது. நாம் கண்ணால் கண்ட உண்மை - ஏன்? அனுபவித்துப் பார்த்த இன்பமும் கூட.

**சிற்பச் செல்வம்**

திருவிளக்கு, தமிழ்நாட்டின் சிற்பச் செல்வமாகும். தமிழர்கள் சிற்பச் சிறப்புமிக்க சீரிய விளக்குகளை வேறு எந்த

நாட்டினரிடமிருந்தும் பெறவில்லை. தமிழ்நாட்டுத் திருவிளக்கு தமிழனின் தனித்த பண்பாட்டினின்று தளிர்ந்த தனிப்பெரும் கலைக் கருவூலமாகும்.

ஒரு சில பாவை விளக்கும், ஓதிம விளக்கும் உரோமர் களிடமிருந்து நாம் பெற்றவை என்று கூறுகின்றார்கள். அதைப் போதிய ஆதாரத்துடன் மறுக்க முடியும். என்றாலும் பாவை விளக்கும் ஓதிம விளக்கும் உரோம் நாட்டு விளக்கின் உருவத்தைப் பெறாது தமிழ்ப் பண்பாட்டைத் தழுவியனவாக இருக்கின்றன என்று கூறுவதால் அவர்களோடு நாம் அதிகம் வாதாடத் தேவையில்லை.

உரோமர்கள் கண்ட பாவை விளக்கு ஓதிம விளக்குப் போன்றவைகளுக்கும் தமிழர்கள் கண்ட தீபலட்சுமி விளக்கு, அன்னவிளக்கு ஆகியவைகளுக்கும் அதிகமான வேற்றுமைகள் காணப்படுகின்றன.

**கடல் கடந்த தமிழ் விளக்கு**

தமிழ்நாட்டு விளக்குகள் அரேபியாவிலும், உரோம் நாட்டி லும், கிரேக்க நாட்டிலும் சென்று அங்குள்ள அரண்மனையை யும் கோயில்களையும் அலங்கரித்துள்ளன.

சரித்தரச் சுவடுகள் ஆசியாவிலும், ஐரோப்பாவிலுமுள்ள நாட்டுப்புறங்களின் விளக்குகளில் பதிந்து நீண்டகாலமாக அழியாதிருந்து வந்தன என்பதற்கு எண்ணற்ற சான்றுகள் உண்டு.

தமிழ்நாட்டு விளக்குகள் அராபியர்களின் மூலம் ஸ்பெயின், இத்தாலி முதலிய நாடுகளில் பரவியிருந்தன. வர்க்கத்தின் பொருட்டுத் தமிழ்நாட்டிற்கு வந்த அராபியர்கள், தமிழ்நாட்டு விளக்கைத் தங்கள் நாட்டிற்குக் கொண்டு போயினர். அப்பால் அவர்களின் செல்வாக்கு ஐரோப்பாவில் வணிக ரீதியிலும், அரசியல் ரீதியிலும் பரவவே தமிழ்நாட்டிலிருந்து கண்ட விளக்கு நாகரீகத்தை ஐரோப்பாவிலும் பரப்பினர்.

எகிப்திலும், ஆப்பிரிக்காவிலும் கூடத் தமிழ்நாட்டு விளக்குப் பரவியது.

இன்று அறிவுடைய மக்கள் ஒரு நாட்டினது விளக்கின் தன்மையில் அந் நாட்டின் வரலாறு மட்டுமன்றி மருத்துவம், பூகோளம், விஞ்ஞானம், படிமம், கட்டிடம், ஓவியம், வணிகம், கைத்தொழில் போன்ற கலைகளின் வரலாறுகளும் பிரதிபலிப்

பதைக் காண்கின்றனர்.

இரு நூறாண்டுகளுக்கு முன் வரை, பண்டைக் காலத்தி லுள்ள விளக்குகளின் அமைப்பிலும் அழகிலும் ஒளி தரும் கருவிகளின் அமைப்பிலும் மாறுதல் எதுவும் செய்ய வேண்டும் என்ற பிரச்சனையே எழவில்லை. முற்காலத்தில் எங்கும் தீவர்த்திகள் உபயோகப்படுத்தப்பட்டு வந்தன.

விளக்குகளில் எண்ணெய் நிற்கும் அகல் (கலயம்) மிகச் சாதாரணமாக அமைக்கப்பட்டிருந்தது. சில விளக்குகளில் எண்ணெய் நிற்கும் கலயம் திறந்தும் சில விளக்குகளில் மூடப்பட்டும் இருந்தன.

எண்ணெய், மரவித்துகளிலிருந்து எடுக்கப்பட்டதாகவோ மிருகங்களின் கொழுப்புகளிலிருந்து செய்யப்பட்டதாகவோ இருந்தது.

திராவிடர்களின் தாயகம் என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களும் வரலாற்று நூற் புலவர்களும் கூறும் சுமேரிய (மெசபொத்தாமியா) நாட்டினின்றே முதன் முதலில் பூமியினின்று எண்ணெய் எடுக்கும் முறை எழுந்தது. அக் காலத்தில் போதிய போக்கு வரவுச் சாதனங்கள் இல்லா திருந்தமையால், அதிகமாக அன்னிய நாடுகளுக்குப் பரவவில்லை. ஆனால் விரைவில் கடற்கரைப் பகுதிகளில் உள்ள நாடுகளுக்குப் பரவியதாக அறிகிறோம். ஏனெனில் அக்காலத்தில் அன்னிய நாடுகளோடு கப்பல் போக்குவரவுதான் இருந்து வந்தது. ஐரோப்பாவில் வடக்கு, மேற்குப் பகுதிகளில் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் விறகிற்குப் பதிலாகத் திமிங்கலம், சீல் மீன் போன்றவைகளின் கொழுப்புகளி லிருந்து நெய் எடுத்து உபயோகிக்க ஆரம்பித்துவிட்டனர். மத்தியதரைக் கடற் பகுதி களில் உள்ள நாடுகளில் பண்டுதொட்டு ஒலிவ எண்ணெயை விளக்கெரிக்க உபயோகப்படுத்தி வந்தனர்.

**பல்வகை எண்ணெய்**

தமிழ் நாட்டிலே வரலாற்றுக் காலத்திற்கு முன்பே பசும் பாலிலிருந்து நெய் எடுத்து விளக்கெரித்து வந்தனர். இன்றும் கோயில்களில் நெய்விளக்கு ஏற்றுவது சிறந்த பண்பாடாக மதிக்கப் பட்டது.

பிறகுதான், எள்ளிலிருநது நெய் எடுக்க ஆரம்பித்தனர். எள்ளிலிருந்து எடுக்கப்பட்ட நெய்யை எள்நெய், - எண்ணெய்

என்று வழங்கினர். பின்னர் தேய்காயிலிருந்து நெய் எடுத்தனர். அதைத் தேங்காய் நெய் என்று கூறாது தேங்காய் எண்ணெய் என்றனர்.

அப்பால் ஆமணக்கு வித்திலிருந்து நெய் எடுக்க ஆரம்பித் தனர். இது விளக்கிற்கு ஏற்றதாக இருந்ததால் இதனை விளக் கெண்ணெய் என்றனர். கடைசியாய்ப் புன்னைக் கொட்டை, வேப்பங்கொட்டை, குறுக்குவிதை போன்றவைகளிலிருந்து நெய் எடுத்துப் புன்னை எண்ணெய், வேப்பெண்ணெய், குறுக் கெண்ணெய் என்று பெயர் சூட்டினர். எந்த வித்திலிருந்து நெய் எடுத்தாலும் தமிழன் முதலில் நெய்யைக் கண்ட வித்தாகிய எள்ளை மறவாது எல்லாவிதமான வித்து நெய்க்கும், எள் என்னும் மூலப் பெயரை இணைத்து எண்ணெய் என்னும் பெயரை உபயோகித்து வந்தது சிந்திக்கத்தக்கது.

**புதிய விளக்கின் தோற்றம்**

பண்டைக்கால மக்கள் கண்ட நெய்விளக்கினின்று உண்மையான முதல் மாற்றம், ஆவி விளக்குகள் துளிர்த்த பின்னர்தான் ஆரம்பமாயிற்று. அது மின் விளக்குகளின் ஆரம்பகாலச் சோதனைகளுக்குப் பின்னரும் - மின் விளக்கு நிறைவான வளர்ச்சி பெறும்வரை உபயோகத்தில் இருந்து வந்தது.

உலகமெங்கும் மின்விளக்குகள் தோன்றியதும் ஆவி விளக்குகளும் எண்ணெய் விளக்குகளும் காகதி அடைந்து விட்டன. ஆனால் தமிழகத்தில் மட்டும் அந்த விளக்கு மறையாது ஒளிர் விட்டோங்கி நிற்கிறது. எண்ணெய் விளக்குகள் சமயத் தோடு பிணைக்கப்பட்டிருப்பதால் சமயங்கள் அழியும் வரை, மக்கள் உள்ளத்தினின்று தமிழனின் பண்பாடு அகலும்வரை நமது நாட்டில் திருவிளக்குகள் நிலைத்து நிற்கும். இஃதன்றித் தமிழன் கண்ட குத்து விளக்கின் சிற்ப வடிவம் இன்று எழுந்த மின் விளக்கின் தண்டுகளிலெல்லாம் இடம்பெற்று வருவதும் சிந்திக்கத்தக்கதாகும். பண்டைத் தமிழர் கண்ட திருவிளக்கும் அதன் சிற்பச் செல்வங்கும் அழியாது பாதுகாக்கப்படவேண்டும் என்ற கருத்தோடு இந்நூலை எழுத முனைந்த நான் தமிழ் நாட்டில் எழுந்த மின் விளக்குகளில் மேஜை விளக்கின் தண்டு களில் நமது குத்துவிளக்கிலுள்ள சிற்ப வடிவங்கள் பொலியக் கண்டு மட்டிலா மகிழ்ச்சியடைந்துள்ளேன். பழம் பண்பாட்டைப்

பாதுகாத்து வளர்க்கும் உணர்ச்சி வளருமானால் அதை எனது முயற்சியின் முழு வெற்றியாகக் கருதி இறும்பூ தெய்துவேன்.

**கலைமேதை சண்முகநாதன்**

இக்கட்டுரைகளை எழுதவும் நான் தமிழ்க் கலைகளில் பற்றுக்கொள்ளவும் காரணமாய் இருந்தவர் ஈழநாட்டைச் சேர்ந்த காலஞ்சென்ற கலைமேதை சு. சண்முகநாதன் அவர் களாவர். அவர் இங்கிலாந்திலுள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் கட்டிடக் கலை பயின்றவர். மேலும் புதை பொருள் ஆராய்ச்சி, ஓவியம் முதலிய துறைகளில் நன்கு பயின்று இலங்கைப் புதைபொருள் ஆராய்ச்சி உதவிக் கமிஷனராக இருந்து 1953ஆம் ஆண்டு உயிர் நீத்தார்.

நான் 1943ஆம் ஆண்டு இலங்கைக்குப் பொருள் தேடும் பொருட்டுப் போயிருந்தேன். எனக்கு அரசியல் தான் தெரியும். கலையைப் பற்றிக் கடுகளவும் ஆராய்ச்சி இல்லை; நான் கொழும்பில் ஒரு அச்சகம் வைத்து நடத்திப் பொருள் தேடி வந்தேன். அதனால் இலங்கையில் உள்ள எழுத்தாளர்கள், புலவர்கள், கலைஞர்கள் பேராசிரியர்களின் நட்பு எளிதில் கிடைத்தது.

நான் இலங்கையில் கண்ட பேரறிஞர்களில் இங்கு குறிப் பிடத்தக்கவர் திரு.சு. சண்முகநாதன் அவர்களாவர். 1948ஆம் ஆண்டிலிருந்து அவர் உயிர்துறக்கும் வரை 4 ஆண்டுகள் அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. அவர்கள் இல்லத்தில் சுமார் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட விலை உயர்ந்த கலை நூற்கள் அடங்கிய ஒரு பெரிய நூல்நிலையம் இருந்தது.

அவர்களின் கலை மாளிகையில் அவர்கள் தீட்டிய பல ஓவியங்கள் உள்ளன. அவர்கள் சேகரித்து வைத்த சிப்பி, கிளிஞ்சல், சங்கு முதலியன ஆயிரத்திற்கு மேற்பட்ட வகைகள் இருந்தன.

300-க்கு மேற்பட்ட திருவிளக்குகளும் சேகரித்து வைத்திருந் தார்கள். கர்நாடக இசையையும், பரத நாட்டியத்தையும், நாடகத்தையும் நன்கு பயின்றிருந்தார்கள். உதயசங்கர், கோபிநாத் போன்ற நாட்டியக்காரர்கள் அவரை குருவாக மதித்துப் போற்றி வந்தனர்.

அவர் தீட்டிய ஓவியங்கள் இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளில் நடைபெற்ற கண்காட்சிகளில் முதல் இடம்

பெற்றன. சில வண்ண ஓவியங்கள் இன்றும் ஆண்டுள்ள தொல் பொருள் காட்சி சாலையில் மிளிர்கின்றன. அவர் பதினான்கு மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருந்தார்.

**தமிழுக்காக பதவியையும் துறந்த பெருந்தகை**

அவர் இலங்கை நாட்டின் ஒப்பற்ற தலைவர், சர் இராம நாதன் அவர்களின் உறவினர், உலகப் புகழ் பெற்ற கலாயோகி திரு. ஆனந்தகுமாரசாமியின் குடும்பத்திலே அவரது கலை வாரிசாகத் திரு.சு. சண்முகநாதன் அவர்கள் திகழ்ந்தார்கள்.

ஆனந்த குமாரசாமியைவிட இவருக்குத் தமிழறிவு அதிகம். தமிழ்க் கலையைப் பற்றிய ஆராய்ச்சியும், அதை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற ஆர்வமும் அதிகம். அதனால் அவர், இலங்கையிலுள்ள சில சிங்களக் கலை வெறியர்களான உயர்தர அரசாங்க அதிகாரிகளின் கோபத்திற்கு ஆளானார். என்றாலும் அஞ்சாது தம் கொள்கையை ஒரு சிறிதும் விட்டுக்கொடாது அரசாங்கத்தில் தாம் வகித்து வந்த உயர்ந்த பதவியைக் கூட உதறித்தள்ளினார். தமிழ் அன்னையின் தலைசிறந்த தவப்புதல்வ ராய்த் திகழ்ந்த திரு. சண்முகநாதன் அவர்கள் 1953ஆம் ஆண்டில் நல்ல இளம் பிராயத்தில் இன்னுயிர் நீத்தார். அவரது மறைவு தமிழ்க் கலை உலகிற்கு ஈடுசெய்யமுடியாத பெரும் நஷ்டமாகும்.

எனக்கு 62 வயது ஆகிறது. இது வரை நான் சந்தித்த தமிழ்க் கலைஞர்களில் இவருக்கு ஒப்பான வரையோ மிக்கான வரையோ நான் சந்தித்ததே இல்லை. இவர் தன்னலமற்றுத் தமிழ்க் கலைத் தேவிக்குத் தம் உடல், பொருள், ஆவி அனைத்தை யும் அர்ப்பணித்துள்ளார். தமிழ்க் கலை வளரத் தம் இறுதி மூச்சுள்ள வரை அரும்பாடுபட்டார். இவரைத் தமிழர்கள் நினைவில் இருத்தல் வேண்டும்.

அவர் அரைகுறையாய் விட்டுச் சென்ற கலைப் பணியைத் தொடர்ந்து நடத்த வேண்டுவது இன்று வாழும் தமிழ்க் கலைஞர் களின் தலையாய கடனாகும். இதுவே என் இலட்சியமும் பணியும் ஆகும்.

**பெருநலம் பயந்த நட்பு**

இக் கலை மேதையின் நட்பு என்னைப் பெரிதும் கவர்ந்தது. தமிழ்க் கலையின் மீது அளவிலாப் பற்று உண்டாக்கியது. அவர் உறவே என்னை வரலாறு, ஓவியம், படிமம், கட்டிடக்கலை,

நாட்டியம், புதை பொருள் ஆராய்ச்சி முதலியவைகளில் ஆர்வம் கொள்ளத் தூண்டியது.

பழங்காசுகள் சேகரித்தல், சிப்பி, சங்கு முதலியவைகள் சேகரித்தல், தமிழ் மொழியையும் கலைகளையும் பற்றி ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மன் முதலிய மொழிகளில் வெளிவந்த நூற்களைச் சேகரித்தல், விளக்குகள் சேகரித்தல், பழங்கால ஆடைகள், அணிகள், படங்கள் பாத்திரங்கள் முதலியவைகளைச் சேகரித்தல் போன்ற நற்பணிக்கு என் உள்ளத்தில் வித்திட்டது. சுருங்கக் கூறின் கலை ஆராய்ச்சியில் ஈடுபடத் தூண்டியது.

அவர்கள் இறந்த பின் அவர்களின் துணைவியாரிட மிருந்து, அவர்களின் விலையுயர்ந்த 400க்கு மேற்பட்ட கலைநூற் களை விலைக்கு வாங்கினேன். அவ்வரிய நூற்களே இந்நூலை எழுதப் பெருந் தூண்டு கோலாக இருந்தன. கலை ஆர்வம் என் உள்ளத்தில் எழக் காரணராய் நின்ற என் உழுவலன்பர் உயர் திரு. சு. சண்முகநாதன் அவர்களுக்கு இந்நூலை மனம் உவந்து படையல் செய்கிறேன்.

திருவிளக்கு, பழங்காசுகள், நாட்டியம், இசை போன்ற தமிழ்க் கலைகளைப்பற்றி நூல்கள் எழுதும்படி பலகாலும் தூண்டி வந்ததோடு எழுதிக் கொடுத்தால் அவைகளை உடனே நூல்வடிவில் வெளியிடத் தயார் என்று என்னை அடிக்கடி தூண்டி வந்த என்.சி.பி.எச். தலைமை இயக்குநராய் இருந்து காலஞ் சென்ற எனது அருமைத் தோழர் பி.எஸ். சீனிவாசராவ் அவர்களை நான் என்றும் மறப்பதற்கில்லை.

தமிழ்நாட்டுத் திருவிளக்குகள் என்ற இந் நூலை, சென்ற ஆண்டு சிங்கப்பூர் "தமிழ் முரசு" என்ற தன் சீரிய நாளிதழின் ஞாயிறு மலரில் 9-9-62 முதல் 23-12-62 வரை தொடர்ந்து ஏராளமான படங்களுடன் மிக அழகாக வெளியிட்டதோடு எனது இறுதி மூச்சு வரை நான் எழுதும் கலைக்கட்டுரைகளை வெளியிடுவதாகக்கூறி எனக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்த தோடு "தமிழ்நாட்டுத் திருவிளக்குகள்" நூல்வடிவமாக அனுமதி யும் ஆசியும் அளித்த தமிழ் "முரசு"ப் பத்திரிகையின் உரிமை யாளரும் ஆசிரியரும் எனது உழுவலன் பருமான தமிழவேள் கோ. சாரங்கபாணி அவர்களுக்கும், இந்நூல் முழுவதையும், தமது பல்வேறு வேலைகளுக்கிடையே படித்துத் திருத்தி இதை விரைவில் வெளிவர ஏற்பாடு செய்த எனது நண்பர் பாளையங்

*கோட்டைப் பேராசிரியர் திரு.நா. வானமாமலை எம்.ஏ. எல்.டி. அவர்களுக்கும் என் நன்றி உறித்தாகுக.*

*இதனை நான் விரும்பிய படி அழகாகவும், பிழைகளின்றியும் அச்சிட்டுதவிய சென்னை நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் லிமிடெட் நிலையத்திற்கும் எனது மனமார்ந்த நன்றி உரித்தாகுக.*

*தமிழகம் எனது இக்கலைப்பணிக்கு முழு ஆதரவையும் அளிக்கும் என்றும் நம்புகிறேன்.*

*பாளையங்கோட்டை*
*01.01.1964* **அ. இராகவன்**



# தமிழ்நாட்டுத் திருவிளக்குகள்

# விளக்கின் தோற்றம்

## காட்டில் கண்ட கல் விளக்கு

*மக்கள் இனம் மண்ணுலகில் தோன்றியதும் முதலில் இருளையே கண்டது. அப்பால் பகலவனையும் விண்மீன்களையும், மதியையும் கண்டது.*

*புலியைப் போல், பூனையைப் போல், ஆந்தையைப் போல் இரவில் மக்கள் தம் கண்களால் ஒரு பொருளைப் பார்க்க முடிய வில்லை. ஆனால் கதிரவன் ஒளியிலே மக்கள் கண்களால் ஒரு பொருளை நன்றாகக் காண முடிந்தது. குளிர்மதியிலும் அஃதில்லாத காலங்களிலும் விண்மீன்களால் மக்கள் ஓரளவுதான் பார்க்க முடிந்தது.*

*கார் மேகங்கள் கதிரவனையும் குளிர் மதியையும், விண்மீன் களையும் மறைத்து விட்டால் மக்கள் இருளிலே கிடந்து துன்புற வேண்டிய நிலையில் இருந்தனர். மனிதன் ஆதிகாலத்திலே விளக் கினைக் காணவில்லை; செம்பு, பித்தளை, வெண்கலம், வெள்ளி, பொன் முதலிய தாதுப் பொருள்களை அவன் கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை. எள்ளைச் செக்கிலிட்டு நெய்யை உண்டாக்கும் அறிவை அவன் அணுவளவும் பெறவில்லை. செயற்கை முறையில் தீயை உண்டாக்கும் முறை அவனுக்குத் தெரியவே தெரியாது.*

*ஆரம்பகாலத்தில் விண்ணில் ஒளிரும் மின்னலையும் இடியை யும் கண்டு நடுநடுங்கிக் கண்களை மூடிக் கொண்டான். மனித வாழ்வில் அவனுக்கு ஒளி காட்டும் மணிவிளக்காய் ஞாயிறும் திங்களும், விண்மீன்களும் விளங்கின. மனிதனுடைய கண்களும் உடலும் இரவில் வாழ்வதற்கு ஏற்றனவாக இல்லை. புலி, சிங்கம், கரடி போன்ற தன் கொடிய விரோதிகளோடு போரிட அவனுக்கு உடல் வலிமை இல்லை. இரவில் தப்பித்து ஓடிமறைந்து கொள்ள அவனுடைய கண்கள் சக்தி வாய்ந்தவைகளாக இல்லை.*

*எனவே, மனிதன் இரவில் குகைகளிலும் புதர்களிலும் பதுங்கிக்கிடக்க வேண்டியதாயிருந்தது. பகலிலே கதிரவன் ஒளியால் கண்கள் பார்க்கும் சக்தியைப் பெரிதும் பெற்றிருந்ததால் மனிதன் தன் உணவைத் தேடவும் தன்பகைவர்களான விலங்குகளிடமிருந்து தப்பித்து ஓடவும், குகைகளிலும் புதர்களிலும் பதுங்கிக் கொள்ள வும் முடிந்தது.*

அப்பால் தடிகளைக்கொண்டும், கூரிய கற்களைக் கொண்டும் விலங்குகளை எதிர்த்துப் போரிட்டு அடித்தும், வெட்டியும் வாழத் தலைப்பட்டான்.

அன்று வையத்தில் வாழ்ந்த மக்களுக்கு வானத்துச் சுடர்கள் எல்லாம் இனியனவாக, எழிலுடையனவாக இன்பந்தருவனவாகக் காணப்பட்டன. அவர்கள் இருளில் துன்பமும் ஒளியில் இன்பமும் கண்டனர்.

ஆதியிலே எங்கும் இருள் சூழ்ந்திருந்த காலத்திலே மனிதன் ஞாயிறு, திங்கள், விண்மீன் போன்றவைகளை வழிபட ஆரம்பித் தான். நாளடைவில் அவன் அறிவு வளர ஆரம்பித்தது. நீண்ட காலத்திற்கு அப்பால் அவன் கதிரவனால் பயிர்கள் வளர்வதையும், உயிர்கள் தோன்றுவதையும், மலர்கள் மலர்வதையும், மழை பொழிவதையும், பழங்கள் பழுப்பதையும் கண்டு ஞாயிறு, திங்கள், விண்மீன்கள் முதலியவைகளைத் தன் வாழ்விற்கு உறுதுணையாக நிற்கும் தெய்வங்களாக எண்ணி வழிபட ஆரம்பித்தான்.

மக்கள் இனம், மலையில் தோன்றியதென்று ஒரு சில உயிர் நூல் வல்லுநர்கள் உரைக்கின்றனர். ஒரு சிலர் மலை அடி வாரத்தி லுள்ள தோப்பிலே (ஏதேன் தோட்டத்தில்) தோன்றியதென்று கூறுகின்றனர்.

'மனித குலத்தின் தொட்டில் லெமூரியாக் கண்டம்' அதாவது கடல் கொண்ட தமிழ்நாடு என்று ஹெக்கல் என்ற ஜெர்மன் நாட்டுப் பூகர்ப நூல் ஆராய்ச்சி வல்லுநர் கூறினர்.[1] இபின் பட்டூட்டா என்ற ஓர்அரபி வழிபோக்கன் (கி.பி.1325 - 1354இல்) இந்தியாவிற்கு வந்தான். அப்பால், மனித குலத்தின் பெற்றோர்களான ஆதம், ஹவ்வா தோன்றியது இலங்கையிலுள்ள சிவனடி பாதமலை என்று இன்றும் எல்லா சமயிகளும் புனித மலையாகப் போற்றும் அம்மலைகளின் அருகில் போய் தனது மரியாதையைச் செலுத்தியதோடு தனது கையால், புனையா ஓவியமாக ஒரு படமும் தீட்டியுள்ளான். அவன் தனது நாட்குறிப்பில் தீட்டிய படமும் குறிப்பும் இன்று நூல் வடிவமாக வந்துள்ளது. அதில் ஆதம் மலையும் ஹவ்வா மலையும் காணப்படு கின்றன.[2] ஆதமும் ஹவ்வாவும் இலங்கையினின்று இந்தியாவிற்குப் பாலம் கட்டி வந்தனர் என்றும், அவர்கள் வந்த வழியை, ஆதம் பாலம் (Adam's Bridge) என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றார்கள். இவர்கள் கூற்று மெய்யாயின் சிவனடி பாதமலையே மனித குலத்தின் தொட்டிலாகும் என்பதில் ஐயமில்லை.

---

1. The Indian Ocean formed a continent which extended from Sunda Island along the coast of Africa. This large continent is of great importance from being the possible craddle of human race." - Prof. ERNEST HAECKEL
2. Ibn Battuta - Travels in Asia & Africa - Translated by H.A.R. GIBB Page. 258

இஃதன்றி மகேந்திர மலையிலும், கைலை மலையிலும், சீனாய் மலையிலும் கடவுள் காட்சி அளித்திருப்பதாகக் கூறும் சமயக் கூற்றும், பண்டைத் தமிழர்களின் குறிஞ்சி நில வாழ்வும், முல்லை நில வாழ்வும் முதன் முதலாக மக்கள் மலைகளிலும், மலை அடிவாரத்திலும் வாழ்ந்த வாழ்வை வெளிப்படுத்துவதற்குப் போதிய சான்றாகும்.

மலைகள் மீதும் மலை அடிவாரத்திலும் வாழ்ந்த பண்டைய மக்கள், அடர்ந்த காடுகளில் பெருங்காற்று வீசியபோது ஆண்டுள்ள மூங்கில் போன்ற மரங்கள் ஒன்றோடொன்று உராய்ந்து நெருப்பு உண்டாகி மரஞ்செடி கொடிகள் எரிந்து சாம்பலாய்ப் போவதைக் கண்டனர். ஞாயிறு, திங்கள், விண்மீன்கள் ஆகியவைகளுக்கு அடுத்த படியாக மக்கள் இனம் கண்ட ஒளி இந்தக் காட்டுத்தீதான்.

மனிதன் நாகரிகத்தின் முதற்படியிற் காட்டுத்தீயைக் கண்ட காட்சிதான், மனிதன் நாகரிகத்தின் முதற்படியில் கால் வைக்க ஆரம்பித்த காட்சியாகும். அதற்குப் பின்னர்தான் கூரிய கற்களைத் தன் பகைவர்களாகிய விலங்குகளின் மீது பிரயோகித்து அவைகளை வெட்டிக்கொன்று வெற்றி மாலை சூட ஆரம்பித்தான். கூரிய கற் களைக் கொண்டே மரஞ்செடி கொடிகளை வெட்ட ஆரம்பித்தான். காய்களைக் கல்லாயுதத்தாலே பறிக்க ஆரம்பித்தான்.

அப்பால் கல்லாயுதத்தை விலங்குகள் ஓடும் பொழுது வீச ஆரம்பித்தான். அக்கல்லாயுதம் பூமியில் உள்ள கல்லின் மேற்பட்டுத் தீப்பொறிகள் அரும்புவதை அறிந்தான். சில சமயம் தான் வீசிய கல் வேறொரு கல்லின் மீது வீழ்ந்து தீப்பொறி எழுந்து அருகிலுள்ள காய்ந்த சருகுகள் மீது விழுந்து நெருப்பு உண்டாவதை உணர்ந்தான்.

பின்னர், செயற்கை முறையில் தீயை உண்டாக்கத் தலைப் பட்டான். சக்கி முக்கிக் கற்களை ஒன்றோடொன்று உரசும் படி செய்து அருகிலுள்ள உலர்ந்த சருகுகளில் தீப்பொறி வீழ்ந்து பற்றும் படி செய்தான். உலர்ந்த இலையில் பற்றிய நெருப்பு விரைவில் மறைந்து போவதையும் மரக்கட்டையில் பற்றிய தீ அணையாது நீண்ட நேரம் இருப்பதையும் தீப்பொறி, சருகுகள், பஞ்சு முதலிய மென்மையான பொருள்களில் எளிதில் பற்றிக் கொள்வதையும் கண்டான். காட்டுத்தீயில் அகப்பட்ட கிழங்குகள் சுவையாய் இருப்பதைத் தெரிந்தான்.

இதை வரலாற்று ஆசிரியர்கள் மக்களின் கற்காலம் என்று மொழிகின்றனர். மக்களின் கற்காலம் அரும்பிய காலத்திலேயே மக்களின் முதல்விளக்கும் தோன்றியது என்று கூறலாம்.

மனிதன் செயற்கை முறையில் தீயை உண்டாக்க ஆரம்பித் தாலும் விளக்கை உருவாக்கும் எண்ணம் எழ நீண்ட காலம் சென்றது. மின்மினிப் பூச்சியைக் கண்டதும், மனிதனுக்கு விளக்கை

உருவாக்கும் ஆசை உண்டாயிற்று. முதன் முதலாகப் பனையோலை களையும் மரக்கட்டைகளையும் விளக்காக உபயோகித்தான். அப்பால் எண்ணெய், கொழுப்பு முதலியவைகளைக் கண்டான். தனது அறிவு முதிரவே கற்குழியிலும், சங்கிலும், கிளிஞ்சலிலும் நெய்யை ஊற்றிச் செடிகளிலிருந்து உண்டாகும் நார்களைத் திரியாக உபயோகப்படுத்த முனைந்தான்.

நாளடைவில் அறிவு முதிர்ச்சியடைந்ததும் மண்ணைச் சுட்டு விளக்கு செய்யும் முறையைக் கண்டான். மண் விளக்கில் நெய்யை வார்த்து விளக்கு எரியும்படிச் செய்தான். பின் எள்ளிலிருந்து நெய் எடுத்து எண்ணெய் என்று பெயரிட்டு விளக்கு எரியச் செய்தான்.

சிறிது நாளில் ஆமணக்குக் கொட்டையிலிருந்து நெய் எடுத்து விளக்கில் ஊற்றி எரியச் செய்தான். நீண்டகாலமாக இம்முறை பயன்பட்டு வந்ததால் ஆமணக்கு நெய், விளக்கெண்ணெய் என்ற பெயரும் பெற்றது.

பின்னர் மக்கள் இலுப்பை, கடுகுவிதை, புன்னைக் கொட்டை, வேப்பங்கொட்டை, தேங்காய், சூரிய காந்தி விதை முதலியவை களிலிருந்து நெய் எடுத்து விளக்கு ஏற்றும் முறையைக் கண்டனர்.

சில நாடுகளில் திமிங்கலத்தின் கொழுப்பிலிருந்து நெய் எடுத்து விளக்கு எரித்து வந்தனர். தமிழர்களைத் தவிர ஆரியர், சீரியர், அசீரியர், சுமேரியர், எகிப்தியர், சீனர், கிரேக்கர், உரோமர் போன்ற மக்களும் எண்ணெய் விளக்குகளைப் பயன்படுத்தி வந்தனர். இன்று அந்நாடுகளில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பழம் பொருள்களுள் பல விளக்குகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் செய்யப்பட்ட சுடுமண் விளக்கொன்று என்னிடமுள்ளது.

## ஆதிச்ச நல்லூரிலும் அரிக்கன்மேட்டிலும் உள்ள பழைய விளக்குகள்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் செய்யப்பட்ட பல விளக்குகள் ஆதிச்சநல்லூரிலும் அரிக்கன்மேட்டிலும் கண்டெடுக் கப்பட்டுள்ளன. சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னுள்ள விளக்குகள் மொகஞ்சதாரோவிலும், பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் செய்யப்பட்ட களிமண் விளக்குகள் அசீரியா, சால்டியா, சுமேரியா முதலிய நாடுகளிலும் இன்று அகழ்ந்தெடுக்கப்பட் டுள்ளன என்று அறிகிறோம்.

மனித சமூகத்தின் வயது வளர்ந்துள்ளது. இயற்கையின் இன்ப விளையாட்டுகளை யெல்லாம் நன்குணர மனித சமூகம் ஆரம் பித்தது. நாளடைவில் சமூகத்தின் தேவைகள் அதிகப்பட்டது. இயற்கையைக் கண்டு பயந்து கிடந்த மனிதன் நாளடைவில், தன் இன்றியமையாத தேவைகளைப் பூர்த்தி செய்ய, அதைத் தன் வயப்

படுத்த முனைந்தான். அதில் அவன் படிப்படியாய் வெற்றியும் ஈட்டிக் கொண்டான்.

நெருப்பு இரவிலே ஒளியை அளித்து, எதிரேயுள்ள பொருள்கள் அவன் கண்ணுக்குத் தெரியுமாறு செய்தது. காய், கனி, கிழங்கு முதலியவற்றைப் பக்குவப்படுத்தித் தின்ன அது பெரிதும் உதவியது. கரடி, புலி, பாம்பு முதலிய பகைவர்களினின்று தன்னைப் பாது காத்துக் கொள்ளத் தீயை ஒரு கருவியாக மனிதன் உபயோகித்துத் தன் வாழ்வில் பெரும் வெற்றியைப் பெற்றான்.

பனிக்காலத்திலும், கூதிர் காலத்திலும் குளிர் போக்கி உடலுக்கு வெப்பமூட்ட மனிதன் தீயைப் பயன்படுத்த நன்கு தெரிந்து கொண்டான். மனித சமூகம் விரைந்து வளரத் தலைப்பட்டது. எண்ணிக்கையில் மட்டுமல்ல, அறிவிலும் ஆற்றலிலும் ஆண்மை யிலும் இதர பிராணிகளைவிடச் சிறந்து விளங்கியது. மனித சமூகம் இயற்கையை அடக்கி ஆள முற்பட்டது. நிலம், நீர், நெருப்பு. காற்று, வான் முதலிய ஐம்பூதங்களையும் அவற்றின் தன்மைகளையும் உணர முற்பட்டது. மனித வாழ்க்கை வளம் பெற்றுத் துளிர்க்கத் தொடங் கியது. நனிசிறந்த நாகரிக வாழ்க்கையை நத்த மனிதன் முற்பட்டான்.

நாடோடிகளாய் ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டு காடு மேடுகளுமாய்த் திரிந்தலைந்த மனிதர்கள் செழிப்பான இடங்களில் கூட்டம் கூட்டமாய் வாழத்துணிந்தனர். இதர மிருகங்களைப்போல் குகைகளில் வாழ்ந்த மனிதன் பறவைகளைப்போல் மரங்களில் கூடுகள் கட்ட முனைந்து நாளடைவில் குன்றின் உச்சியிலும், மேடு களிலும், இறுதியாகச் சமபூமியிலும் வீடுகளைப் கட்டத் துவங் கினான்.

வீடுகள், அவனுடைய மெல்லிய உடலைத் தட்பவெட்ப நிலைகளினின்று மட்டுமின்றி, அவனுடைய கொடிய பகைவர் களாகிய விலங்கினங்களினின்றும் காப்பதற்கு அரிய அரண்களாய் விளங்கின. எண்ணற்ற எண்ணெய் விளக்குகளும் உறுதுணையாய் எழ ஆரம்பித்தன. கல்விளக்குகள், கிளிஞ்சல் விளக்குகள் தோன்றின.

மனித வாழ்க்கையின் வரலாற்றில் பல்லாயிரம் ஆண்டுகள் பறந்தோடின. வெறுங் கட்டைகளை விளக்காக உபயோகிக்க ஆரம்பித்த மனிதன் சங்கிலும் கருங்கல்லிலும், மாக்கல்லிலும், சுடுமண்ணிலும் விளக்கை உருவாக்கிவிட்டான்.

தமிழ் மொழியில் காணப்படும் நூல்களில் மிகப்பழமை யானது என்று கூறப்படுவது தொல்காப்பியமேயாகும். அப்பெரும் காப்பியம் தோன்றிய காலம் கி.மு. 1000க்கும் கி.மு. 600க்கும் இடைப் பட்ட காலம் என்று கூறப்படுகிறது. அக்காலத்தில் தமிழ்நாடு நானிலமாகப் பிரிந்திருந்தது. நானிலத்தில் வாழ்ந்த மக்கள் நானில மக்கள் என்று கூறப்பட்டனர். நானிலம் என்பது குறிஞ்சி, முல்லை,

நெய்தல், மருதம் என்பனவாகும். மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி என்றும், காடும் காடு சார்ந்த இடமும் முல்லை என்றும், கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் என்றும், வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் என்றும் கூறப்படும்.

> ***'முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்***
> ***சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே'***

என்ற தொல்காப்பியச் சூத்திரம் இதனை உறுதிப்படுத்துகிறது.

இந்த நானில மக்களில் குறிஞ்சி நில மக்களே முதற்குடி என்று மொழிவர் மூதறிஞர். ஆதியில் மக்கள் மலையிலே தோன்றினர் என்று பலவரலாற்றறிஞர்கள் ஏற்றுக்கொள்ளுகின்றனர். உயிர்நூல் வல்லுநர்களும் அதை ஒப்புகின்றனர்.

ஆதியில் அரனார் மகேந்திர மலையில் கல்லால மரத்தின் கீழ் நால்வர்களுக்கு நல்லறம் நவின்றார் என்று சைவர்கள் ஏற்றுக்கொள் கின்றனர். சுமார்த்தர்களும் இறைவன் இமயமலை மீது உமையாளுடன் இருக்கின்றான் என்று கூறுகின்றார்கள். கிறிஸ்தவர்கள் ஆதாமைச் சுவர்க்க லோகத்திலிருந்து மலையிலே (இலங்கையிலேயுள்ள சிவனடி பாதமலையிலே) இறக்கினான் என்று கூறுகின்றனர். இதைப் பல முஸ்லிம்களும் ஏற்றுக்கொள்கின்றனர். இறைவன் சீனா (சீன்) மலைமீது அக்கினி வடிவமாக மோசேக்குக் காட்சி அளித்ததாக யூதர்கள் கூறுகிறார்கள். முகம்மது நபி (ஸல்) அவர்களுக்கு அல்லா(ஹ்) ஜிப்ரயல் என்னும் தன் தூதர் மூலமாக ஹிராமலையிலே திருக்குர் ஆனின் முதல் வார்த்தையைச் சொல்லி வைத்ததாக இஸ்லா மியர்கள் கூறுகிறார்கள் இதனால் மலையின் முக்கியத்துவம் உறுதிப் படுகிறது.

இதனை ஆதரித்துப் பி.டி. சீனிவாச ஐயங்கார் அவர்கள் 'தமிழர் வரலாறு' என்ற ஆங்கில நூலில் பின்வருமாறு கூறுகிறார்கள்.

'இவ்வுலகில் தோன்றிய ஆதிமனிதன் முதலில் மலையிலும் மலையை அடுத்த வெளியிலும் வாழ்ந்திருக்க வேண்டும்; பிறகு கொஞ்சம் கொஞ்சமாகச் சமநிலத்தைத் தேடி முல்லை, நெய்தல் முதலிய இடங்களைச் சேர்ந்து கடைசியிலே மருத நிலத்தை அடைந்திருக்க வேண்டும்'என்று குறிப்பிட்டிருப்பது நமது கருத்தை ஆதரிப்பதாக இருக்கின்றது.[1]

குறிஞ்சி நிலத்திலே மக்கள் தோன்றிப் பல்லாண்டு வாழ்ந்து அப்பால் ஒரு சிலர் முல்லை நிலத்தில் வந்து குடியேறி இருக்க வேண்டும். பின்னர் ஒரு சில மக்கள் நெய்தல் நிலத்தில் போய்க் குடியேறி இருக்க வேண்டும்; ஒரு சில மக்கள் மருத நிலத்தில் குடியேறி இருக்க வேண்டும்.

---

1. The History of The Tamils - by P.T. Srinivasa Iyengar M.A. 1929.

ஆதியில் குறிஞ்சி நிலத்திலே அன்னையின் ஆட்சி அரும்பி யிருக்க வேண்டும். அவளே குடும்பத் தலைவியாகவும், இல்லா ளாகவும் தெய்வமாகவும் போற்றப்பட்டிருக்க வேண்டும். அவள் இட்டதே சட்டமாக இருந்திருக்க வேண்டுமென்றும் எண்ணு கிறேன். அவள் கொற்றவை என்று கூறப்பட்டிருக்கலாம் என்றும் நம்புகிறேன். பிற்காலத்திலேதான் குறிஞ்சிக்குத் தெய்வம் முருகன் என்றும் முல்லைக்குத் தெய்வம் மாயோன் என்றும் மருதத்திற்குத் தெய்வம் வேந்தன் என்றும் நெய்தலுக்குத் தெய்வம் வாயுவென்றும் ஏற்பட்டிருக்க வேண்டும்.

ஏனெனில் உலகிலே தாய் ஆட்சி மாறித் தந்தையின் ஆட்சி நிலைத்த பின்னர்தான் முருகன் தோன்றியிருக்கவேண்டும். முருகனைக் கொற்றவை மைந்தன் என்று கூறுவதே எனது கருத்தை அரண் செய்வதாகும். அதே போன்று முல்லை நிலத் தெய்வமாகிய மாயோள் நாளடைவில் ஆண் ஆட்சி தளிர்த்த காலத்தில் மாயோனாகி விட்டதாக அறிஞர்கள் கூறுகின்றார்கள். மருதநிலத் தெய்வமாகிய காளி சிவனாகிவிட்டான். ‘சத்தியாய்ச் சிவமதாகி’ என்னும் தேவாரப் பாட்டு மருத நிலத்திலும் தாய் ஆட்சி நிலவியிருந்ததை மெய்ப்பிப்ப தாக இருக்கிறது. அதோடு கொற்றவை புதிதாக அரும்பிய பாலை நிலத்திற்கு விரட்டப்பட்டாள். அவளது மைந்தன் குறிஞ்சித் தெய்வ மாகவும் அவளது அண்ணன் முல்லைத் தெய்வமாகவும் அவளது கணவன் மருதத் தெய்வமாகவும் அவளது ஏவலாள் நெய்தல் நிலத் தெய்வமாகவும் பிற்காலத்தில் ஆக்கப்பட்டிருக்கலாம் என்று எண்ணுகிறேன். எனது கருத்திற்கு எண்ணற்ற ஆதாரங்கள் உண்டு. அவைகளைப் பற்றி இங்கு விவரிக்க இச்சிறு நூல் இடந்தராது என்று இதனுடன் நிறுத்திக் கொள்கிறேன்.

பண்டைத் தமிழர் கண்ட நானிலத்திலும் நாலு தெய்வங்கள் இருந்தன. அதோடு குறவர், ஆயர், உழவர், பரவர் என்ற நான்கு பெயர் கொண்ட மக்கள் வாழ்ந்து வந்தனர். இவர்கள் நால்வரும் தமிழ் இனத்தவர்களேயாவர். இவர்களிடத்தில் எவ்வித குல வேற்றுமையும் குடி வேற்றுமையும் நில வேற்றுமையும் இல்லை. தீண்டாமைப் பேய் இவர்களை இம்மி அளவும் அணுகவில்லை.

ஒரு நிலத்தில் வாழும் ஆண்மகன் மற்றொரு நிலத்தில் வாழும் பெண் மகளை மணந்து கொள்வதில் எவ்விதச் சட்டமும் பழக்க வழக்கமும் குறுக்கிடுவதில்லை. இவர்கள் வயிற்றில் பிறக்கும் மக்கள் சண்டாளர் என்றோ அனுமலோமர் என்றோ இழிவு படுத்தப்படுவ தில்லை. அவர்கள், தான் வாழும் நிலத்திற்குரிய தலைசிறந்த மக்களாய் வாழ்ந்துவர உரிமை பெற்று இருந்தனர்.

நானில மக்களும் அவர்கள் வாழும் நிலத்தின் தட்ப வெட்பத் திற்கேற்ப நாளடைவில் வளர்ச்சி பெற ஆரம்பித்தனர். அவ் வளர்ச்சி

தனித்தனியே துளிர்க்க ஆரம்பித்தது. அவ் வளர்ச்சி பொருளா தாரத்தை அடிப்படையாகக் கொண்டதாக மலர்ந்தது. இதற்குத் தொல்காப்பியமும் பிற சங்க நூற்களும் நமக்குச் சான்று தருகின்றன. குறிஞ்சி நிலத்திலும் முல்லை நிலத்திலும் சில பகுதிகள் ஞாயிற்றின் வெப்பத்தால் மணல்வெளியாக மாறின. இது பாலை நிலம் எனப் பட்டது. இந்நிலம் பிற்காலத்தில் எழுந்தது.

**குறிஞ்சி நிலம்** : இந்நிலத்தில் கல்வி, கேள்வி, வீரம் முதலிய வற்றால் ஒப்புயர்வற்றவனாய் விளங்கும் ஆண் மகன் கானகநாடன், மலையன், வெற்பன் பொருப்பன், சிலம்பன் என்று அழைக்கப்படு வான். இவனே இந்நில மக்களின் தலைவன். மற்றைய ஆண்மக்கள் கானவர் எனப்படுவர். அவ்வாறே அங்குள்ள கல்வி கேள்விகளில் சிறந்த பெண்கொடியைக் கொடிச்சி என்று கூறுவர் இவள் இந்நிலத்தின் தலைவனுடைய இல்லக் கிழத்தி; ஏனைய பெண்கள் குறத்தியர் என்று கூறப்படுவர்.

இவர்களின் உணவுப் பொருள், நெல், தினை, மூங்கில் அரிசி, காய்க்கனி கிழங்குகள் முதலியன.

இவர்கள் நிலத்திற்குரிய விலங்குகள் புலி, பன்றி, யானை, கரடி முதலியவை.

புள்ளினம் : கிளி, மயில் போன்றவைகள்.

மரம் : அகில், ஆரம், திமிசு, தேக்கு, வேங்கை முதலியவை.

இவர்கள் மரக்கொம்புகளில் இருக்கும் தேன்களை எடுத்து அருந்தினர். மரங்களில் பழுத்து உதிர்ந்து கிடக்கும் பழங்களை எடுத்துச்சாப்பிட்டனர். அப்பால் பழங்களைப் பறித்தும் கல்லால் எறிந்தும் தின்றனர். நாளடைவில் கல்லால் பூமியைக்கிண்டி கிழங்கு களைப் பயிரிட்டும் தினைகளை விதைத்தும் பயிர் செய்ய முற் பட்டனர்.

இந்நிலத்திற்குரிய மலர் : குறிஞ்சியும், காந்தளும், வேங்கையும் சுனைக்குவளையும் ஆகும்.

இவர்களது ஊர் : சிறுகுடியும், குறிச்சியும், குறிஞ்சியும், குறும் பொரையும், சிற்றூரும் ஆகும்.

இவர்களது தெய்வம், கொற்றவையின் மைந்தனான முருகன் ஆவான். முருகன் வாகனம் மயில். இந்நிலத்திற்குரிய பறை: வெறி யாட்டுப்பறை, தொண்டகப்பறை, குரவைப்பறை, முறுகியம், துடி எனப் பல வகைப்படும். வாகனம் முதல் பறைகள் வரை - அனைத்தும் அவர்களின் ஆட்டத்திற்குரியன என்பதை நாம் நன்கறியக் கிடக் கின்றன.

இவர்களது யாழ் குறிஞ்சியாழ் அல்லது யாமயாழ் எனப்படும். இவர்களது பண் : குறிஞ்சிப்பண் எனப்படும். தற்காலம் வழங்கும்

குறிஞ்சி என்னும் இராகம் கோடிப்பாலையின் (சங்கராபரணத்தின்) சுரங்களையுடையது. இதுவே தாய்ப்பன் என்றும் கூறப்படுகிறது. குறிஞ்சி நில வாழ்க்கையின் தொன்மைக்கு இதுவே சான்றாகும்.

## குறிஞ்சி நில மக்கள் கண்ட கல் விளக்கு

குறத்தியர் குறி சொல்லும் நாட்டுப் பாடல்களும் இக் குறிஞ்சியை அடிப்படையாகக் கொண்டவையாகும். இந்நில மக்கள் ஏனைய நிலத்தினின்று, தங்களுக்கென்று வேறுபட்ட தனித்த தெய்வமும், பறையும், பண்ணும் யாழும் கண்டதைப் போல, கருங்கல் விளக்கையும் கண்டனர். இதனைக் கூறுவதற்கே இத்துணை விளக்கமும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

இவர்கள் முதன்முதலில் விளக்கைக் காணும் பொழுது சமூகத்தில் கல் தச்சர்கள் தோன்றவில்லை. கல் உளியை இவர்கள் கனவிலும் அறியார்கள். ஆரம்ப காலத்தில் இவர்கள் கல்விளக்கைச் செய்யவில்லை. இயற்கையே இவர்களுக்கு விளக்கைச் செய்து கொடுத்தது. மூங்கில் மரங்கள் ஒன்றோடொன்று உரசி தீப்பற்றுவதைக் கண்ட மனிதன் நாளடைவில் இரு கம்புகளை பலமாக உரசி, தீப்பிடிக்கச் செய்தான். அதோடு காட்டுத்தீயின் சிறு குச்சைக் காட்டித் தீப்பற்றியதும் விளக்காகப் பயன்படுத்தினான்.

அப்பால் நீண்ட நாட்களுக்குப்பின் இயற்கை அன்னை மக்களுக்குக் கல்விளக்கை உருவாக்கிக் கொடுத்தாள் அதை அவனுக்குக் காண்பித்தும் கொடுத்தாள். பல்லாண்டு பல்லாண்டாக கான்யாற்றில் உருண்டு உருண்டு வந்த கற்களில் சில, நடுவில் குழி விழுந்திருந்தன. அந்தக் கற்களைத்தான் குறிஞ்சி நில மக்கள் விளக்காகப் பயன் படுத்தி வந்தனர்.

பண்டையக் காலத்தில் தமிழ்நாட்டில் வசித்த குறிஞ்சி நில மக்கள் கண்ட இந்தக் கருங்கல் விளக்குகளின் அசல் உருவம் நமக்குக் கிடைக்கவில்லை. நமது அரசாங்கப் புதைபொருள் ஆராய்ச்சித் துறையினர் பண்டு குறிஞ்சி நில மக்கள் வாழ்ந்த மலைகளிலும் குகைகளிலும் தம் ஆராய்ச்சி வேலையை ஆரம்பிக்கவில்லை. ஆனால் வேறு பல நாட்டில் மலைகளில் வாழ்ந்துள்ள மக்கள் கண்ட கல் விளக்குகள் கண்டெக்கப்பட்டுள்ளன. அத்தகைய விளக்குகளில் ஒன்று ஈண்டு வெளியிடப்பட்டிருக்கிறது. (படம் 1 பார்க்க)

**முல்லை நிலம்** : இந்நிலத்தில் வாழ்ந்த சிறந்த தலைமகன் குறும்பொறை நாடன், தோன்றல், கானகநாடன் அண்ணல் எனப் படுவன். இவன் இந்நில மக்களின் தலைவன். ஏனைய ஆண்மக்கள் இடையர், ஆயர் என்று அழைக்கப்படுவர்.

இந்நிலத்தில் வாழ்ந்த சிறந்த தலைவி, மனைவி கிழத்தி எனப்படுவாள். இவள் இந்நிலத் தலைவன் மனைவி. ஏனைய

பெண்கள் இடைச்சியர், ஆயர் மகள், ஆய்ச்சியர், கோபிகள், குடத்தியர், தொறுவியர் எனப்படுவர்.

இந்நிலத்திற்குரிய விலங்கு : முயலும் புல்வாயும் (சிறுமானும்) ஆடும் மாடும் ஆகும்.

புள் : கானங்கோழியும் மயிலும் சிவலும் ஆகும்.

மரம் : கொன்றையும் குருந்தும் ஆகும்.

பூ : முல்லையும் தோன்றியும் பிடவும் தளவும் ஆகும்.

தொழில் : ஆடுமாடு மேய்த்தல், அவைகளை பாதுகாத்தல், பால் கரத்தல், பால் கடைதல், தயிர், மோர், நெய் செய்தல், வரகு, அவரை, துவரை பயிரிடல் - அக்காலம் உழவு செய்யத் தெரியாத காலம். கல்லே கலப்பையாகப் பயன்பட்டது.

உணவு : வரகு, சாமை, முதிரையுமாம்.

தெய்வம் : மாயோள், பின்னர் மாயோனாக மாறிவிட்டாள்.

பறை : ஏறுகோட்பறை, முரசு, பம்பை ஆகும்.

யாழ் : முல்லையாழ் (செவ்வழியாழ்) ஆகும்.

பண் செவ்வழிப்பண் - இதனை முல்லைத் தீம்பாணி, இறங்கற்பண் சாதாரி என்றெல்லாம் கூறுவர்.

***'அருளே யாதலோ கொடிதேயிருள்வரச்***
***சீறியாழ் செல்வழி பண்ணி யாழ் தின்***
***காரெதிர் கானம் பாடினே மாக'*** (புறம் 144)

என்ற புறநானூற்றுப் பாடல் முல்லை நில மக்களின் பண்ணையும் யாழையும் நன்கெடுத்துக் காட்டுகிறது. இவர்களது ஊர் பாடி, சேரி, பள்ளி, ஆவிரம், இடைச்சேரி, உவளகம், ஆய்ப்பாடி, வல்லி, வல்லியம் எனப்படும்.

## முல்லையில் செய்த கல்விளக்கு

குறிஞ்சிநில மக்கள் கண்ட விளக்கினும் முல்லைநில மக்கள் கண்ட விளக்கு சிறிது முன்னேற்றம் உடையதாய் இருக்கிறது. இவர்களது விளக்கு இயற்கை அன்னை அளித்த விளக்கு அல்ல. செயற்கை விளக்காகும். மென்மையான கருங்கல்லுத் துண்டை எடுத்து ஒரு சிறிய வலுவான கருங்கல்லைக் கொண்டு தட்டித்தட்டி வெள்ளை மாக்கல்லின் நடுவில் ஒரு சிறிய பள்ளம் உண்டாக்கி அப்பள்ளத் திலே நெய் வார்த்து விளக்கெரித்தனர். முல்லை நில மக்கள் உருவாக்கிய கல்விளக்கின் உருவம் ஒன்றும் இதனுடன் இணைக்கப் பட்டு இருக்கிறது. வாசகர்கள் கண்டு கொள்க. (படம் 2 பார்க்க)

**நெய்தல் நிலம்** : இந்நில மக்கள் கல்வி, கேள்விமிக்க சிறந்த ஆண் மகனைச் சேர்ப்பன், புலம்பன், துறைவன் கொண்கன் என்பர். இவன் இந்நில மக்களின் தலைவனாவான். ஏனைய ஆண்மக்கள்

*பரவர், அளவர், நுளையர், கடலர், கழியர், சலவர், திமிலர், வலையர் எனப்படுவர்.*

*நெய்தல் நிலத்திற் கல்வி, கேள்வியிற் சிறந்த பெண் மகள் பரத்தி, நுளைச்சி எனப்படுவாள். இவள் இந்நிலத்தின் தலைவி. ஏனைய பெண்கள் பரத்தியர், அளத்தியர், நுளைச்சியர் எனப்படு வார்கள்.*

*புள் : அன்னம், அன்றில், அகன்றில் போல்வன.*

*தொழில் : மீன் விற்றல், உப்புச் செய்தல், உப்பு விற்றல்.*

*உணவு : மீன் விலையும் உப்பு விலையுமாகும்.*

*பூ : வெள்ளிதழ்க் கைதையும் நெய்தலுமாம்.*

*ஊர் : கலமேறு பட்டினம், சிறுகுடி, பாக்கம்.*

*மரம் : புன்னை, ஞாழல், கண்டலாகும்.*

*தெய்வம் : வருணனாகும்.*

***"வருணன் மேய பெருமணல் உலகமும்"***

*என்று தொல்காப்பியம் கூறுவது இவர்களது தெய்வம் வருணன் என்பதை உறுதிப்படுத்துகிறது.*

*பறை : மீன் கோட்பறை, நாவாய்ப்பறை, சாப்பறையாகும்.*

*யாழ் : நெய்தல்யாழ் (விளரி யாழ்) பண் : விளரிப்பண் ஆகும்.*

### நெய்தல் நிலத்தில் கண்ட சங்கு விளக்கு

*இவர் தம் நிலத்தில் கல்விளக்கைக் கண்டார்களில்லை. சங்குகளில் நெய்விட்டு எரிக்கும் சங்கு விளக்கே நெய்தல் நில மக்கள் கண்ட விளக்காகும். சிறு சிப்பிகளிலும் நெய்விட்டு எரிக்கும் சிப்பி விளக்கு இவர்கள் இல்லத்தில் இருந்தது. மீன் கொழுப்பை உருக்கி நெய்யாக இவர்கள் உபயோகித்திருக்கலாம். இத்தகைய சங்கு விளக்குகள் தமிழ்நாட்டு மீனவர்கள் மட்டும் கண்டார்கள் என்று கூறுவதற்கில்லை. சுமார் 10,000 ஆண்டுகளுக்கு முன்னர், திராவிடர் களின் தாயகம் என்று கூறப்படும் சுமேரியாவிலும் (பபிலோன் அல்லது மெசபொத்தாமியாவிலும்) சங்கு விளக்குகள் உபயோகப் படுத்தப்பட்டிருக்கின்றன. தமிழ் நாட்டிலுள்ள நெய்தல் நிலத்தி லுள்ள சங்குவிளக்கும் சுமேரிய நாட்டில் கண்ட பழம்பெரும் சங்கு விளக்கும் ஒருப்போல இருக்கின்றன. (படம் 3 பார்க்க)*

### மருத நிலத்தில் தோன்றிய மண் விளக்கு

***மருத நிலம்** : இந்நில மக்கள் தங்கள் நிலத்திலுள்ள கல்வி, கேள்வி, அழகு, ஆண்மை முதலியவற்றில் சிறந்து விளங்கும் ஆண்மக்களை ஊரன், மகிழ்நன் என அழைப்பர். இவன் இந்நில மக்களின் தலைவன். ஏனைய ஆண்கள் உழவர், கடைவர் எனப்படுவர்.*

இந்நிலத்தில் கல்வி, கேள்வி, அழகு, பெண்மை முதலியவை நிறைந்த பெண் மகளைக் கிழத்தி, மனைவி என்பர். இவள் இந்நிலத் தலைவ னின் இல்லக் கிழத்தி. ஏனைய பெண்கள் உழத்தியர், கடைச்சியர் எனப்படுவர்.

இந்நிலத்திற்குரிய மரம் : மருதம், வஞ்சி, காஞ்சி முதலியன வாகும். விலங்குகள் : எருமை, நீர்நாய் முதலியன. புள் : நீர்கோழி, தாரா.

பூ : தாமரை மலர், செங்கழுநீர்ப்பூ. உணவு : செந்நெல், வெண்ணெல்.

ஊர் : பேரூர், அகரம், உறையுள், கிராமம், குடம், கோட்டம், சரணம், தண்ணடை, தாவளம், நகரம், நகர், நிகேதனம், நியமம், நிலயம், படப்பை, பள்ளி, பாழி, புரம், புரி முதலியனவாகும். இவைகள் இடத்திற்கும் தொழிலுக்கும் ஏற்ப பெரிதும் சிறிதுமான பலவித ஊர்களாகும்.

நீர் : மனைக் கிணறும் பொய்கையும் யாறும்.

தொழில் : நடுதல், களைகட்டல், நெல்லரிதல், அவை கடா விடுதல், பயிர்க்குக் களை கட்டல்.

மருத நிலம் தோன்றிய காலத்தில் மக்கள் நாகரிகம் துளிர்க்க ஆரம்பித்தது. உழுதல் தொழில் ஊக்கமும் ஆக்கமும் பெற்றன. இந்நில மக்கள் உற்பத்தியைப் பெருக்கத் தீவிரமாக முன்வந்தனர். இந்நிலத்தின் தலைமைப் பதவி உயர்த்தப்பட்டது. உற்பத்தியைப் பெருக்க எல்லா நிலத்தினின்றும் மக்கள் திரட்டப்பட்டனர். தெய்வ நிலையிலும் மாறுதல்கள் எழுந்தன. எல்லா நிலத்தின் தலைவனிலும் மருத நிலத்துத் தலைவன் உயர்ந்தான். பிறநிலத் தெய்வங்கள் சிறு தெய்வங்கள் ஆக்கப்பட்டு எல்லாத் தெய்வங்களுக்கு மேலாக மருத நிலத் தெய்வமான சிவன் உயர்த்தப்பட்டான். முருகன் சிவனுடைய மகனானான். திருமால் மைத்துனனாகவும், காளி மனைவியாகவும், வேந்தன் (இந்திரன்) தேவர்களுக்கு அரசனாகவும், வருணன் பணி ஆளாகவும், சிவன் "மன்னர்மன்னனாக" பிறவாயாக்கைப் பெரி யோனாக முளைத்தான்.

பறை : மண முழவு, நெல்லரிக்கிணை. யாழ்: மருத யாழ். பண்: மருதப் பண். இப்பண் படுமலைப்பாலையாகி இன்று கல்யாணி யாகப் பெயர் மாறியிருக்கிறது.

***"வேந்தன் மேய தீம்புனல் உலகமும்"***

என்ற தொல்காப்பிய சூத்திரம் இந்நிலத்தின் தெய்வத்தை நன்கு எடுத்துக்காட்டுகிறது.

நானிலத்திலும் இந்நிலமே மேனிலமாய் மக்கள் வாழ்க்கைக்கு ஏற்ற நிலமாய்த் திகழ்ந்தது. இந்நிலத்தில் பேராறுகள் பாய்ந்தன.

நஞ்செயும், புஞ்செயும் இந்நிலத்தில் தான் மிகுந்தன. எல்லா நிலத்தவர்களுக்கும் வேண்டிய உணவை இந்நிலமே கொடுத்தது. எனவே இந்நிலத்திலேதான் நாகரிக வளர்ச்சிக்கு வாய்ப்பு ஏற்பட்டது.


இந்நில மக்கள்தான், கலப்பை என்னும் இயந்திரத்தை முதன் முதலில் கண்டனர். ஆளுடைமை என்னும் அத்தியாயம் இங்குதான் ஆரம்பமாயிற்று. ஆண்டான் அடிமை என்னும் வர்க்க முரண்பாடு இங்கு தான் துளிர்த்தது. மாடுகளும் எருமையும் உழுவதற்கு இங்குதான் பயிற்றப்பட்டன. முதன் முதலாக இங்கு தான் அரையில் ஆடை அணியும் வழக்கம் ஏற்பட்டது.

நீண்ட காலமாக ஆடை அணியாது விலங்குகளோடு விலங்குகளாய் வாழ்ந்த மனிதனின் உடம்பில் மயிர்கள் உதிர்ந்து தட்பவெட்ப நிலைகளைத் தாங்க முடியாது. இலைகளையும், மரப்பட்டைகளையும், தோல்களையும் போர்த்த ஆரம்பித்தான். அப்பால் அவைகளை அரையில் பிணைக்க ஆரம்பித்தான். மருத நில மக்கள் ஆதியில் புலித்தோல்களை அரையில் அணிந்தும், யானைத் தோலைப் போர்த்தியும் வந்தனர். பின் அவர்கள் பருத்தியைப் பயிரிடவும் நூற்கவும், ஆடை நெய்யவும் பயின்ற பின்னரே அரை யில் பருத்தி ஆடையை அணிய ஆரம்பித்தனர். இந்நிலத்தில் வெட்ப நிலை அவர்களைக் குறைந்த அளவு ஆடைகளையே அணியச் செய்தது. இவர்களின் முதல்வனாகிய சிவபெருமான் இந்நிலத்தின் பிரதி நிதியாக புலித்தோலை அணிந்தும் யானைத் தோலைப் போர்த்தியும் காளை மீது அமர்ந்தும் இருப்பதே நல்ல சான்றாக மிளிர்கிறது.


கற்காலம் மாறி இங்குதான் உலோகக் காலம் அரும்பியது. அதன் சின்னமாகவே சிவபெருமான் பிரதிபலிக்கிறான். அவன் அருகே மான் நிற்கிறது. அவன் மாட்டைப் பழக்கி வாகனமாகக் கொண்டிருக்கிறான். உடுக்கையும், அக்கினியும், திரிசூலமும், மழுவும் பிற ஆயுதங்களும் கரத்தில் ஏந்தி நிற்கிறான். மனித வர்க்கத்தின் பகைவர்களை நிர்மூலஞ் செய்கின்றான். யானையைக் கொன்று அதன் தோலைப் போர்வையாகப் போர்த்துக் கொண் டிருப்பதும் புலியைக் கொன்று அதன் மெல்லிய தோலை அரையில் தரித்திருப்பதும் அழகற்ற கொடிய கடைத்தர மகளை (அபஸ்மார புருஷனை) காலின் கீழ் போட்டு மிதித்து நிற்பதுவும் தலையில் கங்கையை வைத்திருப்பதும், இடப்பாகத்தில் மலைமகளை வைத் திருப்பதும், அவன் தாண்டவனாகத் திகழ்வதும், கையில் கமண் டலம் வைத்திருப்பதும், பிறவும் இந் நிலத்தினின்றே தமிழகத்தின் நாகரீகம் அனைத்தும் வளர்ந்தன என்பதைக் காட்டுகின்றன. சிவபெருமான் மருத நிலத்தின் சின்னம் என்று கூறினால் அது மிகவும் பொருத்தமானதாக இருக்கும். இந்நிலத்தில்தான் பிரபுத்துவ சமூகம்



படம் 1. கல் விளக்கு



படம் 3. சங்கு விளக்கு



படம் 2. செயற்கை கை விளக்கு



படம் 4. சுடுமண் விளக்கு

துளிர்த்தது. மன்னர்களுடன் மணிமகுடங்களும், செங்கோலும், மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும், கோயில்களும், அணி களும், மணிகளும் நெசவும், ஆடைகளும், ஆயுதங்களும் மொழியும் எழுத்துகளும் இலக்கணங்களும் கலைகளும் எண்ணற்ற இசைக் கருவிகளும் இசைகளும் மருத்துவ நூற்களும் வளர்ந்தன.

இந்நிலத்தில்தான் பரத்தையர் என்ற சமூகம் பிறந்தது. மன்னர் களும் மதிமந்திரிகளும், புலவர்களும் சிற்பிகளும், ஓவியர்களும், மருத்துவர்களும், அறிவாளிகளும் இங்குதான் அரும்பினர். சமய நெறிகள் இங்கு தான் எழுந்தன. அறநெறிகள், ஒழுக்கங்கள் இங்கு தான் கால் கோலின. இதற்கு இன்று நமது இலக்கியங்கள் சான்று தருகின்றன.

இந்நிலமே கலைகளுக்குக் காப்பிடமாக இருந்தது. எல்லாத் தெய்வங்களும் இங்கு வந்து தான் குடி புகுந்தன. பேரூரும், பேரிலக் கியங்களும் இங்குதான் தோன்றின.

### மண் விளக்கும், உலோக விளக்கும்

இந்நிலத்தில் கல்சட்டிகள், மண்சட்டிகள், கல் உருவங்கள், மண் உருவங்கள் போன்றவைகள் செய்யப்பட்டன. பசுமையான மாக்கற்களைக் கொண்டு பானைகளும் சட்டிகளும் கைவிளக்கு களும் உருவாக்கினர். அதே போன்று சுடுமண்ணாற் பானைகளும் சட்டிகளும் கலயங்களும், குடங்களும் அடுப்புகளும் விளக்குகளும் செய்யப்பட்டன.

களிமண்ணால் தகடுகள் செய்து சுட்டு ஏடுகளாக முதன் முதலாகப் பயன்படுத்தப்பட்டன. சுடுமண்ணால் தெய்வ உருவங்கள் இங்கு செய்யப்பட்டன. சுடுமாண்ணால் அழகிய கைவிளக்குகள் செய்யப்பட்டன. (படம் 4 பார்க்க)

கல்லினால் செய்யப்பட்ட குத்துவிளக்குகளும் கை விளக்கு களும் உபயோகப் படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் அதிகமாகச் சுடுமண்ணாற் செய்யப்பட்ட கை விளக்குகளே உபயோகப் படுத்தப்பட்டிருக்கின்றன.

இந்நிலத்திலிருந்துதான் பசு நெய்யும், எருமை நெய்யும் எள் நெய்யும் (எண்ணெயும்) விளக்கெண்ணெயும், பிண்ணாக் கெண் ணெயும், வேப்பெண்ணெயும், குறுக்கெண்ணெயும் தோன்றியது.

கற்காலம் மாறி உலோகக் காலம் அரும்பியதும் இந்நிலத்தி னின்றே செம்பு, பித்தளை உலோகங்களில் கைவிளக்குகள், தூக்கு விளக்குகள், தூண்டாமணி விளக்குகள், தீவர்த்திகள், நிலை விளக் குகள், குத்து விளக்குகள், சரவிளக்குகள், தீபலட்சுமி விளக்குகள், கிளை விளக்குகள், பூசை விளக்குகள் போன்ற விளக்குகளும் இவைகள் ஒவ்வொன்றிலும் பல்வேறு சமயக் குறிகளைக் காட்டும் பல்வேறு விதமான சின்னங்களும் விளக்குகளை அழகு படுத்துவதற் கென்று பல்வேறு உருவங்கள் பொறிக்கப்பட்ட எழில் விளக்கு களுமாக ஆயிரக்கணக்கான விதமுள்ள விளக்குகள் தோன்றின. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மருதநிலத்தில் அரும்பிய சுடுமண் விளக்கிலே கலை துளிர்க்க ஆரம்பித்து விட்டது. (படம் 5 பார்க்க)



படம் 5. மாக்கல் விளக்கு

# முச்சுடர் வழிபாடு

தமிழர்களின் நெறி உயர்ந்த தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. இறைவன் ஐம்புலனிற்கும் எட்டாதவன். அவன் எல்லாமாய் அல்லவுமாய் இலங்குபவன். அவன் பிறவாதவன், இறவாதவன். அவனுக்கு ஊரும் இல்லை, பெயரும் இல்லை. அவன் உலகில் அவதரிப்பதே இல்லை. அவனைக் கண்டவர் எவரும் இல்லை. பிரமன், திருமால் முதலிய தேவர்கள் கூட அவனுடைய அடியையும் முடியையும் காண முயன்று தோல்வியுற்றார்கள் என்றெல்லாம் கூறப்படுகிறது. தமிழ் மறையானது,

***'இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்***
***இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே'***

என்று கூறுகிறது.

இப்படி இருக்கத் தமிழர்கள் திருவிளக்கைத் தெய்வமாகக் கும்பிடுவது முறையாவென்று சிலர் வினவுகின்றார்கள் அக்கேள்வி நியாயமான கேள்வியேயாகும்.

தமிழினம், அரும்பியபொழுதே இறைவனின் மாபெரும் தத்துவங்களையெல்லாம் காணவில்லை. அவர்கள் நெருப்பு, ஞாயிறு, திங்கள் முதலிய இயற்கைப் பொருள்களினின்றே இறைவனைக் கண்டனர். எனவே, தத்துவங் கடந்த தற்பரனைக்கூட இயற்கை வடிவினன் என்று போற்றுகின்றனர்.

எல்லாத் தத்துவங்களையும் இயற்கையினின்றே அவர்கள் கண்டனர். அவர்கள் கண்ட மாபெரும் தத்துவங்களின் அடிப்படை அனைத்தும் இயற்கையிலிருந்தே எழுந்தனவாகும். எனவேதான்,

***'இருநிலனாய்த் தீயாகி நீருமாகி***
***இயமானனாய் எறியும் காற்றுமாகி'***

என்று கூறப்பட்டது.

சைவ சமயப் பெரியார் திரு.வி.க. அவர்கள், " பழந்தமிழர்கள் இயற்கை நிலையமாகிய மைவரையில் இயற்கை யுணவுகொண்டு, இயற்கையுடையணிந்து உலகெனும் இயற்கை நூல் பயின்று இயற்கையுடன் கூடி இயற்கையைப் பாடி இன்ப வாழ்வு நடாத்தி வந்த போது இயற்கையினுள் பிரிவின்றி விரவிநிலவும் அழியா அழகு புலனாயிருத்தல் வேண்டும். இயற்கையுள் வாழ்வோர்க்குக் கை

புனைந்தியற்றாக் கவின் பெறுவனப்பு எளிதில் புலனாகும்" என்று கூறியுள்ளார்.[1]

தமிழர்கள் ஆதியில் தீயினின்றே தங்களது அரும்பெரும் தெய்வ உண்மைகளையெல்லாம் கண்டமையினாலே தீயானது திரு விளக்காகப் பரிணமித்தது. அது போற்றப்பட்டு வருகிறது. என்பதை நாம் நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டு மக்கள் நனிசிறந்த நாகரிகத்தை எய்தி நின்ற போதும், அவர்கள் தம் வாழ்விற்கும் வளமளித்த நெருப்பை மறக்கவில்லை. அவர்கள் ஆதியில் நெருப்பைக் கடவுளாகக் கண்டு, அதனைப் பயபக்தியுடன் வணங்கினார்கள். அப்பால் படிப்படியாக விளக்கையும், ஞாயிறையும், திங்களையும் வழிபட ஆரம்பித்தனர்.[2] அவர்கள் நாடு - நகரங்களையும், மாடமாளிகைகளையும், கூட கோபுரங்களையும், பல்வேறு மணிகளையும், அணிகளையும், மருந்துகளையும், உலோகங்களையும், மொழிகளையும், மறைகளை யும், இலக்கியங்களையும், உருவாக்கிய காலத்தும் நெருப்பையும் ஞாயிற்றையும், திங்களையும் மறந்துவிடவில்லை. இவைகளே அவர் களின் ஒப்பற்ற தெய்வங்களாகப் பரிணமித்தன. இவைகளினின்றே முருகன், மாயோன், சிவன் போன்ற பெருந் தெய்வங்கள் எழுந்தன.

தமிழர்களின் வரலற்றை நுணுகி ஆராய்ந்தால் அதில் பல அரிய உண்மைகள் காணக் கிடக்கின்றன. அவர்கள் பன்னூறு ஆண்டுகளுக்கு முன், மலைகளிலும் அதையடுத்த காடுகளிலும் அதற்கடுத்த வளம் வாய்ந்த களனிகள் அருகிலும் கடற்கரைகளிலும் வாழ்ந்து வந்தனர்.

இயற்கையோடு இயற்கையாய் இணைந்து இன்ப வாழ்வு எய்தினர். ஆரம்பகாலத்தில் அவர்கள் வயிற்றுப் பசியால் வருந்த வில்லை. வாழ்க்கைக்கு வேண்டிய இன்றியமையாத பொருள்களை எண்ணி வாடவில்லை. அவர்கள் அருகே பழுத்துக் குலுங்கும் பழ மரங்களின் அருகே சென்று வயிறாரப் புசித்தனர். பக்கத்தில் பளிங்கு போல் சரசரவென்று ஓடும் கானாற்று நீரைத் தாராளமாகத்தாகந் தீரும் மட்டும் குடித்து மகிழ்ந்தனர். அவர்கள் நிலத்திற் படுத்தும், நீரிற் குளித்தும், ஞாயிறு ஒளியில் திரிந்தும் நல்ல காற்றை நுகர்ந்தும் உடல் உரம் பெற்றும், உள்ள மகிழ்ச்சியுற்றும் நீண்டநாள் வாழ்ந்து இன்ப வாழ்வு நடாத்தி வந்தனர். அவர்களின் சமூக வளர்ச்சியிலே உணவில் பற்றாக்குறை எழுந்தது அவர்கள் இடம் பெயர ஆரம்பித்தனர். உழவுத்தொழிலையும் ஏனைய கைத் தொழிலையும் கண்டனர்.[3]

---

1. சைவத்தின் சமரசம் – திரு.வி. கல்யாணசுந்திர முதலியார் 1926 பக். 7
2. பழந்தமிழ் நாகரிகம் அல்லது தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து. திரு.கா. சுப்பிரமணியப் பிள்ளை எம்.ஏ., எம்.எல். 1939. பக்கம்.
3. முருகன் – திரு.வி. கலியாணசுந்தர முதலியார்

இயற்கை வாழ்வு நடத்திய பழந்தமிழ் மக்கள் இயற்கையையே இறைவனாகக் கண்டனர். அதன் பலனாக வாழ்வில் இன்பங் கொண்டனர்; இயற்கை வழியே இறைவழியென விண்டனர்.

ஒல்காப் பெரும் புகழ் வாய்ந்த தொல்காப்பியத்தை உற்று நோக்கினால் மக்கள் ஞாயிறு, திங்கள், நெருப்பு முதலிய ஒளிப் பொருள்களின் வாயிலாக இறைவனை வழி பட்டுவந்ததற்கு எண்ணற்ற சான்றுகள் உள்ளன.

***'கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற***
***வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்***
***கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே'***

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தால், தமிழ் மக்கள் ஞாயிறு (கொடி நிலை), திங்கள் (வள்ளி), தீ (கந்தழி) என்னும் ஒளிப் பொருள்கள் வாயிலாக இறைவனை வழிபட்டார்கள் என்பதை நன்கறியலாம்.

கந்தழி ஒரு பற்றுக் கோடுமின்றித் தானாகயெழுந்த தத்துவங் கடந்த பொருளாகக் கொள்ளப்படும். கந்தழி என்பது பற்றுக் கோட்டை அழிப்பது என்னும் பொருளில் அங்கியைக் குறிக்கும் எனத் தமிழ் மூதறிஞர்கள் விளக்க உரை நல்கி இருக்கின்றார்கள்.

அவர்கள் நல்ல உணவை நாடிய காலத்தில் பற்றாக்குறை ஏற்பட்டது. அப்பொழுது உணவு உற்பத்தி செய்ய ஆட்கள் அதிகம் தேவைப்பட்டது. உற்பத்திக் கருவியாக எண்ணப்பட்ட இலிங்கம் வணக்கப் பொருளாக எழுந்தது.

தமிழ் மக்களிடையே முச்சுடர் வழிபாடு முளைத்திருந்தது என்பதற்கு எண்ணற்ற ஏட்டுச் சான்றுகள் உண்டு, மக்கள் வாழ்வில் முச்சுடர் வழிபாடு வளர்ந்து வருகையில் ஞாயிற்றையும் திங்களை யும் எப்பொழுதும் கண்டு வழிபடுதல் அரிதாக இருந்தது.

எனவே அதற்கு ஈடாகத் தமிழகர்கள் தீவழிபாட்டை மேற் கொண்டனர். ஆகவே தினகரன் திங்கள் தீ என்னும் முச்சுடர்களின் வடிவைக் குறிக்கும் வட்டம், வில், அல்லது பிறை, முக்கோணம் போன்ற வடிவமான குண்டங்களை அமைத்து அவைகளில் தீ வளர்த்துக் கடவுளை வழிபட்டு வந்தனர். இதுதான் முத்தீ வேட்டல் என்னும் சமய வழக்காகப் பரிணமித்தது. சீரிய மக்களும், ஆசீரிய மக்களும், கல்தேய மக்களும், சுமேரிய மக்களும், எகிப்திய மக்களும், மொகஞ்சதாரோ மக்களும், பாரசீக மக்களும், ஆரிய மக்களும், பூதமக்களும் நெருப்பை வணங்கி வந்துள்ளனர்.

பன்மொழிப் புலவரும் தமிழர் நெறியைப் பழுதற ஆய்ந் துணர்ந்தவரும் நமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவருமான பேரறிஞர் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், தொல் காப்பியர் காலத்திலே தமிழகத்தில் மும்மூர்த்திகளும் அவர்களுக்கு

மேம்பட்ட முழுமுதற் கடவுளும் தோன்றியுள்ளன ரென்றும் மும் மூர்த்திகளையே ஞாயிறு, திங்கள், தீ என்று குறிப்பிட்டிருப்ப தாகவும் கூறுகின்றார்கள். (பழந்தமிழர் நாகரிகம் திரு.கா.சு. பிள்ளை)

எடுத்துக்காட்டாக "ஆசிரியர் தொல்காப்பியர் காலத்திலேயே மும்மூர்த்திகள் உண்டு என்ற கருத்து முளைக்கத் தொடங்கிற்று. எல்லாக் கோள்களுக்கும் நடுவிலிருந்து தனது கவரும் சக்தியால் அவற்றைப் பிணித்து நிற்கின்ற கதிரவனுடைய மண்டிலம் கொடி நிலை எனப்பட்டது. இரவில் பயிர்களுக்கு உயிர் தரும் திங்கள் மண்டிலம் அமுதத்தை வழங்குவதாகக் கருதப்பட்டு வள்ளி என்ற பெயர் பெற்றது. பற்றினவற்றையெல்லாம் அழிக்கின்ற நெருப்பு கந்தழி எனப்பட்டது. கதிரவன் ஒளியால் எல்லாம் உண்டாதலின் சூரிய மண்டலமாகிய கொடி நிலைக்கு அதிபதி பிரமா என்றும், சந்திர மண்டலத்திற்கு அதிபதி காத்தற் கடவுளாகிய திருமால் என்றும், நெருப்பு மண்டலத்திற்கு அதிபதி அழித்தற் கடவுளாகிய உருத்திரன் என்றும் உலகங்கள் எல்லாவற்றையும் அடக்கி நிற்கும் சக்தி மண்டலத்திற்கு அதிபதி அழித்தற்கடவுளாகிய உருத்திரன் என்றும் உலகங்கள் எல்லாவற்றையும் அடக்கி நிற்கும் சக்தி மண்டலத்திற்கு அதிபதி கடவுள் என்றும் கருதப்பட்டது. கடவுளைத் துதிப்போர் மும்மூர்த்திகளோடு அவரைத் தொடர்புபடுத்திப் பேசுதலில் **கொடி நிலை கந்தழி வள்ளி** என்ற வடுநீங்கு சிறப்பின் முதலான மூன்றும் கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே" என்ற தொல்காப்பியச் சூத்திரம் எழுந்ததாகும் என்றும்,

'கதிரவனைச் சிவத்திற்கு உவமையாகவும் அவன் ஒளியைச் சக்திக்கு உவமையாகவும் வழங்கிய போது அவ்வொளி பரவிய இடமாகிய விண்ணும் சக்திக்குப் பேராயிற்று. விண்ணு என்ற பேரே விண்டு எனவும் விஷ்ணு எனவும் மாறிற்று. இருக்கு வேதத்தில் விண்ணிற் பரவிய கதிர் ஒளியே விஷ்ணுவாகப் பேசப்பட்டது' எனவும் குறிப்பிடப்பட்ட அறிவுரைகள் ஆராயத்தக்கன. (தமிழர் சமயம் பக்.48, 52, 53)

மேலும் அவர்கள் 'கதிரவனை இடமாகக் கொண்ட சிவ பிரான் வெம்மையினால் அச்சம் விளைவிக்கும் தந்தைத் தெய்வ மாகக் கருதப்பட்டபோது தண்ணளியுடைய தாய்த் தெய்வத்தின் வடிவம் தண்ணீராகக் கருதப்பட்டது. ஆழமுள்ள தண்ணீரின் நிறம் நீலம் ஆயிற்று. ஆதலின் தாய்த் தெய்வத்தின் நிறமும் நீலமாயிற்று. சந்திரன் குளிர்ச்சி தருவதாகத் தோன்றுவதால் சந்திரன் தாயின் அருவுருவ வடிவமாகக் கருதப்படுவதற்கு ஏதுவாயிற்று சூரிய ஒளியில் தோன்றும் ஏழு நிறங்களில் முதலில் உள்ளது சிவப்பும் இறுதியிலுள்ளது நீலமும். ஆதலால், பாதி ஆணும் பாதி பெண்ணு மாகிய சிவ வடிவத்தில் ஆண் பகுதி செந்நிறமாகவும் பெண் பகுதி நீலநிறமாகவும் கொள்ளப்பட்டது. சிவம் என்ற சொல் முழுமுதற்

கடவுளைக் குறிக்கப் பயன்பட்டபோது எங்கும் நிறைந்திலங்கும் கடவுளின் ஆற்றலே சக்தி எனப்பட்டது. (தொல்காப்பியம் - பொருள் அதிகாரம் சூத். 88 கா. சு. பிள்ளை) எனக் கூறியிருப்பது சிந்திக்கத் தக்கது.

இஃதன்றி உலகிலுள்ள பல்வேறு மக்களும் தினகரன், திங்கள், தீ என்ற முச்சுடர் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள. எகிப்திய மக்கள் அமன் என்ற பெயரால் சூரியனைக் கடவுளாக வழிபட்டு வந்தனர். பபிலோன் மக்களிற் பலர் ஹபில் சிவா என்றும் ரபு சிவா என்றும் இருதெய்வங்களை வழிபட்டு வந்தனர்.[1] அங்கும் சிவா என்ற சொல்லுக்கு ஒளி என்றே பொருள் கொள்ளப்பட்டது. பபிலோன் நாட்டில் நிப்பூர் என்னும் ஊரில் பெரிய ஞாயிற்றுக் கோயில் இருந்து வந்தது.[2]

கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக் கிழமையை ஒரு சிறந்த நாளாகக் கொண்டாடுவது கதிரவன் வழிபாட்டிலிருந்து எழுந்த கருத்தே யாகும். எபிரேய மக்கள் நிறை உவா நாட்களைப் போலவே ஞாயிற்றுக் கிழமைகளிலும் பலி செலுத்தி வந்தார்கள். எனவே ஞாயிற்றுக் கிழமையின் முதன்மை ஞாயிறு வழிபாடு காரணமாக எழுந்ததேயாம்.[3]

தினகரன் வழிபாடு எழுந்தபின் திங்கள் வழிபாடும் பலநாடுகளில் அரும்பியுள்ளன. தினகரனைத் தூண் வடிவில் வழிபட்ட மக்கள் மரவடிவில் வழிபட்டனர். தினகரன் (ஞாயிறு), திங்கள் (சந்திரன்) வணக்கங்கள் எபிரேய மக்களிடம் பால் அஸ்ட்டோரெத் வணக்கங்களாக வளர்ந்தது. நாளடைவில் பால் (பகல்) ஆண் தெய்வமாகவும் அஸ்டோரெத் ஆகிய திங்கள் பெண் தெய்வமாக வும் பரிணமித்தன. அப்பால் ஞாயிற்றுக் கடவுளின் மனைவியாகத் திங்கள் கடவுள் கருதப்பட்டது. ஆண் பெண் தன்மைகளின் சின்னங் களாக ஞாயிறு, திங்கள் ஆகிய கடவுள்கள் எண்ணப்பட்டன. சாலமோன் ஞானி கட்டிய ஆலயத்திற்கு முன் இரு பெருந் தூண்கள் நிறுத்தப்பட்டிருந்தன என்று பைபிளில் கூறப்படுகிறது. அவைகள் ஞாயிறு, திங்கள் வழிபாட்டிற்குரிய சின்னங்கள் என்று ஆராய்ச்சி யாளர்கள் கூறுகின்றனர்.

ஞாயிறு, திங்கள் வழிபாட்டைப் போலவே தீ வழிபாடும் சீரியா, அசீரியா, சுமேரியா, கல்தேயா, எகிப்து முதலிய இடங்களில் தொன்று தொட்டு நடைபெற்று வந்தது. தீக்கடவுளுக்கும் கோயில்கள் இருந்தன. நோவாவின் நாலாம் சந்ததியில் வந்த நிம்ரோத் என்ப

1. Mandains - Habil Ziva, Rabbin Ziva - Encyclopaedia Britanica 9th edition.
2. Kassetes - A. H.O. T.N.E. P. 20 - R.H. Hall
3. Sabath might have from sunworship - Sabath Encyclopaedia Britanica.

வனால் தீ வழிபாடு நடத்தப்பட்டு வந்தது என்று கிறிஸ்தவர்களின் வேதநூலில் காணப்படுகிறது.[1]

அக்கினி வழிபாட்டிற்குரிய அரசர், சூரிய குலத்தவர் என்றும், திங்கள் வழிபாட்டிற்குரிய அரசர் சந்திர குலத்தவர் என்றும் அழைக்கப்பட்டனர். சப்பானிய மன்னர் சூரிய குலத்தவர் என்று இன்றும் கூறப்பட்டு வருகிறது. அதேபோன்று பாண்டிய குலத்த வர்கள் சந்திரகுலம் என்றும் சோழர்கள் சூரியகுலம் என்றும் கூறப் பட்டு வருவது, நாம் அறிந்தேயாகும்.

தினகரன் (ஞாயிறு). திங்கள் (சந்திரன்), தீ என்னும் மூன்று ஒளியுடைய பொருள்களாலே தமிழ் மக்கள் பண்டைக்காலத்தில் வழிபாடு நடத்தி வந்தது போலவே ஆரியர்களும் முத் தீ வழிபாடும் ஓமங்களும் யாகங்களும் செய்து வந்தனர்.

உலகமெங்கும் ஒரு காலத்தில் ஞாயிறு, திங்கள், நெருப்பு ஆகிய முச்சுடர் வழிபாடு பரவி இருந்தது. வரலாறுகளும் சமய நூற்களும் அதற்கு இன்றும் சான்று பகர்கின்றன தமிழ்மக்கள் வரலாறு முச்சுடர் வழிபாடு முழு முதல் தெய்வத்தை உணர வழிகாட்டுவதாக இருந்தது என்பதை விளக்கமாக எடுத்துக் காட்டுகிறது.

தமிழ்நாட்டுச் சமயப் பெரியோர்களும் இலக்கிய மேதைகளும் இறைவனின் ஒளித் தன்மையை மிகத் தெளிவாகத் தேனொழுகும் தீந்தமிழில் நமக்குத் தந்திருக்கின்றார்கள்.

***“தூண்டா விளக்கின் சுடரணையாய்”***

என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளின் மந்திர மொழிகளும்.

***‘ஞானச் சுடர் விளக்காய் நின்றவன்’***
***‘விறகிற் றீயினன் பாலிற் படு நெய்யோன்’***
***‘மறைய நின்றுளான் மாமணிச் சோதியான்’***

என்ற அப்பர் அடிகளின் ஒப்பிலா மொழிகளும்,

***‘சோதி அந்தம் ஆயினும் சோதியுள் ஓர் சோதியானும்’***

என்ற சம்பந்தப் பெருமானின் மணிமொழியும்

***‘ஒளி வளர் விளக்கே உலப்பிலா ஒன்றே***
***உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே***
***தெளிவளர் பளிங்குத் திரள் மணிக்குன்றே***
***சித்தத்துட் தித்திக்கும் தேனே’***

என்ற திருமாளிகைத்தேவரின் திருவிசைப்பாவும்

***‘அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்’***

என்ற சேக்கிழார் பெருமானின் செம்மொழியும்

1. Nimrod is supposed to have introduced the workship of fire and heavenly bodies. He is known as Bel, Baal (the Sun Orian Atorus) - Scripture History. P. 22

*'சிந்தாதேவி செழுங்கலை நியமித்து*
*நந்தா விளக்கே...... பாவாய்*
*வானோர் தலைவி மண்ணோர் முதல்வி:'*

என்று கலைமகள் பெருமைகூறும் மணிமேகலையின் அணிகெழு போக்கும்.

*'சுடரிற் சுருட்டும் திருமூர்த்தி'*

என்று கூறும் சிந்தாமணியின் நந்தாப் பெருமையும்

*'திங்களைப் போற்றுதும்! திங்களைப் போற்றுதும்!*
*கொங்கலர் தார்ச் சென்னி குளிர் வெண்குடை போன்றிவ்*
*வங்க ணுல களித்தலான்;*
*ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்*
*காவிரி நாடன்றிகிரிபோற் பொற்கோட்டு*
*மேரு வலந் திரிதலான்'*

என்ற சிலப்பதிகார இலக்கியச் செறிவும்

*'பலர் புகழ் ஞாயிறு'*

என்று கூறும் நக்கீரனின் நன்மொழியும்

*'முந்நீர் மீமிசை பலர் தொழத் தோன்றி*
*யேமுற விளங்கிய சுடர்'*

என்று நற்றிணை நவிலும் நயமொழியும்

*'மின்னுருவாய் முன்னுருவில் வேத நான்காய்*
*விளக்கொளியாய் முளைத் தெழுந்த திங்கள் தானாய்ப்*
*பின்னுருவாய் முன்னுருவில் பிணி மூப்பில்லாப்*
*பிறப்பிலியாய் யிறப்பதற்கே யெண்ணாது எண்ணும்*
*பொன்னுருவாய் மணியுருவில் பூதமைந்தாய்ப்*
*புனலுருவாய் அனலுருவில் திகழுஞ் சோதி*
*தன்னுருவாய் என்னுருவில் நின்ற எந்தை*
*தளிர் புரையும் திருவடியென தலைமேலவே'*

என்று திருமங்கை ஆழ்வார் திருத்தாண்டகத்தில் விளக்கொளிப் பெருமாளுக்கு அரிய மாலை சூட்டி வணங்குவதும் நன்கு ஆராய்க.

*'சுத்த நிர்குணமான பரதெய்வமே*
*பரஞ்சோதியே சுகவாரியே'*

என்று தாயுமானவர் அழகொளிரக் கூறும் அருள் மொழியும் உற்று நோக்கற்குரியது.

சுத்த சமரச சன்மார்க்க சங்க நிறுவியாரும் மிக முற்போக்குடைய சமய ஞானியுமான இராமலிங்க சுவாமிகள்,

***'விண்ணார் செஞ்சுடரே***
***சுடர் மேவிய வுள்ளொளியே***
***தண்ணார் வெண்மதியே***
***யதிற்றங்கிய தண்ணமுதே***
***கண்ணார் மெய்க்கனலே***
***சிவகாமப் பெண் காதலனே***
***அண்ணா தந்தனையே***
***யருளாரமு தந்தனையே'***

என்றும், அருமறையாத்த திருமூலர்.

***'விளக்கினை ஏற்றி***
***வெளினய அறிமின்***
***விளக்கின் முன்னே***
***வேதனை மாறும்***
***விளக்கை விளக்கும்***
***விளக்குடையார்கள்***
***விளக்கின் விளக்கும்***
***வுளக்கவர் தாமே'***

என்று பாடியிருப்பதையும் உற்று நோக்குக.

உலகமெங்கும் மூச்சுடர் வழிபாடு பரவி இருந்தது. என்றாலும் இவைகளை மிகச் சீரும் சிறப்புமாய்க் கொண்டாடியவர்கள் தமிழர் களேயாவர். தமிழகத்தில் தளிர்த்த சைவ, வைணவ சமயத்தார்கள் மட்டுமின்றித் தமிழகத்திற்கு விருந்தாளியாக வந்த சமண, பௌத்த சமயங்களும்கூட முச்சுடர் வழிபாட்டை ஏற்றிருந்தன என்று சமய ஆராய்ச்சியில் ஈடுபட்ட பேறறிஞர்கள் சிலர் கூறுகின்றார்கள்.

இன்னும் அடியில் கண்ட சமய பக்தர்களின் தேனொழுகும் தீஞ்சுவைப் பாடல்களால் அவர்களது முச்சுடர் வழிபாட்டின் உண்மையை மட்டுமின்றித் திருவிளக்கு வழிபாட்டின் உண்மையை யும் நன்கு காணலாம். அவை வறுமாறு.

கருங்கடலினின்று பொங்கி எழும் பொன்னிற ஒளிப்பந்தை யொப்பத் தகதகவெனக் கீழ்த்திசையில் ஞாயிறு, மாபெரும் விளக்கைப்போல் ஒளிவிட்டோங்கித் திகழ்கின்றான். இது ஒரு தீப உச்சிபோல் திகழ்கிறது. இம்மாபெரும் திருவிளக்கிற்குக் கடல், நெய் போல் காணப்படுகிறது. பூமியானது தகழிபோல் விளங்குகிறது. இதைப் பொய்கை ஆழ்வார் என்னும் வைணவப் பெரியார் தம் தெய்வீகக் கண்களால் காண்கிறார். உடனே அக்காட்சி அவரது நாவில் பக்திப் பாடலாய் அரும்புகிறது. அது வருமாறு :

***வையம் தகழியாய் வார்கடலே நெய்யாக***
***வெய்ய கதிரோன் விளக்காகச் செய்ய***

***சுடராழியின் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை***
***இடராழி நீங்கவே யென்று.***

இவ்வரும்பெரும் பாமாலைக்கு உரைகண்ட ஆசிரியர், 'நிலம், நெய்க்கும் திரிக்கும் ஆதாரமாக நிற்கும் தகழியாகவும் அதாவது அகலாகவும், நெடிய நிலக் கருங்கடலானது எண்ணெயாகவும் வெப்பமான ஒளிக்கதிர்களையுடைய கதிரவனை விளக்காகவும் வைத்துச் சிவந்த ஒளிச் சக்கரத்தையுடைய பங்கயக் கண்ணன் பாதார விந்தத்திலே எனது பாமாலையை நான் துன்பக் கடலைக் கடக்கச் சூட்டினேன்' என்று உரை கூறியதோடு, "இப்படிப்பட்ட எத்துணையோ சூரிய உதயங்களைப் பொய்கை ஆழ்வார் பார்த் திருக்க வேண்டும். பார்க்கும் பொழுதெல்லாம் பரந்தாமனின் அருட் சோதி அவரது உள்ளத்திலே இந்த இயற்கையின் எழிலையும் ஒளியையும் பார்க்கப் பார்க்க அனந்தசயன ஆழியானுடைய அழகும் ஒளியும் இப்படித்தான் இருக்குமோ என்ற ஆச்சரியம் பொங்கியது. அரங்கப் பெருமானின் ஆழியை (சக்கரத்தை) நினை வூட்டிய அந்த உதய சூரியனின் காட்சி உடனே உள்ளத்தில் புகுந்து அருட்பாடலாக ஊற்றெடுத்துப் பொங்கி எழுந்தது. அவருக்கு இடராக நின்ற துன்பச் சமுத்திரம் விலகி எங்கோ மாயமாய் மறைந்துவிட்டது போல் தோன்றியது. பொய்கையாழ்வார் இயற்றிய பொய்யாத் திரு விளக்கு நமக்கு ஒப்பற்ற ஞானவிளக்காகும். துன்ப இருளை அகற்றி இன்ப ஒளியாம் இறைவனைக் கண்டு உவப்பதற்குரிய துணைக் கருவியாகும் என்று விரிவுரை கூறியுள்ளார்.

இப்பாமாலையைத் தழுவிய மற்றொரு வைணவ சமயப் பேரறிஞராகிய பூதத்தாழ்வார்.

***'அன்பே தகழியாய்***
***ஆர்வமே நெய்யாக***
***இன்புருகு சிந்தை***
***இடுதிரியாய் நன்புருகி***
***ஞானச் சுடர்விளக்கு***
***ஏற்றினேன் நாரணற்கு***
***ஞானத் தமிழ் புரிந்த நான்'***

என்று எழிலொழுக நாராயணனுக்கு நற்றமிழ் மாலை சூட்டி யுள்ளார். அஞ்ஞான இருளை அகற்றி ஞானச் சுடர்காண நல்வழி காட்டுவதாக எண்ணுகின்றார்கள்.

"பயிலும் சுடர் ஒளி மூர்த்திப் பங்கயக் கண்ணன்" என்று நாரணன் நற்சுடரொளியாய் நந்தா விளக்காய் ஒளிரும் அற்புதக் கோலத்தை நமது நம்மாழ்வாரும் நவிலுகின்றார்.

இறைவன் எண்ணற்ற பெயர்களால் அழைக்கப்படினும் அவ னுக்குப் பெயரும் இல்லை. ஊரும் இல்லை. அவனை எத்தனையோ

உருவங்களால் வழிபடினும் அவனுக்கு உருவமே இல்லை. அவனுக்கு அடியும் இல்லை. முடியும் இல்லை. அவனுடைய முடியையும் அடியையும் தேவாதி தேவர்களும் காணமுடியாமல் போயிற்று. அவன் விறகில் அடங்கி நிற்கும் தீயைப் போல் நமது ஊனக் கண் களால் வரையறுத்துக் காணவும் கூறவும் முடியாத அகண்ட சோதி யாவான் என்ற கருத்தைச் செங்கரும்பெனத் தித்திக்கும் செந்தமிழ்ப் பாவினால் நமக்கு எடுத்துக்காட்டுகின்றார். இறைவனும் விரும்பிப் படிக்க விழைவதாகக் கூறும் திருவாசகத்தை யாத்த மணிவாசகப் பெருமான்,

***'சோதியே சுடரே சூழ்ஒளி விளக்கே***
***சுரி குழற் பணமுலை மடந்தை***
***பாதியே பரனே பால் கொள் வெண்ணீற்றாய்***
***பங்கயத் தயனும் மாலறியா***
***நீதியே செல்வத் திருப்பெருந் துறையுள்***
***நிறைமலர்க் குருந்த மேவிய சீர்***
***ஆதியே யடியேன் ஆதரித்தழைத்தால்***
***அதந்துவே என்றருளாயே'***

என்று சூட்டிய பாமாலையின் கருத்து மக்கள் உள்ளத்தை வசீகரிக்கத் தக்கதாகும்.

தமிழர் கண்ட நான்மறையில் ஒன்றாகிய திருமந்திரமானது இறைவனுக்கு இந்த உடம்பு ஓர் ஆலயம் என்றும் உள்ளம் கருவரை என்றும் தெள்ளிய அறிவு பெற்றவர்களுக்கு ஆன்மாவே பூஜைக் குரிய சிவலிங்கம் என்றும் அறிவு பெறாதவர்களைக் கவிழ்க்கும் புலன்கள் இந்த உடம்பாகிய திருக்கோவிலுக்கு ஏற்றிய இருளகற்றும் ஐந்து அணையாத மணிவிளக்குகள் என்றும் கூறுகிறது. அது வருமாறு :

***"உள்ளம் பெருங் கோயில்***
***ஊனுடம்பு ஆலயம்***
***வள்ளல் பிரானார்க்கு***
***வாய் கோபுர வாசல்***
***தெள்ளத் தெளிந்தார்க்குச்***
***சீவன் சிவலிங்கம்***
***கள்ளப் புலனைந்தும்***
***காளா மணிவிளக்கே"*** (திருமூலர் திருமந்திரம்)

# தீபத் திருநாள்

*பண்டைத் தமிழகத்தில், இன்று கொண்டாடப்பட்டு வரும் இராமநவமி, கோகுலாஷ்டமி, கிருஷ்ண ஜயந்தி, ஆவணியவிட்டம் போன்ற பண்டிகைகளில் எதுவும் கொண்டாடப்பட்டு வந்ததாகத் தெரியவில்லை, தீபாவளிப் பண்டிகை கூடக் கொண்டாடியதாகத் தெரியவில்லை.*

*பங்குனி மாதம் பாரதப்போர் நடைபெற்றதால் அம்மாதத்தில் நல்ல காரியங்கள் எதையும் செய்யார்கள். ஆடி மாதத்தில் சிறந்த சிவபக்தனான இராவணேஸ்வரன் இறந்துவிட்டதால் அம்மாதத்தில் திருமணம் முதலிய மங்களகரமான காரியங்களைச் செய்யாது அம்மாதம் முழுதும் துக்கம் கொண்டாடி வந்தார்கள்.*

*தை மாதம் தமிழ் மக்கள் எல்லோரும் பொங்கல் பண்டிகை யாகக் கொண்டாடி வந்தார்கள். இன்று தமிழ் நாட்டின் அரசியல் வாதிகள் அதைப் பாட்டாளியின் பண்டிகை என்று கொண்டாடி வருகின்றார்கள். யார் எப்படிக் கொண்டாடினும் அது பண்டு தொட்டு நமது நாட்டில் நடைபெற்று வரும் ஒரு பெரும் பண்டிகை யாக மிளிர்கிறது என்பதில் ஐயமில்லை.*

**கார்த்திகைத் திருநாள்**

*தமிழகத்தில் சிறப்பாகப் பண்டு தொட்டுத் தமிழர்கள் கொண் டாடி வரும் பண்டிகை தீபத்திருநாளாகும். இது கார்த்திகைத் திருநாள் என்றும் கூறப்படும். இது தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் ஆந்திரத்திலும் கன்னடத்திலும் இன்றும் கொண்டாடப்பட்டு வருகின்றன.*

*பண்டைத் தமிழர்கள் மலைச் சிகரங்களிலே விளக்கேற்றி விழாக்கொண்டாடி விருந்துண்டு களிகொண்டு ஆடி நிற்பர், இதற்குச் சங்க நூற்களிலே சான்றுகள் உண்டு.*

***'அறுமீன் பயந்த அறஞ்செய் திங்கள்
செல்சுடர் நெடுங்கொடி போல'***

*என்று நற்றிணை கூறுகிறது. அதற்கு, எழில்மிகு கார்த்திகை நாளின் பெயராலே பெற்ற அறஞ்செய்தற்குரிய திங்களில் எடுக்கப்பட்ட விசும்பிலே செல்கின்ற 'ஒளியையுடைய நீண்ட விளக்குகளின் வரிசை போல' என்று உரை கூறப்படுகிறது.*

*பதிணெண் கீழ்கணக்கில் ஒன்று கார் நாற்பது. இது கடைச் சங்கப் புலவர்களில் ஒருவரான மதுரைக் கண்ணன் கூத்தனார் என்பவரால் பாடப் பெற்றது. கார்காலம் வருவதற்கு முன் வீடு திரும்பி விடுவேன் என்று காதலியிடம் கூறிவிட்டு மன்னனுடன் போர்த் துணையாய்ப் போன காதலன், வரத்தாமதமாகிவிட்டது. கார்காலம் அண்மித்து விட்டது. காதலன் வராதது கண்டு தலைவி முகம்வாடி, மனம் நொந்து, தன் தோழியிடம் தன் மன வருத்தத்தைக் கூறுகிறாள். அதைப் புலவர் பின்வருமாறு எடுத்துக்காட்டுகிறார்.*

***'நலமிகு கார்த்திகை நாட்டவ ரிட்ட***
***தலைநாள் விளக்கிற் றகையுடைய வாகிப்***
***புலமெலாம் பூத்தன தோன்றிச் சிலமொழி***
***தூதொடு வந்த மழை'***

*இதன் கருத்து, நன்மை மிக்க நல்ல கார்த்திகைத் திருவிழாவிலே நாட்டினர் ஏற்றிவைத்த முதல் நாள் தீபத்தைப் போல், தோன்றிப் பூக்கள் எங்கும் மலர்ந்தன. மழையும் தூதொடு வந்தது என்பதாகும். நலமிகு கார்த்திகை என்பதை கார்த்திகைத் திங்கள் எனவும் தலைநாள் என்பதை அத்திங்களிற் சிறந்த நாளாகிய கார்த்திகை என்றும் பொருள் கொள்ள வேண்டும். ஆதியில் நாட்கள் கார்த்திகை முதலாகக் கணக்கிடப்பட்டதால் தலைநாள் என்றார். தலைநாள் என்பது விழாவின் முதல் நாளாகிய கார்த்திகை என்றும் பொருள் கொள்ளப்படும்.*

### களவழி நாற்பது

*பதிணெண் கீழ்க்கணக்கில் மற்றொரு நூலாக விளங்கும் களவழி நற்பது செங்கட் சோழனைப் புகழ்ந்து பாடப்பட்டதாகும். அவன் பகைவர்கள் மீது சாடியதால், அவர்கள் மீது பொங்கி எழும் உதிரம் கார்த்திகை விழாவில் காணப்படும் ஒளிவிளக்கைப் போல் இருந்தது என்று இந்நூலாசிரியர் கூறுகிறார் அது வருமாறு :*

***'கார்த்திகைச் சாற்றில்***
***கழிவிளக்கைப் போன்றனவே***
***போர்க்கொடித் தானைப் பொருபுனனீர்நாடன்***
***ஆர்த்தம ரட்டகளத்து'***

*தேவாரத்தில்,*

***'துளக்கில் கபாலீச் சுரத்தான் தொல்கார்த்திகை நாள்***
***விளக்கீடு காணாது போதியோ பூம்பாவாய்'***

*என்றும், சீவகசிந்தாமணியில்,*

***'குன்றில் கார்த்திகை விளக்கிட்டென்ன***
***கடிகமழ் குவளைப் பைந்தார்'***

*என்றும், பரிபாடலில்,*

***'எரிசடை எழில்வேளம்'***

என்றும் கூறுவது உற்று நோக்கற்குரியன. பரிமேலழகர் எரி என்பதற்கு அங்கியைத் தெய்வமாக உடைய கார்த்திகை என்று பொருள் கூறுகிறார்.

கார்த்திகைத் திங்களில் வரும் கார்த்திகை நாளில் தெருக்களில் நிரை நிரையாக விளக்கேற்றி விழாக் கொண்டாடும் வழக்கம் பண்டு தொட்டு உண்டு என்பதைப் பின்வரும் அகநானூற்றுப் பாட்டு ஒன்றில் (குற்றம் புரிபவர் எவராயிருப்பினும் அஞ்சாது குற்றம் குற்றமே என்று கூறும் அஞ்சா நெஞ்சன்) நக்கீரர் எடுத்துக் காட்டுகிறார்.

***'குறுமுயல் மறுநிறங் கிளர்மதி நிறைந்து***
***அறுமீன் சேரும் அகலிரு நடுநாள்***
***மறுகுவிளக் குறுத்து மாலை தூக்கிப்***
***பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய***
***விழவுடன் அயர வருகதில் அம்ம'*** (அகம். 141. 7-11)

கார்த்திகைத் திங்களில் வரும் கார்த்திகை நாளில் இருள் அகன்ற நள்ளிரவில் தெருக்களில் விளக்குகளை நிரல்பட ஏற்றி மாலைகளைத் தொங்கவிட்டுப் பழமையான வென்றியுடைய முதிய ஊரின்கண் பலரும் ஒருங்கு சேர்ந்து விளக்குத் திருநாளைக் கொண்டாட வருக என்று தலைமகள் ஒருத்தி தோழிக்குக் கூறுவதாக இப்பாட்டுக் கூறுகிறது.

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்திலே,

***'அழல் சேர் குட்டம்'***

என்று கூறப்படுகிறது. இதற்கு நச்சினார்க்கினியார் உரையெழுதும் பொழுது அழல் என்பதற்குக் கார்த்திகை என்று பொருள் கூறு கிறார். மேலும் நிகண்டுகளிலே கார்த்திகை என்பதற்கு அழல் என்றும் எரி என்றும் பொருள் கூறப்படுவதும் ஆராய்வதற்குரியன.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் கார்த்திகை விழா ஒப்பற்ற பண்டிகையாகத் தமிழ் மக்கள் அனைவராலும் கொண்டாடப்பட்டு வந்தது என்பதில் எள்ளளவும் ஐயமின்று.

மேலும் சைவர்கள் போற்றும் காரணம் காமியம், விசயம் என்று கூறப்படும் மூன்று சிவாகமங்களிலும் கார்த்திகை விழாவைப் பற்றிக் கூறப்படுகின்றது.

கார்த்திகைத் திங்களில் வரும் வளர் பிறையில் கார்த்திகை நாளில் விளக்கு வைக்க வேண்டும், கார்த்திகை நாளுக்கு முன்னாள் வரும் பரணி நாளில் சாயும் வேளையில் தலைநாள் (அதிவாச) தீபத்தில் அக்கினிக்காரி முதலானவைகள் மூலம் விளக்கில் மகாலிங்க மூர்த்தியை எழச் செய்து தீபத்தைச் சந்நிதானத்தில் வைத்துப் பூசித்து

*மறுநாள் சாயும் வேளையில் நண்பகலில் தீப தண்டம் சமைத்து வைத்திருக்கிற கோயிலுக்கும் இந்திர திக்கிற்கும் நடு இடமாகிய பிரமதானத்தில் நிறுத்த வேண்டும்' என்று விளக்கு விதி கூறுகிறது.*

**திருகார்த்திகை விழா**

*கார்த்திகைத் தீபத்தை அண்ணாமலைத் தீபம் என்றும் கூறு வார்கள். அன்று ஆலயங்களிலும் வீடுகளிலும் விளக்குகள் வரிசை வரிசையாக வைப்பர். சொக்கப்பனை கொளுத்துவர். மாவலியோ மாவலி என்று இளஞ்சிறார்கள் கூறிமகிழ்வர். தேங்காயும் வெல்லமும் கலந்த பொரி உருண்டையை நிவேதித்து உவகையோடு உண்பர்.*

*கார்த்திகைத் திருநாள் என்பது தீபத் திருநாளேயாகும். கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரத்திலே இவ்விழா எங்கும் கொண்டாடப்படும். அக்காலம் எங்கும் கார் இருள் கவிந் திருக்கும், அன்று மாலை பெண்களும் சிறு பெண் குழந்தைகளும் வீடெல்லாம் மெழுகிச் சுத்தம் செய்து முற்றத்தில் தண்ணீர் தெளித்துப் பலவிதக் கோலங்களைத் தீட்டுவார்கள்.*

*உமியாலும் சாம்பலாலும் உலோகத்தால் செய்த குத்து விளக்குகளையும் தூண்டாமணி விளக்குகளையும் பொன் போல் விளக்கி நெய் வார்த்துத் திரியிட்டு விளக்கேற்றுவார்கள். கற்பூரம் காட்டுவார்கள், சாம்பிராணிப் புகைப்பார்கள், பூவினால் அர்ச்சிப் பார்கள்.*

***எங்கும் சிவன் என்ன நின்றாய் போற்றி***
***எரிசுடராய் நின்ற இறைவா போற்றி***
***கொல்லார் மழுவாள் படையாய் போற்றி***
***கொல்லும் கூற்றொன்றை யுதைத்தாய் போற்றி***
***கல்லதார்க் காட்சிக் கரியாய் போற்றி***
***கற்றா ரிடும்பைக் களைவாய் போற்றி***
***வில்லால் வியனரணம் எய்தாய் போற்றி***
***வீரட்டம் காதல் விமலா போற்றி,***

*என்பன போன்ற பாடல்களைப் பாடி வழிபடுவார்கள்.*

*மாலைப் பொழுதில் தங்கள் இல்லங்களில் திருமகளை எழச் செய்ய, அழகு பொலிய, இன்பம் பொங்க மங்கள தீபத்தை ஏற்றி வணங்க வேண்டும் என்பது மக்களின் நம்பிக்கை. கார்த்திகை விழா வில் வீட்டிற்குள் மட்டுமன்றித் திண்ணைகளிலும் தெருக்களிலும் எண்ணற்ற விளக்குகளை ஏற்றி வீடுகள் தகதகவென ஜொலிக்கச் செய்வார்கள். புத்தாடை புனைவார்கள், புதிய உணவுகள் செய்து உண்பார்கள்.*

**விளக்குத் திருநாள்**

*திருவண்ணாமலையில் திருக்கார்த்திகையில் நடைபெறுவது ஒரு திருவிளக்குத் திருநாளாகும். அங்கு ஆயிரக்கணக்கான*

திருவிளக்குகளால் கோயிலும் அவ்வூரும் அலங்கரிக்கப்பட்டு, இறைவனை நெருப்பின் வாயிலாக வணங்குகிறார்கள். இதைப் போன்று தமிழர்கள் வாழும் எல்லா ஊர்களிலும் நடைபெறும். திருவண்ணாமலையில் மலைபோல், கொப்பரையில் கற்பூரத்தை யிட்டுக் கொளுத்தி மக்கள் அரோகரா என்று பொங்கழல் உருவனைப் பூசிப்பதைப் போல் ஒவ்வொரு ஊரிலும் சொக்கப்பனை கட்டித் தீ வளர்த்து வணங்குவர். தீப விழாக் கார்த்திகை மாதத்தில் வரும், கார்த்திகை நட்சத்திரத்தில் வந்தாலும் தமிழ் நாட்டில் கார்த்திகை மாதம் முதல் தேதி முதலே வீடுகளிலும் தெரு வாயிலிலும் விளக் கேற்றி விழாவிற்கு அடிகோலி விடுகிறார்கள்.

கார்த்திகைத் திங்களில் ஏற்றும் விளக்கு ஒவ்வொரு நாளைக்கும் வேறு வேறு நல்ல பலனை நல்கும் என்று பெரியவர்கள் கூறியிருப் பதாகப் பாட்டிமார்கள் கூறுவார்கள். கார்த்திகைப் புராணத்தில் விளக்கேற்றுபவர்கள் அடையும் வீடு பேற்றைப்பற்றிப் பெரி யோர்கள் பாடுவார்கள்.

‘சென்ற ஆண்டைவிட இவ்வாண்டு அதிகாலையிலே நீராடி வந்துவிட்டேன். இறைவனுக்கு எண்ணற்ற புதுவிளக்குகளும் நவ மணி அலங்காரத் தீபங்களும் ஏற்றி தேஜோமயமாய்ச் செய்து விட்டேன், என்று தாய்மார்கள் பெருமையாய்ப் பேசிக் கொள் வார்கள். சிறுவர்கள் ஏலம் முதலியவைகள் சேர்த்து வெல்லத்துடன் அவல் பொரியைக் கலந்தும் எள்ளும் தேங்காயும் கலந்து அப்பம், அதிரசம் செய்தும் இலைக் கொழுக்கட்டை செய்தும் பக்குவமாய்ப் பாயசமும் சித்திரான்னங்களும் கனிவர்க்கங்களும் படைத்துப் பரமனைப் பக்தியுடன் ஆராதித்து உண்டு மகிழ வேண்டும் என்று சதா சிந்தனை செய்து கொண்டு நிற்பர்.

### யானை விளக்கு

யானையின் மீது திருவிளக்கோ அல்லது பாவை விளக்கோ வைத்துச் செய்யப்பட்ட விளக்குகளை நான்கண்டிருக்கிறேன். ஆனால் அதன் வரலாற்றை இப்பொழுதுதான் உணர்ந்தேன். யானை மீது திருமகள் கைகளில் விளக்கை யேந்தி நிற்பது போன்ற திரு விளக்குகள் இருக்கின்றன என்றும் யானையின் மீது பூக்களால் இலக்குமி உருவம் செய்யப்பட்டு கார்த்திகை திருநாளில் வைண வர்கள் வீட்டில், அவ்வீட்டில் பிறந்த பெண் மகள் பூசை செய்து வருகிறாள் என்றும் அறிந்தேன். பிறந்த வீடு வாழப் பெண்மக்கள் எங்கிருந்தாலும் தாய் வீடு வந்து இந்த விளக்கு விழாவை சிறப்புச் செய்கிறார்கள். இவ்விழா ஒரு கலியாணத்தைப் போல் அதிகச் செலவிட்டுச் சிறப்புடன் செய்யப்படுவது கூட உண்டு. தான் பிறந்த வீடு இலட்சுமி கடாட்சம் பெற்றுச் செல்வச் சிறப்புடன் வாழவும் தனது மகள் அந்த வீட்டிற்கு வந்து தனது உரிமையை அவள்

அடையவும் பிரார்த்திக்கின்றாள். தனது பிறந்தகத்தில் ஆண்களும் பெண்களுமாகப் பிறக்க வேண்டும், தன் குடும்பம் வாழ வேண்டும் என்ற அவளது ஆர்வம் சித்திபெற இப்பூசையை அவள் வந்து நிறை வேற்றுகின்றாள். இது இன்றும் வைணர்கள் நிறைந்த நாங்குநேரி திருக்குறுங்குடி ஆழ்வார் திருநகரி சிரிவைகுண்டம் முதலிய இடங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

### தீபம் இடுதல்

பண்டைய முறைப்படி விளக்கேற்றுவதே சிறப்புடையது. அகல், எண்ணெய், திரி, தீபம் முதலியன பல தத்துவ நுட்பங்களை உள்ளடக்கிக் கொண்டிருப்பதாக நமது பெரியார்கள் கூறுகின் றார்கள்.

விளங்கச் செய்வதே விளக்கு என்றனர் தமிழறிஞர்கள். இருப் பதைக் காட்டுவதே விளக்கு. மறைப்பதை நீக்கி மறைப்பட்டதை மக்களுக்குக் காட்டுவதே விளக்கு. விளக்கில், வீட்டு விளக்கு என்றும் கோயில் விளக்கு என்றும் இரு பிரிவுகள் உண்டு. வீட்டு விளக்கில் குத்து விளக்கு வழிபாட்டிற்கு ஏற்ற எழில் விளக்கு. அவைகளில் நிரம்பக் கலை அம்சம் பொருந்தியிருக்கும். விளக்கே இறைவனைக் காட்டும் வழிகாட்டி. விளக்கே இறைவன். மக்களிடத்திலுள்ள அறிவு ஒளியே விளக்கு. எனவே விளக்கு வழிபாடு அறிவைக் குறிக்கொண்ட தாக அமைந்துள்ளது என்பது ஆன்றோர்கள் கண்ட முடிபு.

கார்த்திகைத் திங்களில் ஒவ்வொரு நாளும் மாலை வேளையில் மங்கையர்கள் - குறிப்பாக ஒவ்வொரு இல்லத்தலைவியும் திண்ணைப் புறத்திலுள்ள மாடத்திலும் பூசை அறையிலும் திருவிளக்கேற்றுவர். கார்த்திகேயனைக்கனல் வடிவினனாகக் கண்டு வணங்குகிறார்கள்.

கார்த்திகைத் திங்கள் கங்காதர மூர்த்திக்கு மிகக் களிப்புள்ள திங்களாகும். அத்திங்களில் அடியார்கள் அன்றாடம் அதிகாலையில் அகத்தினின்று எழுந்து அருகிருக்கும் ஆற்றிலோ குளத்திலோ நீராடி அண்மையில் உள்ள ஆலயம் சென்று ஆண்டவனைத் தெரிசிப் பார்கள். அப்பொழுது ஓர் அகலையும் ஏற்றிப் போற்றுவார்கள்.

கார்த்திகைத் திங்களில் வரும் சோம வாரங்கள் மிகப் புனித மான நாட்களாகப் போற்றப்படும். நாள்தோறும் நாரிபாகனை அர்ச்சிக்க முடியாமற் போனாலும் கார்த்திகைச் சோம வாரத்தி லாவது மாலை வரை பட்டினி இருந்து பகவானுக்கு அபிஷேகம் செய்து பிரதோஷ வேளையில் விளக்கேற்றி வழிபடுவது பண்டை யோர் கொண்ட வழக்கம்.

கார்த்திகைத் தீபம் என்பதனால் கார்த்திகை மாதத்தில்தான் தீபத்திருநாள் நிகழும் என்பது வெள்ளிடை மலை. அதிலும் பௌர்ணமியன்று - முழுமதி நாளில் தான் நடக்கும், தீபத்திரு நாள் (தீபோற்சவம்) கொண்டாடப்பெறும். இதனை விளக்க எமது பள்ளித்

தோழரும் கலைப் புலமை மிக்க பேரறிஞருமான உயர்திரு. தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் எம்.ஏ.,ஐ.ஏ.எஸ். அவர்கள், 'மனிதனுக்கு உண்ண உணவும் உடுக்க உடையும் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் அவன் வாழ்வதற்கு ஒளியும் என்று அறிகிறோம். சூரியன் இல்லாத பகலும் வானும் இருந்தால் எப்படி இருக்கும் என்று எண்ணிப் பார்ப்போமே! இறைவனது படைப்புகளில் எல்லாம் சிறந்த படைப்பு ஞாயிறு தானே! அதனிடமிருந்து எழு கின்ற ஒளியும் வெம்மையும் இல்லாவிட்டால் உலகமும் உயிர்களும் உய்வதேது? ஆதலால் சிந்திக்கத் தெரிந்த மனிதன் ஞாயிற்றையே ஞாயிறு மூலமாக அதனை உலகுக்குத் தந்த இறைவனை வந்தித்து வணங்க முற்பட்டிருக்கிறான். இப்படித் தான் எல்லாச் சமயத்தா ரிடத்தும் இறைவழிபாடு ஒளி வழி பாடாக உரு எடுத்திருக்கிறது. இருள் போக்கும் தன்மையோடு மருள் நீக்கும் தூய்மையும் ஆக்கிக் காத்து அழிக்கும் தன்மையும் அருவாய் உருவாய் அருவுருவாய் இயங்கும் இயல்பும் பஞ்சபூதங்களில் ஒன்றான தீயினிடத்தேதான் மிகுந்திருக்கின்றன. இப்படி அக்கினியின் இயல்பும் இறைவன் இயல்பும் இணைந்திருப்பது காரணமாக ஒளிவழிபாடே தீ வழி பாடாகப் பரிணமித்திருக்கிறது' என்று கூறிக் கார்த்திகை விழா வாகிய தீபத் திருநாளுக்கு ஒரு நல்ல விளக்கம் கூறியுள்ளார்.

திருநெல்வேலியில் திருக்கார்த்திகை விழாவன்று, நெல்லை யப்பர் பவனி வரும் பொழுது ஒவ்வொரு வீட்டின் முன்னரும் தெருவில் மெழுகிக் கோலம் போட்டு 10,20,30,40,50 என்னச் சிறு கை விளக்கிலிருந்து பெரிய குத்து விளக்கு வரை - பலவிதச் சிற்பச் சிறப்பு வாய்ந்த விளக்குகளையெல்லாம் நன்றாய்ப்பொன் விளக்கென விளக்கி நெய்யிட்டுத் திரியிட்டு விளக்கேற்றி வைத்திருப்பது கண் கொள்ளாக் காட்சியாய் விளங்குகிறது. அங்கு கண்ட அரிய விளக்கு களில் பலவற்றைச் சென்னைத் தொல்பொருள் காட்சிசாலையிற்கூட நான் கண்டதில்லை.

### விளக்கீடு

இஃதன்றி முற்காலத்தில் ஒரு நாளில் 'விளக்கீட்டு நாள்' என்னும் பெயரால் எல்லாக் கோயில்களிலும் தீபம் ஏற்றும் திரு நாள் கொண்டாடப் பட்டதாகத் தெரிகிறது. அத்திருநாள் இக் கார்த்திகைத் திருநாளைக் குறிக்கிறதா அல்லது வேறு திருநாளைக் குறிக்கிறதா என்று தெரியவில்லை. சைவப்பேரறிஞர்கள் விளக் கீட்டுத் திருநாளே கார்த்திகைத் திருநாள் என்று கூறுகின்றனர்.

சிவன் கோயில்களில் உள்ள தீப நாச்சியர் என்று கூறப்படும் தீப லட்சுமிகளைப் போல் வைணவர் கோயில்களிலும் விளக் கொளிப் பெருமாள் என்று ஒரு தெய்வம் இருப்பதாகத் தெரிகிறது. இத்தெய்வத்தைத் தீபப்பிரகாசர் என்றும் அழைப்பார்கள்.

தீபப் பிரகாசர் திருக்கோயில் வைணவத் திருப்பதிகளில் ஒன்று. இத்திருப்பதியில் நடைபெறம் விழாக்கள் அனைத்தும் செங்குந்தர் மரபினவர்களின் அறநிதியிலிருந்து நடைபெறுவதாகச் சிலர் கூறுகிறார்கள்.

பிரமா திருமாலை கேள்வி வாயிலாகக் கண்டு, இன்புற எண்ணி வேள்வி இயற்றத் திருமால் அஸ்தகிரியின் மேல் குன்றின் மேலிட்ட விளக்குகள் போல் காட்சி அளித்தாராம். இதனால் திருமால் விளக்கொளிப் பெருமாள் என்ற பெயர் பெற்றார்.

இஃதன்றி விளக்குத் திருமால் என்றும் அழைக்கப்படுகிறார். இவரது அழகிய கோயில் காஞ்சிபுரத்திலுள்ள திருத்தண்காவாகும்! இங்கு திருமால் விளக்கொளிப் பெருமாளாய் விளங்குகிறார்.

**ஆந்திர நாட்டின் கார்த்திகை விழா**

கார்த்திகை விழாவைத் தமிழர்கள் மட்டுமின்றி அவர்களின் நெருங்கிய இனத்தவர்களான மலையாளிகளும் தெலுங்கர்களும் கொண்டாடி வருகின்றனர்.

ஆனால் ஆந்திரர்களாகிய தெலுங்கர்கள் மிகச் சிறப்பாய்க் கொண்டாடி வருகிறார்கள். கார்த்திகை விழா, கார்த்திகைத் திங்களின் முதல் நாளிலிருந்து இறுதி நாள்வரை கொண்டாடப் படுகிறது. தமிழகத்தைப் போலவே ஆந்திர நாட்டிலும் ஒவ்வொரு இல்லத்திலும் எண்ணற்ற விளக்குகள் விண் மீன்களைப் போல் மின்னி ஒளிர்கின்றன. கார்த்திகைத் திங்களில் இடும் விளக்கு அத்திங்களின் ஒவ்வொரு நாளுக்கும் வெவ்வேறு நல்ல பலனை நல்கும் என்று அந்நாட்டு நங்கையர்கள் நவில்கின்றனர். அதைப் பற்றித் தங்கள் மொழியில் உள்ள கார்த்திகைப் புராணத்தில் விரிவாய்க் காணலாம் என்றும் கூறுகின்றனர்.

கார்த்திகைத் திங்களில் வரும் கார்த்திகை நட்சத்திரம் கார்த்திகேயனுக்கு உகந்த நாள் என்று எண்ணுகின்றனர். கார்த்திகை, கார்த்திகேயனுக்கு மட்டுமல்ல, காமாந்தக மூர்த்திக்கும் உகந்த நாளாகும் என்று நாள்தோறும் அதிகாலையில் ஆற்றிலோ குளத் திலோ குளித்துக் கோயிலுக்குச் சென்று விளக்கேற்றி வணங்குவர். முடியாதவர்கள் கார்த்திகை நட்சத்தரத்தன்று காலை முதல் மாலை வரை ஒன்றும் உண்ணாது நோன்பிருந்து ஆலயத்தில் அகல்விளக் கேற்றி ஆலமர் கடவுளை வணங்குவர்.

பரமசிவனாக ஒரு பார்ப்பனரைப் பாவித்து அவருக்கு அன்னம் அளித்து வணங்கிப் பின் ஆகாரம் அருந்த வேண்டும் என்பது அவர்களின் ஐதீகம். சிலர் கார்த்திகைத் திங்களில் வரும் நான்கு திங்கட்கிழமைகளிலும் நோன்பு நோற்கின்றனர். அதுவும் முடியாதவர்கள் ஒரு திங்கட்கிழமையிலாவது நோன்பு நோற்பர். சிலர் கேதார நோன்பு நோற்பர்.

அடியும் முடியும், அமரர்களும் அறிய முடியாதவாறு இருந்த ஆலவாய் அண்ணல் அண்ணாமலையில், அங்கிவடிவாய்க் காட்சி அளித்த கோலத்தைத் தமிழர்களைப் போலவே ஆந்திரர்களும் கண்டு களித்து வழிபடுகின்றனர். ஒவ்வொரு கோயிலிலும் சொக்கப்பனை கொளுத்தி இறைவனை ஒளிவடிவாய் எண்ணித் துதிக்கின்றனர். ஒவ்வொரு இல்லத்திலும் விளக்குகளேற்றி வணங்கித் திருவிழாக் கொண்டாடுகின்றனர்.

அமரர்களும் அரக்கர்களும் அமுதம் அருந்த ஆவலுற்றுப் பாலாழியைக்கடைந்த பொழுது முதலில் ஆலகால விஷம் எழுந்தது. அப்பொழுது அவ்விஷத்தினால் அவனி அழிந்துவிடும் என்று எண்ணி அதை அருந்தி அவனி அனைத்தையும் காக்கும்படி, தேவர்கள் அரனை வேண்டினர். அவரும் இணங்கினர். உமாதேவியோ அவருக்கு ஆபத்து ஏற்படாமல் இருக்க வேண்டும் என்று அங்கலாய்த்தார். அவளது பெண்மை உள்ளம் வாடியது. தன் அகமுடையானுக்கு அபாயம் எதுவும் ஏற்படாமல் இருந்தால் அவருக்கு உவப்பாகத் தன் அரிய உடலை அக்கினியில் அர்ப்பணம் செய்வதாய்ப் பிரதிக்ஞை செய்து கொண்டாள்.

கார்த்திகைத் திங்களில் வரும் நிறைமதியன்று காலையில் நீராடி உமாதேவி உண்ணாவிரதம் இருந்தாள். நஞ்சுண்ணப் போகும் நாரிபாகனை வணங்கி, மாலை மறைந்ததும் நெருப்பில் குதித்தாள். ஆனால் அக்கினி குளிர்ந்து விட்டது. அவள் உடல் வெந்து சாம்பலாகவில்லை. அவள் ஆனந்தமுற்று அரனடியை அணுகினாள். இது புராணக்கதை. இந்த ஐதீகத்தை ஒட்டித் தமிழகத்தைப் போன்று ஆந்திரநாட்டிலும் சிவன் கோயில்களில் சிறப்பாகப் பூசை நடைபெறுகிறது.

ஆனால் ஆந்திர நாட்டில் இந்நாளில் வேறு விதமாகப் பூசையும் விழாவும் நடைபெறுகின்றன. இந்த உற்சவம் ஆரம்பமானதும் கோயில் முன் இரு மூங்கில்களை நட்டு மேலே இரண்டையும் பிணைத்து ஒரு மூங்கில் கழியை வைத்துக் கட்டுகிறார்கள். அதன் மேல் வைக்கோலைத் தேரணம்போல் போட்டு மூன்று மூங்கில் கழிகளையும் மூடிவிடுவார்கள். அப்பால் அதன் மீது நெருப்பை வைத்து எரியும்படி செய்து நெருப்பினூடே உமா தேவி மூன்று முறை நுழைந்து வெளிவரும் பாவனையில் உமாதேவியின் உருவப் படிமத்தை அக்கினி நடுவே சென்று வரச் செய்வர். இதனை ஜுவாலா தோரணம் என்று ஆந்திர மக்கள் கூறுகின்றனர்.

நோன்பு நோற்கும் பக்தர்கள் கூடி ஒரு பல்லக்கில் உமாதேவியின் செப்புப் படிமத்தை வைத்துத் தூக்கி மூன்று முறை ஜுவாலா தோரணத்திற்குள் நுழைந்து வெளியே படிமத்தைக் கொண்டு வருவார்கள். படிமத்திற்கோ பக்தர்களுக்கோ நெருப்பினால் எவ்விதத் துன்பமும் நேரிடுவதில்லை. இந்த ஐதீகம் முறைப்படி இன்றும்

ஆந்திர நாட்டு ஆலயங்களில் நடந்து வருகின்றன. இதனை எண்ணற்ற மக்கள் கண்டுகளிப்புற்று வழிபட்டு வருகின்றனர்.

ஆந்திர நாட்டு உழவர்கள் அம்மன் சப்பரம் ஆலயத்திற்குள் போனதும் ஜுவாலா தோரணத்திலிருந்து எரியும் வைக்கோலைப் பாபரவென்று பிய்த்து நெருப்பை அணைத்துக் கைகளில் கிடைத்த வைக்கோலை ஆளுக்குக் கொஞ்சம் கொண்டு போய்த் தங்கள் வீட்டுத் தொழுவங்களில் கட்டியிருக்கும் பசுக்களுக்குக் கொடுப்பார்கள். இந்த வைக்கோலைத் தின்ற பசுக்கள் நிரம்பப் பால் தரும் என்றும், பசுக்களை நோய் அணுகாது என்றும் கூறுகிறார்கள்.

இதைப் போலவே தமிழ் நாட்டிலும் சொக்கப்பனை கொளுத்தி முடிந்ததும் மக்கள் அதிலுள்ள கம்புகளை எடுத்துத் தங்கள் கொல்லைகளில் உள்ள பயிர் பச்சைகள் படரப் போட்டிருக்கும் பந்தலில் வைத்துக் கட்டுவார்கள். அதனால் செடிகொடிகளை நோய் அணுகாது அவை நன்றாகக் காய்க்கும் என்று நம்புகிறார்கள்.

கார்த்திகை விழா தோன்றியதற்குப் பல புராணக் கதைகள் உண்டு. புராணக் கதைகள் உண்மையென்று கூறுவாரும் உண்டு. பொய் என்று புகல்வாரும் உண்டு. அது எப்படியிருந்தாலும் இருக்கட்டும், ஆண்டவன் அருட்கடல்; உயிர்கள் அனைத்தும் அவனது படைப்பு. அவைகளைக் காப்பது அவனது கடமை. நமது அறிவீனத்தினாலோ, அன்னியர்களின் கொடுமையினாலோ அல்லற்படுங் காலத்து நம்மைக் காக்கக்கூடியவன் அவன் என்ற கருத்தை விளங்கிக் கொள்ளலாம் என்று கூறினார் ஒரு சமயச் சார்புடைய அரசியல் வாதி. அதில் நமக்கு அதிக ஆட்சேபம் இருக்க இடமில்லை. எனவே, புராணக் கதையை இங்கு ஆராய்வோம்.

**முப்புரக் கதை**

முற்காலத்தில் தாரகாசுரன் என்று ஒரு அசுரன் இருந்தானாம். அவனுக்குக் கமலாட்சன், தாரகாட்சன், வித்தியுன்மாலி என்று மூன்று புதல்வர்கள் இருந்தார்கள். இவர்களைத் திரிபுராசுரர் என்று அழைப்பர். இவர்கள் மூவரும் பிரமனை நோக்கித் தவம் புரிந்தனர். தங்களுக்குச் சாகாவரம் தரும்படி பிரார்த்தித்தனர்.

சிவபெருமான் ஒருவரைத் தவிர இந்திராதி தேவர்களும் மும்மூர்த்திகளும் ஒருநாள் மறைந்தேதீரவேண்டுமாதலின் சாகாவரம் கிட்டாதென்று பிரமதேவன் மொழிந்தார். அப்படியானால் இரும்பு, பொன், வெள்ளி ஆகியவற்றாலான மூன்று நகரங்கள் வேண்டும். அவைகள் நாங்கள் விரும்பிய வண்ணம் பறக்கவும் நினைத்த இடங்களில் இறங்கவும் வேண்டும். சிவபெருமானே நேரில் வந்து அழிக்க விரும்பினால்தான் நாங்கள் மூவரும் அழிக்கப்படவேண்டும் என்று மூவரும் கேட்டனர். அவ்வாறே வரம்பெற்றனர்.

தவச்செருக்கும் முப்புரங்களின் வல்லமையும் அவர்களை மிகுந்த கர்வத்திற்கு ஆளாக்கின. அவர்கள் விரும்பிய இடத்திலே திரிபுரங்களுடன் இறங்கினர். அவர்கள் இறங்கும் இடங்களிலுள்ள நாடும் நகரமும் பயிர்பச்சைகளும் மாடமாளிகைகளும் கூட கோபுரங்களும் நீர்மூலமாயின.

மக்களும் தேவரும் வருந்தினர். யாவரும் சிவபெருமானை நாடி குறையிரந்தனர்.

சிவபெருமான் அவர்கள் இன்னலைக் கேட்டு முப் புரமெரிக்க எழுந்தார். அவர் பூமியையே இரதமாகவும் சூரியனையும் சந்திரனை யும் தேர்ச்சக்கரமாகவும் நான்கு மறைகளையும் குதிரைகளாகவும் நான் முகனைச் சாரதியாகவும் மேருவை வில்லாகவும் திருமாலை அம்பாகவும் கொண்டு திரிபுரம் எரிக்கப் புறப்பட்டார்.

திரிபுரத்தை நோக்கி தம் வில்லை வளைத்து நாணை ஏற்றி னார். திடீரென்று அவர் தம் கணையைத் தொடுக்காது கீழே வைத்து விட்டு ஒரு சிறு புன்சிரிப்புச் சிரித்தார். முப்புரங்கள் மூன்றும் வெந்து பிடி சாம்பலாயின. அரக்கர்களும் கார்த்திகைப் பௌர்ணமியன்று முடிந்தனர். அதையறிந்து அமரர்களும் மக்களும் மகிழ்வெய்தினர். அந்தத் திவ்விய தினமே திருக்கார்த்திகை என்று கூறப்படும். இது ஆரியக் கதை. இதற்கும் நமது தீபத் திருநாளுக்கும் எவ்விதச் சம்பந்த மும் இல்லை என்று கூறும் தமிழர்களும் உண்டு.

**கடவுளின் கண்ணாம்பொத்திக் கதை**

ஆதியும் அந்தமுமில்லா அருட்பெரும் சோதிதான் அண்ணா மலை என்பதை விளக்க மற்றும் ஒரு கதை உண்டு. தீபத்திருநாளில் மலை உச்சியிலே ஒளிப்பிழம்பை உருவாக்கி வணங்குவதற்கு ஒரு காரணம் கூறும் இப்புராணக் கதை மிகவும் ருசிகரமானதேயாகும்.

சிவபெருமானும் உமாதேவியும் தனித்துக் கொஞ்சி விளை யாடிக் கொண்டிருந்தனராம். உமாதேவி எங்கேயோ ஒளிந்து நின்ற வள் சிவபெருமான் அறியா வண்ணம் மெதுவாகப் பின்புறமாக வந்து அவரது மூன்று கண்களையும் பொத்தினாளாம். முக்கண் ணுடைய முக்கட் கடவுளுக்குச் சூரியன், சந்திரன், நெருப்பு ஆகிய முச்சுடரே மூன்று கண்களாக அமைந்திருந்தன. இம்மூன்றையும் அரைவினாடி வரை உமாதேவி மூடினதால் உலகில் பெரிய நாசம் எழுந்தது. அதீதசக்தியுள்ள ஒரு சிலரே பிழைத்தனர். பிழைத்த ஒரு சிலர் பெருமானிடம் உலக நிலையை எடுத்துக்கூற, இந்தக் குற்றத்தை நிகழ்த்திய உமாதேவியை அதற்குரிய தண்டனையை அனுபவிக்கும் படி உத்தரவிட்டாராம்.

உமையாள் தான் அறியாமையாற் செய்த சிறுபிழையினால் விளைந்த பெருங்கேடுகளை எண்ணி வருந்தினாள். உடனே அவள் தனது தவறுதலுக்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டு இறைவனை

நோக்கித் தவம் புரிந்தாள். முதலில் காஞ்சி நகர்க்குப் பக்கத்திலும் அப்பால் அண்ணாமலைக்கு அருகிலேயும் அருந்தவம் இயற்றினாள். அவளது தவத்தை மகிஷாசுரன் என்னும் அரக்கன் கலைக்க முயன்றான்.

கோபங்கொண்ட உமாதேவி துர்க்கா தேவியாக மாறி மகிஷாசுரனை வதம் செய்தாள். அப்பால்தான், அவள் மகிஷாசுரன், சிவபெருமானுடைய பரமபக்தன் என்பதை உணர்ந்து வருந்தினாள். அதற்குப் பிராயச் சித்தமாகத் திருவண்ணாமலையில் ஒரு நீர்த் தேக்கத்தை உண்டு பண்ணி அதில் மூழ்கி இருந்து, தவம் செய்தாள்.

கார்த்திகைத் திங்களில் வரும் முழுநிலா நாளில் கார்த்திகை ஓரையில் சிவபெருமான் பொங்கழல் உருவனாய்ப் பூதநாயகனாய் உமாதேவியின் முன் தோன்றிக் காட்சி அளிக்கிறார். அதை நினை வுறுத்தவே திருவண்ணாமலையின் மலை உச்சியிலே ஒளிப் பிழம்பைத் தோற்றுவிக்கிறார்கள். இப்புராணக் கதையானது குற்றம் புரிபவர் யாரானாலும் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்ற உண்மையையும் ஒரு வினாடி தீ, தினகரன், திங்கள் ஆகிய முச்சுடர் களும் இல்லாவிட்டால் உலகம் இயங்காது; உயிர்கள் உய்ந்திருக்க முடியாது என்ற உண்மையையும் உணர்த்துகிறது என்று கூறினால் பலருக்கு ஆட்சேபம் இராது என்றே எண்ணுகிறேன். அதோடு இறைவன் ஒளிமயமானவன் என்பதை நினைவூட்டவே இவ்விழா நடைபெறுகிறது என்பதை இக்கதை நமக்கு நினைவூட்டுகிறது.

கார்த்திகை விழாவை விளக்க நமது நாட்டில் மற்றும் ஒர் புராணக் கதையுண்டு. அதாவது பார்வதியும் பரமசிவனும் ஒரு நாள் இரவு தனித்து மகிழ்ந்து பேசிக் கொண்டிருக்கையில் அங்கு எரிந்து கொண்டிருந்த திரு விளக்குச் சிறிது மங்கலாயிற்று. இதைக் கவனித்த பரமசிவன் இந்த விளக்கை யார் தூண்டிவிடுகிறாரோ அவரை அடுத்த பிறவியில் மன்னர் மன்னனாக ஆக்கி வைப்பேன் என்று கூறினார்.

உடனே பார்வதி, தூண்டுபவர் யாராயிருந்தாலுமா என்று சந்தேகக் கேள்வியை எழுப்பினாள். அதற்குள் விளக்கிலிருந்த நெய்யைப் பருக ஒரு எலி அவசரமாக ஓடி வந்தது. அது நெய்யைப் பருகியதும் அதன் கால் பட்டுத் திருவிளக்கின் திரி தூண்டப்பட்டு விளக்கு ஒளியுடன் பிரகாசிக்க ஆரம்பித்தது. பரமசிவன் தன் வாக்கின்படி அந்த எலியை அடுத்த பிறப்பில் மன்னர் மன்னனாய் விளங்கும்படி செய்துவிட்டார்.

அந்த மன்னர் மன்னன் உவகை பொங்க உலகம் வியக்க நாட்டை ஆண்டு வந்தான். ஆனால் இந்திரனுக்கு உரித்தான உலகை மீண்டும் அவனுக்கு வாங்கிக் கொடுக்கத் திருமால் வாமன வடிவந் தாங்கி மாபலி (மா - எலி) மன்னனிடம் மூன்றடி மண் தானங் கேட்டார்.

மாபலி, மன்னர் மன்னன் பிரகலாதன் வழி வந்தவன். யார் என்ன கேட்டாலும் இல்லை என்னாது ஈயும் வள்ளல். அதோடு தன்னிடம் யாசகம் கேட்ட ஒருவன், பின்னர் ஒருவரிடமும் கை நீட்டக்கூடாது என்னும் கொள்கையுடையவன்.

மாபலி, வாமனன் கேவலம்! மூன்றடி மண்தானே கேட்கிறான் என்று எண்ணிச் சிரித்தான், அந்தச் சிரிப்பைக் கேட்டு வாமன ரூபனான திருமால் 'மூன்றடி மண்ணில் திருப்தி அடையாதவன்; மூவுலகும் கிடைத்தாலும் திருப்தியடையாதவன், கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைபவன்தான் புத்திசாலி. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து. ஆசையே பிறப்பிற்கும், இறப் பிற்கும் காரணம். என்ற தத்துவத்தை விளக்கினார்.

அப்பால் மாபலி மூன்றடி மண்ணிற்கு இடம் அளித்தார். திருமால் நெடுமாலாகி ஓரடியால் பூவுலகையும் உடலால் ஆகாயத்தையும் கரங்களால் திக்குகளையும் இரண்டாவது அடியால் ஏனைய உலகங்களையும் அளந்துவிட்டு மூன்றாவது அடிக்கு இடம் கேட்டு மாபலியின் தலையிலே காலை வைத்தார் உலகளந்தான், என்பது எதை.

விளக்கைத் தூண்டியதால் மன்னர் மன்னனாகி இறைவனாலே மோட்ச லோகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட இந்தப் பலியின் நாளாக கார்த்திகை நாளில் இல்லந்தோறும் திருவிளக்கு ஏற்றப்படு கிறது என்பது ஒரு கதை.

**திருவண்ணாமலைத் தீபம்**

திருவண்ணாமலைத் தீபத் திருநாளின் தாயகம் - தமிழர் களுக்கு ஒரு புண்ணியத்தலம் 'திருவாரூரில் பிறந்தால் முத்தி; திருவண்ணாமலையை நினைத்தால் முத்தி' என்று துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பாடியுள்ளார்.

சைவ சமய குரவர்களால் புகழ்ந்து பாடப்பட்ட இடங்களைப் பாடல் பெற்றதலம் என்று பெருமையாகக் கூறுவார்கள். அப்படிப் பாடல்பெற்ற தலம் 274 அவைகளுள் ஐந்தைப் பஞ்சபூதத்தலம் என்று போற்றிப் புகழ்வார்கள். அதாவது 1. காஞ்சிபுரம் - பிருதிவி லிங்கம், 2. திருவாளைக்கா - அப்புலிங்கம். 3. திருவண்ணாமலை தேயுலிங்கம். 4. காளாஸ்தி - வாயுலிங்கம் 5. சிதம்பரம் ஆகாசலிங்கம் இருக்கும் ஸ்தலங்களாகும்.

அண்ணாமலையின் தேயுலிங்கத்தை தேஜோலிங்கம் தோதிர் லிங்கம், சோணாசலம், ஸோணகிரி, அருணகிரி, என்றும் கூறுவார் கள்; இங்கும் கோயில் கொண்டிருக்கும் சுவாமியின் பெயர் அருணாசலேசுவரர். தேவியின் பெயர் உண்ணாமுலை அம்மை, கோயிலுக்குள் நிற்கும் வழிபடும் மரம் மகிழ மரம்.

இதனைச் சிவபெருமான் வல்லாள மகாராசனுக்கு மகவாய்த் தோன்றி அனுக்கிரகித்த தெய்வத் திருத்தலம் என்பர். பார்வதி தேவியார் பல்லாண்டு தவங்கிடந்து சிவபெருமானுடைய இடப் பாகம் பெற்ற இடம் என்றும் கூறுவர். இப்புராண வரலாறு ‘பவளக் குன்று’ என வழங்கும் குன்றின் மேலுள்ள கோயிலில் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

இம் மலையை வலம் வர எட்டுக் கல்தூரம் நடக்க வேண்டும். இங்கு அகஸ்தியர் சைவம் கற்றார் என்று கூறப்படுகிறது. கௌதமர் பவளக் குன்றில் தவஞ் செய்தார் என்றும் கூறப்படுகிறது.

இத்தலம்தான் இறைவன் எங்கும் நிறைந்தவன். அவன் விண்ணிற்கும் மண்ணிற்கும் அப்பாற்பட்டவன்! பிரபஞ்சம் அனைத் திலும் நிறைந்து நிற்பவன். அவனுக்கு அடியும் இல்லை. முடியும் இல்லை. அவன் சோதிமயமானவன். அவனுக்கு உருவமும் இல்லை அருவமும் இல்லை என்று முடிவு கட்டிய ஸ்தலம். இது மக்கள் கட்டிய முடிவல்ல. தேவாதி தேவர்கள் கட்டிய முடிவு. இதற்குப் பண்டு தொட்டுத் தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ளும் ஒரு நல்ல புராணக் கதையும் உண்டு.

தேவர்களில் பெரியவர்களான நான்முகனுக்கும் திருமாலுக் கும், நான் பெரியவனா? நீ பெரியவனா? என்பதில் ஒரு பெரிய போட்டி ஏற்பட்டு விட்டது. இருவரும் இந்த வாதத்தைத் தீர்த்து வைக்கச் சிவபெருமானிடம் சென்றனர்.

அவர் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் இருவரும் கேட்க வில்லை. இறுதியாக அவர் ஒரு போட்டி ஏற்படுத்திப் போட்டியில் யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்களே பெரியவர்கள் என்று தீர்மானிக்கலாம் என்று கூறினார். இருவரும் இசைந்தார்கள்.

சிவபெருமான் விண்ணிற்கும் மண்ணிற்கும், அப்பால் ஓங்கி நிற்கும் ஓர் இலிங்க வடிவாக அனல் பிழம்பாக உருவெடுக்கிறார்.

இந்த அபூர்வ உருவின் அடியையும் முடியையும் யார் முதலில் கண்டு வருகிறார்களோ அவர்களே பெரியவர் என்ற போட்டிப் பந்தயத்தின் முடிவை விவரித்தார், சிவபெருமான்.

உடனே திருமால் வராக உருவில் சிவபெருமானின் அடியைக் காண அவசரமாகப் புறப்பட்டார். அவர் அதல பாதாளங்களையும் துளைத்துக் கீழ்நோக்கிச் சென்று கொண்டே இருக்கிறார்.

நான்முகனோ அன்னத்தின் வடிவு கொண்டு முடி காண விண்ணில் பறந்துகொண்டே இருக்கிறார். பல்லாண்டுகள் சென்றும் அவர்கள் இருவராலும் முடியையோ அடியையோ காண முடிய வில்லை.

திருமால் சலித்துப் போனார். சிவபெருமானிடம் திரும்பி வந்து தனது தோல்வியை ஒப்புக் கொண்டார். பிரமனோ தன் தோல்வியை

ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. ஏதாவது குறுக்கு வழிகளில் வெற்றிகாண நாடினார். ஒன்றும் புலப்படவில்லை. அப்பொழுது விண்ணினின்று ஓர் தாழம்பூ தலைகீழாக இழிந்து கீழே வந்தது.

பிரமன் அதை நோக்கித் 'தாழம்பூவே! நீ எங்கிருந்து வருகிறாா்?' என்று கேட்டாா். உடனே தாழம் பூ நான் இறைவன் திருமுடியிலிருந்து வருகிறேன். அதினின்று நான் நழுவிக் கற்பகோடி காலங்கள் ஆகிவிட்டன என்று கூறிற்று.

உடனே பிரமதேவன் அப்பூவைச் சரிக்கட்டித் தன்னை இறைவன் திருமுடியிலிருந்து நான்முகனே எடுத்துவருவதாகப் பொய்ச் சாட்சியம் சொல்லச் செய்துவிட்டாா்.

இவர்கள் சொல்வது முழுப்பொய் என்று இறைவனுக்குத் தெரியாதா? உடனே இறைவன் இவர்களின் பொய்க்கூற்றை அம்பலப்படுத்திப் பொய்ச் சாட்சியம் சொல்லச்செய்த பிரமனைப் பூலோகத்தில் ஒரு சாதாரண மனிதனாகப் பிறக்கும்படி சபிக்கிறாா். பொய்கூறிய தாழம்பூவைத் தம்முடைய பூசைக்கு உரியதல்ல என்று விலக்குகிறாா்.

தம் தோல்வியை ஏற்று மெய்புகன்ற திருமாலை வாழ்த்தி அவருக்குத் தம் அடியையும் முடியையும் காட்டுகிறாா். அதற்காக இந்த அழல் உருவில் இருந்த இறைவன் மலையுருவில் மாறுகிறாா்.

விண்ணிற்கும் மண்ணிற்கும் அப்பால் எல்லையற்று அனல் பிழம்பாக ஓங்கி நின்ற இறைவன் நம் கண்ணிற்கு எட்டும் அளவில் அண்ணாமலையாக அரனுக்குக் காட்சியளித்து நிற்கிறாா்.

இக்கதை, இறைவன் எல்லையற்றவன். தேவாதி தேவர்களாலும் அவன் உருவைக் காணமுடியாது. செருக்கு நிறைந்த உள்ளமுடையோர் இறைவன் முடியையோ அடியையோ எவ்வளவு முயன்றாலும் காண முடியாது. ஆனால் கர்வம் ஒழிந்தவர்கள் பக்திகொண்டு நினைத்தால் அரை வினாடியில் அவன் உருவைக் காண முடியும் என்பதைப் புலப்படுத்துகிறது இக்கதை.

**கார்த்திகைத் தீபக் காட்சி**

திருவண்ணாமலையில் கார்த்திகைத் தீபதரிசனம் ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும். கார்த்திகைத் திங்களில் வரும் கார்த்திகை ஓரையில் நிறைமதி நாள் இலட்சக்கணக்கான மக்கள் நகரின் சகல தெருக்களிலும் வீடுகளின் மாடியிலும் கோயில் பிரகாரத்திலும் கூடி இருப்பார்கள்.

பகலவன் மறைந்து முழுமதி வானில் அரும்பிக் கோபுர உச்சியைத் தொட வருவது போல் வரும்.

கோயிலிலிருந்து பஞ்சமூர்த்திகளும் எழுந்தருளுவார்கள். அதிர்வெடி செவியைத் துளைப்பது போல் வெடிக்கும்.

உடனே அர்ச்சகர்கள் ஐந்து கர்ப்பூர ஆரத்தித் தட்டுகளை உயர்த்துவார்கள். அப்பொழுது அண்ணாமலையின் உச்சியிலுள்ள உயர்ந்த கற்பூரக் கொப்பரையிலிருந்து சுடர் எழும். அண்ணா மலைக்கு அரோகரா என்ற ஒலி விண்முட்ட எங்கும் ஒலிக்கும்.

பக்தர்களின் முகத்தில் புன்னகை பொலிகிறது; உள்ளம் பூரிக்கிறது; உடல் புல்லரிக்கிறது. பொங்கழல் உருவனைக் கண்டு களிப்புறுகின்றார்கள்.

இந்த அற்புதமான காட்சியைக் கண்டு சம்பந்தர்,

***"உண்ணாமுலை உமையாளொடும்***
***அடனாகிய ஒருவன்***
***பெண்ணாகிய பெருமான்மலை***
***திருமாமணி திகழ***
***மண் ஆர்ந்தன..................................................***
***மழலைமுடிவு - அதிரும்***
***அண்ணாமலை தொழுவார் வினை***
***வழுவா வணம் அறுமே"***

என்று உள்ளம் உருகிப் பாடியுள்ளார். இன்றும் அப்பாடலை ஆயிரம் ஆயிரம் அன்பர்கள் அன்பு நெக்குருகி ஆனந்தக் கண்ணீர் பொங்கப் பாடி உள்ளம் கனிந்து நிற்கின்றனர்.

**திருக்கோயில்**

தமிழ்நாட்டிலே, வட ஆற்காடு மாவட்டத்திலே திருவண்ணா மலை என்னும் ஊரில் அண்ணாமலையருகே அருணாசலேசுவரர் கோயில் உள்ளது. சுமார் இருபத்தாறு ஏக்கர் நிலம் உள்ள விசாலமான இடத்தில் இக்கோயில் அமைக்கப்பட்டிருக்கிறது.

கோயிலின் நீளம் கீழ்மேல் 1500 அடி. அகலம் தென்வடல் 700 அடி. ஒன்றுக்குள் ஒன்றாக நான்கு பிரகாரங்கள் இருக்கின்றன.

கோயிலைச் சுற்றி நல்ல உயரமான அழகான திருமதில்கள் காணப்படுகின்றன. இம் மதிற்சுவர்கள் கருங்கற்களை ஒன்றின்மீது ஒன்றாக அடுக்கி வைத்து இடையே சந்துகள் இல்லாமல் செதுக்கி இணைத்துப் பொருத்தப்பட்டிருக்கிறது. இதனைச் சிற்பசாத்திரத் தில் சுத்தம் என்று கூறுவர்.

நாற்புறமும் நான்கு கோபுரங்களும் உள்ளே மூன்று பிரகாரங்களும் உண்டு.

இக்கோயில் ஏனைய தமிழ்நாட்டுக் கோயில்களைப் போல் திராவிட சிற்ப முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

கிழக்கே பிரதான வாயிலில் உள்ள ராஜகோபுரத்தைக் கிருஷ்ணதேவராயர் கோபுரம் என்பர்.

இக்கோபுரமானது மிக அழகுடையதாகவும் 217 அடி உயரமும் 135 அடி அகலமும் உள்ளது.

இங்குள்ள இருபக்கத்துச் சுவர்களிலும் பரத சாஸ்திரத்தில் கூறும் நூற்றெட்டுக் கரணங்களையும் விளக்கும் சிற்ப வடிவங்கள் உள்ளன.

தெற்கே உள்ளே கோபுரம் திருமஞ்சனக் கோபுரம் என்றும் மேற்கேயுள்ள கோபுரம் மாயக்கோபுரம் என்றும் வடக்கேயுள்ள கோபுரம் அம்மணி அம்மாள் கோபுரம் என்றும் கூறப்படுகின்றன.

இங்கு பிரகாரத்தில் கிருஷ்ணதேவராயர் கட்டிய ஆயிரக்கால் மண்டபம் இருக்கிறது. சிற்ப வேலைப்பாடுகள் அற்புதமாக இருக்கின்றன.

இங்கு ஒரு கல்வெட்டுக் காணப்படுகிறது. அது கிருஷ்ண தேவராயர் ஒரிய மன்னனையும் ராயச்சூர் மன்னனையும் வெற்றி கொண்டதையும், துலாபாரம் செய்து தம் எடையுள்ள பொன்னைக் கோயிலுக்கு அளித்ததையும் ஜீரணோத்தார தசகம் என்னும் திருக்கோயில்களைப் பழுதுபார்க்கும் பாரிய நூல் ஒன்றை வாமதேவர் இங்கு இயற்றியதையும் குறிப்பிடுகிறது. முன்னே நிற்கிற தூணில் கிருஷ்ணதேவராயர் சிலையும் எதிரே ஒரு தெய்வத்தின் சிலையும் காணப்படுகிறது. இதற்குத் தென்மேற்கே மூலையில் அடியில் பாதாள இலிங்கமும் காணப்படுகிறது.

அடுத்தது கம்பத்து இளையனார் சந்நிதி. இது 1421ஆம் ஆண்டில் கிருஷ்ணதேவராயரின் உதவியால் கட்டி முடிக்கப்பட்டது. முருகப் பெருமான் திருப்புகழ் பாடிய அருணகிரியின் பிரார்த்தனைக்கு இரங்கிக் கம்பத்தில் காட்சி அளித்தாராம். அந்தத் தூணை நடுவாக வைத்து இந்தக் கோயில் கட்டப்பட்டதாம்.

இங்கு வில்லேந்திய வேலன் மயில் மீது கம்பீரமாகக் காலை யூன்றி நிற்பது கலைஞர்களுக்குப் பெரிய விருந்தாகும். தெற்கே இருப்பது வாசன் குளம், இங்கிருந்து திருமலம்ம சமுத்திரத்திற்கு வழி இருக்கிறது.

இரண்டாம் பிரகார வாயிலில் நந்தி வீற்றிருக்கிறார். வலப் புறம் முருகன் கோயிலும் இடப்புறம் சுந்தரேஸ்வரலிங்கமும் காணப் படுகின்றன.

விஜயநகர மன்னரின் சின்னங்களான வாளும், வராகமும் தீட்டப்பட்டுள்ளன.

இங்குள்ள கோபுரம் வல்லாளன் கோபுரம் என்று கூறப்படு கிறது. 1328இல் இங்குள்ள மதிலையும் கோபுரங்களையும் வல்லாளன் கட்டினானாம். இக்கோபுரங்களைப் பாண்டியரும் ஹோய்சாளரும் சோழரும் கட்டியிருக்க வேண்டும் என்று தெரிகிறது.

இங்குள்ள குளம் பெருமாள் தடாகம் என்று கூறப்படுகிறது. இதை ஒட்டி நந்தவனமும் பெருமாள் மண்டபமும் உண்டு. அப்பால் மணிமண்டபமும் குளத்திற்கு மேற்கே சிவபெருமான், கணபதி, விந்தேஸ்வரலிங்கம் பஞ்சமுகலிங்கம் ஆகிய நிலம், நீர், நெருப்பு உருவங்கள் உண்டு. இதற்கு நான்கு முகம் - காற்று என்றும் ஐந்தாம் முகம் ஆகாயம் என்றும் கூறப்படுகிறது.

மூன்றாம் பிரகாரத்திற்குச் சென்றால், நந்தி, கிளிக் கோபுரம் ஆகியவைகள் காணப்படுகின்றன. உள்ளே புகுந்ததும் மங்கையர்க் கரசி மண்டபம் தெரிகிறது. மண்டபத்தையும், அருகேயுள்ள குளத்தை யும் சேவப்ப நாயக்கன் கட்டினான் என்று அறிகிறோம்.

இந்த மண்டபத்தில் தான் கார்த்திகையன்று மலைமேல் தீபம் போடும் பொழுது சுவாமி எழுந்தருளும்.

இடப்புறம் ஸ்தல விருட்சமும், ஆதித்த சோழன் கல்வெட்டுக் களும் உள்ளன.

தகடூர் (தருமபுரி) அதியமான் மலையனூரை இக் கோயிற் பணிக்கு அளித்ததாக ஒரு கல்வெட்டு கூறுகிறது.

வடக்கே வல்லாளன் 11ஆம் நூற்றாண்டில், கட்டிய உண்ணா முலை அம்மன் சந்நிதி காணப்படுகிறது.

இதன் முன் மண்டபத்தில் எட்டுத்தூண்களில் அஷ்டலட்சுமி உருவங்கள் காணப்படுகின்றன. அருகே நவக்கிரக மண்டபமும் 5 சிவாலயங்களும் உள்ளன.

நான்காம் பிரகாரத்தின் வாயிற்படியில் நந்தி, பலி பீடம், கொடிமரம் வரிசையாகக் காணப்படுகின்றன. ஆவிடையார் லிங்க மூர்த்தியாகக் காட்சி தருகிறார். வடக்கே பைரவர் வாயிலில் இருக்கும் நடராஜர், திருமூர்த்தி முதலிய தேவர்களின் சிற்ப வடிவங்கள் பார்க்கத்தக்கவை.

மலையின் மீது ஒரு பெரிய செம்புக் கொப்பரையில் 24 முழம் நீளமுள்ள ஒரு தூணில் ஒரு மணங்குக் கற்பூரத்தைத் தூளாக்கித் தூவித் திரியாக்கி 20 மணங்கு நெய் ஊற்றி ஒரு வீசைக் கற்பூரக் கட்டியை ஏற்றி நெருப்பைப் பற்ற வைப்பார்கள். இது பக்கத்தி லுள்ள ஊர்களுக்கெல்லாம் 15 நாள் வரைத் தெரியுமாம். திரு வண்ணாமலைக்குப் போய் தரிசனம் செய்யப் போகிறவர்கள் அனைவரும் தம் இல்லத்தில் வைத்து வணங்கப் பிள்ளையார் உருவம் வாங்கி வருவதுண்டு.

இவைகளெல்லாம் பண்டுதொட்டுத் தமிழகத்தில் தீபத் திருநாள் தலைசிறந்த விழாவாகக் கொண்டாடப்பட்டு வருவதை உறுதிப்படுத்துகின்றன.

## கை விளக்குகள்

கை விளக்குகளை அகல் விளக்குகள் என்று அழைப்பர். இது வீட்டு விளக்காகும். இவ்விளக்குகள் விரும்பிய பொழுது எளிதாக எடுத்துக் கொண்டு செல்லவும் இஷ்டப்பட்ட இடத்தில் வைத்துக் கொள்ளவும் ஏற்றவையாக இருக்கின்றன.

தமிழர்கள் வீட்டு வாயிலில் இரு பக்கங்களிலும் இரு சிறு மாடக்குழிகள் அமைத்திருப்பார்கள். அம் மாடக் குழிகளில் இரு சாணி உருண்டைகளை வைத்து அதன்மேல் கை விளக்குகளை ஏற்றி வைப்பார்கள்.

இந்த விளக்குகளின் நடுவில் பள்ளமான ஒரு பகுதி உண்டு. அதில் நெய்வார்த்து முன் பக்கமுள்ள மூக்கில் (நாக்கு என்றும் முகம் என்றும் கூறுவார்கள்) பஞ்சுத் திரிகள் போட்டு விளக்கேற்றுவார்கள். பின்பக்கமுள்ள பகுதி சற்று உயர்ந்திருக்கும். நுனி சிகரம்போல் சிறுத்து இருக்கும். இது பின்பக்கமிருந்து வரும் காற்று, விளக்கைக் குளிரவைத்து விடாதிருக்க ஒரு மறைப்பாகவும் கைபிடியாகவும் பயன்படுகிறது.

இதில் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கும்; சமயச் சின்னங்கள் தீட்டப்பட்டிருக்கும். விளக்கு எந்தத் தெய்வத் திற்குக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கப்படுகிறதோ அந்தத் தெய்வத்தின் சின்னமோ, அத்தெய்வ உருவமோ அதில் பொறிக்கப்பட்டு இருக்கும்.

கடையில் வாங்குவதானாலும் ஒவ்வொரு சமயியும் தன் சமயச் சின்னம் பொறிக்கப்பட்ட விளக்கையே பார்த்து வாங்குவர்.

இந்தக் கை விளக்குகளில் இராமநாதபுரம், மதுரை, திருநெல் வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உபயோகிக்கப்படும் விளக்கு களைவிடச் செங்கற்பட்டு, ஈழநாடு ஆந்திர நாடு முதலியவிடங்களில் உபயோகிக்கப்படும் விளக்குகள் பெரியனவாக இருக்கின்றன.

இந்த விளக்குகள் கேரள நாட்டில் கூடக் காணப்படுகின்றன. கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களிலும் இவைகள் உண்டு.

இவ்விளக்குகளில் கேரள நாட்டில் உள்ளவைகள் சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் உள்ளனவாய்த் திகழ்கின்றன. விளக்கின் முன்புறம் விக்னேஸ்வரர் உருவம் காணப்படுகிறது. இருமருங்கிலும் இரு

யாழிகள் நின்று ஒரு பீடத்தைத் தாங்கிக் கொண்டிருப்பது போல் காணப்படுகிறது.

கணபதியின் உருவத்திற்கு மேலே அதாவது யாழிகள் தாங்கி நிற்கும் பீடத்தின்மீது மகாவிஷ்ணுவின் உருவம் வெகு அழகாக இலங்குகிறது. காணிக்கைக்கும், கோயிற் பூசைக்குமாகச் செய்யப் பட்ட இந்த விளக்குகளின் வடிவை வரையறுக்கவும், வார்த்தெடுக் கவும் வேண்டிய நிர்ப்பந்தம் சிற்பிகளின் திறமையை அபிவிருத்தி செய்தது.

தமிழ் மக்கள் இந்தக் கை விளக்குகளின் மீது கொண்ட மோகம், சிற்பிகளுக்கு தம் கைத்திறனால், கலை அழகு பொலியும் கவினுறு விளக்குகளை உருவாக்கும் உத்வேகத்தை ஊட்டியது. இந்தக் கை விளக்குகளை வாங்கி ஆதரித்தவர்கள் பெரும்பாலும் ஏழை எளிய மக்களேயாவர். எனவே இதனை மக்கள் விளக்கு என்று கூறினாலும் பொருந்தும்.

கை விளக்குகளைக் கவின் விளக்காகவும் அழகு ஒளிரவும் செய்யச் சிற்பக் கலைஞர்கள் மிகச் சிரமப்பட்டுள்ளார்கள். சின்னஞ் சிறிய உருவில் குறைந்த விலையில் அழகிய விளக்குகளை உருவாக்கு வது என்றால் மிகச் சிரமமாகத் தானே இருக்கும்!

இந்தச் சின்னஞ்சிறு விளக்கைச் சிற்பிகள் ஏராளமாக உருவாக்க, மக்கள் காட்டிய ஊக்கமும் ஆக்கமும் சிற்பத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் இளஞ் சிற்பிகள் தொழில் பயிற்சி பெறவும் சிறந்த சிற்ப வடிவங்களைச் சீர்பெற அமைக்கவும் ஆற்றல் அளித்தன! சிறந்த சிற்பியாய்ச் சீர்பெறத் தூண்டின.

திருவிளக்குச் செய்யும், சீரிய சிற்பக்கலைத் திறனைத் தமிழ் நாட்டு மக்கள் சமய சம்பந்தமான காரியங்களோடு இணைத்திருக் கின்றார்கள். அதனால் தான் இத் தொழில் இன்றும் இறவாது குற்றுயிராகவாவது இருக்கிறது. என்றாலும் இன்று மின்விளக்குகள் எங்கும் மலியவே கைவிளக்குகளின் காலம் மறையத் தொடங்கி வருகிறது.

வீடுகளில் மின் விளக்குகள் போட்டாலும் கோயில்களில் மின் விளக்குகள் போடமறுத்து வந்ததால் ஓரளவு கோயில்களில் இக் கைவிளக்குகள் இருந்து வந்தன.

இன்று எல்லாக் கோயில்களிலும் கை விளக்குகளைக் காண்பதே அரிதாகி வருகிறது.

ஆனால் வெண்கலப் பாத்திரக் கடைகளில் பழைய பண்ட பாத்திரங்களோடு ஏராளமான கைவிளக்குகளும் இருந்து வரு கின்றன. அவைகளை அவர்கள் உருக்கி வேறு அவசியமான பாத்திரங் களைச் செய்து வருகின்றனர்.

மின் விளக்குகள் எட்டிப்பாராத கிராமங்களில் கூட இந்த உலோகக் கைவிளக்குகளுக்குப் பதிலாக மலிவான விலையில் தகரத்தில் செய்யப்பட்ட மண்ணெண்ணெய் விளக்குகளும் மண்ணெண்ணெயால் எரியும் பவர் விளக்குகளும் அரிக்கண் விளக்குகளும் அதிகமாக இடம் பெற்று விட்டன.

ஓரோர் இடங்களில் காற்றினாலும் மண்ணெண்ணெயினாலும் எரியும் கேஸ் விளக்குகளும் பெட்ரோமாக்ஸ் விளக்குகளும் தோன்றி நமது அகல் விளக்குகளை அறவே விரட்டி வருகின்றன.

கைவிளக்குகள் கண்ணிற்குக் குளிர்ச்சியை அளிக்கின்றன. மங்களகரமாக இருக்கின்றன என்றெல்லாம் நமது முதியவர்கள் கூறி வந்தாலும் இன்றைய நாகரிக மக்களின் கவனம் ஆவி விளக்குகள் மீதும் மின்விளக்குகள் மீதும் திரும்பிவிட்டது என்பதை எவரும் மறுக்க முடியாது. இனி அதை எவரும் மாற்றவும் முடியாது. கை விளக்கு காலாவதியாய் விட்டாலும் குத்துவிளக்கு இன்னும் மறைந்து விடவில்லை. ஏனெனில் கோயிலில் சுவாமிக்கு அருகிலும் வீட்டுப் பூசைக்கும் திருமணம், புதுமனை புகுதல் போன்ற காரியங் களுக்கும் குத்துவிளக்கை உபயோகிக்கும் மனோபாவம் இன்னும் மாறாதிருப்பதால் வீட்டுக்கொரு குத்துவிளக்காவது இருந்து வருகிறது. ஆனால் ஒரு சில நாகரிக மக்கள் இல்லங்களில் அதுவும் இல்லாமல் மறைந்து வருவதை நாம் காணாமல் இல்லை.

முதன் முதலில் காடுகளில் கல்லினின்று இயற்கையாய் அமைந்த விளக்குகள் அரும்பின. அப்பால் இயற்கை விளக்குகளைப் போல் கைவிளக்குகள் செய்விளக்குகளாக மலர்ந்தன. கைவிளக்குகளை முதலில் நெய் விளக்கென்றும் அழைத்தனர்.

முதன் முதலில் நாட்டில் தோன்றியது கைவிளக்கேயாகும். நாட்டிலுள்ள நானிலத்தும் நான்கு விதமான கல் விளக்குகள் தோன்றியதைப் பற்றி முந்திய அத்தியாயத்தில் படித்தீர்கள்.

குறிஞ்சி நிலத்தில் இயற்கையில் எழுந்த கல் விளக்குகளும் முல்லை நிலத்தில் செயற்கையில் தோன்றிய கல் விளக்குகளும் நெய்தல் நிலத்தில் இயற்கையும் செயற்கையும் கலந்த சங்கு விளக்குகளும் மருத நிலத்தில் முற்றிலும் செயற்கை வடிவில் தோன்றிய சுடு மண் விளக்குகளும் நாட்டில் பூத்த நாகரிக விளக்குகளாக முதலில் விளங்கின.

அதன் பின்னர் இவ் விளக்குகள் அழகு வடிவம் பெற்று மக்கள் ஆர்வத்தோடு பயன்படுத்தும் பெற்றியைப் பெற்றன.

ஆரம்ப காலத்திலே நானிலத்திலும் நான்கு விதமாக அரும்பிய இக் கைவிளக்குகள் பிற்காலத்தில் பாண்டிய நாட்டில் ஒரு வடிவமும், சேர நாட்டில் மற்றொரு வடிவமும், சோழ நாட்டிலே இன்னொரு வடிவமும், தொண்டை நாட்டிற் பிறிதோர் வடிவமும் பெற்று

விளங்கின. என்றாலும் இவைகள் அனைத்தும் ஒரே மூல அமைப்பை உடையனவாய் இருந்தன என்பதில் சற்றும் சந்தேகமே இல்லை.

இஃதன்றி வேறு பல நாட்டிற் கண்டெடுத்த பழம் பெருங் கை விளக்குகளை ஆராய்ந்து பார்த்தால் அவை முற்றிலும் இதற்குமாறான அடிப்படையில் வளர்ந்திருக்கின்றன என்று நன்கு உணரலாம்.

உரோமர் நாட்டிலும், கிரேக்கர் நாட்டிலும், எகிப்தியர் நாட்டிலும் பண்டைக் காலத்தில் உபயோகப்படுத்திய கைவிளக்குகள் இன்று இங்கிலாந்து நாட்டின் தலைநகராய் விளங்கும் இலண்டன் மாநகரிலுள்ள உலகப் புகழ் பெற்ற தொல்பொருள் காட்சிசாலையில் காணக்கிடக்கின்றன. அவைகள் அனைத்தும் அடிப்படையான அமைப்பிலும் அலங்காரத்திலும் வெவ்வேறு மூலத்தை உடையனவாக இருக்கின்றன என்று எவரும் எளிதில் கூறிவிட முடியும். ஏனெனில் நமது நாட்டில் இன்று வாழும் சில கோடரிக்காம்புகள் எதை எடுத்துக் கொண்டாலும் இது வெளி நாட்டிலிருந்து வந்தது. இது அயல்நாட்டுப் பாணியில் உருவானது என்று கூசாமல் கூறிவிடுகிறார்கள். நமக்கென்று சொந்தமாக உள்ளது ஒன்றும் இல்லை என்று கூடக் கூறி வருகின்றார்கள். அவர் களின் அறியாமைக்கு நாம் வருந்தாதிருக்க முடியவில்லை. ஏனெனில், இவர்களிடம் இன்னும் நல்ல நாட்டுப் பற்று எழவில்லை என்றுதான் கருதவேண்டியதிருக்கிறது.

கைவிளக்குகள் ஆரம்ப காலத்திலே தமிழகத்தின் நான்கு நிலத்திலும் நாலு விதமாய் எழுந்தது போல் பிற்காலத்திலும் பலவித வடிவம் பெற்று எழுந்தன. அவைகள் பிற்காலத்தில் திருமகள் வடிவமும் சிவனுடைய வடிவமும் முருகன் வடிவமும் கணபதி வடிவமும் திருமால் வடிவமும் பெற்றெழுந்தன.

அப்பால் நாட்டில் கிறிஸ்து மதம் தோன்றவே சிலுவை வடிவமும் சம்மனுசுகள் (தேவதூதர்கள்) வடிவமும் பெற்றெழுந்தன. இறுதியாய் இஸ்லாமிய சமயச் சின்னமாகிய இளம்பிறை வடிவமும் பெற்றன.

தமிழ்நாட்டிலே வளர்ந்தோங்கிய பௌத்த, சமண சமயச் சின்னம் பொறிக்கப்பட்ட விளக்குகளை நாட்டில் இதுவரை நான் கண்டதே இல்லை.

கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயங்களைவிடப் பௌத்தமும் சமணமும் நன்கு வேரூன்றி இருந்த சமயங்கள், தமிழ் இலக்கியங் களிலும் நிகண்டுகளிலும் இடம் பெற்ற சமயங்கள். நாட்டின் ஆட்சி பீடத்தில் அமர்ந்து அரசாங்க சமயமாய் எல்லாப் பேற்றையும் பெருமையையும் பெற்ற சமயங்கள். எண்ணற்ற பௌத்த, சமணப் படிமங்களும் கோயில்களும் நிலவுமாறு செய்த சமயங்கள்.

அச் சமயங்கள் கால வேற்றுமையால் நாட்டில் எழுந்த தேசீய உணர்ச்சிப் பெருக்கால் அடித்துக் கொண்டு போகப்பட்டாலும் காஞ்சி தொட்டு கன்னியாகுமரி வரை அச்சமயங்களின் சின்னங்கள் இன்றும் காணக்கிடக்கின்றன. நமது அரசாங்கப் புதை பொருள் ஆராய்ச்சித் துறையினர், காவிரிப் பூம்பட்டினம், கொற்கை, காயல், உவரி முதலிய இடங்களை அகழ்ந்து ஆராய்ந்தால் இன்னும் பல சான்றுகள் கிடைக்கும்.

அறிஞர் டி.ஜி. கேல்கார் அவர்கள் ‘இந்தியாவின் விளக்குகள்’ என்ற நூலில் இப்பொழுது நாம் உபயோகிக்கும் விளக்குகளை ஆராய்ந்தால் அவற்றை ஐந்து பிரதான பண்பிற்கு உரியவைகளாகப் பிரித்து விடமுடியும், அதாவது அவை, சைவம், வைணவம், காணபத்தியம், சௌரம், சாக்தம் எனப்படும் என்று கூறுகிறார்.

அதாவது சைவ விளக்குகளில் சாலுங்கம், நந்தி, நாகம் அமையினும் சில சமயங்களில் கிருத்திமுகம் சிறப்புற்றும் விளங்கும். வைணவ விளக்குகள் திருமாலோடு சம்பந்தப்பட்ட முக்கிய சின்னங் களைக் கொண்டு காட்சி அளிக்கும். அதாவது சங்கு, சக்கரம், கடம், பதுமம், கருடன், திரிபுந்தரா முதலிய சின்னங்களைக் கொண்டு விளங்கும்.

வைணவர்களின் முக்கியமான தெய்வம் திருமாலின் மனைவி யாகிய திருமகளாகும். கஜலட்சுமி விளக்குகளைப் பெரிய சிற்ப வல்லுநர்கள் வெகு அழகாக அமைத்துள்ளதை நாம் கண்டும் கேட்டும் வருகின்றோம். (படம் 6 பார்க்க) காணபத்தியப் பண் பாட்டில் பிறந்த விளக்குகள் பெரிதும் கணேசரைப் பிரதிபலிப்பவை யாக விளங்கும். அதோடு, யானை, பெருச்சாளி, பாம்பு, சிவலிங்கம், ரித்தி, சித்தி முதலிய உருவங்களும் இடம்பெற்று விளங்கும்.



படம் 6. கஜலட்சுமி விளக்கு



படம் 7. கணபதி விளக்கு

சௌரர்கள் ஞாயிற்று வணக்கக்காரர்கள். அவர்களின் விளக்குகள் ஒரிசாவில் உள்ள கோனார்க்கில் விளங்கும் சூரிய கோயிலில் உள்ள விளக்குகளைப் போன்று அலங்காரமாக இலங்கும்.

சாக்தர்கள் சக்தியை வழிபடுபவர்களாவர். இவர்கள் கால பைரவர், காலபந்த - பைரவர், காளி, பைரவி முதலிய தெய்வங்களையும் வணங்குவார்கள். ஹடயோகம் செய்யும் சாதுக்கள், கடற்சங்கினால் செய்யப்பட்ட விசேஷ விளக்குகளைத் தூக்கிச் செல்வார்கள்.

இருபத்தைந்து நூற்றாண்டிற்கு முன்னர் கௌதம புத்தர் பின்வரும் உபதேசத்தைப் புரிந்தார். 'ஓ துறவிகளே மனித வாழ்க்கை, விளக்கின் விரிசுடராய் விளங்குகிறது. இந்த அநித்யமான வாழ்விலே நாம் சாந்தமான விளக்காக மேலிடவகை தேடவேண்டும். நாம் அமரத்துவத்தை அடைய விரும்புகிறோம். ஒளி வெளியே செல்வதைப் போன்று நித்தியவஸ்துவோடு கலந்து நிர்வாண நிலையைப் பெற விழைக்கின்றோம். அத்தகைய ஒரு வாழ்க்கைச் சுடர் மீண்டும் பிறப்பதே இல்லை. (சுத்தனிபாதம் பக் 235)

மேற்கூறியவாறு, கலைகளை அடிப்படையாகக் கொண்ட விளக்குகள் தமிழ்நாட்டில் பெரிதும் இல்லை. சாக்தம், சௌரம், காணபத்தியம் போன்ற மதங்கள் முற்காலத்தில் இருந்திருக்கலாம். இன்று அவற்றின் அடிச்சுவடுகளைக் கூடக் காணமுடியவில்லை. வடநாட்டில் இம்மதச் சின்னங்களும் இவற்றை அடிப்படையாகக் கொண்ட விளக்குகளும் இருக்கலாம் என்று எண்ணுகிறேன்.

குத்து விளக்கு நிலையாக ஒரு இடத்தில் இருக்கத்தக்கது. கைவிளக்கைப்போல் விரும்பிய இடத்திற்கு எடுத்துச் செல்லத் தக்கது அன்று. ஆகையால் முற்காலத்தில் வீடுகளில் கைவிளக்கு தான் அதிகமான அளவில் பயன்பட்டு வந்தது.

அதோடு குத்து விளக்கில் அதிகமான சமயச் சின்னங்கள் புகுத்துவதற்கு விழியில்லாமல் இருந்தது. என்றாலும், ஒரு சில குத்து விளக்குகளில் சைவ வைணவச் சமயச் சின்னங்கள் இடம் பெற்றிருப்பதை நாம் அறியாமல் இல்லை. கைவிளக்குகளில்தான் எல்லாச் சமயச் சின்னங்களும் நன்கு இடம் பெற்றிருந்தன.

நேப்பாள நாடு நீண்டகாலமாகச் சுதந்திர 'இந்து' நாடாக விளங்குகிறது. இந்தியா பிரிட்டீஷ்காரர்களுக்கு அடிமைப்பட் டிருந்த காலத்தில்கூட நேப்பாளம் ஒரு இந்து மன்னர் ஆட்சியில் சுதந்திர நாடாக மிளிர்ந்தது. இன்றும் இந்து மன்னர் ஆட்சியில் சுதந்திர நாடாக இருந்து வருகிறது.

நேப்பாளத்தில் இந்து சமயச் சின்னங்கள் பொறித்த விளக்குகள் பல உண்டு. அங்குள்ள ஒரு சூரிய விளக்கைப் பார்த்தேன். அவ்விளக்கில் ஒரு உயர்ந்த பீடத்தில் சூரிய தேவன் அமர்ந்து கொண்டிருக்கிறான். கைகளில் தாமரை மலர்களைப் போல் இரு

மருங்கிலும் உச்சியிலும் மலர்கள் மலர்ந்து நிற்பது போல் காணப் படுகிறது. மேலே பூங்கொடிகளாலான வாசி (பிறை) அழகாகச் சமைக்கப்பட்டிருக்கிறது.

சூரியதேவனின் இடப்புறமும், வலப்புறமும் சூரிய தேவனின் பணிப் பெண்களோ, மனைவிகளோ நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நடனமாடுவதுபோல அல்லது எதையோ சுட்டிக் காட்டு வது போலக் காணப்படுகிறது.

சூரிய தேவனது பாதத்தின் கீழ் ஒரு வீரன் ஏழு குதிரைகளின் லகானைப் பிடித்து அவைகளை ஓட்டுவது போல் சித்தரிக்கப்பட்டு இருக்கிறது. அவனது இரு பக்கத்திலும் இரு பணி ஆட்கள் அமர்ந்து கொண்டிருக்கிறார்கள். குதிரையின் கீழே ஒரு மலரும் அதன் அடியில் ஒரு பதும பீடமும் மிளிர்கின்றன. அதைச் சுற்றி அரை வட்டமாக 12 அகல் விளக்குகள் சிறிய தூணின் மீது நிறுத்தப்பட் டிருக்கின்றன.

பன்னிரண்டு குதிரைகள் அரை வட்டமாகப் பாய்ந்து செல்வதைப்போல் ஒவ்வொன்றும் பின்கால்கள் இரண்டையும் ஊன்றிக்கொண்டு, முன் கால்கள் இரண்டையும் தூக்கிக் கொண்டு பாய்ந்து செல்வதைப்போல் காணப்படுகின்றன. மேலே உள்ள ஏழு குதிரைகளும் ஒரு வாரத்தைக் காட்டும் ஏழு நாட்களைப் பிரதி பலிப்பது போலவும் கீழேயுள்ள 12 குதிரைகளும் ஒரு ஆண்டிற்குரிய பன்னிரண்டு மாதங்களைப் பிரதிபலிப்பது போலவும் உருவாக்கப் பட்டிருக்கின்றன. இதன் உயரம் 285 செண்டி மீட்டர். இது 18ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்டது.

இவ்விளக்கு ஒரு பெரிய தத்துவத்தை விளக்கிக் காட்டும் அரிய விளக்காக அமைக்கப்பட்டிருந்தாலும் சிற்ப வேலைப்பாட்டில் தமிழ்நாட்டு விளக்கிற்கு ஒப்பானது என்று எவரும் கூற முடியாது.

தமிழகத்தில் சர்வ சாதாரணமாகக் காணப்படும் விளக்கு களில் முக்கியத்துவம் பெற்று விளங்குவது கஜலட்சுமி கைவிளக் காகும். இவ்விளக்கு முற்காலத்தில் கோயில்களில் அதிகமாக உப யோகப்படுத்தப்பட்டது. ஆனால் பிற்காலத்தில் கோயில் உபயோகம் குன்றி வீடுகளிலே அதிகமாக உபயோகப் படுத்தப் பட்டது.

எனவே இதனை வீட்டு விளக்காகவே கொள்ள வேண்டும். இவ்விளக்குகள் கடைகளில் ஆயிரக்கணக்காக விற்பனைக்கு இருந்து வந்தன. இவ்விளக்குகள், செய்வதற்கு எளியவை. நுண்ணிய அலங்கார வேலைப்பாடுகள் இதில் அதிகம் இல்லை.

அகலின் மேலே கைப்பிடியின் கீழே திருமகள் பதும பீடத் தின் மீது அமர்ந்திருப்பாள். இருமருங்கிலும் இரண்டு யானைகள் தன் துதிக்கைகளால் திருமகளின் தலையில் நிறை குடத்தில் கொண்டு வந்த நீரைச் சொரிந்து கொண்டிருப்பது போல் காணப்படும்.

கஜலட்சுமியின் உருவம்போல் மாயாதேவியில் உருவம் பொறிக்கப் பட்ட விளக்குகள் இலங்கையில் சிங்களவர்களின் இல்லத்தில் உண்டு.

மேலே பிறையும் நடுவில் உச்சியில் யாழியின் உருவமும் கீழே அகலின்மீது இரு கிளிகளும் கீழே முன் பக்கம் நீண்டு நிற்கும் முகமும் உண்டு.

இந்த அமைப்பில்தான் பெரும்பாலான கைவிளக்குகள் தமிழ்நாட்டில் இருந்து வந்தன. இஃதன்றி அகலின் மீது நடுவில் திருமாலின் சின்னமான நாமமும் அதன் ஒரு பக்கத்தில் சங்கும் ஒரு பக்கத்தில் சக்கரமும் பொறிக்கப்பட்ட விளக்குகளும் உண்டு. இவற்றை இன்று அதிகமாக உபயோகப்படுத்துவதில்லை. வைண வர்கள் இவற்றை அதிகமாக உபயோகப்படுத்தி வந்தார்கள். இதைப் போன்று வைணவ சின்னம் பொறித்த வேறு சில விளக்குகளும் உண்டு.

இஃதன்றி இக் கைவிளக்கில் திருமாலின் உருவத்தோடு அவரது வலப் பக்கத்திலும் இடப் பக்கத்திலும் அவரது இரு மனைவியர்களான உருக்குமணியும் சத்தியபாமாவும் நிற்பது போலவும் சிற்ப வேலை அமைந்திருப்பதுண்டு.

அதிகமான சிற்ப வேலைப்பாடுகளின்றி அகலின் மேலே, கைப் பிடியின் கீழே சூரியனின் உருவமும் இளம் பிறையின் உருவமும் தீட்டப்பட்ட விளக்குகள் அதிகமாக உபயோகத்தில் இருந்து வந்தன.

கைவிளக்குகளில் மிக அழகாகச் செய்யப்பட்டதும் அபூர்வ மான தினுசாக மதிக்கப்படுவதும் பிள்ளையார் உருவந் தீட்டப்பட்ட விளக்கேயாகும். இதைக் கைவிளக்காகவும் பயன்படுத்தலாம்.

இவ் விளக்கின் மேலே இருக்கும் வளையத்தில் சங்கிலியை மாட்டி வீட்டிலோ, கோயிலிலோ தொங்கவிடலாம். இவ்விளக்கின் தகழி ஏனைய தூக்கு விளக்கைப் போல் வட்ட வடிவமாக அமைக் கப்பட்டிருக்கிறது. தகழியின் நடுவேயுள்ள பீடத்தில் பிள்ளையாரின் உருவம் பீடத்தின் மீது வைக்கப்பட்டிருக்கிறது.


தகழியின் மீது பிள்ளையார்க்கு இரு பக்கங்களிலும் இரண்டு யாழியின் உருவங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் மேலே அனந்தசயனத்தில் அமர்ந்திருக்கும் திருமாலின் உருவத்தைத் தாங்கிக் கொண்டு நிற்பதுபோல் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

இந்த விளக்குகள் இன்றும் கேரள நாட்டிலுள்ளன. தமிழ் நாட்டில் கூட முன்னர் இருந்து வந்தன. இன்று தமிழ் நாட்டில் இத் தகைய விளக்குகளைக் காண்பது அரிதினும் அரிது. இவ் விளக்குப் பித்தளையால் செய்யப்பட்டதேயாகும். (படம் 7 பார்க்க)

சிவன் கோயிலில் உபயோகப்படுத்தப்பட்ட இலிங்க வடிவம் தீட்டிய கைவிளக்கும் உண்டு. இந்த விளக்கைச் சில கிறிஸ்தவர்கள் சிலுவை வடிவமுள்ள விளக்கென்று கருதித் தம் இல்லங்களில் உபயோகித்து வந்தனர். ஆனால் அந்தச் சிவலிங்கத்தின் இடத்தில் சிலுவை பொறிக்கப்பட்டு அதன் இரு பக்கங்களிலும் இரு தேவ தூதர்கள் (சம்மனசுகள்) சிலுவையின் முன் மண்டியிட்டு வழிபடுவது போல உள்ள விளக்குகள் சில தமிழ் நாட்டிலும் கேரளாவிலும் உண்டு. இவ்விளக்குகள் பதினாறாம் நூற்றாண்டிலே அரும்பிச் சுமார் 300 ஆண்டுகளுக்கு மேலாக கிறிஸ்தவர்கள் இல்லங்களிலே இருந்து இன்று முற்றிலும் மறைந்துபோய் விட்டன. (படம் 8 பார்க்க)

பொதுவாகச் செங்கற்பட்டு மாவட்டத்திலும் குறிப்பாகச் சென்னையிலும் இன்று காணப்படும் பழங்காலக் கைவிளக்குகள் உருவத்தில் ஏனைய தமிழ்நாட்டு விளக்குகளைவிடப் பெரியவை. அதோடு எண்ணெய் நிற்கும் கிண்ணம் அதிகமான உயரம் உடைய தாகவும் இருக்கிறது. இதனால் இந்தக் கைவிளக்குகள் கோயில் உபயோகத்திற்காக ஆதியில் உருவாக்கப்பட்டிருக்கலாம். பிற்காலத் தில் அதை வீட்டு உபயோகத்திற்கும் உரியதாகக் கொண்டிருக் கலாம் என்று எண்ணலாம்.

இத்தகைய விளக்கு மதுரை மீனாட்சி - சுந்தரேசுவரர் கோயி லிலும் உள்ளது. இக் கோயிலில் மிகப் புதுமையான தூக்கு விளக்கு களும் உள்ளன. (படம் 9 - 10 பார்க்க)



படம் 8. சிலுவை விளக்கு



படம் 9. நாகர் விளக்கு



படம் 10. வைணவர்களின் கை விளக்கு

செங்கற்பட்டு மாவட்டத்தில் காணப்படும் பெரிய அகல் விளக்கைப் போன்ற கைவிளக்குகள் இலங்கையில் குறிப்பாகத் தமிழர்கள் வாழும் மட்டக்களப்புப் பகுதியில் அதிகமாகக் காணப் படுகின்றன. இவ்விளக்குகள் தமிழ்நாட்டு விளக்குகளின் அடிப் படையிலே அமைக்கப்பட்டவை என்று சொன்னாலும் உருவத்தில் சில வேற்றுமைகள் காணப்படுகின்றன.

இந்தக் கைவிளக்குகளின் உபயோகம் இன்று குன்றியவுடன் மக்கள் இதைப் பத்திரப்படுத்தி வைக்கவில்லை. பழைய பித்தளை வியாபாரிகளுக்கு (பேரீச்சம்பழத்திற்காக) விற்று விட்டார்கள். இன்று வீடுகளில் பித்தளைக் கைவிளக்குகளைக் காணவே முடிய வில்லை. நமது கோயில்களில் இவைகள் இன்றும் இருந்து வரு கின்றன. ஆனால் அதிகமாக உபயோகத்தில் இல்லை.

பல கோயில்களில் இருள் சூழ்ந்த அறைகளில் கவனிப்பாரற்று ஒரு மூலையில் குவிந்து கிடக்கின்றன. அவற்றைக் கோயில் அதி காரிகள் விற்றுவிடாதிருக்கச் செய்ய வேண்டும். அவற்றை வெளியில் எடுத்து நன்றாக விளக்கி மக்களின் பார்வைக்கு வைக்கும்படி செய்ய வேண்டும். அவர்களால் முடியாவிடின் அவற்றைத் தொல்பொருள் காட்சிச் சாலைக்குக் கொண்டு வந்து மக்களின் பார்வைக்கு வைக்கச் செய்ய வேண்டும். விலை மதிக்க வொண்ணாத நமது நாட்டுக்கலைக் கருவூலங்களை நமது சந்ததியார்கள் கண்டு களிக்கும் பெருமையும் பெறச் செய்ய வேண்டும். அது, இந்த இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழும் நமது தமிழ்ப் பெருமக்களின் இன்றியமையாத கடமையாகும்.

கைவிளக்குகளின் இனத்தைச் சேர்ந்ததே வால்விளக்கு ஆகும். இந்த வால்விளக்கு கோயில் விளக்கைச் சேர்ந்ததாகும்.

வால் விளக்கை வீடுகளில் உபயோகிப்பதில்லை. இந்த வால் விளக்கு ஒரு புதிய அமைப்பில் செய்யப்பட்டிருக்கிறது. அடியில் பாதமும் அதன் மேலே எண்ணெய் தேங்கி நிற்பதற்கேற்ற கிண்ண மும் அதன் மேலே நீண்டு தட்டையான தகடும் பொருத்தப்பட் டிருக்கும்.

முன்பக்கத்தில் அகல்விளக்குப் போன்ற நீண்ட தகழி இருக் கிறது. அதன் நுனியிலுள்ள முகத்தில் திரியிட்டு எரிப்பார்கள். பின் பக்கத்தில் கைப்பிடியும் அதற்கடுத்தாற்போல் பள்ளமான பகுதி களும் பஞ்சுத் திரிகளும் இருக்கின்றன. கலயத்தில் எண்ணெய் எடுத்து ஊற்றுவதற்குரிய கரண்டி ஒன்றும் போடப்பட்டிருக்கிறது. இது தவறிவிடாமலிருக்க அதன் நுனி சங்கிலியால் பிணைக்கப் பட்டுக் கலயத்தின் வாயிற் பக்கத்திலுள்ள ஒரு பகுதியில் மாட்டப் பட்டிருக்கிறது. கலயத்தின் பக்கத்தில் கைபிடி அன்னத்தைப் போல் அமைக்கப்பட்டிருக்கிறது.

இவ்விளக்கில் எண்ணெய் தேங்கி நிற்கும் கலயம் அழகாகக் கடையப்பட்டிருக்கிறது. இவ் விளக்கிலுள்ள எண்ணெய் இதர விளக்குகளுக்கும் சப்ளை செய்ய உதவுகிறது. விளக்குகளுக்கு எண்ணெய் வார்க்கும் பணியாட்களுக்கு வெளிச்சம் தர நுனியில் ஒரு விளக்கும் பொருத்தப்பட்டிருக்கிறது. (படம் 31 பார்க்க)

1927 ஆம் ஆண்டு தாய்லாந்து நாட்டிலுள்ள பாங்கடிக் என்னும் சிற்றூரில் புதை பொருள் ஆராய்ச்சித் துறையினர் அகழ்ந்து பார்த்ததில் இத்தகைய சித்திரக் கைவிளக்குகள் சிலவற்றைக் கண்டெடுத்தனர். இதே மாதிரி விளக்குகள் இத்தாலி நாட்டிலும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவைகள் கி.பி. முதல் நூற்றாண்டில் நிலவினவென்று வரலாற்று ஆசிரியர்கள் வரைந்துள்ளார்கள். இதனைச் சென்னைப் பல்கலைக்கழக வரலாற்று ஆசிரியராயிருந்த திரு.க.அ. நீலகண்ட சாஸ்திரி அவர்களும் விளக்கி எழுதியுள்ளார் கள். சில ஆசிரியர்கள் நுண்ணுணர்வின்றி நமது வால்விளக்குகள் யவனர்களின் விளக்குகளினின்று பிறந்தவை என்று கூறும் கூற்றை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சில யவனர்களின் விளக்குகள் இங்கு வந்திருக்கலாம். அவர்கள் இந்நாட்டிற்கு வரு முன்பே தமிழர்கள் வித விதமான எழில் தரும் விளக்குகளை உருவாக்கியுள்ளார்கள் அவர்களின் விளக்கைப் பார்த்து பின் நமது விளக்கில் சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம் என்பதை நான் மறுக்கவில்லை.

# விளக்கின் சிற்ப நுட்பம்

பொதுவாகத் தமிழகத்தில் திருவிளக்கு சிறப்புப் பெற்று உயர்ந்து விளங்குகிறது என்று அறிஞர்கள் கூறுகின்றனர். குறிப்பாகக் கூறுவதானால் ஆதியில் குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம் ஆகிய நானிலத்திலும் நான்கு வகையான விளக்குகள் தோன்றின எனலாம்.

கல்லில், சங்கில், மண்ணில் அரும்பிய கைவிளக்குகள் நாளடைவில் பல்வேறு வடிவம் பெற்று எழுந்தன. முதன் முதலில் நானிலத்திலும் விளக்குகள் தோன்றினாலும் மருத நிலத்திலேதான் சிறப்புற்று எழுந்தன. ஆரம்பத்திலே அங்கு கல்லிலும் மண்ணிலும் பல்வேறு விதமான கைவிளக்குகளும் குத்து விளக்குகளும் தோன்றின.

நெருப்பைக் கண்ட மனிதன் அதைக் குளிர்காயவும் உணவைப் பக்குவப்படுத்தவும் உபயோகித்ததோடு இருளை அகற்றும் விளக்காகவும் உபயோகிக்கக் கற்றுக் கொண்டதை ஆராயும் வரலாற்று அறிஞர்கள், 'திருவிளக்கு மனித சமூக நாகரிக வளர்ச்சியில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்து விட்டது' என்று கூறுகின்றனர். எனவே அதை நாம் இன்று தீபயுகத்தின் தோற்றம் என்று கூறுகிறோம்.

தமிழகத்தில் தளிர்த்த 'தீபயுகம்' தமிழ்நாட்டை மட்டும் கவரவில்லை. இந்தியா முழுவதையும் ஏன்? உலகம் அனைத்தையுமே ஆட்கொண்டிருக்கிறது என்று அறிகிறோம்.

தமிழர்களின் நாகரிகம், ஞாயிற்று வணக்கம், திங்கள் வணக்கம் நெருப்பு வணக்கம் ஆகியவற்றைச் சூழ்ந்தே கட்டப் பட்டிருக்கிறது. தினகரன், திங்கள், தீ ஆகிய முச்சுடர்களின் சின்னமாகவே திருவிளக்கு அரும்பியது.

முற்காலத்தில் இந்தியாவிற்கு வந்த எல்லா அன்னிய நாட்டு வழிப்போக்கர்களும் நமது திருவிளக்குகளைப் பற்றியும் நாம் அதைப் போற்றும் விதங்களைப் பற்றியும் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்கள்.

வங்க நாட்டுப் பேரறிஞரும் ஓவிய விற்பன்னருமான நந்தலால் போஸ் அவர்கள் முச்சுடர்களின் இந்த ஒளியின்றேல் வாழ்வு இருண்டு அறியாமை மிகுந்து உலகம் பாழ்பட்டுப் போயிருக்கும் என்று மொழிந்துள்ளார்.

வடமொழி நன்கு பயின்ற புருசோத்தம மகாத்மியா என்பவர் "சுடரை அகற்றுவது செல்வத்தை அழிக்கும் குறியாகும்; வெண்மை ஒளி உணவை அளிக்கும் குறியாகும்; செஞ்சுடர்க்குறி போர்க் களத்தின் சின்னமாகும். கருஞ்சுடரின் குறி சாவின் சின்னமாகும்" என்று ஒளியின் சக்திகளை எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கு தமிழ்நாட்டுச் சிற்பச் செல்வங்களுள் ஒன்றாய்த் திகழ்கிறது. விளக்கு என்னும் பதம் தூய தனித் தமிழ்ச் சொல். இதை வடமொழியாளர்கள் தீபம் என்று அழைப்பார்கள். விளக்கு மங்களகரமானது என்னும் பொருள் தரும். 'திரு' என்னும் பதத்தை அடைமொழியாகக் கொண்டு 'திருவிளக்கு' என்று சிறப்பாக வழங்கப்பட்டு வருகிறது.

விளக்கு என்னும் மொழி; விளக்கல் அதாவது அழுக்கு அகலுதல், தெளிவித்தல், பிரகாசித்தல், ஒளிர்தல், மினுங்குதல் என்னும் பொருள் தரும் ஒரு சிறந்த பதத்திலிருந்து பிறந்த ஒரு தமிழ்ச் சொல்லாகும். விளக்கு என்ற பதத்திற்கு அட்ட மங்கலத்தில் ஒன்று (அட்டமங்கலம் - நிறை குடம், திரு விளக்கு, இரு மீன்கள், கண்ணாடி, கவரி, தொரட்டி, முரசு, கொடி முதலிய எட்டுப் பொருள்களாம்). ஆலாத்தி சோதிநாள் தீபம். விளக்கென்னேவள் என்று அகராதியில் பொருள் கூறப்பட்டுள்ளது. மண்டல புருடன் சூடாமணி நிகண்டில்,

***'விளக்கொளி சோதி நாளாம்***<br>
***வேள்வியே மகநாளீதல்***<br>
***அளக்கரே புடவிசேறு***<br>
***உப்பளங்கடல் கார்த்திகைப்பேர்'***

என்று கூறப்பட்டுள்ளன.

விளக்கு, பாதம், தண்டு, அகல் அல்லது தாழி, மொட்டு என்று பல அங்கங்களைக் கொண்டிருக்கிறது. விளக்கு வைக்கும் இடத்தை விளக்கறை, விளக்கு மாடம் என்றெல்லாம் கூறுகிறார்கள்.

விளக்கில் நெய் வார்த்துத் திரியிட்டுத் தீயைப் பொருத்துதலை விளக்கேற்றல், விளக்கைப் பொருத்துதல் என்றும் விளக்கை அனைத்தலை விளக்கை நிறுத்துதல், விளக்கைக் குளிர வைத்தல் என்றும் விளக்கு அணைந்தது என்பதை விளக்குப் பெருகிற்று என்றும் பண்புமிக்க தமிழர்கள் கூறி வருகின்றார்கள்.

விளக்கு அணைந்தது என்று ஓர் அமங்கலகரமான வார்த்தையைத் திருவிளக்கின் பால் தமிழர்கள் உபயோகிப்பதில்லை. ஒரு மங்கல வார்த்தையால் விளக்குப் பெருகிற்று என்று கூறு வார்கள்.

மேலும் விளக்கை இலட்சுமியாகக் கருதுவதால் அதைப் பற்றிப் பேசும் பொழுதெல்லாம் அமங்கலமான வார்த்தைகளை உபயோகிப்பதில்லை. 'திரு' என்ற பதத்திற்கு 'இலட்சுமி' என்று பொருள் கூறுவதால் விளக்கிற்குத் திருவிளக்கு என்று கூறுவது மிகப்பொருத்தமானது என்று எண்ணிப் பெரும்பாலும் தமிழ் மக்கள் திரு விளக்கென்றே அழைப்பர்.

விளக்கைத் தீப லட்சுமி என்றும் தீப நாச்சியார் என்றும் திருவிளக்கு நாச்சியார் என்றும் அழைப்பர். தமிழர்கள் கண்ட முழுமுதற் தெய்வமாகிய சிவபெருமான் சோதி வடிவமாக இருத்தலினால் தமிழ்நாட்டுப் பெண்களுக்குத் திருவிளக்கின்பால் அதிகப் பயமும் பக்தியும் உண்டு.

ஏனைய தெய்வங்களுக்கு இருப்பது போல் தீப லட்சுமிக்கு ஒரு புராணம் இல்லை. ஆனால் விளக்கு நீளை என்றொரு பிரபந்தம் உண்டு.

விளக்கில் பல வகைகள் உண்டு. அவைகளில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையாய் ஒவ்வொரு சிறப்புடையதாய் இருக்கும். சில நிலையாய் இருப்பதற்கும், சில கைகளில் தூக்கிச் செல்வதற்கும் சில எப்பொழுதும் உயரமாகக் கட்டித் தொங்க விடப்படுவதற்கும் ஏற்ற விதமாய்ச் செய்யப்பட்டிருக்கும். சில இரவும் பகலும் ஓய்வின்றி அணையாது எரிவதற்கு என்றும் செய்யப்பட்டிருக்கும். இவைகளில் சில கோயில்களுக்கென்றும் சில வீட்டிற்கென்றும் தனித் தனியாகச் செய்யப்பட்டிருக்கும்.

நிலத்திலே நிலையாக இருக்கும் விளக்கைக் குத்து விளக் கென்றும், கைகளில் தூக்கிச் செல்லும் விளக்கை கைவிளக்கு என்றும் தொங்க விடப்பட்டிருக்கும் விளக்கைத் தூக்குவிளக்கு என்றும் எப்பொழுதும் எரிந்து கொண்டே இருக்கும் விளக்கைத் தூண்டாமணி விளக்கென்றும் நவில்வர்.

பெண் உருவோடு கைகளில் அகல் ஏந்தி நிற்கும் விளக்கைப் பாவை விளக்கு என்றும் பகர்வார்கள். இது பெரும்பாலும் கோயில் களில் தான் இருக்கும். கருவறையின் வாயிலின் இரு மருங்கினும் வரிசையாகவும் ஒன்றின் மேல் ஒன்றாகவும் தொங்கவிடப்பட் டிருக்கும் விளக்கை நிலைவிளக்கு அல்லது சரவிளக்கு என்று கூறுவார்கள்.

இஃதன்றிக் கோயில்களில் பல உயரமான குத்து விளக்குகள் உண்டு. அவைகள் வீடுகளில் உள்ள விளக்குகள் போல் இருப்பினும் விளக்கின் மீது பலவிதமான பறவைகள் மிருகங்கள் பொருந்தியன வாய் இருக்கும். இவைகளைப் பெரும்பாலும் வீடுகளில் வைப்ப தில்லை.

இஃதன்றி வீடுகளில் இருப்பதைப் போல் அல்லாமல் கோயில் உபயோகத்திற்காகத் தனியான கை விளக்குகளும் உண்டு.

### நடை விளக்குகள்

முற்காலத்திலே நீங்கள் கண்டும் கேட்டும் அறியாத நடை விளக்குகளும் இருந்தன. ஒரு மன்னன் மற்றொரு மன்னனிடம் போரில் தோல்வியுற்ற அரசனையும் அவன் மகனையும் அழைத்து அவர்கள் தலைமயிரைக் களைந்து மொட்டையடிக்கச் செய்து மண்டையின் நடுவில் எண்ணெய் நிற்கக்கூடிய விதமாய் தலையின் மேல் வட்டமாய்ச் சாணியைப் பொருத்தி உச்சியில் நெய்வார்த்துத் திரியிட்டுத் தீப்பொருத்தி தன் அரண்மனை வாயிலின் இருமருங் கிலும் தந்தையையும் தனையனையும் தனித்தனியே நிற்க வைத்து நடை விளக்காகச் செய்வார்கள்.

பாண்டிய மன்னனையும் பாண்டிய இளவரசனையும் வெற்றி பெற்ற சோழ அரசன் நடை விளக்காக உபயோகப்படுத்தியதாக ஒரு கதையுண்டு. மற்ற விளக்குகள் ஒருவர் துணையின்றி இருந்த இடத்தை விட்டகலா இந்த நடை விளக்குகள் தாமாகவே விரும்பிய இடத்திற்கெல்லாம் செல்வதால் நடை விளக்கு என்றார்கள் போலும்.

### எண்ணற்ற விளக்கு வகைகள்

தமிழகத்தின் எண்ணற்ற விதமான விளக்குகள் உண்டு. அவை களில் முக்கியமான விளக்குகள் அடியில் வருமாறு உள :

விளக்குகளின் விவரம்:-

### I. பாவை விளக்கு

1. தீபலட்சுமி விளக்கு 2. ஆண் (பாவை) விளக்கு

### II குத்து விளக்கு

1. சந்திரகாந்தக் குத்துவிளக்கு
2. அன்ன விளக்கு (ஓதிம விளக்கு)
3. கிளி விளக்கு (கிள்ளை விளக்கு)
4. மயில் விளக்கு (மயூர தீபம்)
5. குயில் விளக்கு
6. நாகர் விளக்கு
7. நிலை விளக்கு
8. சிலை விளக்கு
9. கம்பி விளக்கு
10. காய் விளக்கு
11. தண்டு விளக்கு
12. குருவி விளக்கு
13. அகல் விளக்கு
14. கிளை விளக்கு
15. புருஷாமிருக விளக்கு
16. ஓதிமக் கிளை விளக்கு
17. முக்கிளை விளக்கு
18. காமாட்சி விளக்கு
19. மணி விளக்கு
20. மாயோன் விளக்கு
21. ஏழு தலை நாக விளக்கு
22. காம தேனு விளக்கு
23. சரோருக விளக்கு
24. மங்கல விளக்கு
25. பத்மாசன முருகன் விளக்கு
26. பதும விளக்கு
27. கஜலட்சுமி விளக்கு
28. சந்நிதி விளக்கு
29. கின்னரி விளக்கு

30. கிண்கினி விளக்கு
31. கன்னி விளக்கு
32. காமன் விளக்கு
33. மூன்று கிளை விளக்கு
34. திருமண (கிளை விளக்கு)
35. தாரா (கிளை விளக்கு)
36. ஈழச்சியல் (கிளை விளக்கு)
37. மலையாண்சியல் (கிளை விளக்கு)
38. அரை தலை (கிளை விளக்கு)
39. சோழியச்சியல் (கிளை விளக்கு)
40. ஆரக்குட (கிளை விளக்கு)
41. அனந்தலை (கிளை விளக்கு)
42. எரிக்கக்கட விளக்கு
43. பகா வோர் விளக்கு
44. கைவினை விளக்கு
45. ஊழ்உறு விளக்கு
46. குடக்கால் விளக்கு
47. கடைக்கெழு விளக்கு
48. மீன் திமில் விளக்கு
49. ஒழியா விளக்கு
50. காவலர் விளக்கு
51. மாண் விளக்கு

## III. தூக்கு விளக்கு

1. வாடா விளக்கு
2. ஓதிமத் தூக்கு விளக்கு
3. தூண்டாமணி விளக்கு
4. ஓதிம நந்தா விளக்கு
5. கூண்டு விளக்கு
6. புறா விளக்கு
7. நந்தா (நுந்தா) விளக்கு
8. ஈச்சோப்பிக்கைத் தூக்கு விளக்கு
9. சங்கிலி தூக்கு விளக்கு
10. கிளித் தூக்கு விளக்கு

## IV. கோவில் விளக்கு

1. சர விளக்கு
2. நிலை விளக்கு

## V கைவிளக்கு

1. கஜலட்சுமி கை விளக்கு
2. திருமால் கை விளக்கு
3. தாமரைக் கை விளக்கு
4. சிலுவைக் கை விளக்கு
5. சம்மனசுக் கை விளக்கு
6. முஸ்லீம் கை விளக்கு
7. கணபதி கை விளக்கு
8. சைவக் கை விளக்கு

### அ. நவ கண தீபம்

## VI. பூஜா விளக்குகள்

1. சர்வராட்சத தீபம்
2. சபூத தீபம்
3. பிசாஜ தீபம்
4. கின்னர (அலி) தீபம்
5. கிம் புருஷ தீபம்
6. கண நாயக தீபம்
7. வித்யாதர தீபம்
8. கந்தர்வ தீபம்
9. பிதரஹ் தீபம்

### ஆ. திக் பாலகர் தீபம்

1. ஈசான தீபம்
2. இந்திர தீபம்
3. வருண தீபம்
4. யம தீபம்

மேற்குறித்த விளக்குகளில் ஒவ்வொன்றும் பற்பல விதமான சிற்பச் சிறப்புகள் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக அன்னம் வைத்த குத்துவிளக்கில் நூற்றுக்கணக்கான விளக்குகள் உண்டு. இவைகளிலே ஒவ்வொரு மாவட்டச் சிற்பிகளும் ஒவ்வொரு பாணிகளைக் கையாள்வதால் ஆயிரக்கணக்கான

விதத்தில் விளக்குகள் காணப்படுகின்றன. இஃதன்றிச் சோடச உபசார விளக்குகள் என்றும், அஷ்டகஜ தீபங்கள் என்றும், அஷ்டகன்னித் தீபங்கள் என்றும், திக்குப்பாலகர்கள் தீபமென்றும், நவகண தீபங்கள் என்றும், சப்தமாதர் தீபங்கள் என்றும் எண்ணற்ற பூசா தீபங்கள் உண்டு. எடுத்துக்காட்டாகச் சிலவற்றை இங்கு தருகின்றோம்.

### இ. சோடச விளக்குகள்

1. தூபம்
2. தீபம்
3. புஷ்ப தீபம் (பூ விளக்கு)
4. நாக தீபம் (பாம்பு விளக்கு)
5. புருஷமிருக தீபம் (மனித மிருக விளக்கு)
6. கஜ தீபம் (யானைவிளக்கு)
7. ருயாஜத தீபம் (குதிரை விளக்கு)
8. வியாக்ர தீபம் (புலி விளக்கு)
9. ஹம்சதீபம் (அன்ன விளக்கு)
10. கும்ப தீபம் (குட விளக்கு)
11. குக்குட தீபம் (கோழி விளக்கு)
12. விருஷ தீபம் (மாட்டு விளக்கு)
13. கூர்ம தீபம் (ஆமை விளக்கு)
14. நட்சத்திர தீபம் (வெள்ளி விளக்கு)
15. மேரு தீபம் (மலை விளக்கு)
16. கற்பூர தீபம் (சூட விளக்கு)

### ஈ. இதர தியான தீபங்கள்

1. ஏகமுக தீபம்
2. அன்ன தீபம்
3. கிளி தீபம்
4. கமல தீபம்
5. பிரம தீபம்
6. சட்கோண தீபம்
7. முக்கோண தீபம்
8. நாற்பத்து முக்கோண தீபம்
9. கண்ணாடித்தீபம்(சாயா விளக்கு)
10. அஷ்டோத்திர (108)
11. சகஸ்திர அலங்கார (1000) தீபம்
12. சக்தி தீபம்
13. பஞ்சோபசாரம் தீபம்
14. சப்தமுக தீபம்
15. ஏகபாத தீபம்
16. துவிபாத தீபம்
17. திரிபாத தீபம்
18. சதுர்பாத தீபம்
19. பஞ்சபாத தீபம்
20. சட்பாத தீபம்
21. சப்தபாத (ஊ) தீபம்
22. அஷ்டபாத தீபம்
23. நவபாத தீபம்
24. சதபாத தீபம்
25. நீராஞ்சனபாத தீபம்
26. நந்தா தீபம்
27. சங்கிலித் தீபம்
28. சர தீபம்
29. கற்பூர தீபம்
30. கைச்சட்டித் தீபம்
31. இந்திர விமானப் பூங்கோவில் தீபம்
32. வால் தீபம்
33. யட்ச தீபம்
34. சித்திர தீபம்
35. மானுஷ தீபம்
36. முனையட்ச தீபம்
37. மயூர தீபம்
38. பஞ்சராத்திரா தீபம்

### உ. அஷ்டகஜ தீபம்

1. ஐராவத தீபம்
2. புண்டரீக தீபம்
3. குமுத தீபம்
4. ஜன தீபம்
5. புஷ்பதந்த தீபம்
6. சர்வபௌம தீபம்

7. சுப்ர தீபம்
8. பித்ர தீபம்

**ஊ. அஷ்டகன்னித் தீபம்**

1. இந்திராணித் தீபம்
2. சுவாகாதேவித் தீபம்
3. சாமளதேவி தீபம்
4. துர்க்கா தீபம்
5. காளி தீபம்
6. அஞ்சனா தேவி தீபம்
7. சித்ரலேகா தீபம்
8. பார்பதித் தீபம்

**எ. சப்தமாதர் தீபம்**

1. பிரமஹி தீபம்
2. மகேஸ்வரித் தீபம்
3. கௌமாலித் தீபம்
4. வைணவித் தீபம்
5. வராகித் தீபம்
6. மகேந்திரத் தீபம்
7. சாமுண்டித் தீபம்

இது போன்ற பல்வேறு தீபங்கள் உண்டு. இவைகள் அனைத்தையும் இங்கு எடுத்துக் காட்டுவது எளிதன்று.

**விளக்கு நேர்ச்சை**

தங்களுக்குற்ற நோய் நீங்கினாலோ, வியாபாரத்தில் ஏற்பட்ட நஷ்டம் நீங்கி லாபம் ஏற்பட்டாலோ, தங்கள் மக்களுக்கு விரும்பிய இடத்தில் திருமணம் நிறைவேறினாலோ தெய்வங்களுக்குத் திரு விளக்கு வாங்கி வைப்பதாக மக்கள் நேர்ச்சை செய்து கொள்கின் றனர். அந்த நேர்ச்சை செய்து கொள்ளும் தெய்வம் முருகனானால் குக்குட விளக்கும் மயில் விளக்கும், நாராயணன் ஆனால் அன்ன விளக்கும், கஜலட்சுமி விளக்கும், சிவபெருமானானால் கிள்ளை விளக்கும் காமாட்சி விளக்கும், சரஸ்வதியானால் சரோருக விளக்கு மாக எந்தெந்தத் தெய்வத்திற்கு எந்தெந்த விளக்குப் பிரியம் என்று சிற்பிகளிடம் கேட்டுத் தெரிந்து அவர்கள் சொல்லுகிற விளக்கு களைச் செய்து குறிப்பிட்ட நாளில் கொட்டு முழக்கோடு கோயில் களுக்குப் போய் விளக்கை ஏற்றி வழிபட்டு விளக்கைக் காணிக்கை யாக செலுத்தி வருவார்கள். சில நோய்கள் நீங்கக் கோயிலுக்கு வந்து மாவிளக்குப் பார்க்கிறேன் என்று நேர்ச்சை செய்து கொள்வதும் உண்டு. குறிப்பிட்ட நாளில் கோயிலுக்குப் போய் நோயாளியைப் படுக்க வைத்து அவர்கள் வயிற்றில் அரிசிமாவினால் செய்த விளக்கை வைத்து அதற்கு நெய் வார்த்து எரித்து அப்பால் சுவாமியை வணங்கி வருவதுமுண்டு. இதற்கு மாவிளக்குப் பார்த்தல் என்பார்கள்.

வீடுகளில் பெரும்பாலும் இந்த உருவங்கள் இல்லாத அகல் விளக்கு, தூக்கு விளக்கு, தூண்டா மணி விளக்கு, காய் விளக்கு, சந்திரஹாரக் குத்து விளக்குப் போன்றவற்றையே உபயோகிக்கிறார் கள். கைவிளக்குகளில் கஜலட்சுமி, விஷ்ணு போன்ற உருவங்கள் பொறித்த விளக்குகளை உபயோகித்து வந்ததாகப் பல வயது முதிர்ந்த பெண்கள் கூறுகின்றார்கள்.

இன்று பெரும்பாலும் சிறு கிராமங்களில் கூடக் கைவிளக்கு களைக் காண முடியாது. கைவிளக்குகளின் இடத்தை மண் ணெண்ணெய் விளக்குகள் பிடித்துக் கொண்டன.

தீபலட்சுமி விளக்குகள் வீடுகளில் உபயோகிப்பதே இல்லை. மன்னர்களின் மனைவி, மக்கள் சகோதரிகள் போன்ற பெண்களும் பெரிய பணக்காரர் வீட்டுப் பெண்களும் தங்களின் உருவங்களைப் போல் பாவை விளக்குகளைச் செய்து தெய்வங்களின் அருகே எப்பொழுதும் விளக்கேந்திக் கொண்டு நிற்கும் புண்ணியத்தைப் பெறுவதற்காகச் செய்து அதற்கென்று நிலங்களும் மாடுகளும் மானியமாக அளித்து நெய்விளக்கு இடுமாறு செய்துள்ளார்கள்.

திருவிளக்குகள் இப்பொழுது அதிகமாக விற்பனையாவ தில்லை. மின்சார விளக்குகள் வந்தபின் திருவிளக்குகள் செய்வது குறைந்துவிட்டது.

இப்பொழுது கன்னியாகுமரி மாவட்டத்திலும், நெல்லை மாவட்டத்திலுமுள்ள ஏரல், வாகைக்குளம் முதலிய ஊர்களிலும் மதுரை மாவட்டத்திலுள்ள மதுரை, இராமநாதபுரம் மாவட்டத்தி லுள்ள சிரிவில்லிப்புத்தூர் முதலிய இடங்களிலும் தஞ்சை மாவட்டத்திலுள்ள தஞ்சை, கும்பகோணம், சுவாமிமலை போன்ற இடங்களிலும் ஓரளவு திருவிளக்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

இப்பொழுது தூக்கு விளக்குகள், கைவிளக்குகள், தீபலட்சுமி விளக்குகள் செய்வது அறவே நின்று விட்டது.

குத்து விளக்குகள், கம்பி விளக்குகள், காய்விளக்குகள் போன்ற வைகளே செய்யப்பட்டு வருகின்றன. கார்த்திகை விளக்குகளும் அகல் விளக்குகளும் செய்யப்படுகின்றன. பணம் படைத்தவர்கள் வெள்ளியிலும் எவர் சில்வரிலும் குத்து விளக்குகளைச் செய்து உபயோகித்து வருகின்றார்கள்.

திருவிளக்குகள் வடஇந்தியாவிலும், கேரளத்திலும், சாவகத் திலும், இலங்கையிலும், நேப்பாளத்திலும் செய்யப்பட்டு வரு கின்றன. என்றாலும் அவைகள் தமிழ்நாட்டு விளக்குகளுக்கு ஈடாக இருக்கின்றன என்று எவரும் கூறமுடியாது.

தமிழ்நாட்டுச் சிற்பிகளின் சிற்பத் திறமை மிகச் சிறப்பு வாய்ந்தது; மிக அற்புதமானது; அணிபெறத் திகழ்வது.

தமிழ்நாட்டுத் திருவிளக்குகளின் அமைப்பும், அழகும் பொலிவும், சிற்ப நுட்பமும் தொன்றுதொட்டு இத்தொழிலில் ஈடுபட்டுவரும் சிற்ப மேதைகளின் அறிவிற்கும் ஆற்றலுக்கும் ஏற்ற எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

விளக்கு ஆராய்ச்சியில் ஈடுபட்ட வங்கவாசி ஒருவர் ‘வட இந்திய விளக்குகள் அமைப்பிலும் மினுமினுப்பிலும் மிக நேர்த்தி யானவை;

எனினும் தென் இந்தியாவிலுள்ள கணக்கற்ற - அபூர்வ மான தினுசுகளைப் போல் வடஇந்தியாவில் இல்லை'யென்று கூறியுள்ளார்.

நான் அறிந்த மட்டில் வட இந்திய விளக்குகள் அத்தகைய சிறப்புகள் எதுவும் உடையதன்று. நமது நாட்டிலுள்ள சிலருக்கு வட இந்திய மோகம் அதிகம் தலைக்கு ஏறியிருக்கிறது. அதனால் அவர்கள் வட இந்தியாவின் சிறப்பைக் கூறக்கூடாது என்று சொல்ல வில்லை. குறைகளையும் கூச்சமில்லாது கூறவேண்டும் என்பதே எனது எண்ணம். இவர்களுக்குத் தமிழ்நாட்டின் சிறப்பைக் கூறுவ தற்கு மனம் கூசுகிறது. அவசியம் ஏற்படும்பொழுது தமிழ்நாடு என்று கூறாமல் தென்னாடு என்று கூறி வருகின்றனர்.

தமிழ்நாட்டு விளக்கிற்கு வட இந்திய விளக்குகள் ஈடாக மாட்டா என்று சொல்வதற்குப் பதிலாகத் தென் இந்திய விளக்கு சிறப்புடையதுதான்; ஆனால் வட இந்திய விளக்கு மிகுந்த மினு மினுப்பாக இருக்கும் என்று கூறுவார்கள்.

இஃது இக் கூட்டத்தாரின் நாட்டுப்பற்றுக் குறைவை நன்கு எடுத்துக்காட்ட நல்ல சான்றாக இருக்கிறது.


ஆனால் இந்தியச் சிற்ப விற்பன்னர்களில் ஒருவரும் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக 'ரூபம்' என்ற சிறந்த சிற்ப வெளி யீட்டை வெளியிட்டு வருபவரும் வங்கம் தந்த கலை நிபுணரும், விளக்கு ஆராய்ச்சியில் தலைசிறந்த மேதையுமான ஓ.சி. கங்குலி, இங்கிலாந்திலுள்ள ஓர் ஆங்கில வெளியீட்டில் 'தென் இந்திய விளக்குகளில் காணும் சிற்ப நுட்பம் எதையும் வட இந்தியாவிலோ உலகில் எப்பகுதியிலுமோ காண்பது அரிது' என்று புகழ்மாலை சூட்டியுள்ளார்.


மேலும் "தென் இந்தியாவில் - ஏன் - தமிழ் நாட்டில் காணப்படும் ஆயிரக்கணக்கான விளக்குகளின் தினுசுகளையும் அவைகளின் அமைப்பையும் மெருகையும் மினுமினுப்பையும் அதன் இலக்கணத்தையும் வட இந்தியச் சிற்ப மேதைகள் கூடக் கண்டும் கேட்டும் இருக்க முடியாது" என்று எமது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய நண்பரும் இலங்கைத் தொல்பொருள் ஆராய்ச்சி உதவிக் கமிஷனராய் இருந்தவருமான காலஞ்சென்ற மேதை திரு.சு. சண்முகநாதன் அவர்கள் கூறியுள்ளார்கள்.

உலகிலுள்ள எந்த நாட்டின் விளக்கையும்விடத் தமிழ்நாட்டு விளக்குத் தனிச் சிறப்புடையது; அதன் அழகு அற்புதமானது. தமிழர்கண்ட விளக்குகள் தனியழகு வாய்ந்தவைகளாகும்.

தமிழ்நாட்டு விளக்குகள் பல்வேறு சிறப்புகளும் ஒருங்கே அமைந்தவையாய்க் காண்பதற்கு முக்கிய காரணம் திருவிளக்கைக் கோயில்களோடு - ஏன் - சமயத்தோடு சம்பந்தப்படுத்தியதேயாகும்.


**பஞ்ச உபசாரங்களும் இதர உபசாரங்களும்**






11 மலர்த்தட்டு
(அடுக்கு தீபம்)

7 மலர்த்தட்டு






மயில்தீபம்
(மயூர தீபம்)



யானைத்தீபம்
(கஜ தீபம்)



ஏக தீபம்
(ஏக தீபம்)

## சோடச உபசாரம்



ரிஷப தீபம்



மேருதீபம்
(பர்வத தீபம்)



நட்சத்திர தீபம்



தீபம்



நாக தீபம்
(சர்ப்ப தீபம்)



புருஷ தீபம்



கோழித் தீபம்
(குக்குட தீபம்)




சிம்மத் தீபம்



அசுவனித் தீபம்

## சோடச உபசாரம்




தமிழர்கள் வாழ்க்கையிலே விளக்கிற்கு ஒரு தனிப் பெருமை அளிப்பவர்கள். மனைவியைக் கௌரவமாக இல்லாள், குடும்ப விளக்கு என்றெல்லாம் கூறுவர். மேலும் விளக்கைத் திருவிளக்கு என்றும் விளக்கு நச்சியார் என்றும் தீபலட்சுமி என்றும் அழைப்ப தோடு இறைவன் சோதி வடிவமாக இருப்பவன் என்றும் கருதினர்.

தமிழர்களின் வீட்டில் விளக்கு வைப்பதற்கென்றே ஒரு தனி யிடம் உண்டு. அதனை விளக்கு மாடம் என்று கூறுவர்.

பண்பு வாய்ந்த தமிழர்களின் ஒவ்வொரு வீட்டிலும் மாலை யில் வீட்டைத் துப்புரவு செய்து தெரு, வாசல், முற்றம் முதலிய இடங் களில் தண்ணீர் தெளித்துக் கோலம் போட்டு விளக்குப் பூசை செய் வார்கள்.

வெள்ளிக்கிழமையிலும் வேற விசேஷ தினங்களிலும் சிறப் பான விளக்குப் பூசை நடைபெறும். ஒவ்வொரு நாளும் தாமும் தம் மக்களும் மாலையில் முகம், கை கால் முதலிய அவயவங்களை

நீரினால் கழுவிச் சுத்தம் செய்து, திருநீரணிந்து விளக்குப் பூசை செய்வார்கள்.

விளக்கு உமி, சாம்பல் முதலிய பொருள்களால் சுத்தம் செய்யப் பட்டுப் பொன்னெனப் பொலியுமாறு விளக்கை ஒரு உயர்ந்த பீடத்தின் மீது வைத்துப் பொட்டிட்டுப் பூவிட்டுத் தூபதீபம் காட்டித் தேவாரம், திருவாசகம், திருவாய் மொழி முதலிய பக்திப் பாடல்களைப் பாடி வழிபட்டுத் தம் மக்களை விளக்குப் பாடம் படிக்கச் செய்வர்.

மேலும் தமிழக மக்கள் தாய்நாட்டில் மட்டுமல்ல, அவர்கள் எங்கெங்கு போய் வாழ்ந்தாலும் வீடு கட்டினும் மணம் புரியினும் வணிகம் ஆரம்பிப்பினும் கல்வி பயிலினும் கழகங்கள் தோற்றுவிப்பி னும் முதலாவது விளக்கேற்றி வைப்பதே அவர்கள் செய்யும் முதற் சடங்கு; முக்கிய சடங்கு.

ஒரு குடித்தனம் ஆரம்பிப்பிதை ‘வீடும் விளக்கு மாக்கி வைத்தல்’ என்றே கூறுவர்.

இலங்கையில் சிங்களவர்கள் கூட விளக்கேற்றி வைத்து புதுக் கடைக்கும் புதுவீட்டிற்கும் ஆரம்பவிழா நடத்துகின்றனர். பண்டு தொட்டு, விளக்கின் முன் வைத்துத் தாலி கட்டும் வழக்கம் பல ஏழை, எளிய மக்களிடம் இருந்து வந்தது. இன்று புரோகித மில்லாது திருமணம் நடத்தும் பணக்காரர்கள்கூட விளக்கின் முன் வைத்துத் தாலிகட்டிச் சீர்திருத்த மணம் நடத்துகின்றனர்.

**விளக்கீடு மணம்**

பழந்தமிழ் மக்கள் என்று பறை சாற்றும் கார் காத்த வேளாளர்கள் பெண் குழந்தைகளின் பிள்ளைப் பருவத்திலே திருவிளக்கை நாயகனாக வரித்துப் பெண் கழுத்தில் தாலியைக் கட்டி விடுகின்றார்கள். இதற்கு விளக்கீடு மணம் என்று கூறுவார்கள். அப்பால் அவர்கள் பருவம் எய்தியபின் நடக்கும் திருமணத்தில் கணவன் முன்னர் விளக்கீடு மணத்தில் கட்டப்பட்ட தாலியையே புதுக் கயிற்றில் கட்டிப் பெண்ணின் கழுத்தில் மீண்டும் கட்டுகிறான். இதனைத் திருப்பூட்டு நடைபெற்றது என்று மக்கள் கூறுவர்.

திருவிளக்கைத் திருவளிக்கும் ‘சீதேவி’ என்றும், இருளை, வாழ்வழிக்கும் ‘மூதேவி’ என்றும் கருதித் தமிழர்கள் தங்கள் இல்லங் களில் நல்ல ஒளி விளங்கும்படி தீபம் இடுவர். இரவில் வீடுகளில் உள்ள வழிபடும் தெய்வ உருவங்களின் முன்னோ தெய்வப் படங் களின் பக்கத்திலோ இரவும் பகலும் ஒளிவிட்டோங்கும் வாடா விளக்கை எரியச் செய்வர்.

இருட்டில் நல்ல காரியம் எதுவும் செய்யக் கூடாது என்பது தமிழ் மக்களிடையே பண்டுதொட்டு இன்று வரை இருந்து வரும்

ஐதீகமாகும். விளக்கின்றி இருட்டில் உணவு கொள்வது கீழ்மக்கள் செயல் என்று கருதுவர். இருட்டில் உணவு உட்கொண்டால், பக்கத்தில் பல பேய்கள் வந்து இருந்து கொண்டு உணவின் பெரும் பகுதியை நாம் அறியாமலே புசித்துக் கொண்டு போய் விடும் என்பது பாட்டிமார்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.

திருவிளக்கு இறைவனின் தோற்றமாகவும் தெய்வத்தன்மையை விளக்கும் ஒரு சீரிய எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறது.

மங்காத மணிவிளக்கு மங்களத்தின் மாண்புமிக்க சின்னம். நற்குறியின் நல்ல அடையாளம் என்பது மக்களது எண்ணம்.

திருவிளக்கு கார் இருளை அகற்றி இன்பகரமான ஒளியைத் தருகிறது. அது இறைவனாகிய அருட்பெருஞ் சோதி, உலகில் நிறைந் துள்ள அஞ்ஞானமாகிய இருட் புகையை அகற்றி மெஞ்ஞானத்தை உணர்த்தும் ஒப்பற்ற உயரிய தத்துவ நுட்பத்தை நமக்குத் தெள்ளி தின் புலப்படுத்தும் அருட்சோதி என்று மக்கள் காண்கின்றனர்.

விளக்கில்லாத வீட்டையும் தெரு விளக்கில்லாத ஊரையும் நாம் பார்க்கும் பொழுதுதான் விளக்கின் மகிமை தோன்றுகிறது. விளக்கில்லாத வீடுகளில் சிறு குழந்தைகள் பேய், பிசாசு முதலிய பூதங்கள் நிற்பதாகக் கூறி அஞ்சி வெருண்டு நிற்பதும் விளக்கைக் கண்டதும் அவைகளெல்லாம் ஓடிப் பதுங்கி விட்டது என்று எண்ணிக் கைகொட்டி ஆரவாரித்து நிற்பதும் எங்கும் காணக் கிடக்கும் உண்மை.

இஃதன்றி இருட்டில் மூட்டைப் பூச்சியிலிருந்து தேள், பாம்பு, எலி முதலிய பிராணிகள் வரை எல்லாம் எங்கும் தாராளமாக நடமாடுவதும் மக்களுக்குத் தாராளமாகத் துன்பம் விளைவித்து வருவதும் வெளிச்சத்தைக் கண்டால் ஓடிப்பதுங்கிக் கொள்வதும் நாம் நிதர்சனமாகக் காணும் உண்மை ஒளியின் உயர்வு.

பண்டைத் தமிழ்மக்கள் கான்யாற்றிற் குளித்தும் கதிரவன் ஒளியில் மூழ்கியும் இன்பம் துய்த்தனர். 'உடலை வளர்த்தனர்; உயிரை ஓம்பினர்' என்று பேரறிஞர் திரு.வி.க. அவர்கள் அடிக்கடிக் கூறுவ துண்டு. அதனை எம் இளமையிற் கேட்டு எள்ளி நகையாடியதுண்டு. ஆனால் 1953ஆம் ஆண்டு இலங்கையில் சூரிய கிரகணம் நன்கு தெரியும் என்று உலகிலுள்ள எல்லா விஞ்ஞானிகளும் கூறினர். பத்திரிக்கைகளில் சூரிய கிரகணத்தைப் பற்றிப் பல விஞ்ஞான நிபுணர்கள் கட்டுரை எழுதியுள்ளனர். அதில் ஒரு கட்டுரையில் ஓர் ஆங்கில விஞ்ஞான நிபுணர் அடியில் வருமாறு எழுதியிருந்தார்.

"சூரியனுடைய ஒளி மனித உடம்பில் எப்பொழுதும் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ பட வேண்டியது இன்றியமை யாதது. மனிதனை உயிரோடு வைக்கப் பிராண வாயு எவ்வளவு இன்றியமையாததோ அவ்வளவு இன்றியமையாதது சூரிய ஒளியும்.

சூரியகிரகணத்தின் போது சூரிய ஒளி நமது உடம்பில் பட முடியா மல் இருப்பதால் மக்கள் மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஒரு சிறு எறும்போ, தேளோ, மூட்டையோ கடித்து விடாமல் கவன மாக இருக்கவேண்டும். அற்ப விஷம் கூட மனித உயிரைக் குடிக்கப் போதுமானதாகும். சாதாரணமான காலத்தில் இவை கடிக்கும் பொழுது அவ்விஷம் மனித உடம்பில் பரவி உயிருக்கு ஊறு விளை விக்காமல் இருக்கச் சூரிய ஒளி அதனைத் தடுத்து நிறுத்துகிறது" என்று விரிவாக எழுதியிருந்தார்.

அப்பொழுதுதான் சூரிய ஒளியின் பெருமையை உணர்ந்தேன். சூரிய ஒளியைக் காணமுடியாத மேனாட்டார் 'சூரியஸ்நானம்' என்ற பெயரால் விளக்கின் ஒளி உடம்பில் படுவதால் உடம்பு உரம் பெறுகிறது; உடம்பில் அழகு பொலிகிறது; உள்ளம் மலர்கிறது என்று ஐரோப்பாவில் பல இயற்கைக் கழகமும் ஞாயிற்றுக் குளிப்புக் கழகமும் கண்டிருப்பதை உணர்ந்தேன்.

நமது பேரறிஞர் திரு.வி.க. அவர்கள் மூலம், சூரிய ஒளியில் மூழ்கிப் பண்டைத் தமிழர் வகுத்த உடல் ஓம்பல் முறையின் தத்துவத்தை நன்குணர்ந்தேன்.

ஞாயிற்று ஒளியில் மூழ்குவதும் திருவிளக்கைப் போற்றுவதும் ஒன்றோடொன்று மிக நெருங்கிய தொடர்புடைய செயலென்று காண்கிறேன். விளக்கின் சிறப்பு விரிக்கின் பெருகும்.

# கோயில் குத்து விளக்குகள்

*தமிழ்நாட்டு விளக்குகளை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று கோயில் விளக்குகள்; மற்றொன்று வீட்டு விளக்குகள்.*

*கோயில் விளக்குகளிலும் பல வகைகள் உண்டு. அதாவது வெளிச்சம் கொடுப்பதற்கு என்றும், பூசை செய்வதற்கென்றும் இரு விதமாகக் காணப்படுகின்றன.*

*வெளிச்சம் தருபவைகள் : குத்து விளக்குகள், பாவை விளக்குகள், நிலை விளக்குகள், சரவிளக்குகள், தீவர்த்திகள், வால் விளக்குகள், நந்தா விளக்குகள் போன்றவைகளாகும்.*

*பூசை விளக்குகள் என்ற மற்ற வகை விளக்குகளிலும் சில பிரிவுகள் உண்டு. அவை சோடச உபசார விளக்குகள், பஞ்ச உபசார விளக்குகள், திக்குப் பாலர் தீபங்கள், நவகண தீபங்கள், அஷ்ட கன்னித் தீபங்கள், அஷ்டநாக தீபங்கள், அஷ்டகஜ தீபங்கள், சப்த மாதர் தீபங்கள், தியான தீபங்கள் என்று பலவகைப்படும். அவை களின் விவரம் முந்திய அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளன.*

*நிற்க, கோயில் விளக்குகளில் கருவறை வாயிலின் மேலும் இருமருங்கினும் ஒன்றின்மேல் ஒன்றாகப் பல அடுக்கு விளக்குகளும் அதைப்போன்று சில தொங்கு விளக்குகளும் ஒரே கம்பியில் இணைக்கப்பட்டிருக்கும். இதைச் சரவிளக்கென்றும் நிலைவிளக் கென்றும் கூறுவார்கள். இவ்விளக்கு வெளிச்சத்திற்கும், அழகிற்கு மாக உபயோகப்படுத்தப்படுகின்றன.*

*இரவில் கருவறையின் வாயிலில் அணியணியாய் இவ் விளக்குகள் விண்மீன்களைப் போல் ஒளிர்வது தூரத்திலிருந்து சுவாமிதரிசனம் செய்பவர்களின் உள்ளத்தை மிகவும் கவர்வதாக இருக்கும். கருவறையின் மூலப் படிமங்களின் அண்மையில் குத்து விளக்குகள் வெளிச்சத்திற்காக உபயோகப்படுத்தப்படுகின்றன.*

*பூசை நேரங்களில் கருவறையின் உள்ளே படிவங்களின் அருகே நின்றுகொண்டு அர்ச்சகர்கள் தூப தீபங்களாலும் கர்ப்பூர தீபங்க ளாலும் அஷ்டோத்திர (108) தீபம், சகஸ்திர (1008) அலங்கார தீபம் முதலியவைகளாலும் பூசை செய்வது அதிக வெளிச்சமில்லாத கருவறையில் இருக்கும் மூர்த்தியைக் காட்டி மறைப்பது பக்தர்களின் உள்ளத்தைக் கவர்வதோடு பல அரிய தத்துவப் பொருளையெல்லாம்*

எளிதில் விளக்கிக் காட்டுவதாகவும் இருக்கிறது என்று கூறப்படு கிறது.

கருவறையின் பக்கத்தில் பாவைவிளக்கு எழிலொழுகக் கையில் அகல்விளக்கு ஏந்திக் கொண்டு சிற்பச் சிறப்புடன் நிற்பது கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

தெய்வ உருவங்களின் பக்கத்தில் இரவும் பகலும் மங்காத நந்தா விளக்குகளும் மற்றும் மண்டபங்களிலும், பிரகாரங்களிலும் குத்துவிளக்குகளும், தூக்கு விளக்குகளும் வெளிச்சம் தருபவையாய் இருக்கும். கைவிளக்குகள், வால்விளக்குகள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எளிதில் கொண்டு போகவும், தீவர்த்தி விளக்குகள் ஊர்வலத்திற்கும் பயன்படுகின்றன.

## குத்து விளக்கு

குத்துவிளக்கின் உச்சியில் அன்னம், மயில், கிளி, கருடன், புகுஷாமிருகம், கோழி, சர்ப்பம் போன்ற உருவங்கள் வைத்துச் செய்யப்பட்டிருக்கின்றன. சாதாரண குத்துவிளக்கைவிட இத்தகைய உருவங்கள் வைத்துச் செய்யப்பட்ட குத்துவிளக்கே விசேஷமானது.

அன்னம் வைத்து செய்யப்பட்ட குத்துவிளக்கு குறிப்பாக இலட்சுமிக்கு உவப்பானது என்று கூறுகிறார்கள். என்றாலும் எல்லா சுவாமிகளும் அன்ன விளக்கை விரும்புவதாகப் பக்தர்கள் அதைச் செய்து கோயில்களுக்கு நேர்ச்சை செய்து கொண்டு தாங்கள் எண்ணிய கருமம் முடிந்ததும் மேளதாளங்களுடன் கோயிலுக்குக் கொண்டு போய்ச் சேர்க்கின்றனர்.


மயில் விளக்கும் கோழி விளக்கும் முருகனுக்கும் கருடன் விளக்குத் திருமாலுக்கும் சர்ப்ப விளக்கு சிவனுக்கும் உகந்தவை என்று கருதி அவ்வாறே மக்கள் அர்ப்பணித்து வருகின்றனர்.

அன்னமும் மயிலும் பெற்றிருக்கும் தெய்வ சம்பந்தம் கிளிக்கு இல்லை என்றாலும் கிளி காதல் தெய்வமாகிய காமனுக்கு விருப்ப மானதாகும். அவனது வாகனம் கிளியேயாகும். இலக்கிய கர்த்தாக்கள் கிளிக்கு அதிகம் முக்கியத்துவம் அளித்துள்ளார்கள்.

முற்காலத்தில் தமிழ்நாட்டுப் பெண்கள் தங்கள் வீடுகளில் அதிக ஆர்வத்தோடு கிளி வளர்த்து வந்தார்கள். அதற்குப் பாலும் பழமும் கொடுத்துப் பேசப் பழக்குவார்கள்.

தீபலட்சுமி விளக்கில் முதுகின்மீது அவள் தோளில் ஒரு கிளி உட்கார்ந்திருப்பதுபோல் செய்யப்பட்டிருப்பது ஒன்றே கிளியின் சிறப்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். என்றாலும் தமிழ்நாட்டில் காமனுக்கு என்று தனிக் கோயில் எதுவும் இல்லாததால் இந்தக் கிள்ளை விளக்குகள் அதிக முக்கியத்துவம் பெறவில்லை. இவ்விளக் குகள் ஓரோர் இடங்களில் வீடுகளிலும் காணப்படுகின்றன. (படம் 16ஐப் பார்க்க)

இதே போன்று புருஷாமிருக விளக்கும் எல்லாக் கோயிலிலும் இடம் பெறத்தக்கதாகக் காணப்படுகிறது. புருஷா மிருக வடிவம் உச்சியில் வைத்துச் செய்யப்பட்டிருப்பது போலன்றி அடியில் பாதத்தின் மேல் புருஷா மிருகம் நிற்பதுபோலவும் அதன் முதுகின் மீது குத்து விளக்கு நிற்பதுபோலவும் காணப்படுகிற விளக்குகளும் உண்டு. (அசிரியக் கடவுள்பால் இவ்வுருவத்தில் உள.)



படம் 11.அன்ன விளக்கு

## அன்ன விளக்கு

விளக்கின் நுனியில் உருவம் பொறிக்கப்பட்டிருக்கும். விளக்கு வகையில் சிறப்பானது அன்ன விளக்கேயாகும். இந்த விளக்கைப் புலவர்கள் ஓதிம விளக்கு என்று கூறுவார்கள். அன்ன விளக்கு ஏனைய குத்து விளக்குப் போல் இருந்தாலும் அதன் கொண்டையில் அன்னம் அழகாக அமர்ந்திருக்கும். அதன் வாயில் ஒரு சிறு கொம்பு இருக்கும். (படம் 11 - 12 பார்க்க)

குத்து விளக்கில் மட்டுமல்ல, தூக்கு விளக்கிலும் அன்னம் வைப்பதுண்டு. அதன் இறக்கைகளின் நடுவே முதுகில் விளக்கைத் தூக்கத் தகுந்த சங்கிலி மாட்டியிருக்கும்.

முற்காலத்தில் யவன நாட்டினர் கொண்டுவந்த அன்னம் வைத்த விளக்கை 'யவன ரோதிம விளக்கு' என்று சங்க நூற்களில் ஒன்றான பெரும்பாணாற்றுப் படை குறிப்பிடுகின்றது. ஓதிமம் என்றால் அன்னம் என்று பொருள்படும். அன்னம் தமிழ்நாட்டுப் பறவையல்ல; வெளிநாடுகளிலிருந்து, அந்நாட்டுத் தட்ப வெப்ப நிலையைத் தாங்கொணாத காலத்தில் இந்நாட்டில் குடியேறிய பறவையாகும். என்றாலும் பழங்காலத் தமிழ் இலக்கியங்களில் எல்லாம் இது ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது. இதன் எழிலும் வெண்மையான தூய நிறமும் கவிஞர்களின் கண்களையும் கருத்தையும் கவர்ந்துள்ளன என்று எண்ணுகிறோம். தீபலட்சுமி விளக்கிற்கு அடுத்தபடியாய் அழகுற அமைந்திருப்பது அன்ன விளக்கே என்று அறிஞர்கள் அபிப்பிராயப்படுகின்றார்கள்.

## பாலஸ்தீனத்தின் திருவிளக்கு

கிறிஸ்துவின் காலத்திற்கு முன் இருந்த எகோவா எல் எல்லோஹீம் என்ற பெயர்களைத் தாங்கிய எபிரேயர் கடவுளின் சந்நிதியிலும், ஆரம்பகாலக் கிறிஸ்தவர்களின் கோயில்களிலும், வேதப் புத்தகத்தை வைத்து வாசிப்பதற்காக உபயோகப்படுத்தி வந்த கழுகு வடிவம் பொறித்த மேசையைப் போல் அன்ன விளக்குகளும் அணி அணியாய் அழகு பொலியத் திகழ்ந்தன என்பது பைபிளிலும் ஏனைய கிறிஸ்தவ வரலாற்று நூற்களிலும் காணக்கிடக்கின்றன.



படம் 12. அன்ன விளக்கு

படம் 13. அன்ன விளக்கு

வாசிப்பு மேசையின் மீது தீட்டப்பட்ட கழுகு வடிவத்தின் பொருள் யாதெனில், மண்ணுலகினின்று மன்றாடும் பக்தர்களின் பரிதாபக் குரலை விண்ணுலகில் வீற்றிருக்கும் இறைவனிடம் அறிவிக்கப் பறந்து செல்லும் தூதுவனாகக் கழுகு கருதப்பட்டது என்பதாகும்.

ஆனால் நாம் வைத்திருக்கும் அன்ன விளக்கு அத்தகைய அர்த்தத்தில் உபயோகப்படுத்தப் படவில்லை. என்றாலும் அன்னத்தின் சின்னம் தீட்டிய விளக்குத் தண்டு சமயக் குறியீடாகவே கருதப்படுகிறது.

விளக்குத் தண்டு விளக்கின் முக்கிய பகுதியாகும். விளக்குத் தண்டு இல்லாத விளக்குகளை சமய சம்பந்தமான சடங்குகளுக்கு உபயோகப்படுத்தமாட்டார்கள். விளக்கை ஒரு தண்டின் மீதோ தூணின் மீதோ தான் வைக்க வேண்டும்; அல்லது தொங்கவிட வேண்டும். அஃதன்றித் தரையின் மீது எக்காரணம் கொண்டும் வைக்கக்கூடாது என்பது தமிழ் மக்கள் நடைமுறையில் கொண்ட ஐதீகம்.

விளக்கைப் பூமியின் மீது வைத்தால் பூமாதேவி கோபங் கொள்வாள். பூமாதேவி எல்லாக் குற்றங்களையும் பொறுத்துக் கொள்வாள்; ஆனால், இரண்டு குற்றங்களை மட்டும் பொறுக்க மாட்டாள். அதாவது ஒன்று பயனற்ற வகையில், பூமாதேவியைக் கால்களைக் கொண்டு உதைத்தல், மற்றொன்று திருவிளக்கின் சூடு. யாதொரு பழுதும் இல்லாதவையும் அழகிய முறையில் செய்யப் பட்டவையுமான மண் விளக்குகளை நெய் வார்த்து நல்ல உருண்டை யான பஞ்சுத் திரிகளையிட்டு மரங்கள் அல்லது மரக் கம்பங்களின் மீதோ சாணி உருண்டையின் மீதோ வைப்பது பழங்காலச் சம்பிர தாயம்.


விளக்கின் உச்சியில் அன்னம் அழகுற விளங்க இன்னின்ன அம்சம் அமைய இன்னின்ன தாதுப் பொருள்களைக் கலந்து விளக்குகள் வார்க்கப்படவேண்டும் என்று சிற்ப விதிகள் உள்ளன. அன்னம் அந்நிய நாட்டுப் பறவையாயிருந்தும் அதன் எழிலும் ஏற்றமும் தமிழ்நாட்டுச் சிற்பிகளின் சிந்தனையைக் கவர்ந்துள்ளன. கலை நுட்பத்தைக் கசடறக் கற்றுணர்ந்த முற்காலச் சிற்பிகளின் கைத்திறனைப் பிரதிபலிக்கும் உன்னதமான சீரிய சிறப்பு இந்த விளக்குகளில் காணப்படுகின்றன.


அற்புதமான சிற்பக் கருவூலமாய்த் திகழும் அன்னத்தின் அழகிய வடிவம், அரசர்களின் அரண்மனையிலும், ஆண்டவன் ஆலயத்திலும், பொன், வெள்ளி, செப்பு முதலியவைகளால் செய்யப் படும் அணிகளிலும், மணிகளிலும் பண்ட பாத்திரங்களிலும் இடம் பெறும். பொற்றகட்டாற் செய்த தாம்பாளத்திலும், கற்படிகளிலும் அன்னம் மென்னடை போடுகிறது.


புதுமனை புகுவிழா என்றால் விளக்கேற்றுதலேயாகும். திருவிளக்குகள் சைவ, வைணவ, சமண, பௌத்தக் கோயில்களிலும் முதலிடம் பெற்றிருக்கின்றன.

பராக்கிரமபாகு என்னும் இலங்கைச் சிங்கள மன்னன் ஒரு புத்தக்கோயிலைக் கட்டி அதில் நடுநாயகமாகப் புத்தரின் புனிதத் தந்தத்தை ஒரு அழகிய பேழையில் வைத்துப் போற்றினான். அப் புனிதப் பேழையைச் சமைத்த சிற்பிகள் பேழையில் அன்னத்தைப் பொறித்து அழகுபடுத்தினர். (மகாவம்சம் - அத் 79)

புத்த சமயத்தார் புனிதநகரமாகப் புகழும் அனுராதபுரத்தில் அரிய சிற்பச் செல்வமாக விளங்கும் சந்திர வட்டக்கல்லில் அரை வட்டமாக ஒன்றின்பின் ஒன்றாய் அணி அணியாய் அணிவகுத்து நிற்பதுபோல் அன்னப் பறவைகள் அடுக்கடுக்காய் நிற்பது கண் கொள்ளாக் காட்சியாகும். உற்பத்தி கர்த்தாவாகிய பிரமனும் கலைக் கடவுளாகிய கலைமகளும் அன்னத்தை வாகனமாகக் கொண் டிருப்பது அன்னத்திற்கு ஏற்றம் அளிக்கத்தக்க சான்றாகும். மேலும்







நம்மாழ்வார் வாகனமும் அன்னமே என்பதனால் அன்னத் திற்கு அதிக ஏற்றம் எழுகிறது.

அன்னம், நற்சகுனத்தை நல்கும் நானிலப் பறவையாகவும் அழகிய அமரலோகப் பறவையாகவும் போற்றப்படுகிறது. எனவே நாட்டில் நிகழும் நல்ல காரியத்தில் எல்லாம் அன்னம் இடம் பெற்றுள்ளது. இதன் தெய்வத்தன்மையும் இதன் எழில் வடிவுமே இதைத் திருவிளக்கின் உச்சியில் இடம் பெறச் செய்தன. நமது சிற்பத்தில் அன்னம் தன் இரண்டு இறக்கைகளையும் சிறிது உயர்த்திய வண்ணமாகவும் வாலை உயரத்தூக்கிக் கொண்டிருப்பது போலவும் பொறிக்கப்பட்டிருப்பது ஒரு சிறந்த பண்பாகும்.

இயற்கை அன்னத்தில் இக்காட்சியைக் காணமுடியாது. இது தமிழ்நாட்டுச் சிற்பியின் சிந்தனையில் எழுந்த சிறந்த தோற்றமாகும். இந்த முறையை நீண்ட காலமாகத் தமிழ்நாட்டுச் சிற்பிகள் பின்பற்றி வருகின்றார்கள். இந்த வழக்கைச் சிங்கள சிற்பிகளும் பின்பற்றி வருகின்றார்கள்.

அன்னப்பறவை விளக்குகள், அழகாக இருக்கின்றன என்ற அபிப்பிராயம் பரவவே நாளடைவில் மயிலும், குயிலும், கிளியும், கோழியும் பலவும் திருவிளக்கின் கொண்டையைப் பிடித்துக் கொண்டன. இலங்கையில் உள்ள விளக்குகளில் ஒருவகைத் தூக்கு விளக்கு உண்டு. அதில் அன்னத்திற்குப் பதிலாக வேறு பறவைகள் புகுந்திருப்பதாகத் தெரிகிறது. கலாயோகி ஆனந்த குமாரசாமி எழுதிய அகில புகழ்பெற்ற அமர இலக்கியமாகத் திகழும் ‘சிங்களவர் இடைக்காலக்கலை’ என்ற நூலில் இத்தகைய விளக்கு ஒன்று இடம் பெற்றுள்ளது.

புராணங்களில் கூறப்பட்ட பாதிமனித உருவம் பாதி பறவை உருவமும் கொண்ட கின்னரி விளக்கு அன்ன விளக்கின் அடிப் படையில் அரும்பிய ஒரு புதிய விளக்காகக் காணப்படுகிறது. இந்த முடிவை அநேகமாக எல்லா அறிஞர்களும் ஏற்றுக் கொள்வார்கள். ஓரிடத்தில் கின்னரி விளக்கு சாவக நாட்டிற்கு உரித்தான அவர்களின் சொந்தக் கலைப்படைப்பு என்று அறிஞர் கங்கூலி அவர்கள் கூறியுள்ளார். பிறிதோர் இடத்தில் கின்னரி விளக்கு அன்ன விளக்குகளினின்று வளர்ச்சி பெற்ற ஒரு அரிய அமைப்பாக இருக்கலாம் என்று குறிப்பிடுகின்றார். உலாந்த நாட்டிலுள்ள லெய்டன் நகரின் தொல்பொருள் காட்சி சாலையில் சாவக நாட்டிலிருந்து கிடைத்த கின்னரி விளக்கு ஒன்று இடம் பெற்றிருக்கிறது.

அன்ன விளக்கைப்போல் மயில் விளக்கும் அழகானதேயாம். என்றாலும் அதற்கு அத்துணை பெருமையோ, கவர்ச்சியோ இல்லை. ஒருசில கோயில்களில் தான் மயில் விளக்குகள் இடம் பெற்றுள்ளன. மயில் விளக்கும் அன்ன விளக்கும் ஒன்று போலக் காணப்படினும்

அறிஞர்கள் எளிதில் வேறுபாடு கண்டுகொள்ள முடியும். (படம் 14-15 பார்க்க)

மயிலின் உயர்ந்த கழுத்தும் நீண்ட வாலும் அழகிய கொண்டையும் கம்பீரத்தோற்றமும் எளிதில் அதை அன்னத்தினின்று வேறுபடுத்திக் காட்டிவிடும்.

மேலும் மயில் முருகன் வாகனம். இந்த மயில் தமிழகத்திற்கே உரிய பறவை. இது இலங்கையிலும் உண்டு. இதன் ஒளிவீசும் எழில் ஒழுகும் இறக்கையும் வாலும் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்வனவாகும். இதன் எழிலும் ஏற்றமும் ஆட்டமும் கவிஞர்கள், ஓவியர்கள், நடிகர்கள் முதலிய அனைவர்களின் உள்ளத்தையும் கவர்வனவாகும். இதன் எழில் நடனம் ஏற்றமுடையதாகும். அன்னப் பறவையைவிட இது இலக்கியத்திலும் (கவிதையிலும்) ஓவியத்திலும் அதிகம் இடம் பெற்றிருக்கிறது.

இயற்கை எழிலை எடுத்துக்காட்ட எண்ணும் கலைஞன் கருத்தில் முதலில் உதிப்பது மயிலின் தோற்றமேயாகும். மயிலின் தோற்றமும் குயிலின் குரலும் அடுத்தடுத்து காவியத்திலும் கவியிலும் வருவது கண்கூடு. மயில் விளக்கு முருகன் கோயிலுக்கு நன்கொடையளிப்பதற்காக உருவாக்கப்பட்டதாக இருக்கலாம். இந்த மயிலைத் தமிழ்நாட்டார் மட்டுமல்ல, அரேபியர்களும் எபிரேயர்களும் தெய்வலோகப் பறவை என்று கூறுகின்றனர். இந்த உலகில் மயிலை விட அழகிய பறவை எதுவும் இல்லை என்று அறிஞர்களும் பலரும் கூறுகின்றனர்.

அன்னம் வைக்காத குத்துவிளக்கில் வாழைப்பூ விளக்கு என்று கூறும் ஒரு விளக்கு உண்டு. கன்னியாகுமரி மாவட்டத்திலும், கேரளத்திலும் சர்வசாதாரணமாய் வீடுகளில் இதை உபயோகிக்கிறார்கள். இந்த வாழைப் பூ விளக்கில் கிளை விளக்குகளும் உண்டு. மூன்று கிளைகள் உள்ள வாழைப்பூ விளக்குகள் கன்னியாகுமரி மாவட்டத்திலும் கேரள நாட்டிலுள்ள கோயில்களிலும் காணலாம். இந்த வாழைப்பூ விளக்கின் தண்டு வரி வரியாய் - உருண்டையான கயிற்றால் சுற்றப்பட்டிருப்பதுபோல் இருக்கிறது.

சில விளக்குகள், பாதம் அகன்றும் தண்டு அடுக்கடுக்காய் 4,5 பெரிய காய்கள் உள்ளவைகளாயும் உள்குவிந்து குடை போன்று மேலே தாடியும் அதற்கு மேல் தகழியும் உச்சியில் வாழைப்பூப் போன்ற வடிவமும் உடையவைகளாய்த் திகழ்கின்றன. வீடுகளில் வைக்கப்பட்டிருக்கும் வாழைப்பூ விளக்கு அதிக உயரமும் பருமனும் உள்ளது.

## வீட்டுக் குத்துவிளக்குகள்

*குத்து விளக்கு என்பது செங்குத்தாய் நேராக நிமிர்ந்து நிற்கும் நிலை விளக்கேயாகும். தமிழகத்தில் உள்ள தீபலட்சுமி விளக்கு களுக்கு அடுத்தாற் போல் சிறப்புற்று விளங்குவது இந்தக் குத்து விளக்கேயாகும். (படம் 17 பார்க்க)*

*அடியில் அழகான வட்டவடிவமான தாம்பாளம் போன்ற கனத்த தட்டின் மீது - அதாவது பாதத்தின் மீது உருண்டை வடிவ மாகவோ, ஐந்து ஆறு எட்டுப்பட்டைகள் தீட்டிய கம்பி வடிவ மாகவோ ஒரு தண்டு இருக்கும். அதன் அடிப் பகுதியிலும் நுனிப் பகுதியிலும் திருகுகள் இருக்கும். பாதத்தின்மீது அழகிய சிற்ப வேலைகள் செய்யப்பட்டும் இருக்கும். மேலே எண்ணெய் வார்க்கும் கிண்ணமும் அதைச் சுற்றிலும் திரிகள் போட்டு எரியத்தக்க முகங் களும் (மூக்குகளும்) 4, 5, 6 என்று பல வகைப்பட்டவைகளாக இருக்கும்.*


*இவ் விளக்குகள் பெரும்பாலும் மூன்று பகுதி கொண்டதாக இருக்கின்றன. இம்மூன்று பகுதிகளையும் ஒன்றாக இணைத்தே விளக்கை உபயோகிக்கிறார்கள்.*

*இந்த குத்து விளக்கைப் பெண்களும் சிறுமியர்களும் எளிதில் விருப்பம் போல் பகுதி பகுதிகளாகப் பிரித்து எந்த இடத்திற்கும் எடுத்துக் கொண்டு போய் நாடோறும் விளக்குவதற்கு ஏற்றதாய் மூன்று பகுதியாய்ச் செய்யப்பட்டிருக்கிறது.*

*மூன்று பகுதிகளினின்றி ஒரே கட்டியில் வார்க்கப்பட்ட வெண்கலக் குத்துவிளக்கும் உண்டு. இது பெரும்பாலும் கோயில் களில் காணப்படுகிறது. இத்தகைய விளக்குகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிகம் காணப்படுகிறது.*

*குத்து விளக்கில் கம்பி விளக்கு என்றும் காய் விளக்கு என்றும் இரு பிரிவுகள் உண்டு. இது மூன்று பகுதிகளாக இருந்தாலும் கம்பிக்குப் பதிலாகக் காய் வடிவமாகவும் பூவடிவமாகவும் பலவளை வுகளும் குழைவுகளும் உடையதாய் இருக்கும்.*

*அடிப்பாகத்தில் - அதாவது பாதத்தின் கீழே மூன்று கால்கள் உடைய விளக்குகளும் உண்டு. பாதம் வட்டவடிவமாக, மேலே இருக்கும். கிண்ணத்தினின்று எண்ணெய் வடிந்தால் கீழே சிந்த*




விடாது தாங்கி நிற்கும் வட்டமான குழிவும் உண்டு. குழிவின்றிச் சதுர வடிவமான பாதத்தையுடைய விளக்குகளும் உண்டு.

நடுவே பல்வேறு விதமான சிற்ப வேலைகள் செய்யப்பட்டு உச்சியில் எளிதாகத் தூக்குவதற்கு ஏற்ற முறையில் ஒரு வளைவு உடைய விளக்கும் உண்டு. இதைச் சந்திரகார விளக்கு என்று கூறுவார்கள்.

இஃதன்றி உச்சியில் கூர்மையான இலிங்க வடிவமான விளக்கும் உண்டு. இத்தகைய குத்து விளக்குகளைப் பெரும்பாலும் வீடுகளிலேதான் உபயோகிப்பதுண்டு. உச்சியில் பட்சி, விலங்கு, தெய்வம் போன்ற உருவம் பொறித்த விளக்குகள் இன்று பெரும் பாலும் வீடுகளில் உபயோகிப்பதே இல்லை.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன், நமது நாட்டில் குத்து விளக்கு களில் பலவகைகள் இருந்தன. ஆனால் எண்ணிக்கையில் மிகக்





குறைவாக இருந்தன. பெரும்பாலும் கைவிளக்குகளே அதிகமாக உபயோகத்தில் இருந்தன.

செல்வர்கள் வீட்டில்தான் குத்துவிளக்குகள் இருக்கும். செல்வர்கள் நாட்டில் குறைவாக இருப்பதால் குத்து விளக்குகள் எண்ணிக்கையில் குறைவாக இருப்பதில் ஆச்சரியமில்லை.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் குத்து விளக்குகளின் எண்ணிக்கை பெருகிவிட்டது. ஏழைகள் வீட்டிலும் செல்வர்களின் வீட்டிலும் குத்துவிளக்குகள் பெருகிவிட்டன.

குத்துவிளக்குப் பெருகிய அளவிற்குக் கைவிளக்குகள் குறைந்து விட்டன. கைவிளக்குகளின் ஸ்தானத்தில் சிறிய மண்ணெண்ணெய் விளக்குகளும் சுவரொட்டி விளக்குகளும் ஏராளமாக மலிந்து கை விளக்குகளை இருந்த இடம் தெரியாமல் விரட்டி விட்டன.

ஆனால் குத்து விளக்கு வீட்டிற்கு 3,4 ஆகப் பெருகிவிட்டது. பெரும்பாலான செல்வர்கள் வீடுகளில் கம்பி விளக்கு ஒன்றும் காய்விளக்கு ஒன்றுமாக இரு விளக்குகள் வைத்திருக்கிறார்கள். சில வீடுகளில் வீட்டிலிருக்கும் தலைமையான குத்துவிளக்கின் அருகே சிறு குத்துவிளக்குகள் ஒன்றிரண்டு அழகிய குத்துவிளக்குகள் வைப்பது இன்று வழக்கமாகி விட்டது. பக்கத்தில் இருக்கும் சிறு விளக்குகள் வெள்ளியாகப் பெரும்பாலான வீடுகளில் காணப்படு கின்றன.

கொஞ்ச நாட்களுக்கு முன் 'ஜெர்மன் சில்வரினால்' செய்யப் பட்ட குத்துவிளக்கு தலைகாட்ட ஆரம்பித்தது. என்ன காரணத்தி னாலோ அவைகள் பெருகாது அருகிவிட்டன.

ஆனால் பெரும் பிரபுக்கள் வெள்ளி விளக்குகளை வீட்டில் உபயோகிக்க ஆரம்பித்தனர். அவ்வெள்ளி விளக்குகள் ஏழை, எளிய மக்களையும் கவர்ந்தன. ஆனால் வெள்ளி விலையேறியதால் ஏழை மக்கள் அதனை நினைக்க முடியாமற் போய் விட்டது.

என்றாலும், இப்பொழுது வெள்ளி முலாம் பூசிய விளக்கு களும் 'எவர் சில்வர்' விளக்குகளும் ஏராளமாகப் பரவி வருகின்றன. இப்பொழுது நடுத்தர மக்களிடையேயும் எவர்சில்வர் விளக்குகள் பெரிதும் இடம் பெற்று வருகின்றன.

இன்று மின்சார விளக்கு எங்கும் பரவியதால் எவர் சில்வர் குத்து விளக்கின் எண்ணிக்கையை ஓரளவு பாதித்திருக்கிறது என்று தைரியமாகக் கூறலாம்.

சாதாரணத் தமிழர்கள் வீட்டில் கதிரவன் மறைந்ததும் குத்து விளக்கை ஏற்றிப் பூசைகள் செய்வதுபோல் பணக்காரர்கள் வீடு களில் குத்துவிளக்கேற்றுவதில்லை. என்றாலும் அவர்கள் வீட்டில் நடைபெறும் திருமணத்தில் மணவறையில் குத்துவிளக்கு முதல்

*இடம் பெற்றிருக்கிறது. அவர்கள் நடத்தும் மின்சாரப் பொருள் வணிக நிலையத்தை ஆரம்பிக்கும் பொழுது கூட முதலில் குத்து விளக்கை ஏற்றி ஆரம்ப விழா நடத்துகின்றனர்.*

**முஸ்லிம்களின் இல்லத்தில் விளக்குகள்**

*சைவர்கள், வைணவர்கள், பௌத்தர்கள், சமணர்களைப் போல் தமிழ் முஸ்லிம்கள் திருவிளக்கை அத்துணைச் சிறப்பாகப் போற்றமாட்டார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். சென்ற ஆண்டு ஆகஸ்டு மாதம் இலங்கைக்குப் போயிருந்தேன். அப்பொழுது எனது மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம் நண்பர் ஒருவரைச் சந்திக்க அவரது வணிக நிலையத்திற்குச் சென்றிருந்தேன். அவர் புதிதாக ஒரு நிழல் படம்பிடிக்கும் நிலையம் ஒன்றை ஆரம்பித்து நடத்துவதை அறிந்து அங்கு சென்றேன். அந்த நிலையத்தை இலங்கை முன்னாள் பிரதம மந்திரி டட்லி சேனநாயக, முதன் முதலாக திருவிளக்கேற்றி அவ்வணிக நிலையத்தை திறந்து வைத்துள்ளார். அதைப் படம் பிடித்து நிலையத்தில் புகுந்ததும் யாவரும் எளிதில் அறியுமாறு கண்ணாடிச் சட்டத்தில் போட்டு வைத்திருக்கிறார். அதன் பின்னர் எனது எண்ணம் தவறு என்பதைக் கண்டு திருத்திக் கொண்டேன்.*

*தாமரையைக் கலைஞர்களும் கவிஞர்களும் சிற்பிகளும் தத்துவ ஞானிகளும் போற்றுவதைப்போல் அனைவரும் திருவிளக்கைப் போற்றுகிறார்கள். திருவிளக்குப் பெண்களின் போற்றுதலுக்குத் தான் உரியது என்று எண்ணுகிறார்கள், கூறுகிறார்கள்.*

*ஆனால், பெரிய வேதாந்தியும் ரிஷிகேசம் திரு. சிவானந்த சரஸ்வதி அவர்களின் சீடரும் தென்னிந்திய திவ்விய ஜீவன சங்கத் தலைவருமான திரு. அத்வைதானந்த சரஸ்வதி சுவாமிகள் என்பார், இலங்கையிலிலுள்ள மல்லாகம் என்னும் ஊரிலுள்ள ஆனந்த வித்தியாசாலை என்னுமிடத்தல் 22-12-60இல் நிகழ்த்திய சொற் பொழிவில் பின்வருமாறு கூறினார்.*

*"மங்களகரமான குத்துவிளக்கில் மாபெரும் தத்துவங்கள் அடங்கியிருக்கின்றன. அதன் அடிப்பாகமாகிய தாமரை போன்ற ஆசனம் (பாதம்) பிரம்மாவாகவும் அதன் நெடிய தண்டானது திரு மால் ஆகவும், நெய் ஏந்தும் அகல் உருத்திரனாகவும், திரிமுகைகள் மகேஸ்வரனாகவும், எல்லாவற்றிற்கும் சிகரமாக உள்ள நுனிப்பாகம், சதாசிவனாகவும், நெய்யானது நாதமாகவும், திரி பிந்துவாகவும், சுடர் திரு மகளாகவும், தீப்பிழம்பு கலைமகளாகவும், சங்காரஞ் செய்யும் வல்லமையான தீ சக்தியாகவும், ஈற்றில் பஞ்சேந்திரியங் களை நடாத்தும் பரப்பிரமமாகவும் விளங்குகின்றன. நமது சமய தத்துவங்கள் அனைத்தும் ஒரே விளக்கில் காணும் படியாக நமது முன்னோர்கள் அமைத்திருப்பது மிகப் பெரிய அற்புதமேயாகும்" (தினகரன், கொழும்பு) இதனைப் படித்த பின்னர் தான் திருவிளக்குப்*

பெண்களின் போற்றுதலுக்கு மட்டுமே உரியதென்று எண்ணுவோர் தமது கருத்தை மாற்றி ஆண்களின் - ஏன்? தத்துவ ஞானிகளின் போற்றுதலுக்கும் உரியது என்பதை உணர்வார்கள் என்று நம்பு கிறேன். இஃதில்லாவிடில் ஆண்களை விடப் பெண்கள் விளக்கின் தத்துவத்தை நன்கறிந்து போற்றி வருகிறார் என்றாவது ஒரு முடி விற்கு வர வேண்டும்.

திரு.டி.எஸ். இரங்கநாயகி அம்மையார், ‘குத்து விளக்கு மக்களின் உடலைக் காட்டுகிறது. எப்படி? பருவம் வரப்பெற்ற ஆண் பெண்ணாகிய இரு பாலருக்கும் நாபியிலிருந்து மேல் நோக்கிக் கொடி போல ஒரு ரேகை ஓடும். இதை அவரவர்களே பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். நாள் ஆக ஆக இக்கோடு நன்றாகப் பதியும். யோகம் கைவரப் பெற்றவர்களுக்கு மூலாதாரத்திலிருந்து குண்டலினியை எழுப்பி நெற்றியிலே புருவ மத்தியிலிருக்கும் இடத்திலேயே சோதிப் பிழம்பாகக் காட்டுவார்கள். அச்சோதிப் பிழம்பு குத்துவிளக்கு எரிவது போல் இருக்கும். மனிதரது இடுப்புக்குக் கீழ்ப்பட்ட பாகமே குத்து விளக்கின் பாதம். இடுப்பிலிருந்து மேல் நோக்கி ஓடும் ரேகைக் கொடியே குத்து விளக்குத் தண்டு. கழுத்துக்கு மேற்பட்ட நமது தலையே குத்துவிளக்கின் தலை. புருவ மத்தியில் சோதி சொலிப்பதே குத்துவிளக்கு எரிவதாகும். ஆகவே குத்துவிளக்கு ஏற்றுவதின் அர்த்த மென்ன? யோகியை வணங்குவது; ஆத்ம ஜோதியை வணங்குவது, இறைவனை வணங்குவது; ஞானம் கை வர வேண்டுவது’ என்று கூறுகிறார்.

ஆண்களுக்கெல்லாம் எட்டாத இந்தக் குத்துவிளக்கின் தத்துவத்தைப் பெண்கள் அறிந்திருப்பதனால் அவர்கள் திரு விளக்குப் பூசையைத் தங்களுக்கே சொந்தமானதாகத் தனி உரிமை கொண்டாடுகிறார்கள் போலும். அஃதன்றி அவர்கள் குடும்ப விளக்காகவும், இல்லற விளக்காகவும், இல்லக விளக்காகவும் இருப்பதால் தங்களின் இனமாகிய குத்துவிளக்கைப் போற்று கிறார்கள் போலும். இஃதன்றி அவர்கள் குடும்ப பெண்ணிற்கு இருக்க வேண்டிய அன்பு, அறிவு, உறுதி, நிதானம், பொறுமை ஆகிய ஐந்து குணங்களையும் குத்துவிளக்கின் ஐந்து முகங்களும் நினைப் பூட்டுவதாக நம்புகிறார்கள். விளக்கின் அகலில் காணும் எண் ணெய்க் குழியே குடும்பப் பெண்ணின் ஆழ்ந்த உள்ளம். அதிலிருந்து ஊட்டப்பெறும் ஐந்து ஒளியைப் போல் குடும்பப் பெண்ணின் ஐந்து குணங்களும் ஒருங்கு கூடி ஒளிரும் போது இல்லம் இன்ப ஒளி வீசி நலம் பல பொங்கிப் பிரகாசிக்கிறது. பெண் மகள் குத்து விளக்கின் மூலம் பெற்ற ஞானத்தில் குடும்ப விளக்காக ஒளிர்கிறாள். ‘இல்லக விளக்கது’ என்னும் பாராட்டுக்கு உரியவள் ஆகின்றாள்.

இந்த இல்லக விளக்கினால் இல்லறம் நல்லறமாவதை உன்னித் தமிழ் மறையில், பொய்யா மொழியார்.

***"இல்லது என் இல்லவள்***
***மாண்பானால் உள்ளது என்***
***இல்லவள் மாணாக் கடை"***

என்றார். ஒருவனுக்கு, இல்லாள், இல்லக விளக்காக நற்குண, நற்செயல்கள் உள்ளவளாக ஒளிர்ந்தால் அவனுக்கு இல்லாதது யாது? அவள் இல்லாவிட்டால் அவனுக்கு எது உண்டு? என்னும் கருத்துப் பட எடுத்துக் காட்டியுள்ளார்.

வீட்டு விளக்குகளில் விரும்பத்தக்கது குத்து விளக்கேயாகும். பண்டைக் காலத்தில் கைவிளக்குகள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்திருக்கலாம். ஆனால் இன்று எண்ணிக்கையில் அதிகமாக எங்கும் பரவியிருப்பது குத்துவிளக்கேயாகும். இதையே நமது! பெண் மக்கள் பெரிதும் விரும்பிப் பூசைக்குரியதாகத் தேர்ந்தெடுத்திருக் கிறார்கள். வீட்டிற்கு அழகு தரும் விளக்கும் இதுவேயாகும்.

இந்தக் குத்து விளக்கில்தான் நமது சிற்பிகளின் கவன மெல்லாம் செலுத்தப்பட்டு எண்ணற்ற எழில் விளக்குகள் உருவாக் கப்பட்டுள்ளன.

மொத்தமாகக் கூறுவதானால் தமிழ் நாட்டில் ஆயிரத்திற்கு மேற்பட்ட விதமான அழகு விளக்குகள் உண்டு. அவற்றில் குத்து விளக்கில் மட்டும் 400க்கு மேற்பட்ட விதங்களைப் பார்க்க முடியும். என்னிடத்தில் மட்டும் 100க்கு மேற்பட்ட குத்துவிளக்குகள் உள்ளன.

இந்த விளக்குகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு வித மாகவும் நெல்லை மாவட்டத்தில் மற்றொரு விதமாகவும் மதுரை மாவட்டத்தில் மற்றும் ஒரு விதமாகவும் திருச்சி மாவட்டத்தில் பிறிதோர் விதமாகவும் தஞ்சை மாவட்டத்தில் இன்னொரு வித மாகவும் செங்கற்பட்டு மாவட்டத்தில் புதியதோர் விதமாகவும் மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபட்ட எழிலுடன் மிளிர்கின்றன.

குத்துவிளக்கில் பாதம் வட்டமாகவும் சதுரமாகவும் அமைக் கப்பட்டு நடுவில் தண்டும், சூழ வட்டமாக ஒரு பள்ளமும் காணப் படும். தண்டு குழலாகவும் சிலவற்றில் கட்டியாகவும் இருக்கின்றன. சில பாதங்கள் கட்டியானதாகவும், சில பாதங்கள் தகடானதாகவும் உள்ளன. சில பாதங்களில் மிக மிக அருமையான பூ வேலைப் பாடுகள் காணப்படுகின்றன.

கிட்டத் தட்டப் பண்டைக்கால வட்டத் தாம்பாளத்தில் தீட்டப்பட்ட அழகிய வேலைப்பாடுகள் அனைத்தும் விளக்கின் பாதங்களில் காணப்படுகின்றன. பாதத்தில் காணப்படும் குழைவு களும் நெளிவுகளும் மிக அற்புதமாக ஒளிர்கின்றன.

பாதத்தின் கீழ் சில விளக்குகளுக்கு மூன்று கால்கள் காணப் படுகின்றன. நான்கு கால்கள் உள்ள விளக்குகளும் உண்டு. பெரும் பாலான விளக்குகள் பாதம் பூமியில் பொருந்தும் படியாகவே

செய்யப்பட்டிருக்கின்றன. பாதமானது கிட்டத்தட்ட பீடம் போல் காணப்படுகிறது. பாதத்தின் மேல் தண்டின் அடிப்பாகம் பெருத்து மேலே போகப் போகச் சிறுத்து இரண்டு அடி, மூன்று அடி, நான்கு அடி உயரம் நீண்டு நிற்கும் பாதத்தின் மீது நிற்கும் தண்டின் அடிப் பக்கத்திலும் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் செறிந்திலங்கும். பெரும்பாலான விளக்குகளில் பாதம் தனியாகவும் தண்டு தனியாக வும், மேற்பாகம் தனியாகவும் செய்யப்பட்டு மூன்றையும் இணைக்க ஒவ்வொன்றிலும் திருகுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தண்டு களில் சில கட்டிக் கம்பிகளாகவும் சில குழல்களாகவும் செய்யப் பட்டுள்ளன.

கம்பி விளக்குகளைவிடக் காய் விளக்குகளில் வேலைப் பாடுகள் அதிகம். மேலே காணப்படும் தகழியும் அதன்மேல் காணப் படும் சிகரமும் விளக்கில் வேற்றுமைகளை காட்டுவனவாக அமைந் திருக்கின்றன.

மேற்பகுதியில்தான் எண்ணெய் நிற்கும் தகழியாகிய கிண்ணம் இருக்கும். தகழிக்கு மேல் தண்டிற்கு நேராக இருக்கும் உச்சிப் பகுதியே விளக்கின் சிறப்பான பகுதியாகும்.

இந்தத் தகழியிலே திரி எரியும் முகம் - மூக்கு (திரி முகைகள்) உண்டு. இந்த முகம் சிலவற்றில் இரண்டும் சிலவற்றில் மூன்றும் சிலவற்றில் நான்கும் சிலவற்றில் ஐந்தும் சிலவற்றில் ஆறுமாகப் பெருகிக்கொண்டே போகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சில குத்து விளக்கில் இத்தகைய முகமே இல்லை. தகழியில் இஷ்டப்பட்ட பகுதியில் இஷ்டப்பட்ட எண்ணுள்ள திரிகளை இட்டு விளக்கு எரிக்கலாம். சில குத்துவிளக்குகள் தகழி மட்டும் உடையனவாக, அதாவது தாமரைப் பூப் போன்ற தகழியை உடையனவாகக் காணப்படு கின்றன. அதற்கு மேலே ஏனைய விளக்குகளைப் போன்ற சிகரம் எதுவும் இல்லை.

தகழிக்கு மேலே உள்ள சிகரங்கள் சிலவற்றில் ஊசிபோல் கூர்மையாயும், சிலவற்றில் வாழைப்பூப் போன்ற உருவம் உடையன வாயும் சிலவற்றில் பிறைவடிவம் அமைந்தனவாயும் சிலவற்றில் வட்டவடிவம் உடையனவாயும் சிலவற்றில் தகழிக்கு மேல் சுமார் ஒன்றரை அங்குல உயரமுள்ள வட்டமான கம்பியும் அதற்கு மேல் காய்களும் சந்திரஹாரமும் வைக்கப்பட்டவையாயும் உள்ளன. (படம் 18, 19, 20, 21A வரைப் பார்க்க)

சில விளக்குகளில் எண்ணெய் நிற்கும் தகழிக்குப் பதிலாக ஒரு மூடி போட்ட வட்டக் கலயம் அல்லது உழக்குப் போல அமைக்கப் பட்டுத் திரியிடுவதற்கு வேண்டிய இரண்டு, மூன்று குழாய்களும் இருக்கின்றன. சில விளக்குகளில் தகழிக்குக் கீழே வட்டமாகக் குடை

போன்றும் செய்யப்பட்டுள்ளது. சில விளக்குகளில் தண்டின் கீழிருந்து தகழி வரை உருண்டைக் கம்பிகளைச் சுற்றினாற்போல் ஒன்றின் மேல் ஒன்றாகப் பல உருட்டுகள் காணப்படுகின்றன.

இந்தக் குத்துவிளக்குத் தான் பூசைக்குரிய புனிதப் பொருளாகப் போற்றப்படுகிறது. இதுதான் புறஇருள் போக்கும் புனித ஒளி விளக்கு என்றும் அக இருள் அகற்றும் அருள் விளக்கு என்றும் புகழ்ந்து ஏற்றப்படுகிறது. இல்லக இருள் ஓட்டுவது இத்திரு விளக்கேயாகும். வீட்டின் மங்கலப் பொருளாகக் குத்து விளக்கு மதிக்கப்படுகிறது. மருளைத் தரும் இருளை அகற்றி மக்கள் மகிழ்ச்சி பெற நாள்தோறும் இதை வழிபட்டு வருகிறார்கள்.

நாள்தோறும் வீடுகளைப் பெருக்கி, மெழுகிக் கோலம் போட்டு மணை போடுகிறார்கள். அப்பால் விளக்கைத் துப்புரவாகத் துடைத்து, நன்றாக உமியால் விளக்கி முழுக்காட்டி மணையில் வைக்கிறார்கள். முற்காலத்தில் கோமூத்திரம், பசுவின் சாணம் ஆகியவற்றால் மெழுகி மாக்கோலம் போட்டு விளக்கை உமியால் பால் போல விளக்கித் துணியால் துடைத்து நீராட்டி முழுக்காட்டு வார்கள். அதை வெண்மையான துணியால் துடைத்து மணை மீதேற்றித் திருவெண்ணீறு எட்டிடங்களில் பொட்டாக அணிவித்து அதன்மேல் சந்தனம், குங்குமம், சாந்து முதலியவைகளால் பொட்டிடுவார்கள். அப்பர் பெருமானின் அருட்பாட்டைப் பாடுவார்கள்.

அப்பால் நெய் வார்ப்பர். திரியிடுவர். விளக்கேற்றுவர். பூவணிவர். தேங்காய், பழம், பொங்கல், சுண்டல், அவல், கடலை, பொரி, முந்திரிப்பழம், வெல்லம் முதலியவைகளில் இயன்றவைகளைப் படைத்து நீர் கொண்டு மூன்று முறை வலஞ் சுற்றி வில்வம், துளசி, போன்ற இலைகளையோ அல்லது நறுமலர்களில் ஏதேனும் ஒன்றையோ கொண்டு அருச்சிப்பர்.

பக்திப் பாடல்களைப் பாடுவர். மணி அடிப்பர். மேள தாளங்கள் அடிப்பதும் குழல் ஊதுதல் போன்ற இன்னிசைகள் முழக்குவதும் உண்டு. சாம்பிராணிப் புகைகாட்டுவதும் கர்ப்பூரம் காட்டுவதும் கைவிளக்கு காட்டுவதும் உண்டு. திருமுறை போன்ற அருள் நூற்களின் திருப்பாடல்களைப் பொருள் விளங்குமாறு இனிய குரலில் தாளத்தோடு பாடுவர். அதன் பின் பிரார்த்தனை செய்து போற்றி! போற்றி!! என்று கூறி வணங்கி முடிப்பர்.

சில வீடுகளில் விளக்கு வைப்பதற்கென்று தனி மாடம் அமைத்திருப்பார்கள். நாடோறும் நடை பெறும் நித்ய பூசையைத் தவிரத் திருக்கார்த்திகை, தைப் பொங்கல், அமாவாசை, பௌர்ணமி போன்ற சில நாட்களில் மிகச் சிறப்பான முறையில் சித் திரான்னங்கள் படைத்துப் பூமாலைகள் சூட்டிச் சிறப்புப் பூசை நிகழ்த்துவர்.

வீடுகளில் ஒவ்வொரு நாளும் குடும்பத்திலுள்ளவர்களும் இளஞ்சிறார்களும் விளக்குப் புசை செய்து விளக்கு முன் இருந்து தங்களின் பள்ளிப் பாடங்களைப் படிப்பர்.

இப் பூசையில் வைணவர்கள் ஒரு விதமாகவும் சைவர்கள் வேறு விதமாகவும் பூசை நடத்துவர். சைவர்கள் வீட்டில் நடத்தும் விளக்குப் பூசையில் தேவாரமும் வைணவர்கள் வீட்டில் நடத்தும் விளக்குப் பூசையில் திருவாய் மொழியும் பெரிதும் இடம் பெற்றிருக்கும்.

இன்று எங்கள் நெல்லை மாவட்டத்தில் சைவ வைணவ வேற்றுமைகள் பெரிதும் மறைந்து வருகின்றன. எங்கள் மாவட்டத் தில் உள்ள சங்கரநாராயணர் (அரியர்த்த மூர்த்தி) சைவர்களும் வைணவர்களும் வணங்கும் சமரசத் தெய்வமாகி இரு பிரிவினர்க ளிடையேயும் செல்வாக்குப் பெற்று வருகிறார். இதன் பலனாக இப்பொழுது சைவர்களும் வைணவர்களும் கொள்வினை கொடுப் பினை செய்து கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள்.

சைவர் வீட்டுப் பெண் வைணவர் வீட்டிற்குப் போய் திருவாய்மொழி பாடி விளக்குப் பூஜை செய்கிறாள். வைணவர் வீட்டுப் பெண் சைவர் வீட்டிற்குப் போனதும் தேவாரம் பாடித் திருநீறணிந்து திருவிளக்குப் பூசை செய்கிறாள்.

முற்காலத்தில் சைவர்கள் வீட்டிலுள்ள விளக்குகளில் சிவ சின்னமும் வைணவர்கள் வீட்டிலுள்ள விளக்குகளில் வைணவ சின்னமும் இடம் பெற்றிருந்தன. கிறிஸ்தவர்கள் வீட்டிலுள்ள விளக்குகளில் சிலுவையும், முஸ்லீம்கள் வீட்டிலுள்ள விளக்குகளில் பிறையும் இடம் பெற்றிருந்தன. இப்பொழுது அந்தச் சமயச் சின்னங்கள் பொறித்த விளக்குகளைக் காண்பதே அரிதாய் விட்டது. அப்படி எங்காவது ஒரு சமயச் சின்னம் பொறித்த விளக்கு இருந் தாலும் மக்கள் வேற்றுமை உணர்ச்சியின்றிக் கூசாது வணங்கி வழி படுகின்றனர்.

பல சைவர்கள் வீட்டிலே திருமாலுருவமும் அவரது மனைவி யர் உருவங்களும் பொறிக்கப்பட்டு, ஆங்கில எழுத்தாகிய "ஒய்", "யூ" வடிவம் போட்டிருக்கும் விளக்குகள் கூட இடம் பெற்றுப் பூசைக் குரிய புனிதப் பொருளாகப் போற்றப்பட்டு வருகின்றன.

### விளக்குச் சகுனம்

இன்றும் தமிழர்கள் வீடுகளில் ஒரு நல்ல காரியம், அதாவது திருமணம் , வீடு குடி புகுதல், மாடு வாங்குதல், வயல் வாங்குதல் போன்ற நல்ல காரியங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போது விளக்கினின்று பொறி (சுடர்) பறந்தால் நற்சகுனம் என்று மகிழ்ச்சியுறுகிறார்கள்.

தமிழ்நாட்டில் மட்டுமின்றி இந்தியா முழுவதிலும் இன்று கூட உணவு உண்ணும் பொழுதோ, திருமண விசயமாய் பேசிக் கொண்டிருக்கும் பொழுதோ, நற்கருமங்களை நாடி நிற்கும் பொழுதோ, விளக்குக் குளிர்ந்து (அணைந்து) விட்டால் கெட்ட சகுனமாகக் கருதுகிறார்கள். அந்தக் காரியம் தீமையாய் முடியும் என்று எண்ணுகின்றார்கள்.

பழந்தமிழ் நாட்டில் ஒரு வீரன் போரில் காயமுற்று வீட்டிற்கு வந்தான். அவனது மனைவி இரவில் காயத்துக்கு மருந்து வைத்துக் கட்டி அவனைக் கவனித்து வந்தாள். அவளுக்குப் பல கெட்ட நிமித்தங்கள் தோன்றின. அவைகளில் ஒன்று விளக்கு அணைந்தது. அவள் அதை தனக்கு வரப்போகும் பயங்கரமான விளைவுகளின் முன்னறிவிப்பாக எண்ணினாள். தன் கணவன் குணப்பட்டு எழுவான் என்பதிலுள்ள எல்லா நம்பிக்கைகளையும் இழந்தாள் என்பதைத் தென்பாண்டி நாட்டைச் (நெல்லை மாவட்டத்தைச்) சேர்ந்த கொற்கைக்கு அருகிலுள்ள மாறமங்கலம் (மாறோக்கம்) என்னும் ஊரிலுள்ள நப்பசலையார் என்னும் சங்க காலப் புலவர் பின்வரும் பாட்டில் தொகுத்துக் கூறியுள்ளார்.

***"என்னை மார்பிற் புண்ணும் வெய்ய***
***நடுநாள் வந்து தும்பியும் துவைக்கும்***
***நெடுநகர் வரைப்பின் விளக்கு நில்லா"*** (புறம் 280)

இந்தப் பாட்டிற்குப் பொருள் கூறிய உரையாசிரியர்கள் பலருடைய கருத்துக்களிலிருந்தும் பழந்தமிழ் நாட்டிலிருந்த பல மன்னர்களும் விளக்கு அணைந்து விடாமல் இருக்குமாறு தம் அரண்மனையில் தக்க ஏற்பாடுகள் செய்திருந்தார்கள் என்பதை அறிகிறோம். விளக்கு இரவும் பகலும் ஒய்வு ஒழிவு இன்றி வாடாமணி விளக்காய் ஒளி வீசுவதைத் தங்கள் வெற்றியின் சின்னமாக அவர்கள் கருதி வந்ததாக உணர்கிறோம்.

காற்றடித்து விளக்கு குளிர்ந்து (அணைந்து) விட்டாலும் அல்லது வேறுகாரணத்தினால் விளக்க அணைந்து விட்டாலும் மன்னருக்குப் பெரிய ஆபத்து நேரப்போகிறது என்று கருதப் பட்டது. இதனை நிச்சமிரு விளக்கு அல்லது நித்திய விளக்கு என்று அழைத்தனர். இதன் மூலம் அரசன் வாழும் இடங்களில் விளக்கு இளம் பெண்களால் இரவு முழுதும் மிக்க கவனமாகவும் சர்வ சாக்கிரதையாகவும் கவனித்து வரப்பட்டது என்பதை அறிகிறோம்.

***'குறுந்தொடி முன்கைக்***
***கூந்தலஞ் சிறுபுறத்***
***திரவுபகற் செய்யுந்***
***திண்பிடி யொள்வாள்***
***விரவுவரிக் கச்சிற்***
***பூண்ட மங்கையர்***

***நெய்யுமிழ் சுரையர்***
***நெடுந்திரிக் கொளீ இக்***
***கையமை விளக்க***
***நந்துதொறு மாட்ட'*** (முல்லைப்பாட்டு 45 - 49.)

நிமித்திகர்கள் அல்லது நிமித்தம் பார்ப்பதில் சிறந்த நிபுணர்கள் மன்னர்களின் விசேஷ விளக்குகளை எப்பொழுதும் கண்காணித்து வந்தனர். விளக்கின் ஒளியும் சுவாலையும் ஈட்டி நுனிபோல் நேராக நிமிர்ந்து எழுந்து எரிவதிலிருந்து ஆடாமலும் குலுங்காமலும் காற்றினால் கரும்புள்ளிகள் தோன்றாமலும் இருப்பதைக் கண்டால் மன்னர்க்கு நல்வாழ்வும் வெற்றியும் எழும் என்று திருப்தி அடைந்து அதை முன்னறிவிப்புச் செய்வார்கள்.

***'மைமிசை யின்றி'***
***மணிவிளக்குப் போலோங்கிச்***
***செம்மையி னின்றிலங்கும்***
***தீபிகை - தெம்முனையுள்***
***வேலினுங் கோடாது***
***வேந்தன் மனை விளங்கக்***
***கோலினுங் கோடா கொழுந்து*** (நச்சினார்க்கினியர் விரிவுரை)

***'வளிதுரந்தக் கண்ணும்***
***வர்லந்திரியாப் பொங்கி***
***யொளி சிறந்தோங்கி***
***வரலால் - அளி சிறந்து***
***நன்னெறியே காட்டும்***
***நலந்தெரி கோலார்க்கு***
***வென்னெறியே காட்டும் விளக்கு'***

(புறப்பொருள் வெண்பாமாலை - 200)

இன்றும் தமிழகத்திலும் தமிழர்கள் வாழும் இலங்கை, பர்மா, மலாயா சிங்கப்பூர், சாவகம், போர்னியோ போன்ற இடங்களிலும் கூட வீட்டில் முக்கியமான காரியங்கள் பேசும் பொழுது வீட்டில் எண்ணெயினால் எரியும் திருவிளக்கினின்று பொறி எழுந்தால் அதை ஒரு நல்ல அடையாளமாக அளவிடுகின்றனர். தாங்கள் கருதும் காரியங்கள் நல்ல விளைவுகளை உண்டாக்கும் என்று நம்புகின்றார்கள்.

இந்த அபிப்பிராங்கள் வட இந்திய மக்களிடம் கூட உண்டு என்று வட இந்திய மக்களுடன் தொடர்புள்ள மக்கள் கூறுகின்றார்கள். பண்டுள்ள இந்த நிமித்தங்களும் நம்பிக்கைகளும் தமிழர்களிடையே ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நிலவி வருகின்றன. இலக்கியங்களிலும் இடம் பெற்றுள்ளன!

# கிளை விளக்குகள்

முற்காலத்தில் தமிழகத்தில் வீடுகளில் நடைபெறும் விசேடங் களில் வீட்டிலுள்ள குத்துவிளக்குகளில் பெரிய விளக்கில் பெரிய திரிகள் போட்டு அதிகமான வெளிச்சத்தை உண்டாக்கினர். அப்பால் பெரிய தீவர்த்திகளை உபயோகிக்க முயன்றனர். அதன் பிறகு கிளை விளக்குகள் துளிர்க்க ஆரம்பித்தன.

நாஞ்சில் நாட்டில் வாழைப்பூ விளக்குகள் என்று ஒரு வகை விளக்குகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. அந்த வாழைப்பூ விளக்கில் மிகப் பெரியவைகள் தமிழ்நாட்டுக் கோயில்களில் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. சிறிய விளக்குகள் பிற மாவட்டங்களில் குறைவாக இருந்தாலும் நெல்லை மாவட்டத்தில் கணிசமான அளவு பரவியிருக்கின்றன. அந்த விளக்கின் தகழியில் மூக்கு இராது.

இந்த வாழைப்பூ விளக்கில் இரு பக்கங்களிலும் இரு கிளை கள் வைத்துச் செய்யப்பட்ட விளக்குகளை நான் கன்னியாகுமரி மாவட்டத்திலும் திருவனந்தபுரத்திலும் பார்த்திருக்கிறேன்.

அஃதன்றித் தமிழ் நாட்டில் எங்கும் நான் பார்த்ததே இல்லை. ஆனால் சென்னை அரசாங்கத் தொல் பொருள்காட்சி சாலையில் மூன்று கிளைகளுள்ள ஒரு வாழைப்பூ விளக்கைப் பார்த்திருக் கிறேன். இந்தக் கிளை விளக்கையும் இதுபோன்ற கிளை விளக்கு களையும் வீட்டு விளக்கில் சேர்த்துக் கணக்கிடுவதா? அல்லது கோயில் விளக்கில் சேர்த்துக் கணக்கிடுவதா? என்று எனக்குப் புலப்படவில்லை.

இவை வீட்டிற்கும் கோயிலுக்கும் ஏற்றவையாகச் சமைக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் இவற்றைக் கோயில்களில் எப்பொழுதும் ஏற்றலாம். வீட்டில் எப்பொழுதும் ஏற்றவோ, எல்லோர்க்கும் வாங்கவோ வசதிப்படாது.

ஆனால் இது வீடுகளில் விசேஷ காலங்களில் ஏற்றுவதற்கு ஏற்றதாக அமைந்திருக்கிறது. ஆகையால் இதை விசேஷ விளக்கு என்று கூறினால் மிகப் பொருத்தமானதாக இருக்கும்.

இந்த விளக்கில் பெரியவைகள் ஆயிரக் கணக்கான ரூபாய்கள் பெறுமதியானவைகள்.

சுமார் ஐந்தடி உயரத்திற்கு மேற்பட்ட விளக்குகள் கூட இருக்கின்றன. இதைத் தூக்குவதும் ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாற்றுவதும் மிகக் கஷ்டமாக இருக்கும். அதோடு இந்தக் கிளை விளக்குகள் தமிழ்நாட்டில் எண்ணிக்கையில் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. மின் விளக்குகள் பெருகியதும் இதன் உபயோகமும் குறைந்து விட்டது.

**சோடச அன்னச் சங்கிலிக் கிளை விளக்கு**

இத் திருவிளக்குதான் தமிழ் நாட்டிலுள்ள விளக்குகளில் மிகப் பெரியதாகும். கிளை விளக்குகளிலும் இதுதான் மிகப் பெரிது. இதை எனது மாணவரும் கோயிற் பூசை செய்பவருமான சாத்தன் குளம் திரு. சு. கைலாசப் பட்டர், சோடச அன்னச்சங்கிலிக் கிளை விளக்கு என்றார். ஒரு சிற்பி மங்கல மண விளக்கு என்றார். தென்காசி யிலுள்ள எனது முஸ்லிம் நண்பர் இது மௌலூது விளக்கு என்றார்.

இந்த மாபெரும் கிளை விளக்கு, பித்தளையால் வார்க்கப் படுகிறது. இது சிறந்த கிளை விளக்கிற்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது.

இது ஐந்தடி உயரத்திற்கு மேல் இருக்கும். இதன் கிளைகள் நடுத் தண்டிலிருந்து ஒவ்வொரு பக்கத்திலும் ஒன்றரை அடி நீண்டிருக்கும். எனவே அகலம் மூன்றடிக்குமேல் இருக்கும். இதன் நிறை தெரியவில்லை.

இதன் பாதம், மிகக் கனமாக மேற்தண்டையும் கிளைகளையும் தாங்கத் தக்கதாய் அமைக்கப்பட்டிருக்கிறது. நடுத் தண்டு மூன்று பிரிவாக இருக்கிறது. அவற்றைத் தனித் தனியே கழற்றி விட முடியும். ஒவ்வொரு பகுதியையும் பலமாக இணைப்பதற்கேற்ற நீண்ட திருகுகள் உள்ளன.

ஒவ்வொரு உட்பிரிவிலும் எட்டு அழகிய வளைந்த சுருள்கள் உண்டு. ஒவ்வொரு சுருளும் ஐந்து அகல்களைத் தாங்கிக் கொண் டிருக்கிறது. அதினின்று சங்கிலியில் தொங்கும் அகல் விளக்குகளும் உள்ளன. அவை ஒவ்வொன்றிலும் ஐந்து திரிகள் போட்டு விளக்கேற்றும் ஐந்து மூக்குகள் உள்ளன.

இத்திருமண விளக்கில் காணப்படும் மூன்று தட்டுகளில் உள்ள சுருள்களில் ஒவ்வொன்றிற்கும் 70 திரிகளாக மொத்தம் 217 திரிகள் எரியும் மாபெரும் வெளிச்சத்தையுடைய ஒப்பற்ற பெரிய விளக்காக இது ஒளிர்கிறது.

இதன் உச்சியில் அன்னத்தின் உடலை உடைய திருமகளின் உருவம் காணப்படுகிறது. இத்தகைய விளக்கைச் செய்து முடிக்க இன்று இராண்டாயிரம் ரூபாய்க்கு மேற்செல்லும் என்ற எண்ணு கிறேன். ஒவ்வொரு விளக்கும் ஒவ்வொரு தகழியைத் தாங்கிக்


கொண்டு இறுதியில் அன்ன லட்சுமியில் போய் முடிகிறது. இது பல மக்கள் கூடிப் படிக்கும்போது மணவிழாவின் போதும் உபயோகிப் பதற்கு ஏற்றது. இத்தகைய திருவிளக்குத் தமிழ்நாட்டில் ஒன்றிரண்டு தான் இருக்கும் என்று எண்ணுகிறேன். வேறு நாட்டில் கிடையவே கிடையாது. (படம் 22 பார்க்க)

### திருப்பதிக் கிளை விளக்கு


இங்கு காணப்படுவது மற்றும் ஒரு கிளை விளக்காகும். இக் கிளை விளக்கு மிகச் சிறந்த வேலைப்பாடுடையது என்று கூற முடியாவிட்டாலும் மிக மட்டமானது என்று ஒதுக்கித் தள்ளி விடுவதற்குரியது அல்ல.

இக் கிளைவிளக்கு திருப்பதிக் கோயிலுக்கு உரியது. இது ஐந்தடி உயரமுள்ளது. இதன் மத்தியில் உள்ள தூண் மரத்தின் நடுத் தண்டைப்போல் காணப்படுகிறது. விளக்கின் ஏனைய கிளைகள் மரத்தின் கிளைகள் போல் நடுத்தண்டுடன் இணைக்கப்பட்டுள்ளன. (படம் 23 பார்க்க)

**கிளை விளக்குகள்**



படம் 22. சோடச அன்னச் சங்கிலிக் கிளை விளக்கு



படம் 23. திருப்பதிக் கிளை விளக்கு

கிளைகளின் ஒவ்வொரு நுனியிலும் கிண்ணம் போன்று விளங்கும் தகழி உண்டு. கிளைத் தண்டுகளில் இலைகள் போன்ற பல எழில் உருவங்களும் தீட்டப்பட்டிருக்கின்றன. தண்டின் உச்சியில் அழகிய அன்னப் பறவையின் உருவம் காணப்படுகிறது.

அன்னம் பண்டைக் காலத்தில் தமிழகத்தில் வார்த்தெடுக்கப் பட்ட ஓர் உருவத்தைப் போன்று சிற்பச் சிறப்புடையதாகத் திகழ்கிறது.

முற்காலத்தில் வீடுகளில் கூட அன்ன விளக்குகள் வைக்கப் பட்டிருந்தன. இப்பொழுது வீடுகளில் அன்ன விளக்குகள் வைக்கும் வழக்கம் அடியோடு அகற்றப்பட்டு விட்டது. அன்னம் வைக்கும் விளக்குகள் பிரமன் கோயிலுக்கே உரியது. தமிழ்நாட்டிலே பிரம னுக்குக் கோயில் இல்லாததால் அன்ன விளக்குகள் எல்லாக் கோயி லிலும் இடம் பெற்று விட்டன என்று கருத இடம் உண்டு.

அன்ன விளக்குகள் திருமகள் கோயிலிலோ, திருமகள் அருகிலோ இருப்பது மிகப் பொருத்தமானதாகும்.

முருகன் கோயிலின் உச்சியில் மயில் உருவம் வைத்த விளக்கு களே வைக்கப்பட்டுள்ளன. கோழி உருவம் உள்ள விளக்குகளும் வைக்கலாம்.

சில இடங்களில் கிளி உருவமுள்ள விளக்குகள் வைக்கப்பட் டுள்ளன. கிளி எல்லாப் பெண்களுக்கும் விருப்பமான பறவையாய் இருப்பதால் எல்லாத் தேவிகளும் கிளியை விரும்புவார்கள் என்ற எண்ணத்தில் எல்லாக் கோயிலிலும் கிளி விளக்குகள் இடம் பெற்றுள்ளன என்று எண்ணுகிறேன்.

அன்னத்தின் சிற்ப அழகை மதித்து எல்லாக் கோயில்களிலும் அன்ன விளக்கைப் பிடியமுடன் வைத்திருக்கிறார்கள் என்று எண்ண இடமுண்டு.

சில வட இந்திய விளக்கு ஆராய்ச்சிக்காரர்கள் நமது குத்து விளக்குகள் மரத்தைப் போன்று நேரான நடுத் தண்டிலிருந்து பிரியும் பல கிளைகளைக் கொண்டு ஒவ்வொரு கிளையின் நுனியிலும் ஓர் அகலை ஏத்தி நிற்கும் விளக்குகளாகச் செய்யப்பட்டன என்று கூறுகின்றனர்.

முதன் முதலில் கைவிளக்குகள் அரும்பின. அப்பால் மக்கள் ஏடுகளைப் படிப்பதற்கோ தங்களின் தொழில்களைச் செய்வதற்கோ கைவிளக்கு உயரத்தில் இருந்தால் நல்லது என்று எண்ணியிருக்க லாம். எனவே கைவிளக்கை ஒர் உயரமான கம்பிலோ, கல்லிலோ வைத்திருக்கலாம்.

அப்பால் அக் கைவிளக்கை நீண்ட கம்பில் இணைத்திருக்க லாம். ஒரு கம்பின் மீது கைவிளக்கு வைத்து அவ்வெளிச்சத்தை உபயோகிக்கும் அவசியம் அதிகம் ஏற்பட்டிருக்கலாம்.

அதன் பிறகு குத்துவிளக்கு ஏற்பட்டிருக்கலாம். குத்துவிளக்குத் தோன்றி நீண்ட காலத்திற்குப் பின்னர், திருவிழா, திருமணம் போன்ற காலங்களில் அதிகமான வெளிச்சம் தேவைப்பட்டதால் குத்து விளக்கில் சில கிளைகள் வைத்துப் பெரிய கிளை விளக்குகள் உருவாக்கியிருக்கலாம்.

இந்தக் கிளை விளக்குகள் நாளா வட்டத்தில் நூற்றுக்கணக் கான கிளைகளையும் அகல்களையும் உடைய மாபெரும் கிளை விளக்காகப் பரிணமித்திருக்கலாம்.

பின்னர், சிற்பிகள் தம் கற்பனைத் திறத்தால் பல்வேறு விதமாக அழகுபடுத்தியுள்ளார்கள். ஒவ்வொரு அகலின் மீதும் அன்னம் வைத்திருக்கின்றார்கள்.

கிளைகளின் மீதுள்ள அகலினின்று சங்கிலிகளை அமைத்து அதன் கீழ் அகல் விளக்குகளைத் தொங்கவிட்டுள்ளார்கள்.

இந்தக் கிளை விளக்குகளில் ஒரு தட்டு, இரு தட்டுகள் முத் தட்டுகள் நாற்றட்டுகள் அமைத்து ஒவ்வொரு தட்டிலும் மூன்று நாலு கிளைகளை அமைத்து ஒவ்வொரு கிளைக்கும் பல அகல் களைப் பொருத்தியுள்ளார்கள்.

இந்தக் கிளைவிளக்குகளில் அடுக்கடுக்காய்ப் பல கிளைகளை யும் ஒவ்வோர் கிளையிலும் பல பிரிவுகளை அமைத்து ஒவ்வொர் அகலிலும் பல திரிகள் இருக்கும் படியாக அமைத்திருக்கின்றார்கள்.

ஒரு விளக்கில் நூற்றுக்கணக்கான திரிகள் சுடர் விட்டு ஜெகஜோதியாக விளங்குகிறது. இதைத் திருமண விளக்கு என்று தமிழர்கள் கூறுகின்றார்கள்.

இத்தகைய விளக்குகள் வடநாட்டிலும் உண்டு. இது அத்துணை அழகும், சிறப்பும், கிளைகளும் உடையதன்று. இதனை அவர்கள் விருட்ச விளக்கு என்ற கூறுகின்றார்கள். வட மொழியில் இது 'தீப விருக்ஷ' என்று கூறப்படுகிறது. இதற்கும் நமது தமிழ் நாட்டுத் திருமண விளக்கிற்கும் எள்ளளவும் சம்பந்தம் கிடையாது.

**மூன்றடுக்கு கின்னரிக் கிளைவிளக்கு**

திருமண விளக்கைப் போன்று இந்தக் கின்னரி விளக்கும் மிகப் பெரிய விளக்கேயாகும். அழகிலும் சிற்பச் சிறப்பிலும் அதற்கு ஒப்பானதேயாகும். அதைப் போல் இதுவும் மூன்று அடுக்கு விளக்குகளையுடையதேயாகும்.

இதில் திருமண விளக்கைப் போன்று தொங்கும் சங்கிலி விளக்குகள் இணைக்கப்படவில்லை. எனவே இதை விட திருமண விளக்கில் அதிகமான வெளிச்சத்தைப் பெற முடியும்.

வேடிக்கையாகக் கூறுவதானால் இரண்டும் திருமண விளக்கே யாகும். ஆனால் திருமண விளக்கு ஆண்விளக்கு, கின்னரி விளக்கு

படம் **24.** கின்னரிக் கிளை விளக்கு



படம் **26.** கமலக் கிளை விளக்கு



படம் **25.** அன்ன லட்சமி கிளை விளக்கு



பெண் விளக்கு என்று கூறி விடலாம். தோற்றத்தில் இது திருமண விளக்கினும் கம்பீரமாகக் காணப்படுகிறது. உயரத்தில் கூட அதைவிட இது சிறிதாவது உயரமாகவே இருக்கும்.

இவ் விளக்குப் பித்தளை அல்லது வெண்கலத்தால் வார்க்கப் பட்டதாகும். இது சுமார் 6 அடி உயரம் இருக்கும். பாதம் வட்ட மாகவும் உறுதியாகவும் செய்யப்பட்டிருக்கிறது.

நடுத் தண்டு மிக அழகாக வார்க்கப்பட்டு எழில் பெறக் கடையப்படிருக்கிறது.

உச்சியில் 9 முகமுள்ள தகழியும், மேலே அன்னத்தின் உடலும் மனித முகமும் உள்ள ஒரு உருவம் பொறிக்கப்பட்டிருக்கிறது.

இதை அன்ன லட்சுமி என்றும் கின்னரி என்றும் கூறுகி றார்கள். ஒன்றின் மீது ஒன்றாக மூன்று அடுக்குகள் காணப்படு கின்றன. ஒவ்வொரு அடுக்கிலும் ஆறு ஆறாகப் பதினெட்டுக் கிளை களும் ஒவ்வொரு அகலாக 18 அகல் விளக்குகளும் முதல் இரண்டு தட்டிலும் ஒவ்வொரு தகழிக்கும் மேலே நடு மையமாக ஒரு அன்னம் வீதம் 18 அன்னங்களும் அழகுறப் பொலிகின்றன. (படம் 24 பார்க்க)

மேலே ஒரு தட்டிலுள்ள ஆறு கிளைகளில் ஒவ்வொரு சந்திர ஹாரமாக 6 சந்திரஹாரம் காணப்படுகின்றன. அன்னம் காணப்பட வில்லை. அன்னத்திற்குப் பதில் சந்திரஹாரம் காணப்படுகிறது.

மூன்றாவது தட்டில் ஏன் அன்னத்திற்கு இடம் அளிக்கப்பட வில்லை என்பது புலப்படவில்லை. இவ்விளக்கில் வேலைப்பாடுகள் மிக நன்றாகக் காணப்படுகின்றன. சிற்பச் சிறப்பு போற்றற்குரிய முறையில் திறம்படச் செய்யப்பட்டிருக்கிறது.

தமிழகத்தில் உள்ள இவ் விளக்கு மிகப்பெரிய விளக்கு என்பது மட்டுமல்ல அழகிய விளக்கு என்றும் தைரியமாகக் கூறமுடியும்.

**அன்ன வடிவ லட்சுமி விளக்கு**

அன்ன வடிவ லட்சுமி விளக்கு மிக நுண்ணிய வேலைப் பாடுகள் நிறைந்தது; இது இங்கு காட்டப்பட்டிருக்கும் ஏனைய விளக்குகளைவிட மிகக் கவனமாகச் செய்யப்பட்ட திருவிளக் காகும். (படம் 25 பார்க்க)

நமது சிற்பிகளின் சிறந்த வேலைப்பாட்டை எடுத்துக் காட்டுவதற்கு இத்தகைய விளக்குகள் ஒரு நல்ல எடுத்துக்காட்டாக இலங்குகின்றன. இத்தகைய விளக்குகளில் ஒன்று சென்னைத் தொல் பொருட்காட்சி சாலையிலும் இருக்கிறது.

சுருண்டு மூன்று கிளைகளைப் போன்று அமைக்கப்பட்டு அழகிய கால்களால் அடிப்பாகம் (பாதம்) தாங்கிக் கொண்டு இருப்பது போல் வளர்க்கப்பட்டிருக்கிறது. இந்த அடிப்பகுதியாகிய பாதத்தினின்று இரு கிளைகள் எழுந்து ஒவ்வொன்றின் மீதும் எழில்

ததும்பும் இளம் பெண் ஒரு கையில் அகல் விளக்கைப் பிடித்து நிற்பது போல் காணப்படுகிறது.

பாதத்தின் மேல் நடுவில் இரண்டு இறக்கைகளையுடைய ஆண் சிங்கம் தன் முதுகின் மீது விளக்கின் நடுத்தண்டைத் தாங்கிக் கொண்டு நிற்பது போல் இருக்கிறது. நடுத்தண்டின் மேலே தகழி காணப்படுகிறது.

நடுத் தண்டின் மேல், பின் பக்கத்திலுள்ள இரு கால்களை ஊன்றிக் கொண்டு தகழியைச் சிங்கங்கள் தாங்கி நிற்பது போல் காணப்படுகிறது.

தகழியின் நடுவிலிருந்து ஒரு தண்டு உயர்ந்து செல்கிறது. மேலே அன்னம் அழகொளிரக் கெம்பீரமாகக் காட்சி அளிக்கிறது. அன்னத்தின் மீது பதும பீடத்திலே திருமகள் ஒய்யாரமாக உட்கார்ந்து கொண்டிருக்கிறாள்.

இதைப் போன்ற திருவிளக்குகள் பல வகையினும் சிறந்து விளங்குகிற, மிக முக்கியத்துவம் பெற்ற விளக்காக மதிக்கப்படு கின்றன. இது, தமிழர் பாணியில் அணி செய்யப்பட்டும் மறுமலர்ச்சி பெற்றும் எழுந்த அரிய புது விளக்காகும்.

இதனை மிக நன்றாக, இயன்ற அளவு அனுதாப உணர்ச்சி யோடு அலசி ஆராயலாம். ஏன்? இவ்விளக்கின் முழு வடிவமும் திருப்தியற்றும், உவப்பற்றும் இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க லாம்.

அழகு, ஒரு பொருளின் உயர்ந்த தன்மையைப் பொறுத்து அமைவதில்லை. எந்தச் சிக்கலான பணியிலும் ஒரு பகுதிக்கு மற்றொரு பகுதி தகுதியும் பொருத்தமும் உடையதாக இருப்பதை ஆராய்ந்தே அது அதிக அழகு உடையது என்று தீர்மானிக்கப்பட வேண்டும். இந்த மூல சூத்திரம் இங்கு முழுவதும் கையாளப்பட்டு வருகிறது. நாம் அதன் பகுதிகளைப் பற்றி அவ்வளவாகக் குற்றம் காண முடியவில்லை; ஆனால் அதில் ஒன்றுக்கு ஒன்றுள்ள தொடர்பு நல்ல பொருத்தம் இல்லாதிருத்தல், தகுதிக் குறைவு ஆகியவைகளைச் சொல்லித்தான் ஆக வேண்டும்.

இங்கு காட்டப்பட்ட விளக்குப் படத்தைப் போன்று கால்கள் உறுதியுடையவைகளாக இருந்தால் நமக்கு எவ்வித ஆட்சேபமும் இல்லை. அதோடு அடியில் இருக்கும் பாதத் தட்டு மிக முக்கியமான தாகும். அதில்தான் விளக்கின் பகுதி அனைத்தும் பொருந்தியிருக் கின்றன. நடுத் தண்டு அதன் மீதே ஒரு சிறிதும் சாயாமல் செங்குத்தாய் நிமிர்ந்து நிற்கிறது. ஏனைய விளக்கின் பாதங்களிலுள்ள கால்களை விட இக் கால்கள் மிகப் பொருத்தக் குறைவாக இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் திருவிளக்கில், சிங்கம், நடுத்தண்டு, தகழி ஆகியவை களை ஒரு எல்லைக்குட்படுத்தி அமைத்தது சிற்பிகளுக்கு ஒரு சிரமமான வேலையாகும்.

இத் திருவிளக்கின் தண்டையும் தகழியையும் சிங்கம் தாங்கிக் கொண்டிருப்பது மிக அதிகமான வேலையாகக் காணப்படுகிறது.

பாதத்தோடு இணைக்கப்பட்டிருக்கும் சிங்க உருவம் பார்வைக்கு மிக உறுதியாகவும் மிக மிக விசிராந்தியானதாகவும் காணப்பட வேண்டும். மேலும் பாதத்தினின்று உயர்ந்து, தன் மீது ஏற்றப்பட்ட பாரத்தைத் தாங்கும் உறுதியான நிலை உடையதாயும் இருக்க வேண்டும். அதோடு அதன் இரு முன் முகவாய்க் கட்டை களும் அதன் கீழே போதிய அளவு திறந்தும் விரிந்தும் காணப்பட வேண்டும்.

சிங்கத்தின் முதுகிலிருந்து எழுந்துள்ள விளக்குத் தண்டு மேலும் கீழும் இருக்கும் ஏனைய பகுதிகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் பொருத்தமற்றதாயும் குட்டையானதாயும் காணப்படு கிறது. அது விளக்கின் இணைப்பில் ஒரு பகுதியாக இருக்கிறது. ஆனால் அதன் நிலையும் உபயோகமும் மிகப் பெரிய முக்கியத்தும் வாய்ந்தவைகளாக இருக்கின்றன. சிங்கத்தின் முதுகின் மீது இணைப் பட்டிருக்கும் தண்டு அதிகமாக அதன் மீது நிலை நாட்டப்பட்டுச் சிங்கத்தின் இறக்கைகளால் மறைக்கப் பட்டிருந்தால் மிக நன்றாக இருந்திருக்கும்.

விளக்கின் அடுத்த உறுப்பான தகழி, குறள் வடிவமாகச் சிங்கத் தின் உருவத்தோடு இணைந்து அதன் கீழே பெரிதும் புடைத்துக் கொண்டிருக்கிறது என்றாலும் அதனுடைய மிகச் சிறந்த பயன் உறுதியாக அதற்கு அனுகூலமாக இருக்கிறது.

தகழிக்கு மேல், உயரத்தில் தனது வாலை உயர்த்திக் கொண்டு ஒய்யாரமாக நிற்கும் ஓதிமப் பறவை மீண்டும் தகழியில் இருக்கும் எண்ணெயை உறிஞ்ச நிற்கிறது.

புதிய தோற்றத்தில் அமைக்கப்பட்ட இத் திருவிளக்கு 5-வது எண் இடப்பட்ட விளக்கை முன் மாதிரியாக வைத்து வார்த்திருந் தால், அழகு பொலிய விளங்கி இருக்கும். சிற்பிகளின் உள்ளத்தைக் கவர்வதாய் காட்சி அளித்திருக்கும்.

### தாமரை மலர்க் கிளைவிளக்கு

தாமரை மலர் விளக்கு என்று கூறப்படும் கிளை விளக்குகள் ஆடம்பரமாக இல்லாவிட்டாலும், ஏனைய கிளை விளக்குகளைப் போல் பெரியனவாக இல்லாவிட்டாலும் கச்சிதமாக இருக்கும்.

பாதம் தண்டையும் கிளைகளையும் தாங்கச் சக்தியுடையதாகப் பெரிதாக அமைப்பட்டிருக்கிறது. உயரம் நாலரை அடி இருக்கும்.

ஒன்றின் மேல் ஒன்றாக மூன்று அடுக்காகக் கிளைகள் காணப்படு கின்றன.

அடித்தட்டில் முதன் முதலாக 6 கிளைகள் உள்ளன. ஒவ் வொரு கிளையிலும் தாமரைப் பூப்போல் கிண்ணங்கள் எண்ணெய் வார்ப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளன.

நடுவில் முட்டையைப் போன்று பொகுடு காணப்படுகிறது.

இவ்வாறு மூன்று தட்டிலும் 18 கிளைகளுக்கும் 18 தகழிகளும் ஐந்து முகங்களுமாக 120 திரி முகைகள் உண்டு.

இது 120 திரிகள் போட்டு எரியத் தக்கனவாக இருக்கிறது.

மேலே மற்ற விளக்குகளுக்கு இருப்பதுபோல் தகழி இல்லை. அன்னப் பறவை மட்டும் அழகாக அமர்ந்து கொண்டிருக்கிறது. தோற்றத்தில் இவ்விளக்கு கற்பூரத் தட்டு விளக்கைப் போல் காட்சி அளிக்கிறது.

இந்த விளக்கும் ஒரு அபூர்வமான விளக்கேயாகும். இஃதன்றி 12 கிளைகளும் ஒவ்வொரு கிளைக்கும் ஒரு தகழியும் தகழியின் நடுவில் ஒரு சிறிய அன்னமும் உள்ளவையாகவே வார்க்கப்பட்ட பல பித்தளை, வெண்கலக் கிளை விளக்குகளும் உண்டு. இவைகள் எண்ணிக்கையில் மிக மிகக் குறைவு. (படம் 26 பார்க்க)

இஃதன்றி மரவிளக்கு (விருட்ச விளக்கு) என்று ஒரு வகை விளக்கு உண்டு. இது பித்தளையால் செய்யப்பட்டது. கிட்டத்தட்ட நாலரை அடி உயரமுள்ளது.

இது தமிழ்நாட்டு விளக்குகளில் மிகவும் கவர்ச்சி தரக்கூடிய விளக்காகும். இதன் தண்டையும் அமைப்பையும் கொண்டு வட மொழி நூல்களில் 'தீப விருக்ஷ' என்று கூறப்படுவதால் இது, இவ் விளக்கிற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக இருக்கலாம் என்று எண்ண இடந்தருகிறது. இது துர்ஹாம் மாதா கோயிலில் இருக்கும் 'கன்னியின் விளக்கு' என்ற ஒரு பிரசித்தி பெற்ற விளக்கை நினைப் பூட்டுகிறது.

நடுத் தண்டினின்று பிரிந்துள்ள கிளைகளின் இறுதியில் வரிசையாக அமைந்திருக்கும் சிறு கிண்ணங்கள் 7 விதமான பந்தியாக 108 விளக்கிற்குரிய திரிகள் இடுமாறு அமைக்கப்பட் டுள்ளன.

அடியில் உள்ள பாதத்தில் நான்கு சிறு பாம்புகள் விளக்கு களுக்குக் காவற்காரர்களாக நிற்பதுபோல் காணப்படுகின்றன.

பாம்புகள் சிவபெருமானுடைய சின்னமாகக் கருதப் படுகின்றன.

இத்தகைய விளக்குகளில் ஒன்று சிவபக்தரால் திருவாங்கூரைச் சேர்ந்த வலைப்பள்ளிச் சிவன் கோயிலுக்குக் காணிக்கையாக

அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இத்தகைய விளக்குகள் இன்று தமிழ் நாட்டில் மிக அபூர்வமாகவே காணப்படுகின்றன.

வங்கக் கலை மேதையும் 'ரூபம்' என்ற ஆங்கிலத் திங்கள் கலை இதழை 40 ஆண்டுகளுக்கு மேலாக நடத்தி வருபவரும் விளக்கு ஆராய்ச்சியில் தலை சிறந்த பேராசிரியருமான திரு.ஓ.சி. கங்கூலி அவர்கள் தமது தள்ளாத முதுமைப் பருவத்திலும், கலை ஆராய்ச்சியைத் தொடர்ந்து விடாது ஆற்றிவரும் பெரியாராவர். அவர் கண்ட விளக்குகளில், அவரது உள்ளத்தைக் கவர்ந்த விளக்குகள் சில. அவைகளில் இந்த விருட்ச விளக்கு ஒன்றென மொழிகின்றார்.

இங்கிலாந்து வரை இந்த விளக்கின் புகழைப் பறைசாற்றி யுள்ளார் அறிஞர் கங்கூலி.

இத்தகைய விருட்ச தீபங்கள் ஹைதராபாத்திலும் உண்டு. அது நாம் முன்னர் காட்டிய திருமண விளக்கைப் போலவே காணப் படுகிறது. இதன் பீடம் கல் அல்லது மரத்திலே செய்யப் பட்டிருக் கிறது. இது தமிழகத்தில் காணப்படும் விளக்குகளுக்கு ஒப்பாகக் கூறக் கூடியதன்று.

இதை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுதுதான் தமிழகச் சிற்பிகள் அறிவும் ஆற்றலும், அழகை அற்புதமாக வடித்துக் காட்டும் அரிய கரங்களின் மகோன்னதமான திறனும் நன்கு புலனாகிறது. இத்தகைய விளக்குகளில் ஒன்று இந்திய அரசாங்க வெளியீடாகிய 'இந்திய விளக்குகள்' என்ற நூலில் கூட இடம் பெற்றுள்ளது.

## தூக்கு விளக்குகள்

*கிரேக்க நாட்டுக் கோயில்களில் மாலை வேளையில் விளக் கேற்றப்பட்டு இரவு முழுவதும் விளக்குகள் எரிவதற்குப் போதுமான எண்ணெய் நிரப்பப்பட்டிருந்தது என்று ஹெரோ டோட்டஸ் என்ற கிரேக்க வரலாற்று ஆசிரியர் எழுதுகின்றார்.*

*எகிப்தில் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மக்கள் விளக் கீட்டு விழா கொண்டாடியுள்ளார்கள். அங்கு வெண்கலம், செம்பு முதலிய உலோகங்களால் செய்யப்பட்ட விளக்குகள் இருந்தனவாம்.*

*இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உரோம் நாட்டில் ஒரு பெண் ஒரு கையைக் கீழே தொங்கப் போட்டுக் கொண்டு ஒரு கையை மேலே உயர்த்திக் கையில் ஒரு விளக்கைப் பிடித்துக் கொண் டிருப்பது போல் ஓர் உலோக விளக்கு இருந்ததாம்.*

*அன்ன விளக்கும் புறா விளக்கும் அங்கு இருந்ததாகவும் கூறு கிறார்கள். காளையின் தலை, சிங்கமுகம் போன்ற பற்பல வேடிக்கை யான வடிவங்களில் விளக்குகள் இருந்தன என்றும் கூறப்படுகிறது.*

*சுமேரியா, அசீரியா, கல்தேயா (சால்டியா) முதலிய இடங்களில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்களால் அகழ்ந்தெடுக்கப்பட்ட களிமண் விளக்குகள் ஒன்பதாயிரம் ஆண்டுகளுக்கு முந்தினவை களாக இருக்கலாம் என்று அபிப்பிராயப்படு கின்றார்கள்.*

*மொகஞ்சதாரோவில் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நமது முன்னோர்கள் சுடு மண் விளக்குகள், உலோக விளக்குகள் முதலியவைகளை உபயோகப்படுத்தியிருக்கின்றார்கள்.*

*பொனிஷியர்கள் எண்ணெய் விளக்குகளை மட்டுமல்ல, மெழுகுவர்த்தி விளக்குகளையும் கி.பி. 400ஆம் ஆண்டில் கண்டு பிடித்துள்ளார்கள்.*

*தமிழர்கள் சுமார் 4000ஆம் ஆண்டுகளுக்கு முன்னரே பொனி ஷியர்களோடு வணிகத் தொடர்பு கொள்ள ஆரம்பித்து விட்டனர்; 2000 ஆண்டுகளுக்கு முன்னரே உரோமர்கள், கிரேக்கர்கள், அரேபி யர்கள் போன்ற அயல் நாட்டாரோடு வணிகத் தொடர்புகளும் அரசியல் தொடர்புகளும் கொண்டிருந்தார்கள்.*

*1000 ஆண்டுகளுக்கு முன்னரே ஈழம், மாப்பாளம், சிங்கப்பூர், மலையம், சாவகம், சுமத்திரா, தாய்லாந்து, கம்போடியா முதலிய வெளிநாடுகளுடன் தமிழர்கள் வணிகம் நடத்தி வந்தனர்.*

வெளிநாட்டுக் கப்பல்கள் பல, அணி அணியாய்த் தமிழ் நாட்டுத் துறைமுகங்களில் வந்து குவிந்து தங்கள் நாட்டிலிருந்து கொண்டு வந்த பண்டங்களை இறக்கி இங்குள்ள முத்துக்கள், சந்தனக் கட்டை, மிளகு, ஆட்டு ரோமம், ஏலம், கிராம்பு, கருவாப் பட்டை, மயிலிறகுகள் மெல்லிய துணிகள் போன்ற பொருள்களை ஏற்றிக் கொண்டு போயின. இதனால் ஏராளமான பொற் கட்டிகளும் பொற் காசுகளும் தமிழ்நாட்டில் வந்து குவியலாயின. அந்நிய நாட்டுத் தொடர்பினால் தமிழர்களின் மொழியும் கலைகளும் மறுமலர்ச்சியுற்றன.

கி.மு. 20ஆம் ஆண்டில் பாண்டிய நாட்டில் பேரரசு செலுத்தி வந்த முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்டியன் உரோமா புரியை ஆண்டு வந்த அகஸ்டஸ் சீஸர் என்னும் மன்னனிடம் தன் அரச தூதரை அனுப்பினான். பாண்டியநாட்டு அரசதூதர், பாண்டியன் உரோமச் சக்கரவர்த்திக்குப் பரிசாக அளித்த பல அரிய பொருள்களை அவரிடம் அளித்தார். அவர் கண்டு களித்தார்.

உரோமாபுரி அரசர் பாண்டிய நாட்டுத் தூதரை வரவேற்று உபசரித்து அவரோடு வணிக ஒப்பந்தம் புரிந்து கொண்டதோடு பாண்டிய அரசருக்குப் பல அரிய பொருள்களைப் பரிசாக அளித் தார் என்று ஸ்டிராபோன் என்ற வரலாற்று ஆசிரியர் குறிப்பிடு கின்றார்.

கொற்கை முத்து, பொதிகைச் சந்தனம், துறையூர்த்துணி, பழனிமயிலிறகு, மதுரை விளக்கு இன்னோரன்ன பொருட்கள் பல யவனநாட்டு மக்களின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன. இதன் பய னாக அயல் நாட்டிலிருந்து பொற்காசுகள் கோடி கோடியாய் தமி ழகத்தில் வந்து குவிந்தன. அயல் நாட்டு மக்களோடு அரும்பெரும் நட்பு வளர்ந்தது.

பாண்டிய நாட்டுப் படையில் பல யவன வீரர்கள் பணி யாற்றினர். பாண்டிய மன்னரின் மெய்க்காப்பாளர்களாகப் பல உரோம நாட்டுப் பெண்கள் வேலை பார்த்து வந்தனர்.

மதுரை யருகிலும் கொற்கையிலும் காவிரிப்பூம் பட்டி னத்திலும் முசிறியிலும் யவனர்கள் பலர் குடியேறினர். இப்பட்டினங் களில் பல யவனர் வீதிகள் இருந்து வந்தன.

இன்று கூட அவர்கள் குடியேறியிருந்த பகுதிகளில் ஏராள மான உரோம் நாட்டு, அரபிய நாட்டுக் காசுகள் கிடைக்கின்றன.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுவரை தமிழகத்தோடு உரோமர்கள் தொடர்பு அதிகமாக இருந்ததற்கு அந்நாட்டுக் காசுகள் இன்றும் சான்று பகர்கின்றன. கி.பி. இரண்டாவது நூற்றாண்டு வரை சோழர்களின் தலைநகராய் இருந்த காவிரிப்பூம் பட்டினத்திற்கு அருகேயுள்ள காவிரியாற்றின் வடகரையில் கிரேக்கர்கள் குடி

யிருந்து வந்தனர். இந்த வரலாற்றை வங்காளத்துப் பேரறிஞரும் வரலாற்று ஆசிரியருமான திரு. இராதா குமுத்முகர்ஜி என்பவர் 'இந்தியக் கப்பல் தொழில்' என்ற நூலில் நன்கு விவரித்துள்ளார். அது வருமாறு

'பட்டினம் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. கடற்கரையை அடுத்திருந்த ஒரு பகுதிக்கு மருவூர்ப் பாக்கம் என்று பெயர். மருவூர்க்பாக்கத்தின் கடற்கரையருகிலுள்ள பெருவழிச் சாலையின் இருமருங்கிலும் மக்கள் நடந்து செல்லத்தக்க உயர்ந்த தளங்கள் உள்ளன. கடற்கரை அருகில் பண்டகசாலைகளும் மாளிகைகளும் இருந்தன. பண்டங்கள் கப்பலை விட்டு இறங்கி யதும் பண்டகசாலையில் இறக்கி வைக்கப்படும். அருகே யவன வணிகர்களின் இல்லங்கள் இருந்தன. விற்பனைக்காக யவன நாடு களிலிருந்து அரும்பெரும் பண்டங்களெல்லாம் இறக்குமதி செய்யப் பட்டன! இங்கு பல்வேறு மொழிகளைப் பேசும், கடல் கடந்து வந்துள்ள அயல்நாட்டு வணிகர்களின் வீடுகளும் உள்ளன.

சிலப்பதிகாரம், நெல்நல்வாடை, மணிமேகலை போன்ற பழந் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் விளக்குகள் இங்கு குடியேறிய உரோமர்கள், கிரேக்கர்கள், பொனிசியர்கள் போன்றவர்களால் தமிழகத்திற்குக் கொண்டு வரப்பட்டு இங்கு விற்பனை செய்யப்பட் டிருக்கலாம். அல்லது மன்னர்களுக்கும், மாபெரும் வணிகர் களுக்கும் பரிசாக அளிக்கப்பட்டு இருக்கலாம். அதைக் கண்ட தமிழ்நாட்டுச் சிற்பிகள் அவ்விளக்கைக் கண்டு அதில் சில மாற்றங் களுடன் தமிழ்நாட்டின் பண்புக்கேற்றவாறு ஒருசில திருவிளக்கு களை உருவாக்கி இருக்கலாம் என்று சில அறிஞர்கள் கருதுகின் றார்கள்.


அப்பால் அவ்விளக்கின் அழகும் சிற்பச் சிறப்பும் மக்கள் உள்ளத்தைக் கவரவே அவர்கள் அதை கோயில்களுக்கு நன்கொடை யாகக் கொடுத்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

கிள்ளி வளவன் என்னும் சோழ மன்னன் காலத்தில் விளக்குகள் முதன்முதலாகத் திருவிழாக் காலங்களில் மட்டும் பயன்படுத்தப் பட்டு வந்ததாக அறிகிறோம். இது மதச்சார்பான சடங்குகளுக்கு ஆரம்பகாலத்தில் பயன்படுத்தப்படவில்லை! அப்பால் தமிழ் நாட்டில், இன்று தீபலட்சுமி விளக்கு என்று கூறப்படும் பாவை விளக்குகளைச் செய்து சமயச் சடங்குகளில் இடம் பெறச் செய்தனர்.

உரோமர்கள் விளக்குகளை ஈமச் சடங்கிற்கு உரிய பொரு ளாகவும் தெய்வங்களை வழிபடுவதற்கான பொருளாகவும் பயன் படுத்தி வந்தனர்.

முற்காலத்தில் கிரேக்கர்கள் தங்கள் கோயில்களுக்கு விளக்கு களைக் காணிக்கையாக அளிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர்.

## தூக்கு விளக்குகள்







படம் 27. சர விளக்கு



படம் 28. நந்தா விளக்கு

தீபஸ் நாட்டைக் கைப்பற்றிய பின்னர் சைம் என்ற இடத்தி லுள்ள அப்பலோ என்ற தெய்வத்திற்கு மகா அலெக்சாந்தர் என்னும் கிரேக்க மன்னன் ஒரு தொங்கும் விளக்கைக் காணிக்கையாக அளித்தான். அதைப் பற்றிப் பிளினி என்னும் வரலாற்று ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறார்.

'புராதனக் கிரேக்கர், உரோமர் விளக்குகளில் பல்வேறு வகையான விளக்குகள் இப்பொழுது கிடைத்துள்ளன. அவைகளில் பொதுவாக அக்காலத்திய தெய்வங்களின் திரு உருவங்கள் தீட்டப் பட்டுள்ளன. சித்திரங்களே பெரும்பாலும் காணப்படுகின்றன. இவ்வகை விளக்குகள் எல்லாம் முற்காலத்தில் கிரேக்கர், பொனி சியர்கள், சுமேரியர்கள் கண்ட களிமண் விளக்குகளையே பெரிதும் ஒத்திருக்கின்றன. எடுத்துக்காட்டாக இங்கிலாந்திலுள்ள தொல் பொருள் காட்சி சாலையில் உள்ள மண் விளக்குகளைப் போல் இருக்கின்றன.'

தூக்கு விளக்கைத் தொங்கு விளக்கு என்றும் கூறுவார்கள். இவ் விளக்கினத்தைச் சேர்ந்ததே தூண்டாமணி விளக்கு, நந்தா விளக்கு, நுந்தா விளக்கு, நொந்தா விளக்கு ஆகியவைகளெல்லாம்.

தூக்கு விளக்கு குத்து விளக்கின் மேற்பகுதியைப் போல் இருக்கும். ஆனால் அதன் பாதம் அகன்று பெரிதாக இருக்கும். மேலே தகழி இருக்கும். ஐந்து அல்லது ஏழு மூக்கு (முகம்) உள்ளதாக இருக்கும். மேலே உச்சியில் தொங்க விடுவதற்குச் சங்கிலி இணைக்கப்பட்டிருக்கும்.

சில விளக்குகளில் உச்சியில் அன்னம் வைத்து அன்னத்தின் முதுகில் சங்கிலி பொருத்தப்பட்டிருக்கும். இந்தச் சங்கிலியின் நுனியில் வளையம் மாட்டப்பட்டிருக்கும். அதையே கூரையின் மேற்பகுதியில் உள்ள வளையத்தில் மாட்டிவிடுவார்கள்.

இந்தத் தூக்கு விளக்கைப் பெரும்பாலும் கடைகளிலும் கோயில்களிலுமே உபயோகப்படுத்துவார்கள். வீடுகளில் பெரும் பாலும் உபயோகப்படுத்துவது இல்லை. (படம் 30 பார்க்க)

இஃதன்றி அடியில் பாதமும் அதற்கு மேலே எண்ணெய் நிற்கும் அகலும் - எண்ணெய்க் கிண்ணமும் உடையதாய் அகலின் இரு பக்கமும் அரை வட்டமாக உருண்டைக் கம்பியோ திருவாசி போன்ற அழகிய சிற்ப வடிவான பிறையோ இருக்கும்.

சில விளக்கில், நடுவே உயர்ந்த குமிழும் அதன் மீது அன்னம் நின்று கொண்டு இருப்பதுபோன்ற அமைப்பும் இருக்கும். அன்னத்தின் முதுகு, பிறையைத் தொட்டு நிற்கும். அதன் மீதே சங்கிலி பொறுத்தப்பட்டிருக்கும்.

தூக்கு விளக்கில் வேறு பல அரிய சிற்ப நுட்பங்கள் பொதிந் திருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இந்தத் தூக்கு விளக்கின்

## தூக்கு விளக்குகள்



படம் 29. சங்கு தூக்கு விளக்கு




படம் 30. சாதாரண தூக்கு விளக்கு



படம் 36. கலங்கரை விளக்கு




படம் 32. தொம்பை தூக்கு விளக்கு




படம் 33. தூண் விளக்கு



படம் 35. ஏழு தட்டுத் தூக்கு விளக்கு



படம் 34. தீபச் சட்டங்கள்



படம் 31. சங்கிலி வால் விளக்கு

காலமும் முடிந்துவிட்டது. என்றாலும் சில பழம் பெரு நகரங்களில் உள்ள வணிகர்கள் இதை ஒரு மங்கலச் சின்னமாக மதித்து உபயோகித்து வருகிறார்கள்.

மின் விளக்குகள் இருந்தாலும் தூக்கு விளக்கை உபயோகித்து வருவதில் ஒரு முக்கியமான விஷயம் அடங்கியிருக்கிறது. எனது நெல்லை மாவட்டத்தைப் போன்ற சில இடங்களில் அதுவும் மழைக் காலங்களில் அடிக்கடி மின் விளக்குகள் அணைந்து விடுகின்றன. சில கடைகளிலும் வீடுகளிலும் ஐந்து நிமிஷம் பத்து நிமிஷம் சில சமயம் கால் மணி, அரைமணி - ஏன்? ஒரு மணி நேரத்திற்கு மேலும் இருளாய் விடுகிறது. சில சமயம் நாள் முழுவதும் மின்சார விளக்கு எரிவதில்லை. அப்பொழுது தூக்குவிளக்கு மிக உபயோகமாக இருக்கிறது.

தூக்கு விளக்குப் போட்டிருப்பவர்கள் மற்றவர்களைப் போல் மிகவும் சங்கடப் படுவதில்லை.

மேலும் சில கடைகளில் சுவாமிகளின் படங்களின் முன்னர் தூக்கு விளக்குப் போட்டிருப்பது அவர்களுக்கு மிக உபயோகமாய் இருக்கிறது. மின் விளக்கு நின்றதும் மெழுகுவர்த்திகளைத் தேடுகிற வர்களோ மண்ணெண்ணெய் விளக்குகளைத் தேடுகிறவர்களோ இல்லை என்று சொல்ல முடியாது.

தூக்கு விளக்குப் போன்று விளங்கும் தூண்டாமணி விளக்கும் அடியில் திரிநிற்கும் மூக்கும் (முகமும்) மேலே எண்ணெய் நிற்கும் தேங்காய் போன்ற கலயமும், அதற்குமேல் மேற்கூரையில் மாட்டத் தக்க சங்கிலியும் உடையதாய் இருக்கும். (படம் 28 பார்க்க)

சில விளக்குகள் அடியில் கைவிளக்கு போன்ற தகழியும் மேலே வட்டமான - எண்ணெய் தேங்கி நிற்கும் கலயமும் அதற்குமேல் குத்து விளக்குத் தண்டைப் போல் காயும் வளைவும், குழைவும் வைத்து அதற்குமேல் அன்னமும் வைத்துச் செய்யப்பட்டிருக்கும். அன்னத் தின் முதுகின் மீது வளையம் பொருத்தப்பட்டிருக்கும். அவ் வளையத்திலிருந்து பித்தளைச் சங்கிலிகள் பூட்டப்பட்டுச் சங்கிலி யின் நுனியில் கொக்கியும் மாட்டியிருக்கும்.

இதில் பல்வேறு வித்தியாசமான விளக்குகள் உண்டு. இத் தூண்டாமணி விளக்கை விட்டு உபயோகத்திற்குப் பெரும்பாலும் உபயோகிப்பதில்லை. கோயிலில் மூலப் படிமங்களின் அருகிலும் வீடுகளிலுள்ள பூசை அறையிலும் இதை அதிகமாகப் பயன்படுத்தி வருகிறார்கள்.

ஜோதி வடிவமான இறைவனை எப்பொழுதும் ஒளிவடிவ மாகவே தெரிசிக்க வேண்டும் என்பது மக்களின் எண்ணம். இறைவன் சந்நிதி இருள் அடைந்துவிட்டால் தம் வாழ்வும் இருள் அடைந்து

விடும்; தம் இல்லமும் மூதேவி அடைந்து விடும் என்பது தமிழ் மக்களின் நம்பிக்கை.

மேலும் சீதேவி அல்லது திருமகள் எப்பொழுதும் ஒளி யிருக்கும் இடத்தையே நாடுவாள். மூதேவி இருள் சூழ்ந்த இடத்தையே நாடுவாள் என்று எண்ணுவதால் இரவு முழுவதும் வீட்டில் விளக் கெரிவது தமிழர்கள் அனைரும் வரவேற்கும் ஒரு நல்ல செயல்; மங்களகரமான ஒரு காரியம்.

குழந்தை பிறந்ததும் எவ்வளவு ஏழையானாலும் ஒரு நாற்பது நாளைக்காவது விடிவிளக்கு வைத்து வருவது இன்றும் நம் நாட்டில் கண்டு வரும் சம்பவமாகும்.

இந்தத் தூண்டாமணி விளக்கின் மேலுள்ள கலயத்தில் போதிய அளவு எண்ணெய் வார்த்து அடியிலுள்ள மூக்கில் (முகத்தில்) திரியையும் போட்டு விளக்கைப் பொருத்திவிட்டால் விளக்கு விடியும் வரை எரியும். அப்பால் எண்ணெய் வார்த்துத் திரியும் போட்டால் மறுநாள் வரை எரியும்.

இவ்வாறு என்றும் அணையாத தூண்டாமணி விளக்கையே நாம் நந்தா விளக்கு என்று நயம்பட நவில்கிறோம். இந்த நந்தா விளக்கு நமது வீடுகளிலும் கோயில்களிலும் இரவும் பகலும் ஒரு வினாடியும் அணையாது ஒளி செய்து கொண்டு நிற்கிறது. இந்தப் பழக்கம் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, தமிழர்கள் குடியேறியுள்ள ஈழ நாட்டிலும், மலாயா நாட்டிலும், போர்னியோ, பிஜி, அந்தமான் முதலிய நாடுகளிலும் இன்றளவும் இருந்து வருகிறது.

தூக்கு விளக்குகளில் கூட பலவிதம் உண்டு. தமிழர்களின் பண் பாட்டிற்கும் பாரம்பரியத்திற்கும் ஏற்பப் பறவைகள், விலங்குகள், சங்குகள், தெய்வங்கள் போன்ற பலவித உருவங்களை இணைத்து நமது சிற்பிகள் சிற்பச் சிறப்புமிக்க சீரிய தூக்கு விளக்குகளை உருவாக்கியுள்ளார்கள். (படம் 29 பார்க்க)

இத் தூக்கு விளக்குகள் பலகணி, கதவுகள் முதலியவற்றிற்கு மேலேயும் வளைவுகளிலும் முற்றங்களிலும் மண்டபங்களின் நடுவிலும் சங்கிலிகளில் தொங்கவிடப்பட்டிருக்கும்.

மக்கள் கூடும் மண்டபங்களின் நடுவே வெளிச்சத்திற்கு மட்டு மின்றி அழகிற்காகவும் இவைகள் உபயோகப்படுத்தப்படுகின்றன.

இத் தூக்கு விளக்கு வகையைச் சேர்ந்த நந்தா விளக்கின் சிறப்பு நாள் முழுவதும் எரியும் திரிக்கு எண்ணெய் அளிக்கத்தக்க ஒரு பெரும் கலயம் அமைக்கப்பட்டிருப்பதேயாகும்.

இவ்வித விளக்கு பலவித இசைக் கருவிகளின் கோவையைச் சித்திரிக்கும் ஒரு ஓவியம்போல் காணப்படுகிறது.

இத்தூக்கு விளக்குகளை ஒரு பெரிய இசைக் கலைஞன் விருப்பிற்கு ஏற்பப் பல்வேறு விதமாகச் செய்திருப்பதாகக் கருதப் படுகிறது. ஒரு வேளை, உலக இசையில் அவன் உன்னத நிலையைப் பெற விளக்கு அவனுக்கு நினைவு ஊட்டியிருக்கலாம். எனவே அவன் எரிசுடரை ஏற்றும் செயலைப் பரிசுத்தமான செயலாக எண்ணி நடந்திருக்கலாம். அல்லது இசைக் கலைஞன் கலையுலகில் மீண்டும் ஒளிவிடும் ஓர் எரி சுடராய் உலகம் ஏற்றும் நிபுணணாய் விளங்கும் நோக்கத்தைப் பிரதிபலிப்பதாய் இத்தகைய விளக்குகளை உருவாக்கியிருக்கலாம்.

இங்கு, இன்னொரு புதிய விளக்கு காட்டப்பட்டுள்ளது. அதில் தம் குறுக்கை வளைத்து இரு பாதங்களும் தலைமேல் இருக்க இரு கரங்களாலும் தூக்கு விளக்கைப் பிடித்து நிற்கும் கூத்தாடிப் பெண்ணின் கட்டுமஸ்தான உடல் வனப்பு நமது சிற்பியின் கருத்தைக் கவர்ந்ததினால் அவ்வுருவை வைத்து இந்த விளக்கை உருவாக்கி யிருக்கலாம்.

இப் பெண் உருவின் முதுகில் ஒரு நீண்ட முளையெழுப்பி அதன் மீது சங்கிலிகளைப் பிணைத்து உயரே தொங்க விடுவதற்கு ஏற்றவாறு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய உருவ அமைப்பு நாட்டிய நூற்களில் நன்கு காணப்படுகிறது.

விளக்குச் செய்யும் கலை மற்றொரு நுண்கலையின் சிறப்பை யும் எடுத்துக் காட்டும் வண்ணம் அமைப்பட்டிருக்கிறது. அடியில் தூக்கு விளக்கின் தகழியும் அதன்மீது ஒரு பெண்ணின் வடிவமும் அமைப்பட்டுள்ளன.

மற்றைய விளக்குகளில் காணப்படும் அன்னத்திற்குப் பதிலாக இங்கு ஆடற் பெண்ணின் உருவம் தீட்டப்பட்டிருக்கிறது. அப் பெண்ணின் உருவம் சாதாரணமான ஒரு பெண் உட்கார்ந்திருப்பது போன்றோ, நின்று கொண்டிருப்பது போன்றோ தீட்டாது, நாட்டியம் ஆடும் நங்கையின் உருவமாகக் காட்டப்பட்டிருக்கிறது.

ஆனால் இந்த நாட்டிய உருவத்தையும் சாதாரணமாக எல்லோரும் பார்த்திருக்கின்றோம்.

பரத நாட்டியத்திற்கு, அபிநயம் முதுகெலும்பாகும். அபிநயம் நான்கு பிரிவாக பிரிக்கப்பட்டிருக்கிறது. அவை ஆங்கீகம், வாஜீகம், ஆகாரியம், சாத்வீகம் எனப்படும்.

ஆங்கீக அபிநயம், அங்கங்கள், பிரத்தியாங்கங்கள், உபாங் கங்கள், கரணங்கள், அங்காஹாரங்கள், முத்திரைகள் ஆகியவை களால் பாவங்களை விவரிக்கும் முகங்களில் காட்டும் குறி கூட அபிநயத்திலே அடங்கும்.

ஆங்கீக அபிநயம் மூவகைப்படும். அதாவது முகாஜம் (முகக் குறிப்பு) சாரியா (உடலின் நிலை அதாவது கரணங்கள், அங்கா

ஹரங்கள் ஆகியவைகள்) செஸ்ட்டா (அங்கங்கள் உபாங்கள் பிரத்தி யாங்கங்களின் செயல்கள்) என்று நாட்டிய நூற்கள் கூறுகின்றன.

இங்கு கூறப்படும் கரணங்கள் 108 வகைப்படும். இவைகள் சிதம்பரத்திலுள்ள ஆடவல்லான் கோபுரங்களில் கூட - ஏன்? - திரு வண்ணாமலை அருணாசலேசுவரர் கோயிலில் கூடச் சித்திரிக்கப் பட்டிருக்கின்றன.

இந்த நூற்றெட்டுக் கரணங்களில் ஒன்றான கங்காவதாரண கரணநிலையை அடிப்படையாகக் கொண்டு இவ்வுருவம் அமைக் கப்பட்டிருக்கிறது.

இப்பெண்ணின் உருவில் பரத நாட்டிய நூலில் காணப்படும் ஆடற் பெண்ணின் இலட்சணம் ஒன்றும் காணப்படவில்லை. கழைக்கூத்தாடிப் பெண்ணின் உருவம்போல் காணப்படுகிறது.

இத்தகைய விளக்குகள் தமிழ்நாட்டில் சர்வசாதாரணமாகக் காணப்படவில்லை. என்றாலும் தென்னிந்திய விளக்குகள் என்று இந்திய அரசாங்கப் பிரசுரப் பகுதியாரால் வெளியிடப்பட்ட ஒரு நூலில் இவ்விளக்கின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கிறது. அதன் கீழ் ஒரு நாடோடிப் பெண்ணின் உருவம் பொறிக்கப்பட்ட ஒரு தூக்கு விளக்கும் இருக்கிறது. இதன் உயரம் 28 செண்டி மீட்டர். இது தென் இந்தியாவில் 18ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்டது என்றுரு குறிப்பு காணப்படுகிறது. இது போன்ற விளக்குகளைக் காண்பது அரிதினும் அரிது. (படம் 32 பார்க்க)

நந்தா விளக்குகள் தமிழகத்தில் மட்டு மின்றி ஈழ நாட்டிலும் அதிகம் உண்டு. ஏன்? - சாவகத்தில் கூட நந்தா விளக்குகள் உண்டு.

அறிஞர் ஓ.சி. கங்குலி அவர்கள் “இந்திய கலை இதழ்” என்று லண்டனில் இருந்து வெளிவந்த ஒரு சிறந்த கலைப் பத்திரிகையில் 1916ஆம் ஆண்டில் 17வது மலரின் 136-வது இதழில் ஒரு அரிய கட்டுரையை வெளியிட்டுள்ளார். அதில் சாவகத்திலுள்ள ஒரு கின்னரி விளக்கின் உருவப்படத்தைப் பிரசுரித்துள்ளார். அது வெண் கலத்தில் செய்யப்பட்டது. 20 அங்குல உயரம் உள்ளது.

கின்னரி மாதேவர்க்குப் பணிபுரியும் தேவர்களில் ஒருவர். இவர் மனித உடலும் பறவையின் கால்களும் இறக்கைகளும் உடைய ஒரு அதிசயத் தோற்றம் உடையவர். இத் தெய்வம் இந்தியப் பண்பாட்டி னின்றே பிறந்தது.

இந்தியர்களின் சமயச் செல்வாக்கால் சாவகத்திற்கும் இவ் வுருவம் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. இந்த அதிசய உருவத்தை வைத்து ஒரு தூக்கு விளக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கின்னரி இசை உலகைச் சேர்ந்தது. எனவே கின்னரி எப்பொழுதும் ஒரு இசைக் கருவியை ஏந்தி நிற்பது போலவே காட்சியளிக்கும். சில சமயம் ஆண் உருவமுடைய கின்னரர்களோடும் காட்சியளிக்கும்.

கின்னரித் தூக்கு விளக்கு பார்வைக்கு அழகாக இல்லா விட்டாலும் சிறந்த வேலைப்பாடுடையது. இந்தக் கின்னரி தன் இரு கைகளிலும் அகலை ஏந்தித் திருவிளக்குப் பணி புரிகிறது. முகம் பெண் வடிவம் உடையது. இறக்கைகள் விரிந்து உயர்ந்து நிற்கின்றன. அதன் முதுகில் குழி செய்யப்பட்டு அதில் எண்ணெய் தேங்கி நிற்கும்படி செய்யப்பட்டுள்ளன. தலையின் பின் புறமும் வாலின் பின் புறமும் இருந்து கம்பிகள் வளைத்து அதன் மேலே சங்கிலி கோர்க்கப்பட்டு தொங்க விடப்பட்டிருக்கிறது.

இந்த விளக்கும் மிக அபூர்வமான விளக்கேயாகும். இந்தியவில் நான் எங்கும் இந்த விளக்கைக் கண்டதே இல்லை. என்றாலும் இது சாவகப் பண்பாட்டிலிருந்து அரும்பியது இல்லை என்பது எனது கருத்து மட்டுமன்றி, விளக்கு ஆராய்ச்சியில் ஈடுபட்ட இந்தியக் கலைஞர்களின் ஏகோபித்த அபிப்ராயமும் ஆகும்.

இஃதன்றி, கோயில்களின் கருவரை வாயிலில் வெளிச்சத்திற் காகவும் அழகிற்காகவும் சரவிளக்கு போட்டிருக்கிறார்கள். வாயிலின் மேலும் இருப்பக்கங்களிலும் இரும்புக் கம்பியின் மேல் அடுக்கடுக்காய் இடையின்றி தூக்கு விளக்கைப் போன்று சிறு விளக்குகளைப் பிணைத்திருக்கிறார்கள். இரவில் இவ்விளக்குகள் கருவறையின் வாயிலில் அழகுற மிளிர்கின்றது. (படம் 27 பார்க்க)

# தூண் விளக்குகள்

*தூண் விளக்குகள் இருவகைப்படும். ஒன்று கோயில்களில் சுமார் 20 அடி உயரத்தில் உலோகத்தால் செய்த பல அடுக்குகளாலான தூண் விளக்கு. மற்றொன்று கடற்கரையில் தொன்று தொட்டுக் கலங்கள், திசையறிந்து செல்வதற்கேற்ற கலங்கரை விளக்காகும்.*

*தூண் விளக்குகளைத் தமிழ் நாட்டில் காண்பது அரிது. ஆனால் கேரள நாட்டிலுள்ள பெரிய கோயில்களிலெல்லாம் இத்தூண் விளக்குகளைக் காணலாம் கேரள நாட்டின் தலைநகராய் விளங்கும் திருவனந்தபுரத்திற்குச் சென்ற ஆண்டு சென்றிருந்தேன்.*

*நான் எனது இளமைப்பிராயத்திலும் இக்கோயிலுக்கு சென்றிருக்கிறேன். என்றாலும் அன்று காணாத பல புதிய விஷயங்களை இப்பொழுது கண்டேன். ஏன் எனில் நான் இப்பொழுது கலைக் கண்ணோடு கோயிலை நோக்கினேன். பல அரிய விஷயங்களை அறிந்தேன்.*

*சாதாரணமாகக் கேரள நாட்டுக் கோயில்களில் உள்ளது போல் திருவனந்தபுரத்திலும் முன் வாயிலில் மரத்தினால் அமைந்த தட்டுதட்டான ஒரு ஸ்தம்பம் இருக்கிறது. இதுதான் கொடிமரம். மற்றொரு பக்கத்தில் கொடிமரம் போல் உலோகத்தால் செய்த பல அடுக்குகளையுடைய விளக்கையும் அதை வைப்பதற்காகவும் விளக் கேற்றுவதற்காகவும் வைக்கப்பட்டுள்ள பெரிய மர ஏணியையும் கண்டேன்.*

*கருவறையைச் சுற்றிலுமுள்ள பிரகாரத்தில் சுவர் போன்று குறுக்கும் நெடுக்குமாக மரச்சட்டங்கள் அமைத்து அவற்றில் ஆயிரக்கணக்கான, பித்தளை அல்லது இரும்பு விளக்குகளைப் பொருத்தியிருக்கிறார்கள்.*

*இவ்விளக்குகளெல்லாம் எற்றப்பட்டிருக்கும் போது நான் பார்க்கவில்லை. என்றாலும் உற்சவகாலத்தில் இவை அனைத்தையும் பொருத்தினால் எங்கும் ஜெக ஜோதியாய் விளங்கும் என்று கற்பனை செய்து கொண்டேன்.*

*இங்கு லட்சதீபம் என்று ஒரு உற்சவம் நடைபெறுகிறது. ஒருவேளை அதற்காகத்தான் கோயிலைச் சுற்றி இத்துணை விளக்குகளை வைத்திருக்கிறார்கள் போலும் என்று எண்ணிக் கொண் டேன்.*

எண்ணிப்பார்த்தால் நிச்சயம் இலட்சம் விளக்குகள் இருக்கும் என்று தைரியமாகக் கூறலாம்.

திருவனந்தபுரத்திற்கு அடுத்த படியாகச் சிறப்புற்று விளங்கும் கோவில்களில் ஒன்று குருவாயூரிலுள்ள குருவாயூர் அப்பன் கோவிலாகும். இக்கோயிலின் உட்புகுந்தால் கொடி மரத்திற்கு அடுத்தாற் போல் பனை போன்று நீண்டு நிற்கும் தூண் விளக்கு கம்பீரமாக நிற்கிறது. அதையொட்டி நீண்ட ஏணியும் காணப்படுகிறது. (படம் 33 பார்க்க)

கோயிலில் புகும் பொழுதே கருவறையிலுள்ள திருமாலின் வடிவழகு சொட்டும் அற்புதமான தோற்றம் மக்கள் உள்ளத்தைக் கவர்ந்து விடுகிறது. விவரிக்க முடியாத ஓர் இன்பத்தைக் குருவாயூர் அப்பனின் திரு உருவம் அளித்து இதயத்தை நிரப்பிவிடுகிறது.

கோயில் பிரகாரத்தில் கூத்து அம்பலம் என்று கூறப்படும் அரங்கத்தில் புராணங்கள் படிப்பதுண்டு. சில சமயங்களில் கூத்துகளும் நடைபெறும். கூத்து என்பது கதைகளை நடித்துக் காட்டும் நாடகமேயாகும். இது வார்த்தை எதுவும் இன்றி உணர்ச்சி பாவங்களாலே நடித்துக் காட்டும் ஒரு அருங்கலை.

மேலும், அந்நாட்டிலுள்ள கோயில்களில் நடைபெறும் வழிபாட்டில் ஒரு தனித்தன்மை உண்டு. திருமால், சிவன் என்ற வேற்றுமையின்றி இறைவனை வணங்கி, அப்பனே என்று அன்பு பொங்க வணங்கி வழிபடுகின்றார்கள்.

மலைநாட்டுக் கோயில்கள் எல்லாம் பண்டைய திராவிடச் சிற்பத்தை அடிப்படையாகக் கொண்டு, செங்கல்லும் சுண்ணாம் பும் கலந்து கட்டப்பட்ட கோயில்கள் ஆகும். சங்ககாலக் கோயில் களை அடிப்படையாகக் கொண்டு எழுப்பப்பட்டன வாகும்.

இன்றைய தமிழ் நாட்டுக் கற்கோயில்களை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்ட கோயில்களை காண்பது அரிது. ஆனால் அவை திராவிடச் சிற்பமுறையில் அனுசரித்தே கட்டப்பட்டன வாகும்.

கேரளம் பண்டைய தமிழ் நாட்டின் ஒரு அங்கமாக மிளிர்ந்தது என்பதற்கு எண்ணற்ற சான்றுகள் உண்டு. என்றலும் தமிழ் நாட்டிலுள்ள வீடுகளிலும் கோயில்களிலும் காணப்படும் விதம் விதமான உலோக விளக்குகளை இங்கு அதிகம் காண முடியவில்லை. என்றாலும் ஒரு சில அபூர்வமான உலோக விளக்கு களைக் காணமுடியும்.

பெரிய கோயில்களில் கொடி மரத்திற்கருகில் பெரிய தூண் விளக்குகள் இருப்பதைப் போல் சிறிய கோயில்களில் சுமார் 5 அடி உயரத்தில் பெரிய வெண்கல விளக்கும் அதே அடிப்படையில் சிறிய

வடிவில் அடுக்கடுக்காய்த் தீபத்தட்டு போன்று செய்யப்பட்ட திருவிளக்கும் கேரள நாட்டில் உள்ளது.

திருவஞ்சிக் குளத்தில் உள்ள கோயிலில் ஏழு அடுக்குள்ள ஒரு சிறு தூண் விளக்கு உள்ளது. இதில் கமுகு போன்ற ஒரு நடுத்தண்டும் அடியிலிருந்து அடுக்கடுக்காய் ஒன்றின் மேல் ஒன்றாக ஏழுவட்ட மான விளக்குகளும் உள்ளன. அடியில் உள்ள அகலைவிட நுனியில் உள்ளது சற்று சிறிதாக உள்ளது. இது முழுவதும் வெண்கலத்தால் செய்யப்பட்டிருக்கிறது. இவ்விளக்கு கோயிலினுள் புகுந்தவுடன் முதலில் காட்சியளிக்கிறது.

இங்கு சேரமான் பெருமாள் பூசை செய்த ஆடவல்லானின் உருவம் இருக்கிறது. சேரமான் பெருமாள் குதிரை ஏறிக்கொண்டும் சுந்தரர் யானை ஏறிக்கொண்டும் கைலாயத்திற்குச் செல்வது போல் ஒரு சிற்பம் இருக்கிறது.

இஃதன்றிச் சேரமான் பெருமாள் நாயனார் தம் காலத்தில் சிதம்பரத்திலிருந்து சில தேவதாசிகளை அழைத்து இக் கோயி லுக்குப் பணிவிடை செய்யும் படி ஏற்பாடு செய்தாராம். அவர்களின் இனத்தவர்கள் இன்னும் அங்கு இருந்து வருகிறார்கள்.

கேரளத்தின் மற்ற இடங்களில் ஆண்கள் தாம் பூசையின் போது சுவாமிக்கு விளக்கு எடுக்கிறார்கள். ஆனால் திருவஞ்சிக் குளத்துக் கோயிலில் மட்டும் தமிழகத்தைப் போல் தேவதாசிகள் விளக்கு எடுக்கிறார்கள்.

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் முற்காலத்தில் தீபமும் தட்டும் எடுக்கும் உரிமை தளிப் பெண்களாகிய தேவதாசிகளுக்கே உண்டு.

> ***'அட்டதிக் கும்புகழும் ஆலவாய்ச் சொக்கருக்குத்***
> ***தட்டெடுக்கும் தளியிலாள்'***

என்ற விறலிவிடு தூதுக்கண்ணி இதனை உறுதிப்படுத்துவதற்கு உரிய சான்றாகும்.

இத் தூண் விளக்குகளின் அடிப்படையில் அமைக்கப்பட்ட குத்துவிளக்குகள் அழகுற அமைக்கப்பட்டிருக்கின்றன. இதன் அழகினை எண்ணிச் சினிமாப் படங்களில் கூடப் புத்தர் சிலையின் முன் இத்தகைய விளக்குகளை வைத்து ஒரு பெண் வழிபடுவது போல் சித்தரிக்கப்பட்டிருந்தது.

கேரளத்தில் காணப்படும் மிகப்பெரிய தூண் விளக்கைப் போன்ற ஒன்றைத் தமிழ் நாட்டில் மட்டுமல்ல - இந்தியாவில் எங்கும் காண முடியவில்லை. இந்திய அரசாங்க வெளியீடாக 1961ஆம் ஆண்டில் வெளிவந்த 'இந்திய விளக்குகள்' என்ற நூலிலோ, 'விளக்கின் வரலாறு' எனத் திரு. ராபின்சன் அவர்களால் 1939ஆம்

ஆண்டு கிரேட் பிரிட்டனில் வெளியிடப் பெற்ற ஒரு ஒப்பற்ற நூலிலோ இத்தகைய விளக்குகளைக் காண முடியவில்லை. எனவே இந்தத் தூண் விளக்கே உலகில் உயர்ந்த விளக்கு என்று கூறினும் பொருந்தும்.

தூண் விளக்கு சுமார் 20 அடி உயரத்தில் பித்தளையால் செய்யப்பட்ட ஒரு ஒப்பற்ற விளக்காகும். இவ்விளக்குகள் கல்லினால் செய்யப்பட்ட ஒரு பீடத்தின் மீது ஏற்றப்பட்டிருக்கிறது. இதைச் சுற்றி முக்கோண வடிவமாக மூன்று கம்பிகளால் இணைக்கப்பட்ட ஒரு பீடமும் அதன் அருகே ஒரு ஏணியும் வைக்கப்பட்டிருக் கின்றன.

இவ்விளக்கின் நடுத்தண்டைச் சுற்றி சுமார் 12-க்கு மேற்பட்ட தகழிகள் வட்டவடிவமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அதில் எண்ணெய் வார்த்துத் திரியிட்டு விளக்கேற்றுகிறார்கள்.

இவ் விளக்கிலுள்ள 12- அகல்களிலும் 12-படி எண்ணெயாவது வார்க்கப்பட வேண்டும். இவ்விளக்குகளின் அடியில் இருப்பவை விசாலமாயும் மேலே செல்லச் செல்லச் சிறுத்தும் காணப்படுகின்றன.

இரவில் இவ்விளக்கை ஏற்றி விட்டால் சொர்க்கப்பனை போன்று விளக்கு நிற்கும் பிரகாரம் முழுவதும் வெளிச்சந்தரும்.

இவ்விளக்கு, கோயிலின் பிரகாரத்தில் இருப்பதால் அதிகமான காற்று அங்குப் புக இடமில்லை. சிறிய காற்றிற்கெல்லாம் இவ் விளக்கு அசையாது. நன்றாக எரியும் மழை வந்தால் விளக்கு எரியாது. இது வரை மழையால் இவ்விளக்கு பாதிக்கப்படாமல் இருப்பதற்கு எவ்வித ஏற்பாடும் செய்யப்படவில்லை.

இதற்கு அடுத்தபடியாகச் சிறந்து விளக்கும் திருமண விளக்கைப் போன்ற சிறிய தூண் விளக்கு கோயிலினுள்ளே இருப்பதால் அதை மழையோ காற்றோ அசைக்க முடியாது.

இவ்விளக்குகள் பெரியவையாக இருப்பினும் சிற்பிகள் இவற்றை அழகு ஒளிறத் திறம்படச் செய்திருக்கின்றார்கள்.

கேரளத்திற்குப் பண்டைக் காலத்தில் யவனர்களின் தொடர்பு அதிகம் இருந்ததாகத் தெரிகிறது. எனவே கிரேக்க நாட்டுத் தொங்கு விளக்குப் பாணியில் செய்யப்பட்ட விளக்குகள் சில கேரளத்தில் உண்டு என்று கூறப்படுகிறது.

'திருவாங்கூரின் கலைகளும் கைப்பணிகளும்' என்னும் பெய ருடன் கல்கத்தா பல்கலைக் கழகத்தின் இந்தியக் கலைப்பகுதியில், பேராசிரியராய் விளங்கும் டாக்டர் ஸ்டெல்லாகிராமரிஷ், டாக்டர் ஜே. எய்ச். கசின்ஸ், கேரள அரசாங்கப் புதை பொருள் ஆராய்ச்சித் துறை இயக்குநர் திரு.ஆர். வாசுதேவ பொடுவால் ஆகியோர் சேர்ந்து எழுதி, 1948ஆம் ஆண்டு லண்டன் ராயல் இந்திய சொசைட்டியும்

திருவாங்கூர் அரசாங்கமும் கூட்டாகச் சேர்ந்து வெளியிட்ட அரிய நூலில் கிரேக்க விளக்குகளின் பாணியில் அமைந்த ஒரு விளக்கில், கீழே தகழியும் அதன்மீது குதிரையும் குதிரை மீது சவாரி செய்யும் ஒரு தெய்வ உருவமும் காணப்படுகின்றன.

குதிரையின் தலையினின்று சங்கிலி கோர்க்கப்பட்டுக் கூரை யின் முகட்டில் தொங்க விடப்படுவதற்கேற்ற முறையில் செய்யப் பட்ட தொங்கு விளக்காகும் இது. ஆனால் அவ்வாசிரியர்களில் எவரும் கூட இந்த மாபெரும் தூண்விளக்கு மேனாட்டு பாணியில் செய்யப்பட்டது என்று கூறவில்லை.

மேலும் இவ்விளக்கு உருவில் பெரியதாகக் காணப்படினும் சர்வசாதாரணமாய் நமது வீடுகளிலும் கோயில்களிலும் காணப் படும் குத்துவிளக்கின் அடிப்படையிலே செய்யப்பட்டதாகும். இவ்விளக்கு முழுவதும் ஒரே வார்ப்பில் செய்யப்படவில்லை. செய்வ தில் சிரமமும் அதிகம். எனவே சாதாரணமாக நமது நாட்டில் செய்யப்படும் குத்து விளக்கைக் போல் பல துண்டுகளாக வார்த்து ஒன்றாக இணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றே நம்புகிறேன்.

இவ்விளக்கு மலைநாட்டிற் கென்றே உருவாக்கப்பட்டது என்று எண்ண இடமுண்டு. கடலில் உள்ள கப்பல்கள் கலங்கரை விளக்கின் மூலம் பாதை தெரிந்தும் துறைமுகத்தை அறிந்தும் செல்வதைப் போல் மலைநாட்டில் மலைகளில் அங்கொரு வீடும் இங்கொரு வீடுமாய்த் தனித்து வாழுபவர்கள் கோயிலில் விளக் கேற்றியதும் அவ்வெளிச்சத்தை நோக்கித் தத்தம் குடிசையிலிருந்து கோயிலுக்கு வரவே இந்த விளக்கு மிகவும் பயன் தருவதாகுமென்று கருதுகிறேன்.

இதே அமைப்பில் - சுமார் 5 அடி உயரத்தில் வார்க்கப்பட்ட கோயில் விளக்குகள் கேரளத்தில் மட்டுமல்ல; கன்னியாகுமரி மாவட்டத்திலும் காணக் கிடக்கின்றன. இதைப் போன்ற விளக்கு ஒன்று சென்னைத் தொல்பொருள் காட்சி சாலையிலும் இருக்கிறது. (படம் 34 பார்க்க)

இதே அமைப்பில் செய்யப்பட்ட சிறு குத்து விளக்குகள் கேரளத்திலும் கன்னியாகுமரி மாவட்டத்திலும் உள்ளன. இந்த விளக்குகள் வீட்டு விளக்கைச் சேர்ந்தவை.

இவைகள் வெண்கலத்தால் செய்யப்பட்டன. சுமார் 2½ அடி உயரம் இருக்கும். கீழே பாதமும் அதன் நடுவில் விளக்குத் தண்டும் தண்டைச் சுற்றி வட்ட வடிவமாக 4 அல்லது 5- தகழிகளும் உள்ளன.

தண்டில் செய்யப்பட்ட சிற்ப வேலைப்பாடுகள் விளக்கின் சிறப்பை உயர்த்திக் காட்டுகின்றன. இது அழகுத் திருவிளக்குகளில் ஒன்றாகக் கருதப்பட்டு வருகிறது.

*இவ்வித விளக்குகளை நெல்லை, மதுரை, இராமநாதபுரம், திருச்சி, கோவை, தஞ்சை முதலிய மாவட்டங்களில் இதுவரை நான் கண்டதேயில்லை. சென்னை நகரில் இத்தகைய விளக்குகள் காணக் கிடப்பதால் ஒரு வேளை செங்கல்பட்டு மாவட்டத்தில் அதிகம் கிடைத்தாலும் கிடைக்கலாம். இவ்விளக்கில் ஒவ்வொரு தகழியிலும் இஷ்டமான அளவில் திரிகளை இட்டு விளக்குப் பொருத்தலாம் போலும்.*

*இங்கு காட்டப்பட்டிருக்கும் ஒவ்வொரு தகழியிலும் 10, 12 திரிகள் சுடர் விட்டு எரிவது போல் காணப்படுகின்றன. வீடுகளில் இவ்வளவு திரியிட்டு விளக்குப் பொருத்தமாட்டார்கள்.*

*நெல்லை மாவட்டத்தில் வீடுகளில் 4 முகமுள்ள விளக்குத் தான் பெரிதும் உபயோகிக்கிறார்கள். இதில் நான்கு திரிகள் தான் எரியும்.*

*மதுரை மாவட்டத்தில் 5 முகமுள்ள விளக்குகள் உபயோகப் படுத்தப்படுகின்றன. சில இடங்களில் 6 முகங்களும் காணப்படு கின்றன. 4 முகங்கள் ஆறுமுக நயினாரையும் குறிப்பிடுவதாக மக்கள் கருதுகின்றார்கள்.*

*இவ்விளக்குகள் வீடுகளில் நாள்தோறும் உபயோகப்படுவ தில்லை. வீடுகளில் மக்கள் அதிகமாகக் கூடும் விஷேச தினங்களில் மட்டும் உபயோகிக்கப்படுகிறது. நாள் தோறும் உபயோகித்தால் அதிக எண்ணெய் செலவாகும்.*

**கலங்கரை விளக்கு**

*தமிழர் கண்ட விளக்குகளில் பெரியது கலங்கரை விளக்கே யாகும். இது இன்று கேரளாவில் உள்ள கோயில்களில் காணப்படும் தூண் விளக்கைவிட உயர்ந்தது. ஆனால் இவ்விளக்கு கோயிலுக்குப் பயன்படும் விளக்கு அல்ல; இது கடலில் பயணஞ் செய்யும் கப்பலுக்குப் பயன்படும் விளக்கு.*

*கப்பலை ஓட்டும் மாலுமி தொலைவில் வரும் பொழுதே இவ்விளக்கின் ஒளியைக் கண்டு கரை சேரவும் சரியான பாதையில் மரக்கலத்தைச் செலுத்தவும் துணை நிற்கும் விளக்கு இது. இன்று இதனைத் தீபஸ்தம்பம் என்று கூறுகிறார்கள்.*

*பண்டையத் தமிழ் மக்கள் காலிற் பிரிவதோடு கலத்திற் பிரிந்தும் ஆயிரக்கணக்கான மைல் தூரம் ஆழ் கடலைத் தம் மரக் கலத்தினால் தாண்டி வணிகம் செய்து பொருளீட்டி வந்தனர். அன்று "திரை கடலோடியும் திரவியம் தேடு" என்பது அவர்களின் அன்னை மார்கள் அவர்களுக்கு இட்ட ஆணை.*

***'முழங்கு கடறந்த விளக்கு கதிர்முத்த***
***மரம் போழ்ந் தறுத்த கண்ணே ரிலங்குவளைப்***

***பரதர் தந்த பல்வேறு கூலமிருங்கழிச் செரு விற்***
***நீம்புளி வெள்ளுப்புப் பரந்தோங்கு வரைப் பின்***
***வன்கைத் திமிலர் கொழுமீன் குறைஇய***
***துடிக் கட்டுனி யல் விழுமிய நாவாய்'***

*(ம. காஞ்சி 11 : 315 - 323)*

என்று கூறும் மதுரைக் காஞ்சியின் பாடல், தமிழர் கட்டிய அழகிய கப்பல்களில் வணிகர்கள் அலைகடலுக்கும் அஞ்சாது அயல் நாடுகளுக்குப் போந்து முத்து சங்கு வளையல்கள், தானியங்கள், உப்பு, பாசி, பவளம் பதமிடப்பட்ட மீன் முதலியவைகளை விற்றுப் பொருளீட்டி வந்ததை அறிவுறுத்துகிறது.

கடல் கடந்து அயல் நாடுகளிலிருந்து பண்டங்களைக் கலங்களில் ஏற்றிக் கொண்டு வந்த, விரைந்து ஓடவல்ல குதிரைகளும், கீழ் நாட்டிலிருந்து மரங்கலங்களில் வந்த உணவுப் பொருள்களும் கடாரத்தினின்று கலங்களில் ஏற்றி வந்த கணக்கற்ற பொருள்களும் பிறவும் தமிழ் நாட்டு வணிகத்தை அலங்கரித்தன.

***'நீரின் வந்த நிமி பரிப் புரவியும்***
***...... ...... ...... ........***
***ஈழத்துணவும் காழகத் தாக்கமும்***
***அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி***
***வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு'***

என்ற பட்டினப்பாலையின் பாக்களும் இன்னும் நற்றிணை சிலப்பதிகாரம் முதலிய நூற்களின் பாக்களும் தமிழர்களின் கப்பல் வாணிபத்தை எடுத்துக் காட்டுகின்றன.

தமிழ் நாட்டில் கொற்கை, காவிரிப்பூம்பட்டினம், நாகப்பட்டினம், மாமல்லபுரம், முசிறி, உவரி, காயல் போன்ற துறைமுகங்கள் இருந்தன. இங்கு சுங்கச் சாவடிகளும் பண்டகசாலைகளும் யவனச் சேரிகளும் கலங்கரை விளக்குகளும் இருந்தன.

கரையில் கடலை ஒட்டி வானுற வளர்ந்து, பனைமரம் போல் ஏணிக்கும் எட்டா உயர்வுடையனவாய்க் கல்லும் சுண்ணமும் கலந்து கட்டப்பட்ட மாடத்தின் மீது கலங்கரை விளக்குப் பொருத்தப் பெற்றிருந்தது.

இரவில் ஆழ்கடலில் அஞ்சாது செல்லும் கப்பல்கள் கரைகளையும் துறைமுகங்களையும் பாதையையும் திசைகளையும் அறிந்து குறிப்பிட்ட இடத்தை அடைவதற்காக ஆங்காங்கே பல கலங்கரை விளக்குகளைக் கட்டியிருந்தனர்.

***'வான மூன்றிய மதலை போல***
***ஏணி சாத்திய ஏற்றருஞ் சென்னி***

***விண்பொர நிவந்த வேயா மாடத்***
***திரவின் மாட்டிய விலங்கு சுடர் நெகிழ்***
***உரவுநீ ரழுவத் தோடு கலங்கரையும்,'***

என்று பழந்தமிழ் இலக்கியங்களில் ஒன்றான பெரும்பாணாற்றுப் படை கூறுகிறது.

எனவே தமிழகத்தில் கடலிற் செல்லும் கப்பல்களுக்குத் துறைமுகம் இருக்கும் இடத்தை இரவிற்காட்டக்கூடிய கலங்கரை விளக்குகள் இருந்ததாக ஐயமறத் தெரிகிறது. "ஓடு கலங்கரையும்" என்பதற்கு உரையாசிரியர்கள் கடலில் செல்லும் கலங்களை அழைக்கும் விளக்கு என்று பொருள் கூறுகின்றனர்.

'இலங்கு நீர் வரைப்பிற் கலங்கரை விளக்கமும்' என்று சிலப்பதிகாரம் கூறுவது காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள வரலாற்றுப் புகழ் பெற்ற கலங்கரை விளக்கைக் குறிப்பதாகும்.

'கங்குன் மாட்டிய கதிரொண் சுடர், என்று நற்றிணை நயந்து கூறுவது தமிழ் நாட்டிலுள்ள பல துறைமுகங்களில் கலங்கரை விளக்குகள் இருந்தன என்பதை வலியுறுத்துகின்றது.'

தமிழர் கண்ட கலங்கரை விளக்கு அலக்சந்திரியாவில் தாலமி சோதர் அமைத்த வெளிச்ச வீட்டிற்குப் பன்னெடுங் காலத்திற்கு முற்பட்டது. இந்த ஒளிக் கோபுரங்களின் துணை கொண்டு தமிழர்கள் இரவில் சின்னஞ்சிறிய ஓடங்களை மட்டுமன்றிப் பென்னம் பெரிய வங்கம் என்னும் குன்றனைய கலங்களையும் உலகின் நானா திசைகளுக்கும் ஓட்டி வந்தனர்.

கலம் என்ற வார்த்தையே எட்டுத்தொகை நூற்களில் கப்பல் என்ற பொருளில் வழக்கப்பட்டிருக்கிறது. தமிழர்கள் சின்னஞ்சிறு கை விளக்கினின்று மாபெரும் கலங்ரை விளக்கு வரையும் பன்னெடும் காலத்திற்கு முன்பே கண்டுள்ளனர். (படம் 36 பார்க்க)

கேரள நாட்டின் கோயில் பிரகாரங்களில் பலகைச் சட்டங்கள் அடித்து அதில் உலோகத்தால் செய்யப்பட்ட சிறு விளக்குகளைப் பொறுத்தியிருக்கின்றார்கள். பெரிய கோயில்களில் இத்தகைய தீபச் சட்டவிளக்குகள் ஆயிரக்கணக்காக இருக்கலாம். சிறிய கோயில் களில் கூட சுமார் 4-ஆயிரத்திற்கு மேல் இருக்கலாம். இது பெரிய விழாக் காலங்களில் மட்டும் ஏற்றப்படும். (படம் 35 பார்க்க)

## பாவை விளக்கு

*தமிழ்நாட்டு விளக்குகள் அனைத்தும் கலை அழகு வாய்ந் தவைகள் தான். ஆனால் பாவை விளக்குத்தான் தலைசிறந்த அம்சங்கள் பலவும் பெற்ற விளக்காகும். பாவை விளக்கை, திரு விளக்கு நாச்சியார் என்றும் தீப லட்சுமி என்றும் கூறப்படுகிறது.*

*மிகத் தொன்மையான காலத்திலே பாவை விளக்குகள் தமிழகத்தில் இருந்தன என்பதற்குச் சங்க நூற்களில் எண்ணற்ற சான்றுகள் காணப்படுகின்றன. ஆனால், இப்பொழுது நமக்குக் கிடத்திருக்கும் பாவை விளக்குகள் மிகத் தொன்மையான காலத்தில் செய்யப்பட்டவைகள் என்று கூறுவதற்கில்லை.*

*பாவை விளக்குத்தான் எழிலிற் சிறந்த விளக்காக மிளிர்கிறது. நமது வரலாற்றை எடுத்துக்காட்டும் அரிய எடுத்துக்காட்டாக இலங்குகிறது. நமது நாகரிகத்தை, நமது எண்ணற்ற அணிகளின் பெருமையை எடுத்துக்காட்டும் வான் மணியாய்த் திகழ்கிறது. (படம் 36 பார்க்க)*

*எடுத்துக்காட்டாகத் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த வைத்தீஸ்வரன் கோயிலிலும் தஞ்சாவூர் பிரகதீசுவரர் கோயிலிலும், திருவிடை மருதூர், திருக்கோகர்ணம் கோயில்களிலும் காணப் படும் தீபலட்சுமி விளக்குகளை ஆழ்ந்து ஆராய்ந்து பார்க்கலாம்.*

*பாவையின் கட்டுமஸ்தான உடலமைப்பே ஒரு தனி அழகுடன் காணப்படுகிறது. பொன்மலர் நாற்ற முடைத்து என்ற முதுமொழிபோல் அழகு பொலியும் திருஉருவில் மணிகள் திகழும் அணிகள், அழகுக்கு அழகு செய்தாற் போன்றிலங்குகின்றன.*

*தலையின் முன்பக்கம் நெற்றிச் சுட்டியும் சூரியப் பிரபையும், சந்திரப் பிரபையும், சூடாமணியும் பின்புறத்தில் இராக்கொடி, சடை, நாகம், திருகுப்பூ முதலிய அணிகளும் இருக்கின்றன. இராக் கொடியைச் சுற்றி அழகாய்த் தாழம்பூக்கள் அழகுறப் பொன்னிலை போற்செய்யப்பட்டுத் தலை அலங்காரத்தைச் சிறப்பிக்கின்றன.*

*காதுகளிலே தோடுகள் கவினுற ஒளிர்கின்றன. கீழே சிமிக்கிகள் ஒய்யாரமாக ஊசலாடுகின்றன. இன்னும் காதில் கர்ணப் பூக்களும், முருகு, பூடி, குருடு முதலிய அணிகளும் மூக்கில் மூக்குத்தி, புல்லாக்கு போன்ற அணிகளும் மணிகள் பதித்து இலங்குகின்றன.*



படம் 37. பாவை விளக்கு




படம் 39. தீப லட்சுமி விளக்கு



படம் 40. காமாட்சி அம்மன் விளக்கு



படம் 41. திருமுல்லைவாயில் தீப லட்சுமி விளக்கு



படம் 38. அம்மணித் தீப லட்சுமி விளக்கு

கழுத்தில் பூரான் அட்டிகை, பொட்டுச் சரம், கருக மணி, நெல்லிக்காய் மாலை, முத்துச் சரம், கோதுமை மாலை, பிச்சியரும்பு மாலை ஆகியவைகள் காணப்படுகின்றன.

புயத்தில் வங்கி, அடியில் குஞ்சலத்துடன் பாசிப் பந்து, கையில் பாட்லி (பாட்டல்), கங்கணம், தோடா, விரல்களில் மோதிரம், நெளிவு போன்ற அணிகள் திகழ்கின்றன.

சிற்றிடையில் அரைஞாணும் ஒடியாணமும் கால்களில் பாடகம், கொலுசு, பாதரசம் தண்டையும் கால் விரல்களில் மிஞ்சி (காலாழி) பில்லணை, பீலி போன்ற அணிகளும் அலங்காரமாய் இலங்குகின்றன.

வலத் தோளில் பச்சைக் கிளி தன் பவளவாயுடன் ஒய்யாரமாக உட்கார்ந்திருக்கிறது. தமிழ் இலக்கியங்களிலே கிளிகள் தலைவிக்குத் துணையாக இருந்து அவளுடைய இன்ப துன்பங்களைக் கேட்பதும் கொஞ்சு மொழி பேசுவதும் இங்கு சித்தரிக்கப்பட்டுள்ளன. சிற்பி அழகிய படிமத்திலே கிளியை எழிலொழுகும் ஏந்திழையின் தோளில் அமர்ந்து பேசுவதைப் போல் தன் கைத்திறன் அனைத்தும் விளங்கச் சிறப்புடன் செய்துள்ளான்.

கோயில்களில் உள்ள சன்னிதிகளில் நாள்தோறும் காலை முதல் இரவு வரை அகல் விளக்கைத் தம் இரு கரங்களிலும் ஏந்திய வாறு அழகுற நின்று கொண்டிருக்கிறாள் தீபலட்சுமி.

'விளக்கு ஒரு விளக்கந் தாங்கி' என்று தமிழ்ப் புலவர்கள் வர்ணிப்பது போல் காட்சி அளித்து நிற்கிறாள் இத் தீபலட்சுமி.

இப்பாவை விளக்குகளில் இடையில் அணிவித்திருக்கும் ஆடைகளின் நடுவில் பல கோடுகளும் வளைவுகளும் பல வண்ணத் தில் திகழ்கின்றன. விளிம்புகளில் பல்வேறு விதமான பூ வேலைப் பாடுகள் கண்கவர் வனப்புடன் அழகு செய்கின்றன. முந்தாணை களின் வேலைப்பாடு பெண்களின் கண்களையும் கருத்தையும் கவர்வனவாகும். பாவையின் முன்தாணை மிக நீளமாக இருந்தால் காற்றடித்து முந்தாணை கைகளில் ஏந்தியிருக்கும் அகல் விளக்கில் விழுந்து தீப்பற்றி விடக்கூடாது என்பதை அறிந்து சிற்பி, முந்தாணை யின் நீளத்தைக் குறுக்கி அதைத் தோளின் மீது போட்டிருப்பது போல் செய்திருக்கிறான்.

இப்பாவை விளக்கில் காணப்படும் அணிகள், சிலப்பதிகாரம், பெருங்கதை நெடுநல்வாடை முதலிய நூற்களில் காணப்படும் நகைகளை நினைவூட்டுகின்றன.

உரோமர்களின் பாவை விளக்குகளில் சில, தம் மார்பருகில், விளக்குத் திரியை வைத்திருக்கும் ஒரு பெண்ணின் உருவ அமைப்பை உடையனவாய் விளங்குகின்றன. இதைப் பற்றி விரிவாக எய்ச். பி. வால்ட்டஸ் என்னும் அறிஞர் பிரிட்டிஷ் தொல்பொருட் காட்சி

சாலையில் உள்ள 'கிரேக்கர், உரோமர் ஆகியவர்களுடைய விளக்கு களின் பட்டியல்' என்னும் நூலில் நன்கு விவரித்துள்ளார்.

எகிப்திலிருந்து கிடைத்த மற்றொரு விளக்கும் இங்கு உள்ளது. அதில் முற்கால எகிப்தியர்களின் அசிரிஸ் என்ற தெய்வ உருவம் தீட்டப்பட்டிருக்கிறது. அதில் விளக்கைத் தாங்கி நிற்கும் பாவை யினது இடுப்பின் கீழ்ப்பாகம் நீண்டு திகழ்கிறது. இஃதன்றிச் சில வெண்கல விளக்குகளில் கலை அழகுகள் மின்னுகின்றன.

ஒரு விளக்கில் கைப்பிடிக்குப் பதிலாக இரு கரடுமுரடான கொரிந்தியன் தூண்களால் தாங்கப்பட்ட வில் வளைவு மண்படத் தின் உட்புறமும், ஒலிம்பிக் தேவதைகளின் மன்னனான சீயஸ் உருவமும் காணப்படுகிறது. மற்றொரு விளக்கில் பின்புறம் கைப் பிடிக்குப் பதிலாகச் சாதாரணமான தூண்களின் மேல் உள்ள வில் வளைவு மண்டபத்திற்கு அடியில் இரதத்தின் மீது ஏறிச் செல்லும் கைபெல் என்னும் கடவுளின் வடிவம் காணப்படுகிறது.

இந்த விளக்குகளில் ஒன்றுகூடத் தெய்வ உருவத்தைத் தவிர்த்து வேறு உருவம் பொறிக்கப்பட்டதாகக் காணப்படவில்லை. இதன் மூலம் தமிழ்நாட்டிலுள்ள எழில் விளக்குகள் தீபலட்சுமி விளக்குகள் இந்த யவன விளக்குகளிலிருந்து எழுந்தன என்று எண்ணுவதற்கு எள்ளளவும் இடமில்லை என்று விளக்கு ஆராய்ச்சியில் சிறந்து விளங்கும் கலாமேதை ஓ.சி. கங்குலி குறிப்பிடுவது உற்று நோக்கற் குரியது.[1]

ஆனால், இங்கிலாந்திலுள்ள தொல் பொருள் காட்சி சாலையிலுள்ள விளக்குகளைப் போன்று தெய்வ வடிவம் தீட்டப் பெற்ற பாவை விளக்குகளை உரோமர், கிரேக்கர் போன்ற யவன வணிகர்கள் தமிழ் நாட்டிற்குக் கொண்டு வந்து தாங்கள் வாழ்ந்த உறைவிடங்களில் உபயோகித்திருக்கலாம். அவைகளில் சிலவற்றைத் தமிழர்களுக்கு விற்றிருக்கலாம். அல்லது இந்தப் பாவை விளக்கு களைப் பற்றித் தமிழர்களுக்குக் கூறியிருக்கலாம்.

இதுவரை தொல் பொருள் காட்சி சாலையினராலும் தனிப் பட்ட அறிஞர்களாலும் சேகரிக்கப்பட்டிருக்கும் யவனர்களின் விளக்குகளில் சிறப்பான விளக்கு, கைகளில் அகலை ஏந்தி நிற்கும் பாவை விளக்கேயாகும். அதிலும் பாவையர் கரங்களில் ஏந்தி நிற்கும் கிண்ணமே சிறப்புடையதாகும்.

ஆனால், தமிழ்நாட்டில் காணப்படும் திருவிளக்கு நாச்சி யாரின் உருவத்தை உற்று நோக்கின் அதில் சிறப்பான பகுதி திரி இருக்கும் கிண்ணந்தான் என்று கூறுவதற்கில்லை. ஏந்திழை கை களில் ஏந்தி நிற்கும் எழில் ஒழுகும் அகலும் அவள் மீது அணி

1. South Indian Lamps by G.C. Gangoly - 1916.

செய்யும் அரிய அணிகளும் அழகிய ஆடையும் தோளின் மீது தோன்றும் கிள்ளையும் அவள் நிற்கும் பீடமும் அழகுக் கலையின் முதல் இடத்தைச் சுவீகரித்துக் கொள்ளத் தக்கவையாகக் காணப் படுகின்றன.

அவள் கரங்களில் ஏந்தி நிற்கும் கிண்ணமும் திரியிடும் முகமும் அழகுக் கலையின் இரண்டாவது இடத்தைத் தான் பெறத்தக்கனதாய் விளங்குகின்றன.

எனவே, தமிழகம் தந்த பாவை விளக்கின் அமைப்பில், பார்க்கும் பண்பும் பொலிவும் எழிலும் கருத்தும் தமிழ் மக்களின் பழம் பெரு நாட்டில் அரும்பிய சிற்பக் கலையின் விளைவேயாகும். அது யவனர்களிடமிருந்து இரவலாகவோ, கடனாகவோ, கலைக் களவாகவோ பெற்ற கருத்தல்ல என்பது உறுதி. இதைத் தமிழ் நாட்டுச் சிற்ப விற்பன்னர்களும் வெளிநாட்டுச் சிற்ப மேதைகளும் ஒருங்கே ஒப்புக் கொள்கின்றனர்.

மேலும் யவனவர்களின் பாவை விளக்குகளும் ஒளி விளக்கு களும் தமிழர்களின் தீபலட்சுமி விளக்கு, அன்ன விளக்கு ஆகியவை களின் அமைப்புகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டனவாகும். ஆனால் நமது துரதிர்ஷ்டம், யவனர்களின் பாவை விளக்கோடு ஒப்பிட்டுப் பார்க்கப் பழங்காலத்தில் தமிழகத்தில் செய்யப்பட்ட தீபலட்சுமி விளக்கோ அன்ன விளக்கோ இதுவரை நமக்குக் கிடைக்கவில்லை.

கிரேக்கர், உரோமர் முதலியோர்களின் விளக்குகள் கருத் தழகோ, கலையழகோ, நிலையழகோ, அணியழகோ எதுவுமின்றி அபக்குவமாகக் காணப்படுகின்றன என்று கூறப்படுகிறது. ஆதிக் கிரேக்கர்களின் வெங்கலப் படிமங்களில் உள்ள சிற்ப நுட்பங்களும் திறமையும் பெருமையும் இதற்கும் அதிகமாகவே காணப்படு கின்றன. இதுவரை கண்டுபிடித்த தென்னிந்திய விளக்குகளையும் கிரேக்கர் உரோமர் விளக்குகளையும் ஒப்பிட்டு ஆராய்ந்து ஒரு கோட்பாட்டை எவரும் வகுத்துவிட முடியாது.

'ஆனால் குறுகிய கண்ணோட்டங் கொண்ட பல ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்கள் சிந்தியாது பின்வரும் முடிவிற்கு வந்து விடுகிறார்கள்.'

'தமிழ்நாட்டுப் படிம உற்பத்தி முறைகளெல்லாம் கிரேக்கர் உரோமர் முதலிய யவன நாட்டுப் பழம்பெருமுறைகளினின்று புத்துயிர் பெற்று எழுந்தன. தமிழகச் சிற்பிகள் மேனாட்டுச் சிற்ப நுட்பங்களை அயல்நாடுகளோடு தமிழகம் நடத்திய வணிகத்தின் பயனாகக் கொற்கை பூம்புகார் போன்ற துறை முகங்களில் அறியும் வாய்ப்பைப் பெற்றனர்: கிரேக்கச் சிற்பக் கலையினின்று காந் தாரத்தில் துளிர்த்த பௌத்த சிற்பம் போன்று உரோம, கிரேக்கப்

படிம முறையைப் பின் பற்றித் தமிழ் நாட்டுப் படிம முறை புதிய வளர்ச்சியும் புதிய வாழ்வும் பெற்றது' என்று மேனாட்டறிஞர்கள் பலர் முடிவு கட்டியுள்ளனர்.

திருமாலின் அனந்தசயனத் தோற்றத்தில் கூட அயல் நாட்டுக் கருத்தோட்டம் கலந்திருக்கிறது என்று வின்செண்ட் ஸ்மித் என்ற மேனாட்டு வரலாற்று நூற்புலவர் வரைகின்றார்.

மேலும் ஐரோப்பிய சிற்பிகள் அழகின் நிலையைப் பற்றிக் கொண்டுள்ள மனோபாவங்கள் இந்த அனந்த சயனம் என்னும் கருத்துப்பட எழுதி தென்னிந்தியக் கலை வளர்ச்சியை மிக நாசுக்காய் இழித்துக் கூறுகின்றார்கள். ஸ்டாக்ஹோமில் தேசீயத் தொல்பொருள் காட்சி சாலையின் எண்டிமியன் என்ற பகுதியிலுள்ள கிரேக்கர், உரோமர் படிமங்களோடு தென்னிந்தியப் படிமங்களில் காணப்படும் ஒருமைப்பாடுகளை வைத்தே இந்த முடிபைக் கொண்டுள்ளார்கள். தீபலட்சுமி விளக்கு தமிழ் நாட்டுச் சிற்ப முறைகளில் முளைத்தெழுந்த சீரியவைகளில் ஒன்றல்ல - மிகச் சாதாரணமானவைகளில் ஒன்றாகும். தமிழ்நாட்டுத் தீபலட்சுமி விளக்குகளுக்கு ஒப்புவமை சொல்லக்கூடிய விளக்குகள் வட இந்தியாவில் கூடக் காண முடிகிறது.

இறுதியாகக் கூறிய இந்த முடிபு மிகைபடக் கூறியது; வட இந்தியாவில் தென்னிந்தியாவிலுள்ள விளக்குகளைப் போன்ற விளக்குகள் உள்ளன என்று சிலர் கூறுகின்றனர். இது முற்றிலும் தவறான அபிப்பிராயமாகும். வட இந்தியாவில் தமிழ்நாட்டு விளக்கிற்கு இணையான விளக்குகளே இல்லை.

காசியில் அன்னபூரணா ஆலயத்தில் ஒரு விளக்கு உள்ளது. அதில் தமிழ்நாட்டு விளக்கில் காணப்படும் அழகையோ அமைப்பையோ காணவே முடியாது. மேலும் அவ்விளக்கும் தமிழகத்தில் செய்யப்பட்டு தமிழ்நாட்டுப் பக்தர் ஒருவரால் வழங்கப்பட்டதாகும்.

இது மட்டுமல்ல, காசியிலுள்ள விசுவநாதர் - விசாலாட்சி கோயிலில் உள்ள பித்தளை வெண்கலப் பண்டங்கள், விளக்குகள் பலவும் தமிழ்நாட்டிலேயே செய்யப்பட்டவை என்று கூறச் சான்றுகள் உள்ளன.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழர்கள் கைலாய மலையோடும், மொகஞ்சதாரோவோடும், காசியோடும் தொடர்பு கொண்டிருந்தனர். கைலாய மலையிலிருந்து கல் கொண்டு வந்து சிலை செய்வது நீண்டகாலமாகத் தமிழர்களின் வழக்கமாக இருந்து வந்திருக்கிறது.

தமிழ்நாட்டு விளக்குகளில் சில, ஈழ நாட்டில் காணப்படுகின்றன. ஆனால் அத்தீவில் பழம் பெரும் பாவை விளக்கு ஒன்று கூட இன்று வரை காணப்படவில்லை. அனைத்துலக ஓவியப் புலவர்

நந்தலால்போஸ் அவர்கள் தீட்டிய ‘புதிய இந்தியப் பள்ளி’ என்னும் உணர்ச்சியூட்டும் வண்ண ஓவியம், அனைத்துலகக் கவிஞராகக் கருதும் இரவிந்திரநாத் தாகூரின் அரும் பெரும் கவிதையைச் சித்தரிப்பதாகும். ஆனால் நந்தலால் போஸ் அவர்கள் தீட்டிய ஓவியத்தில் ஒளிரும் விளக்கு, தமிழ்நாட்டுச் சிற்பிகள் தீட்டிய ஓவியத்தின் பிரதிபலிப்பாகவே திகழ்கிறது. இந்த அபிப்பிராயத்தை அறிஞர்கள் பலரும் ஆதரிக்கின்றனர்.

காசிம் பசாரிலுள்ள மகராஜா மனீந்திர சந்திர நந்தி அவர்கள் சேர்த்துள்ள பழைய விளக்குகளில் ஒன்று கிட்டத்தட்டத் தமிழ் நாட்டு விளக்குகளின் வடிவை உடையதாகக் காணப்படுகிறது. இவ்விளக்கு இராசபுதனத்திலிருந்து கொண்டு வரப்பட்டதாகும்.

தமிழகத்தில் இன்று சாதாரணமாகக் காணப்படுகிற பக்தியை நினைவூட்டும் பாவை விளக்குகளைவிட ராதா - கோபி உருவ விளக்கு வைணவ உணர்ச்சியை ஊட்டுவிப்பதாக இருக்கிறது என்று வட நாட்டு வைணவ அறிஞர்கள் கருதுகின்றார்கள்.

**சாவகத்தில் படிமங்கள்**

சாவக நாட்டிலுள்ள படிமங்கள் தமிழ்நாட்டிலுள்ள படிமங் களோடு மிக நெருங்கிய தொடர்புடையனவாய்க் காட்சியளிக் கின்றன. சாவகத்தில் காணக்கிடக்கும் விளக்குகளைத் தமிழகத்தி லுள்ள விளக்குகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பது உள்ளத்திற்கு உவகை ஊட்டுவதாக உள்ளது. உலாந்தா நாட்டிலுள்ள லெய்டன் ரிச்சஸ் எத்னோ கிராபிக் தொல்பொருள் காட்சி சாலையில் உள்ள மிக அழகான மூன்று சாவக நாட்டு விளக்குகளை இங்கு நாம் குறிப் பிடாமல் விட்டு விடமுடியவில்லை.

அங்குள்ள கின்னரி விளக்கு தமிழ் நாட்டு விளக்குகளோடு ஒப்புவமை கூறத்தக்கதாக இல்லை. என்றாலும் சாஸ்திரோக்தம் உடையதும் கருத்து ஆழம் உடையதும் உறுதியானதுமாய் விளங்கு கிறது. இவ்விளக்குகள் தமிழ் நாட்டுப் பாவை விளக்கினின்று எழுந்த கருத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டன வென்று உறுதியாகக் கூறலாம். ஆனால் இந்த விளக்கின் மூலக் கருத்துக்களும் கற்பனைச் சிறப்பும் இதற்கே சொந்தமானது; கடன் வாங்கப்பட்ட தன்று என்று எவரும் கூறமுடியாது.

இங்கு தீட்டப்பட்ட சாவக விளக்குகளில் மனித உருவ முள்ளவைகளும் உண்டு. ஆனால் அவை தமிழகத்திலுள்ள ‘எழில் விளக்குகளின்’ - தீப லட்சுமி விளக்குகளின் - தோற்றத்தை உடையன வாக இல்லை.

ஆனால் அறிஞர்கள் பலரும் தமிழ் நாட்டு விளக்குகள் சாவகச் சிற்பிகளுக்கு எவ்வித உணர்ச்சியையும் தூண்டி விட்டிருப்பதாகக் கருத முடியாது என்று கோடிட்டுக் கூறுகின்றார்கள். இதை நாம்

ஏற்றுக் கொள்ள முடியவில்லை; கண்டிப்பாக மறுத்தே கூற வேண்டியதாக இருக்கிறது.

மேலும் சாவக விளக்கு இறக்கைகளையுடைய ஒரு மிருக உருவத்தை உடையதாக இருக்கிறது. இது சாவகத்தின் சொந்தமான சிற்ப நுட்பத்தை எடுத்துக் காட்டுவதாக விளங்குகிறது. இறக்கையின் எழில் நலம் சிற்பச் சிறப்பு, சிங்கள நாட்டுச் சிற்ப முறையை ஒத்திருந்த போதிலும் பறவை உருவத்தைக் கேந்திரமாகக் கொண்ட தன்மையை ஆராய்ந்தால் தமிழ் நாட்டுச் சிற்பத்தோடோ சிங்கள நாட்டுச் சிற்பத் தோடா ஒற்றுமை உடையதாக இல்லை என்று சிறப் விற்பன்னர்கள் கூறுகின்றார்கள்.

சிங்களம், சாவகம், புட்பகம், மலையம், தாய்லாந்து, கடாரம், கம்போசகம் முதலிய நாடுகளைச் சோழர், பாண்டியர், பல்லவர் போன்ற தமிழ்நாட்டு மன்னர்கள் வென்று அங்கு தங்கள் சமயத்தை யும் கோயில்களையும் நாகரிகத்தையும் ஆட்சியையும் பண்பாட்டை யும் நிலைநாட்டித் தங்கள் சிற்பத்தை வளர்த்து வந்தனர். அன்று அவர்கள் தமிழ்நாட்டுச் சிற்ப அடிப்படையில் ஆக்கிய அரும்பெரும் கற்றளிகளும் படிமங்களும் சிற்பங்களும் இசைகளும் கவிதைகளும் ஓவியமும் இன்றும் பொன்றாது காட்சி அளித்துக் கொண்டிருக் கின்றன.

**தனிநாயக அடிகளார் தூது**

தமிழகத்தின் தவப் பேறாகத் தோன்றிய பேரறிஞர் மறைத்திரு டாக்டர் தனிநாயக அடிகள் எம்.ஏ.எம்.லிட்., பி.எச்.டி. அவர்கள் தமிழ் நாட்டின் தூதராகச் சாவகம், மலைநாடு, சிங்கபுரம் போன்ற நாடுகளுக்கு 1955இல் சென்றார். அங்கு மறைந்து வரும் தமிழர்களின் நாகரிகத்தையும் கலையின் சிறப்பையும், சிற்ப வளத்தையும் விளக்கின் சிறப்பையும் கண்டு அடிகளார் தெரிவித்துள்ள கருத்து சிந்திக்கத்தக்கதாகும்.

பாவை விளக்கே பழந்தமிழர்கள் கண்ட விளக்குகளில் பவித்திரமானது; அழகில் மிக்கது. அது பக்தியின் சின்னமாக ஒளிர்கிறது. வரலாற்றுக் கருவூலமாக மிளிர்கிறது. தமிழ் மக்களின் சிற்பச் சிறப்பிற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. நமது மக்கள் முற்காலத்தில் பெற்றிருந்த நாகரிகத்திற்கு ஓர் நகலாகத் திகழ்கிறது.

பாவை விளக்குகள் வீட்டு விளக்கல்ல; கோயில் விளக்காகும். இவைகள் திருவறையின் அருகே மூலவருக்கு இரு மருங்கினும் நிற்கின்றன.

தமிழ்நாட்டுப் பெண் ஒருத்தி இருகைகளிலும் அகல் விளக்கொன்றை ஏந்தி நிற்பது போல் செய்யப்பட்டிருக்கிறது. இவைகள் கல்லிலும் செம்பிலும் செய்யப்பட்டுள்ளன. உலோகத்

தால் செய்யப்பட்ட பாவை விளக்கே சிற்ப அழகு பொலியத் திகழ்கிறது.

இந்தப் பாவை விளக்கின் கரங்களில் காணப்படும் கிண்ணம் போன்ற அகலில் நெய்வார்த்து திரியிட்டு எரியுமாறு செய்யப் பட்டுள்ளது.

இவ்வுலோக விளக்குகள் செய்வதில் சிரமம் அதிகம் உண்டு. பணமும் மிகச் செலவாகும். இந்தப் பாவை விளக்குகள் சிற்சில வேறுபாடுகளுடன் தமிழ் நாட்டிலுள்ள பெரிய கோயில்களி லெல்லாம் காணப்படுகின்றன. இவ்விளக்குகளில் பெரும்பாலும் பெண் வடிவமாகவே காணப்படுகின்றன.

பாவை என்ற பெயரே பெண்ணை உணர்த்துவதால் பெண் விளக்காக இதனைக் கண்டது நியாயமேயாகும். ஆனால் ஒரு சில கோயில்களில் ஆண் 'பாவை' விளக்குகளும் காணப்படுகின்றன.

சில ஆண்கள் தங்களுக்கு நோய் தீர்ந்தால் சுவாமிக்கு இவ்வித மான விளக்கைக் காணிக்கையாகச் செலுத்துகிறேன் என்று நேர்ச்சை செய்து கொண்டிருக்கலாம். அவருக்கு நோய் தீர்ந்தும் தன் வடிவில் (ஆண் வடிவில்) ஒரு விளக்குச் செய்து கோயிலுக்கு அர்ப் பணித்திருக்கலாம் அல்லது சிற்பி, எல்லாக் கோயிலும் பெண் வடிவம் வாய்ந்த பாவை விளக்குத்தானே இருக்கிறது - ஏன்? - நாம் ஆண்வடிவமான 'பாவை' விளக்கைச் செய்து வைக்கக்கூடாது என்று எண்ணி இத்தகைய விளக்கை உருவாக்கியும் இருக்கலாம்.

எல்லா ஊர்களிலும் - ஏன் - கணபதி ஆண் வடிவமாக இருக் கிறார் என்பதைப் பற்றி ஒரு சிற்பியின் சிந்தனையில் ஒரு பிரச்சனை எழுந்தது; உடனே அவன் பெண் வடிவில் ஒரு கணபதியை - கணேசனியை உருவாக்கிவிட்டான். யானை முகமும் துதிக்கையும் இருந்தாலும் மார்பில் இரு கொங்கைகள் காணும்படி செய்து விட்டான். இதை இன்றும் சுசீந்திரம் கோயிலில் காணலாம். ஒரு வேளை இந்தச் சிற்பியின் கூட்டத்தை சேர்ந்தவர்கள் பாவை விளக்கை ஆண்வடிவிலும் அமைத்திருக்கலாம் என்று எண்ணு கிறேன்.

நமது நாட்டில் எண்ணற்ற எழில் ஒழுகும் பாவை விளக்குகள் உண்டு. திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலிலும், மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலிலும், தஞ்சை மாவட்டத்திலுள்ள புள்ளிருக்கும் வேளூர் என்று கூறும் வைத்தீஸ்வரன் கோயிலிலும் உள்ள வைத்திய நாத சுவாமி சந்நிதானத்திலும் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த திருமுல்லைவாயில் மாசிலாமணீஸ்வரர் கோயிலிலும், திருவிடைமருதூர் ஜோதிர்மகாலிங்க மூர்த்தியின் சந்நிதியிலும், திருக்குற்றாலம் குற்றாலநாதர் கோயிலிலும், திருக்கோ கர்ணம் (புதுக்கோட்டைப் பக்கத்திலுள்ளது) கோகர்ணேசுவரர் -

பிரகாதாம்பாள் சந்நிதியிலும், தஞ்சைப் பெருவுடையார் சந்நிதியிலும் காணப்படும் பாவை விளக்குகள் மிக அழகு வாய்ந்த விளக்குகளாகும்.

திருநெல்வேலி நெல்லையப்பர் - காந்திமதி அம்மன் கோயிலிலும், சுசீந்தரம் தாணுமாலயன் கோயிலிலும், திருவனந்தபுரம் பத்மனாமசுவாமி கோயிலிலும், மதுரை மீனாட்சி - சுந்தரேசுவரர் கோயிலிலும் உள்ள கற்றூண்களிலே எண்ணற்ற பாவை விளக்குகள் செதுக்கப்பட்டுள்ளன. இத் தூண்களில் சிலவற்றில் பாவைகள் விளக்கேந்தி நிற்பதற்குப் பதிலாக ஆண் வடிவங்களும் சில விளக்குகளை இரு கரங்களில் ஏந்திக் கொண்டு நிற்கின்றன.

அழகிற்கே உரிய ஆபரணங்களுடன் அனிச்ச மலர் போன்ற அழகிய கரங்களில் விளக்கை ஏந்தி நிற்கும் பேரழகினை இந்த ஆண் விளக்கில் காண முடியவில்லை. மேலும் ஆண் வடிவங்கள் தாங்கி நிற்கும் விளக்குப் படிமத்தில் ஆடையும் அணியும் அழகு பயப்பனவாக எவரும் கருத முடியாது.

பாவை விளக்குகளிலே தாமரை போன்ற முகமும் கார்மேகம் போன்ற கூந்தலும் அழகிய சடையும் தலையிலும், காதிலும், மூக்கிலும், கழுத்திலும் புஜத்திலும், கைகளிலும் விரல்களிலும் காணப்படும் பல்வேறு விதமான நவமணிகள் பதித்த பொன்னாபரணங்களும் வெள்ளி ஆபரணங்களும் பல வண்ண நிறம் வாய்ந்த பட்டாடைகளும் அவைகளின் அழகிய விளிம்பிலும் முன்தானையிலும் தீட்டப்பட்ட அழகிய கோடுகளும் இலைகளும் ஆடையின் உடலில் காணப்படும் பூங்கொத்துகளும் கொடிகளும் பட்டைகளும், மார்பில் கட்டப்பட்ட பூங்கச்சைகளும் பிறவும் அழகுக்கு அழகு செய்வது போல் பெண்ணின் இயற்கை அழகை மேலும் உயர்த்துவனவாக இருக்கின்றன. ஆண் விளக்கிலோ இந்தக் கலை அம்சம் சிறிதும் காணப்படவில்லை.

கோவில்களிலும் தொல்பொருள் காட்சிசாலைகளிலும் காணப்படும் பாவை விளக்குகள் பழைமையானதாகக் காணப்படவில்லை என்று சிலர் கூறுகிறார்கள். அவர்களின் அபிப்பிராயம் சரியாகவோ தப்பாகவோ இருக்கலாம். ஆனால் பாவை விளக்குகளின் உருவ அமைப்பு பழங்கால இலக்கியங்களில் காணக் கிடக்கின்றன.

இவ்விளக்குகள் சுமார் எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னரே செய்யப்பட்டுக் கோயில்களுக்கு நிவந்தமாக அளிக்கப்பட்டன என்பதற்கு இலக்கியச் சான்றுகள் மட்டுமல்ல, கல்வெட்டுச் சான்றுகளும் உள.

முற்காலத்தில் தமிழகத்தில் இந்திர விழா என்னும் ஒரு பண்டிகை சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்தது.

இவ்விழா இருபத்தெட்டு நாட்கள் மிகவும் ஆடம்பரமாகவும் கோலாகலமாகவும் கொண்டாடப்பட்டு வருகையில் சோழ மன்னன் கிள்ளிவளவன், சோழ மக்களுக்கு, அவர்களின் இல்லங் களைச் சுத்தஞ் செய்து - அலங்காரம் செய்து வீதிகளில் பாவை விளக்குகளை வரிசையாக வைத்து இந்திர விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுமாறு கட்டளையிட்டான் என்றும், இவனுடைய காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்றும் அறிகிறோம்.

பாவை விளக்கின் பெருமை பழந்தமிழ் ஏடுகளிலெல்லாம் பரந்து கிடக்கின்றது என்றாலும் இரண்டாம் நூற்றாண்டைச் சிறப்பித்துக் கூறும் நெடுநல் வாடையில் பாவை விளக்கின் உருவ அமைப்புகளைப் பற்றிய கருத்துக்களைத் தமிழர்கள், உரோமர்கள், கிரேக்கர்கள் போன்ற வெளிநாட்டாரிடமிருந்து பெற்றுத் தமிழ் நாட்டின் பண்புக்கேற்றவாறு உருவாக்கியுள்ளார்கள் என்று எண்ணுவதற்கு ஏற்ற சான்றுகள் உள்ளன.

ஆனால் அவர்கள் வெளிநாட்டு விளக்கைக் கண்டதும் அந்த வடிவில் இங்கும் செய்து கொண்டார்கள் என்று சொல்லுவதற் கில்லை. யவன நாட்டினின்று வந்த பாவை விளக்கிற்கும், ஓதிம விளக்கிற்கும் எவ்வித சம்பந்தம் இல்லாததுபோல் தமிழ்நாட்டில் செய்த விளக்குகள் - தமிழர் பண்பாட்டிற்கு ஏற்றாற்போன்று செய்யப்பட்டிருக்கின்றன.

***"யவன ரியற்றிய வினைமாண் பாவை நெய்சொரிந்து***
***பரூஉத் திரிகொள் இய குரூஉத்தலை நிமிரெரி"***

என்ற நெடுநல் வாடையின் பாட்டிற்கு, யவனர்களால் தம் கைத்திறன் விளங்க மிக நுண்ணிய வேலைப்பாடுகளோடு அழகுற அமைக்கப் பட்ட அணங்குகளின் உருவங்கள் கைகளில் நெய்யைத் தாங்கி நிற்கும் கிண்ணத்திலுள்ள திரியிலிருந்து எழும் செஞ்சுடரினின்று வெளிச்சம் பிரகாசிக்கும் என்று பொருள் கொள்ளப்படும். இதனின்று யவனர்களிடம் அழகிய பாவை விளக்குகள் இருந்தன என்பது நன்கு அறியப்படுகிறது.

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றாக விளங்குகிற மணி மேகலை, தெருக்களும், வீடுகளும் தோரணங்களால் அழகு செய்யப் பட்டு மக்கள் கூடும் மாபெரு மணிமண்டபத்தில் பொற்குடங்களும் அற்புதப் பாவைவிளக்குகளும் பாங்குற வைக்கப்பட்டிருந்தன என்று கூறுகிறது. அது வருமாறு

***தோரண............. தோமரு கோட்டியும்***
***பூரணகும்பமும் பொலம் பாலிகைகளும்***
***பாவை விளக்கும் பலவிதம் பரப்புமின்*** (மணி : 43 : 45)

திருவிழாக் காலங்களில் அலங்காரத்திற்குப் பாவை விளக்கு கள் வைக்கப்பட்டன என்றும் அவைபொன்னாற் செய்யப்பட்டன

என்றும் கைகளில் அகல் விளக்குகளை ஏந்தி நிற்பது போல் அமைக்கப்பட்டவை என்றும் முல்லைப்பாட்டு கூறுகிறது.

***'பாவை விளக்கிற் பரூஉச் சுடர் அழல'***

என்றும்,

***கையமை விளக்கம்*** (முல்லை - 1: 49)

என்றும் அது கூறுகிறது.

சிலப்பதிகாரமானது, இந்திர விழா பூம்புகாரில் நடைபெறுகையில் தெருக்களையெல்லாம் அலங்கரித்து மங்கலம் பொரித்த மகரதோரணங்கள் வாயில்தோறும் விளங்க, வீதிகளெல்லாம் தண்ணீர் நிறைந்த பொற்குடங்களும், பாலிகைப் பொருள்களும் பதுமை விளக்குகளும் பொற்கொடிகளும், வெண்பொற் தாமரைகளும் நிறைந்து விலங்கின. எங்கும் நறுமண நாற்றம் வீசியது என்று கூறுகிறது. அது வருமாறு :

***'தோரணம் நிலைஇய, தோம்அறு பசும்பொன்***
***பூரண கும்பத்துப் பொலிந்த பாலிகை,***
***பாவை விளக்குப் பசும்பொன் படாகை,***
***தூமயிர்க் கவரி சுந்தரச் சுண்ணத்து***
***மேவிய கொள்கை வீதியில் செறிந்து ஆங்கு'***

(சிலப்பதிகாரம் 152 : 156)

இஃதன்றி, நமது விளக்குகளில் அன்னம் போன்ற பறவைகளை வைத்துச் செய்யும் கருத்துக்கள் யவனரிடமும் இருந்தன என்று எண்ண இடமுண்டு.

எடுத்துக்காட்டாக,

***'.......................................... யவனர்***
***ஓதிம விளக்கின் உயர்மிசைக் கொண்ட***
***வைகுறு மீனிற் பையகத் தோன்று***
***நீர்ப்பெயற் றெல்லை'*** (பெரும் 11 : 316 - 319)

என்ற பெரும்பாணாற்றுப் படை என்னும் பழந்தமிழ் பாட்டில், யவனர்களின் மரக்கலங்களிலுள்ள கூம்புகளில் கட்டப் பெற்ற சித்திர வேலைப்பாடமைந்த அன்ன விளக்குகள் அணிபெற ஒளிர்ந்த விவரங்கள் காணப்படுகின்றன.

ஹைதராபாத்தில் 1932ஆம் ஆண்டு இந்தியத் தொல் பொருள் ஆராய்ச்சியாளர்களால் சில விளக்குகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. அவ்விளக்குகளைப் பற்றி ஆய்ந்து அவர்கள் தம் அபிப்பிராயங்களையும் வெளியிட்டிருக்கின்றனர். அவ்விளக்குகளில் தீப லட்சுமி விளக்கு, தமிழர் கண்ட பாவை விளக்குகளில் காணப்படும் சில ஒற்றுமைகளை உடையதாகக் காணப்படினும் முகம் முற்றிலும்

வேறுபட்டதாக விளங்கியது. எனவே முற்காலத்தில் ஹைதரா பாத்திலும் பாவை விளக்குகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று கூறமுடியுமே யொழியத் தமிழ்நாட்டு விளக்குகளுக்கு இணை யானவை என்று இயம்ப முடியாது. தெக்காணத்துச் சிற்பிகள் சிற்ப நுட்பத்தில் தமிழ்நாட்டுச் சிற்பிகளை எட்டிப் பிடிக்க முடியாத வாறு தமிழ்நாட்டுச் சிற்பிகள் உயர்ந்து நின்றுள்ளார்கள் என்று கூசாமல் கூறலாம். தமிழர் கண்ட பாவை விளக்கின் வளைவும் குழைவும் மெருகும் பொலிவும் எழிலும் சிற்பத்திறனும் உலகிலுள்ள சிற்ப மேதைகளின் சிந்தனைகளை கவரவல்லவையாகும்.

ஹைதராபாத் பாவை விளக்குகளின் இடுப்பிற்கு மேற்பட்ட பாகம் அழகுடையதாக இல்லை. அணிகளாலும், ஆடைகளாலும் அலங்கரிக்கப்படவும் இல்லை. ஆனால் அரையில் மட்டும் பூந் துகில்கள் பொருந்தி இருக்கின்றன. முழங்காலைச் சுற்றிலும் மேலேயும் கொசுவம் போன்று சேலைச் சுருக்குகள் தென்படுகின்றன. ஒரு மரத்தின் இலை அமைப்பில் வழக்கத்திற்கு மாறாகச் சேலையில் ஒரு மடிப்பு வைத்திருப்பது போல புது மாதிரி உடை உடுத்தி யிருப்பது போல் காணப்படுகிறது. தமிழ்நாட்டுப் பெண்கள் ஆடை அணிவது போல் முன்பக்கம் கொசுவம் வைத்துக் கட்டப்பட் டிருப்பினும், இலைமாதிரி ஆடையைச் செய்திருக்கும் அமைப்பு அழகுடையதாய் இல்லை. அது சிற்பியின் கற்பனையில் எழுந்த கலையின் நிலைக் கோட்டை எடுத்துக் காட்டுவதுபோல் இருக் கிறது. இது எனது சொந்த அபிப்பிராயம் மட்டுமல்ல பல அறிஞர் களின், அபிப்பிராயமும் ஆகும். (படம் 38 முதல் 41 வரையும் பார்க்க)

# திருவிளக்குப் பணி

*தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் குறிப்பாகச் சிவன் கோயில் களில் பல வகைப்பட்ட தீபங்கள் உண்டு ஒன்று முதல் இரண்டு, மூன்று, நான்கு இவ்வாறாகப் பல திரிகளுள்ள விளக்குகளால் ஆராதிப்பது ஐதீகம்.*

*ஆராதனைக் காலத்தில் தேவர்கள் அனைவரும் தேவதரி சனத்தின் பொருட்டு வந்து விளக்குருவாகப் போந்து ஆரா தனையைக் கண்டுகளித்துச் செல்வதாகச் சிவாகமங்கள் கூறுகின்றன.*

*அவற்றுள் ஒன்று முதல் ஐந்து அளவுள்ள விளக்குகள் ஈசனாதி தேவர்கள் என்றும், திரிதீபம் (மூன்று விளக்குகள்) தத்துவத்ரயம் என்றும் பஞ்சதீபமென்றும் பஞ்சகலா சக்திகள் என்றும் சப்த தீபங்கள் (ஏழு விளக்குகள்) சப்த மாதர்கள் என்றும் நவதீபம் (ஒன்பது விளக்குகள்) நவசக்திகள் என்றும் ஏகதீபம் (ஒரு விளக்கு) சரஸ்வதி ஸ்வாகாதேவி என்றும் மற்றைய ருஷபாதிரூபமுள்ளவை பல தேவர்கள் அவ்வுருக் கொண்டு வந்து தெரிசிப்பவர் என்றும் சோடசங்களாகிய தீப உபசாரங்கள் பஞ்ச பூதாதி தேவதாதரிசனம் என்றும் சிரிகாரணம் என்னும் சிவாகமத்தில் கூறப்பட்டிருக்கிறது.*

*இந்த விளக்கு ஆராதனை ரந்திராதாரமாகவும் ஏகாதார மாகவும் கொம்புகளை ஆராதமாகவும் பெற்றதாம். இவை சர்வ கீர்த்தம நாசத்தின் பொருட்டும் பிரபஞ்சம் அனைத்தும் நலம் பெறும் பொருட்டும் செய்யப்படுவனவாகும் என்று கூறப்படுகிறது.*

*விளக்கு ஆராதனைகளில் காராம் பசுவின் நெய் உத்தமம். ஏனைய பசுக்களின் நெய் மத்திமம். ஆடு, எருமை ஆகியவைகளின் நெய்யும் எண்ணெயும் அதமம். மரவித்துக்களின் நெய்கள் அதமாதமம்.*

*முதலாவது தீப ஆராதனை செய்யுமிடத்து நாகார்த்தி முதலாகக் கடதீபம் இறுதியாகச் செய்ய வேண்டியது. பின்னும் பதினாறு கலை கொண்ட தீபம் பட்சத்தீபமும் வாரதீபமும், ருத்ரம், நிர்திஷ்டம், சப்த மாதரம், நிவர்த்தியாதி, கலாத்தீபம் சரஸ்வதித்தீபம் முதலிய தீபார்த்திகளைச் செய்ய வேண்டியது.*

*தீபார்த்திகளை எடுத்துத் தேவர்களுக்கு ஆராதனை செய்வதில் மூன்று முறை தீப பாத்திரத்தை எடுத்து ஈஸ்வரருக்கு ஆராதனை புரிய வேண்டும். அதில் முதல் முறை லோக ரட்சணாத்தமும் இரண்டாம்*

முறை கிராம ரட்சணார்த்தமும் மூன்றாம் முறை பூதரட்சணாத்தமுமாக மூன்று முறை பாதம் முதல் தலைவரை எடுத்துத் தலை, லலாடம், மார்பு, திருவட்டிகள் முதலியவற்றைக் குறித்துப் பிரணவாகாரமாக (ஓங்காரவடிவமாகக்) காட்ட வேண்டும்.

இத் தீபார்த்திகளின் முடிவல் கற்பூரார்த்தி செய்ய வேண்டும். இது நீராஞ்சனம் என்று கூறப்படும்.

இதனால் தேவ ஆராதனை செய்தால் எல்லா நலனும் உண்டாகும். இதனைச் செய்யும் பொழுது நாலங்குல ஒளி எழும்பக் கற்பூரம் ஏற்றின் உத்தமம். மூன்று அங்குலம் உயரம் மத்திமம். இரண்டங்குலம் அதமம். நீராஞ்சன பாத்திரமானது (கற்பூரத் தட்டு) விருத்தமால் சூரிய மண்டலகாரமாய் இருத்தல் வேண்டும். இடையில் அக்கினி தேவனுடைய இருப்பாய்க் கற்பூராதிகள் பதித்தல் வேண்டும். இதைச் சிரிகாரணம் என்னும் சிவாகமம் விரித்துரைக்கின்றது.

தீப ஆராதனையில் இங்கு காட்டடப்பட்டிருக்கும் உருவப் படத்தில் இருக்கும் தூபம், அலங்கார தீபம், நாகதீபம், விருஷதீபம், புருஷா மிருக தீபம், கடதீபம், நட்சத்திர தீபம், மேரு தீபம் ஆகியவைகளைச் சேர்த்துச் சோட உபசாரங்கள் (16 உபசாரங்கள்) திருக்கோயிலில் உள்ள திரு உருவங்களுக்குச் செய்யப்படுகின்றன.

ஆகமங்களிலே இந்தத் தீப வரிசையிலும் பெயரிலும் வித்தியாசங்கள் உண்டு. இதோடு விபூதிரட்சை இறைவனுடைய திரு உருவின் நெற்றியில் விபூதியை இடுவது, கண்ணாடி குடை, சாமரம் சுருட்டு, விசிறி ஆகிய பஞ்ச உபசாரங்களும் சேர்த்துச் செய்யப்படுகின்றன.

தீபாலங்கார தத்துவம் ஒன்று பலவாறாகப் பரிணமித்து ஊர்வன, பறப்பன, நடப்பன என்ற முறையில் உள்ளது. சிறத்தல் என்ற தத்துவ முறையில் எழுந்து மீண்டும் பஞ்ச பூதங்களில் ஒன்றில் ஒன்றி ஒடுங்கி இறுதியில் கற்பூரம்போல் எஞ்சாது எரிந்து இறைவ னோடு ஒன்றிவிடுதல் உற்பத்தி ஒழுங்கை (சிருஷ்டிக் கிரமத்தை) கூறுவதாகத் தெரிகிறது.

சாக்த தந்திரமானது, குண்டலினி ஆறாதாரங்களின் வழியாக மேலேறிச் செல்லும் போது அந்தந்த ஆதாரங்களில் சாதகனுக்கு ஏற்படும் அனுபவங்களான (1) ஒளி, (2) ஓசை, (3) நிறம், (4) தோற்றம் இவைகளைத் தீபம், வாத்யம், அலங்காரம், நைவேத்தியம், மூர்த்தி என்று விவரிக்கிறது. மேலும் கோயில் கருவறையில் இருக்கும் எல்லாம் வல்ல இறைவனின் திரு உருவை ஆச்சாரியனான குருக்கள் அறிவு ஒளியால் (ஞான ஒளியில்) காட்ட உயிர்கள் இறைவனின் உருவக்காட்சியைக் கண்டு களிக்கிறார்கள். இதில் நல்ல தத்துவம்

இருப்பதாக அறிஞர்கள் எடுத்துக் கூறுகின்றார்கள். திருவுருவிற்குச் செய்யும் அபிசேகம் இறைவனின் உற்பத்தித் தொழிலையும் நைவேத்தியம் காத்தல் தொழிலையும் பலி அழித்தல் தொழிலையும் தீபம் மறைத்தல் தொழிலையும் திருநீறு அருளல் தொழிலையும் குறிக்கும் என்று சமய ஆராய்ச்சியில் சிறந்த அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

**திருவிளக்கில் அருள் விளக்கம்**

நமது தெய்வத் திருநாட்டில் நீண்ட காலமாகக் கோயில்களில் தூபதீபம் இடல் சிறந்த திருப்பணியாகவும் தெய்வப் பணியாகவும் கருதப்பட்டு வருகிறது.

பண்டைக்காலத்தில் சைவ, வைணவ, சமணக் கோயில்களில் திருவிளக்கு வைத்தல் உண்டென்று பல கல்வெட்டுகளாலும் செப்பேடுகளாலும் அறிகிறோம். ‘விரும்பி நல் விளக்குத் தூபம் விதியினால் இடவல்லார்க்குக் கரும்பினில் கட்டி போல்வார் இறைவர்’ என்பதைத் தமிழ் மக்கள் பலரும் நன்கறிவர்.

இறைவனுக்கோ இறையடியார்களுக்கோ இன்னமுது படைத்தலைவிட உயர்ந்த தொண்டு - ஒப்பற்ற பணி திருவிளக்கு இடுதல் என்று கண்டு கோயில்களில் விளக்கெரிக்கும் திருப்பணியை உவந்து செய்து வந்தனர் பலர். இதனைச் சாமுண்டப்பை வைத்த திருநுந்தா விளக்குச் சாசனம் நன்கு உணர்த்துகிறது.

இவ்வரிய சாசனத்தால் சாமுண்டப்பை என்ற திருப்பெயர் கொண்ட மங்கைநல்லாள் திருவமுது படைக்கவும் திருவிளக்கு எரிக்கவும் முறையே காசு பத்தும், காசு இருபதும் தானமாக அளித்துள்ளார் என்று அறிகிறோம். இந்தச் சாசனத்தால் திருவமுது படைப்பதற்கு அளித்த காசைவிடத் திருவிளக்கு எரிக்கப் பத்து காசு அதிகமாகத் தானம் வழங்கியுள்ளதை ஆராயும் பொழுது திரு விளக்கு எரிப்பதையே சிறந்த தெய்வத் திருப்பணியாய் அவள் எண்ணியிருந்தாள் என்பது நமக்கு நன்கு புலனாகிறது.

கனவிலும் நனவிலும் சைவத் திருப்பணியை மறவாது ஆற்றி வந்தவர்கள் அறுபத்து மூன்று நாயன்மார்கள் ஆவர்.

அவர்களில் நமிநந்தி அடிகள், கணம் புல்லர், கலியநாயனார் ஆகிய மூவர்களும் ஏனைய நாயனார்களைப் போல் அஞ்செழுத்தும் திருநீறும் கண்டிகையும் அனவரதமும் மறவாது பொதுவாக பணி புரிந்து வந்தாலும் திருவிளக்கு எரித்தலைச் சிறப்பான சிவப்பணி யாகக் கொண்டு வாழ்ந்து வந்தவர்கள். இவர்கள் மூவரும் வறுமை, நோய் முதலிய எத்துணைக் கொடிய இடையூறுகள் எழுந்த போதிலும் தங்களின் திருப்பணியை விடாது செய்து வந்தனர்.

கையில் காசில்லாத நிலையிலும் கடன் கொடுப்பார் யாரும் இல்லாத நிலையிலும் தங்களுக்குரிய எல்லாப் பொருள்களையும்

விற்று - ஏன்? தங்களுக்கு இனியவர்களான மனைவி மக்கள் முதலியோர்களை விற்றும் தங்கள் இறுதி மூச்சு உள்ள வரை தாங்கள் மேற்கொண்ட விளக்கெரிக்கும் திருப்பணியை விடாது புரிந்து வந்துள்ளார்கள். இவர்களின் தெய்வப் பணி, உறுதி, தியாகம் முதலியவைகள் சமயப்பணி புரிவார்க்கு மட்டுமல்ல, நாட்டுப்பணி, சமூகப்பணி புரிவார்க்கும் சிறந்த எடுத்துக்காட்டாக இலங்கு கின்றன.

காவிரி பாயும் சோழ வளநாட்டில் ஏமப்பேரூர் என்று ஓர் ஊர் உண்டு. அப்பேரூரில் சிவபக்தி கொண்ட சைவ அந்தணர் குடும்பத்தில் நமிநந்தி அடிகள் தோன்றினார். அவர் பள்ளிப் பருவம் கடந்து நல்ல யௌவனப் பருவம் அடைந்ததும் சிவபெருமான் மீது அளவற்ற பக்தி கொண்டு இறைவனடியை அனவரதமும் போற்றிவர முற்பட்டனர். அவர் தினமும் திருவாரூரை அடைந்து தியாகராஜர் திருவடிகளை மறவாது வணங்கி வந்தார்.

### திருவாரூரின் பெருமை

திருவாரூர் தமிழ்நாட்டுப் பழம் பெருஞ் சிவஸ்தலங்களில் ஒன்று; சப்த விடங்கத் தலங்களில் ஒன்று; விராட்புருஷனுடைய மூலாதார ஸ்தானமாய் மதித்தும் போற்றப்படும் புனித இடம். தில்லையில் திருச்சிற்றம்பலம், திருவாரூரில் திருமூலட்டானம் என்று பெருமையாகப் பேசப்படும் ஸ்தலம் இங்குள்ள கமலாலயம் என்னும் தெப்பத்தின் நடுவில் உள்ள கோயிலில் நாக நாதரும் யோகாம்பிகையும் குடி கொன்டிருக்கிறார்கள். இத்தலத்தைப் பூங்கோயில் என்று போற்றுவர்.

***'மாடமொடு மாளிகைகள் மல்கு தில்லை***
***மணிதிகழும் அம்பலத்தே மன்னிக் கூத்தை***
***ஆடுவான் புகுவதற்கு முன்னோ பின்னோ***
***அணி ஆரூர் கோயிலாக் கொண்ட நாளே'***

என்று இறைவனை ஐயம் தீர்க்குமாறு அப்பர் அடிகள் கோரி நின்றார் இந்த ஆரூரில்,

சுந்தரமூர்த்தி நாயனார் பொருட்டுத் தியாகேசர் நள்ளிரவில் பரவை நாச்சியாரிடம் தூது சென்ற இடம். காஞ்சியில் ஒரு கண்பார்வை பெற்ற சுந்திரமூர்த்தி நாயனார் இங்கு இறைவனை,

***'மீளா வடிமை யுமக்கே யாளாய்ப் பிறரை வேண்டாதே***
***மூளாத்தீப் போலுள்ளே கனன்று முகத்தான் மிகவாடி***
***ஆளாயிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்***
***வாளாங்கிருப்பீர் திருவாரூரிர் வாழ்ந்து போதீரே'***

என்ற திருப்பதிகம்பாடி மற்றொரு கண்பார்வையும் பெற்ற இடம்

***'தோழனுமாய் யான் செய்யும் துரிசுகளுக்கு உடனாகி***
***மாழை ஒண்கண் பரவையைத் தந்து ஆண்டான் மதியில்லா***
***ஏழையேன் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே'***

*என்று சிவபெருமான் தம் பிழைகளைப் பொறுத்துத் தோழராகி நின்று தம் திருமணத்தை முடித்துத் தந்த வரலாற்றைச் சுந்தரர் பாடுகிறார்.*

*கலைமகள் பூசித்த இடம். திருவாரூரில் பிறக்க முத்தி, தில்லையில் இறக்கமுத்தி என்று பக்தர்கள் பாடும் தலம். திருவாரூர்த் தேரழகு என்று மக்கள் போற்றும் பதி. மனுநீதிகண்ட சோழனுடைய பட்டினம், சேரமான் பெருமாள் வந்து சுந்தரமூர்த்தி நாயனாரைத் தரிசித்த இடம்.*

*விறன்மீண்ட நாயனார், செருத்துணை நாயானர், தண்டி யடிகள் நாயனார், துர்வாச நாயனார், கழற்சிங்க நாயனார் முதலிய சிவனடியார்கள் முத்தி பெற்ற திருத்தலம் என்று போற்றப்படுவது.*

*சுந்தரமூர்த்தி நாயனார் விருத்தாசலத்தில் சிவபெருமானிடம் பெற்ற பொன்னை அங்குள்ள மணிமுத்தாநதியில் இட்டு வைத்தார். அதைத் திருவாரூரில் கமலாலயத்தில் பெற வேண்டினார். அதன் படியே சிவபெருமானை வேண்டிப் பாடிக் கமலாலயத்தில் அப் பொன்னைப் பெற்றார். பொன்னை அங்கிருந்து பிள்ளையார் மூலம் மாற்றுறைத்துப் பார்த்தார். மாற்று சரியாக இருந்தது.*

*மேற்குக் கோபுரத்திற்கு எதிரில் மாற்றுறைத்த பிள்ளையார் கோயில் இருக்கிறது. இங்க கமலாம்பாள் சந்நிதி தனியாக இருக் கிறது. நீலோற்பலாம்பாள் அல்லது அல்லியங்கோதை என்னும் அம்மை சந்நிதி வேறே இருக்கிறது. தெங்குக் கோபுரத்திற்கு அருகில் சுந்தரர் மனைவி - பரவை நாச்சியார் கோயில் இருக்கிறது. கமலா லயம் என்னும் திருக்குளம் மிகப் பெரியது, நடுவில் தீவுபோல் அழகிய சிறு கோயில் இருக்கிறது.*

*பசுவின் கன்று ஒன்று இளவரசன் ஓட்டிய தேரின் அடியில் வீழ்ந்து மாளப் பசுவிற்கு நீதி வழங்கும் பொருட்டுக் கன்றைக் கொன்ற தனது ஒரே மகனைத் தேர்க்காலில் இட்டுக் கொன்ற மனுநீதிச் சோழன் வாழ்ந்த மணி நகரம். அதனால் சிலப்பதிகாரம்,*

***'வாயின் கடை மணி***
***நடுநா நடுங்க***
***ஆவின் கடைமணி உகுநீர்***
***நெஞ்சு கடத் தான்தன்***
***அரும் பெறற் புதல்வனை***
***ஆழியின் மடித்தோன்'***

*என்று மனுநீதிச் சோழனுக்குப் புகழ் மாலை சூட்டுகிறது.*

இக்கதை திருவாரூரில் சிலை வடிவில் பொறிக்கப்பட்டிருக்கிறது. ஆலயத்தில் வன்மீக நாதர் சந்நிதி நடுநாயகமாய் இலங்குகிறது. இவர் சுயம்பு மூர்த்தி, வெள்ளிக் கவசத்துடனும் நாகாபரணத்துடனும் விளங்குகிறார். பக்கத்தில் சோமகுசாம்பாள் போகசக்தி அம்மன் அர்த்த மண்டபத்தில் அழகுடன் காணப்படுகிறார்.

தியாகராசப் பெருமான் சோமஸ்கந்த சுகாசன மூர்த்தியாய் எழுந்தருளியிருக்கிறார். இவர் திருமாலின் உபசான மூர்த்தியாய் இருந்தவர் என்று கூறப்படுகிறது. இவர் திருமாலின் இருதயத்தில் எழுந்தருளி அவர் மூச்சு விடும்பொழுது அமர்ந்தபடியே ஆடினாராம். இந்த நடனம் அஜபா நடனம் என்று கூறப்படும். இதனால் தியாசேகருக்கு இருந்தாடழகர் என்ற பெயரும் எழுந்தது. இங்கு நவக்கிரகங்கள் வக்கரித்துக் கொண்டிராமல் எல்லாம் இறைவனையே நோக்கிய வண்ணம் காணப்படுவது ஒரு புதுமை. சனீசுரருடைய தேவியாகிய ஜேஷ்டை (மூதேவி). ஆனந்தீசுவரர் சன்நிதியில் சேடியர்கள் சாமரை வீசப் பரிவாரங்களுடன் வீற்றிருக்கிறாள். இங்கு இரு சண்டேசர்கள் இருக்கிறார்கள்.

நமது நமிநந்தியடிகள் சிறப்பு மிக்க இத் திருவாரூரில் புற்றிடங் கொண்ட பெருமான் என்று போற்றும் வான்மீக நாதனை வணங்கி அருகேயுள்ள 'அறநெறி' என்னும் ஆலயத்தை அடைந்தார். அறநெறியப்பரை ஆடிப்பாடித் துதித்தார். அறநெறியப்பன் சந்நிதியில் இரவில் எண்ணில்லாத திருவிளக்கேற்றினால் எத்துணை அழகாய் இருக்கும் என்று எண்ணினார்.

தம் இல்லம் சென்று நெய் கொண்டுவர நேரம் இல்லாததால் அருகேயுள்ள வீடு ஒன்றிற்குப் போய் சிவாலயத்தில் திருவிளக்கேற்ற நெய் தாருங்கள் என்றார்.

அவ்வீடு சிவபெருமானை வெறுக்கும் சமண சமயத்தவர் வீடானதால் உள்ளிருந்தார் எள்ளி நகையாடிக் 'கையில் விளங்கு கனலுடையார் தமக்கு விளக்குமிகை காணும்; நெய்யீங்கில்லை; விளக்கெரிப்பீராகில் நீரை முகந்தெரித்தல் செய்யும்' என்று கூறினர்.

இது கேட்டு மனம் நொந்த நமிநந்தி அடிகள் இறைவனை வணங்கி அருகிலுள்ள குளத்து நீரை மொண்டு வந்து அகலிலே வார்த்து விளக்கேற்றினார். விளக்குச் சுடர்விட்டு எரிந்தது. அதனைக் கண்ட அடிகளார் அறநெறியப்பன் ஆலயம் அனைத்தும் உள்ள திருவிளக்கிற்கும் நீரை வார்த்து எரித்தனர். ஆலயம் ஜெக ஜோதியாய்த் திகழ்ந்தது. விடியும் அளவும் விளக்கெரித்து இறைவனை வணங்கி நின்றார். நீரால் விளக்கு இட்டதைத் தமிழ் உலகம் அறியச் செய்தார். அப்பர் அடிகள், திருவாரூர்த் திருவிருத்தத்தில்.

> ***'ஆராய்ந் தடித்தொண்டர் ஆணிப்பொன் ஆரு ரகத்தடக்கிப்***
> ***பாரூர் பரிப்பத்தம் பங்குனி யுத்திரம் பாற்படுத்தான்***

***நாரூர் நறுமலர் நாதன் அடித்தொண்டன் நம்பிநந்தி***
***நீராற் றிருவிளக் கிட்டமை நீணாடறியுமன்றே'***

என்று புகழ்ந்து பாடியுள்ளார்.

நமிநந்தி அடிகள் நீர் ஊற்றி விளக்கெரித்த நாள் முதல் அசலேசர் கோவில் அரநெறி என்று பெயர் பெற்றது என்று கூறுகின்றார்கள்.

அசலேசர் ஆலயத்தின், அர்த்த மண்டபத்தில் வண்டார் குழலி அம்மன் திரிபங்கி வடிவில் கட்சி அளிக்கிறார். அச்சந்நதியில் ஆலங்கொண்டான், ஆடவல்லான் ஆகியோர்களின் அழகிய திரு உருவங்கள் உள.

நமிநந்தி அடிகள் திருவிளக்கிட்டார். மக்களுக்கு மாயை என்னும் இருள் அகற்றி இறைவனின் இணையற்ற எழிற் சோதியைக் கண்டுய்ய வழி வகுத்தார். விளக்கெரித்து விண்ணிற்கேகினார். சமய குரவர்கள் போற்றிப் பாடும் பெற்றியைப் பெற்றார்.

**கணம் புல்லர்**

கணம் புல்லர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். வடவெள்ளாற்றின் கரையில் உள்ள இருக்கு வேளூர் என்னும் திருப்பதியில் வாழ்ந்து வந்தார். சைவம் போற்றும் சிவபெருமானின் திருக்கோயில்களிலே தினந்தோறும் திருவிளக்கேற்றும் தொழிலே உலகிற் சிறந்த திருப்பணி, ஒப்பற்ற மெய்ப்பணி என்று கண்டவர். விளக் கெரிப்பதே தாம் பெற்ற செல்வத்தின் பயன்; விளக்கு எரிப்பதே இவ்வூனுடல் பெற்றதன் பயன் என எண்ணித் திருவிளக்கு எரிக்கும் திருப்பணியில் தமது செல்வம் அனைத்தையும் செலவிட்டார்.

செல்வங்குன்றி வறுமை வந்தடைந்தது. அதனால் சிதம்பரம் சென்று தில்லையில் எல்லையில்லாக் கூத்தாடும் நெல்லைவாணனிடம் அடைக்கலம் புகுந்து அனவரதமும் அவனடியே வணங்கி வந்தார்.

தம் வீட்டிலுள்ள பொருள்களையெல்லாம் விற்றுத் திருப்புலீச்சரம் என்னும் திருக்கோயிலில் திருவிளக்கு எரிக்கும் அருட் பணியினை ஆற்றி வந்தார். வறுமையால் கையில் விளக்கிடக் காசில்லாமற் போகவே காட்டிற்குக் கடுகிச் சென்று கணம் புல்லினை அரிந்து கொண்டு வந்து விற்று அதனால் கிடைக்கும் காசைக் கொண்டு விளக்கேற்றி வீடு பெற நாடினார்.

ஒரு நாள் அவர் கொண்டு வந்த கணம் புல் விற்கவில்லை. எனவே அவர் அரிந்து கொண்டு வந்த அப்புல்லிற்குத் தீ மூட்டி அழகிய விளக்காக எண்ணி எரித்தார். புல்லை விளக்காக முதல் யாமம் வரையும் கூட எரிக்க முடியவில்லை. புல் முடிந்ததும் செய்வதின்னதெனத் தெரியாது தத்தளித்தார்.

அப்பால் சிந்தித்துத் தனது முடியையே அன்பினால் தீமூட்டி விளக்காக எரித்துச் சோதியிற் கலக்க முனைந்தார்.

இதுகண்ட சிவபெருமான் அன்பனின் அளவிடற்கரிய பக்தியை வியந்து அவருக்குப் பெருங்கருணை புரிந்து என்றும் பொன்றாப் பேரின்ப வீட்டை அளித்தார்.

சிதம்பரம் பூலோக கைலாசம் என்று போற்றப்படும் பொழுதும்

***'கற்றாங் கெரியோம்பிக்***
***கலியை வாராமே***
***செற்றார் வாழ்தில்லைச்***
***சிற்றம்பல மேய***
***முற்றா வெண்திங்கள்***
***முதல்வன் பாதமே***
***பற்றா நின்றாரைப் பற்றா பாவமே'***

என்று தேவாரம் பாடும் பொழுதும் சிதம்பரத்தின் சிறப்பினைப் பேசும்பொழுதும் கணம் புல்லர் பெயரும் அவர் பணியும் மறந்து விடப்படுவதில்லை.

**கலிய நாயனார்**

இவர் திருவொற்றியூரில் எண்ணெய் வணிகர் பெருங்குடியில் பிறந்தார். திருவொற்றியூர்க் கோயிலில் இரவும் பகலும் உள்ளும் புறமும் விளக்கெரிக்கும் திருப்பணியைப் புரிந்து வந்தார்.

சைவசமய குரவரான சுந்தரமூர்த்தி நாயனார் சங்கிலி நாச்சி யாரை மணம் புரிந்த இடம் இது. சுந்தரர் சங்கிலியை, மகிழமரத்தின் அடியில் நின்று மணம் புரிந்து கொண்டார். இதை முன்னிட்டு மாசி மாதத்தில் இங்கு 'மகிழடி உற்சவம்' சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இங்கு கோயிலுக்குள் பல இலிங்கங்கள் உள. கோயில் மிகப் பெரியது. அழகானது. இலிங்கம் வெகு பளபளப்பாய் இருக்கிறது.

பட்டினத்தடிகள் முத்தி அடைந்த இடம் இது. இங்கு அப்பர் அடிகளுக்கும் பட்டினத்தாருக்கும் தனி ஆலயங்கள் உண்டு. இங்குள்ள சுவாமி மாணிக்கத் தியாகர், தேவி வடிவுடையம்மை.

இங்குதான் கலிய நாயனார் நீண்ட நாள் விளக்கெரிக்கும் பணியை விருப்பமுடன் செய்து வந்தார்.

இறைவன் இவரை ஆட்கொள்ள நாடினார். இவருடைய செல்வம் திருத்தொண்டால் குன்றியது. என்றாலும் இவர் தாம் மேற்கொண்ட பணியைக் கைவிடவில்லை. கூலி வேலை செய்து அதனால் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டு தம் தெய்வப் பணியைச்

சிறப்புடன் செய்து வந்தார். எண்ணெய் விற்றும் கூலி வேலை செய்தும் விளக்கெரிக்கும் பணியை விடாது இரவும் பகலும் ஆற்றி வந்தார்.

கூலி வேலையினால் கிடைக்கும் ஊதியமும் கிடைக்கவில்லை. அப்பால் இவர் தன் இல்லத்தை விற்றுப் பொருள் பெற்றுத் தாம் மேற்கொண்ட திருப்பணியைக் குறைவற நடத்தி வந்தார்.

இறுதியாக அகமகிழ்ச்சியோடு அருமை மனைவியை விற்று விளக்குப் பணி புரியலாம் என அவரை அழைத்துச் சென்று திருவொற்றியூர் முழுவதும் அலைந்து விலை கூறி வந்தார். பொருள் கொடுப்பாரைக் காணாது சோர்வுற்றுத் திரும்பினார்.

அப்பால் ஆலயத்தை அடைந்து திருவிளக்கேற்றும் நேரத்தில் ‘திருவிளக்குப் பணி’ நின்று விடுமாயின் யான் இறப்பதே தகுதி என்ற முடிவிற்கு வந்தார்.

திருவிளக்கிற்கெல்லாம் திரியினை இட்டார். அகல்கள் அனைத்தையும் அணியணியாய்ப் பரப்பி வைத்தார்.

எண்ணெய்க்குப் பதிலாக உடலில் உள்ள உதிரத்தை ஊற்ற உன்னி ஓர் கூரிய கருவியைக் கையால் எடுத்துக் கழுத்தினை அறுக்க முன்வந்தார். அப்பொழுது சிவபெருமான் அங்கு தோன்றி, அரியும் அருங்கரத்தைத் தம் அன்புக் கரத்தால் பிடித்துக் கலிய நாய னார்க்குக் காட்சியளித்தார்.

பெரிய புராணத்தில் நமிநந்தி, கணம் புல்லர், கலியர் ஆகிய மூன்று நாயன்மார்களும் திருவிளக்கெரிக்கும் திருப்பணியால் உயர்நிலை எய்தினர் என்று கூறப்படுகிறது. இவர்கள் சைவந் தழைக்கப் பெரும்பணியாற்றிய நாயன்மார்கள் வரிசையில் இடம் பெற்றனர். இப்பணி புரிந்தவர்கள் எக்குலத்தவர்களாயினும் எத் தொழில் புரிந்தவர்களாயினும் சைவப் பெருமக்களுக்குத் தந்தையர் களாகப் போற்றப்படும் புனித நிலையை எய்தியவர்களாக இவர்கள் கருதப்படுகின்றனர்.

சமயக் குரவர்களால் நமிநந்திக் கடியேன், கணம் புல்லர்க் கடியேன் கலியர்க்கும் அடியேன் என்று துதித்துப் போற்றப்பட்ட னர். எனவே இவர்கள் காலம் சுமார் 1000ஆம் ஆண்டுகளுக்கும் முற்பட்டது என்று தைரியமாகக் கூறலாம்.

முற்காலத்தில் திருவிளக்கிடும் பணிக்கு நாட்டில் ஒரு பெரும் கௌரவம் இருந்தது என்பது இதனால் நன்குணரப்படுகிறது. இக்கதை மெய்யா - பொய்யா? இவர்கள் ஆற்றிய அரும்பணி அறி விற்குப் பொருந்துமா? காலத்திற்கு ஏற்றதா என்று அரட்டை யடிக்கும் அறிவியல்வாதிகளின் அதீதவாதத்தைக் கொண்டு நான் இங்கு அலசிப்பார்க்க விரும்பவில்லை. தொண்டு தியாகம் முதலிய

வைகள் பல திறப்பட்டன. தன்னலமற்றுப் பணிபுரிவோர் உயர்த்தப் பெறுவர்; போற்றப்படுவர் என்ற உண்மையை இந்த வரலாற்றி னின்று காண்கின்றேன். அதோடு இத்தெய்வப் பணி ஒரு காலத்தில் மக்களுக்கு இன்றியமையாத அறப்பணியாகவும் இருந்து வந்தது என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும் என்று சமய அறிஞர்கள் மொழிவது ஆராயத்தக்கது.

## சாசனச் சான்றுகள்

*தமிழ் நாட்டின் வரலாறு முற்காலத்தில் எழுதப்படவில்லை. இன்றும் எழுதி முடிக்க முயலவில்லை. நாட்டின் வரலாறு மட்டு மல்ல, மொழியின் வரலாறும், இலக்கிய வரலாறும், இசையின் வரலாறும், நாடகத்தின் வரலாறும், கலைகளின் வரலாறும், காசின் வரலாரும், விளக்கின் வரலாரும் வரையப்படவில்லை.*

*எழுதுதற்குரிய நன்முயற்சி எதுவும் எழுகிறது என்று எண்ணக் கூட முடியவில்லை. நமது வரலாற்றை வரைவதற்கு இன்றியமையாத சாதனங்களாய் இருப்பவை நமது நாட்டில் காணக்கிடக்கும் கல்வெட்டுகளும் செப்பேடுகளுமேயாம்.*

*நமது தமிழ்நாட்டு அரசாங்கம் இதுவரை இருபத்தையாயிரம் சாசனங்களைக் கண்டெடுத்திருக்கிறதாம். அவற்றில் ஐயாயிரம் சாசனங்கள் படிக்கப்பட்டு நூல் வடிவம் பெற்று வெளி வந்திருக் கின்றனவென்று சாசன ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்ட நண்பர் திரு. தி. நா. சுப்பிரமணியம் அவர்கள் கூறியதோடு, இப்போது நடை பெறும் முறையில் நடந்தால் எஞ்சிய இருபதாயிரம் சாசனங்களை யும் படித்து முடிக்க இன்னும் நூறு ஆண்டுகள் ஆகும் என்றார்.*

*தமிழர்களின் ஒரு நல்ல வரலாற்றை நாம் காண இன்னும் நூறு ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். இன்றுள்ள 'பச்சைத் தமி ழர் ஆட்சி' இதைப்பற்றி கடுகளவும் கவனம் செலுத்தவில்லை. நான் இங்கு குறிப்பிடுவது நல்ல வரலாற்றையேயாகும். போலி வரலாற்றை அல்ல.*

*நிற்க, இன்று நம் மக்கள் செய்யும் எந்த ஆராய்ச்சியும் உண்மை யுடையதா? உறுதியுடையதா? என்பதை அறிய இதற்குச் சாசனச் சான்றுகள் உண்டா? என்று கேள்வி கேட்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.*

*எனவே, இங்கு உங்கள் முன்னால் படைக்கப் பெற்ற விளக் கிற்கும் நாம் சாசனச் சான்றுகள் தேடும் அவசியத்திற்கு வந்துள் ளோம்.*

*நம் ஆராய்ச்சிகளுக்கு அவசியம் சாசனச் சான்றுகள் காட்டித் தீர வேண்டிய நிலையில் இருக்கின்றோம். நம் கல்வெட்டுகளும், செப்பேடுகளும், நம் நாட்டு மன்னர்களும், வணிகர்களும், மிராசு தார்களும் அளித்த நிபந்தங்களைக் கூறுவதோடு, அக்காலத்தில்*

இருந்து வந்த பல்வேறு பெயர்களுடைய பல்வேறு விதமான விளக்கு களையும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

நமது நாட்டில் நல்ல, விதவிதமான, அழகிய விளக்குகள் பல உள்ளன. ஏட்டிலும் பாட்டிலும் எண்ணற்ற விளக்குகள் காணப்படு கின்றன. சிற்பங்களில் பல சீரிய விளக்குகளும் ஓவியத்தில் பல எழில் விளக்குகளும் காணப்படுகின்றன.

நமது நாட்டு விளக்குகள் அனைத்தும் அழகு வடிவம் அமையப் பெற்றவை; சிற்பச் சிறப்பு அற்புதமாக அமைக்கப்பட்டன என்று கூறிவிட முடியாது. ஒரு சில விளக்குகளே அற்புதமான படைப்புகள் என்று கூறமுடியும்.

அவைகள் நமது பண்பாட்டை விளக்கும் படிமங்களின் பிரதி பிம்பங்களாகக் காட்சியளிக்கின்றன. நமது நாட்டின் வரலாற்றை விளக்கும் கருவூலங்களாகத் திகழ்கின்றன. நமது நாகரிகத்தின் நனிசிறந்த சின்னங்களாகப் பொலிகின்றன.

அவைகளின் மூலம் ஆயிரக்கணக்கான அண்டுகளுக்கு முன் நமது நாட்டினர் பெற்ற சிறப்பை அறிய முடிகிறது. நம் மாதர்கள் அணிந்திருந்த பொற் பணிகளையும், அணிகளையும், மணிகளை யும்; ஆடைகளையும் அரிய வேலைப்பாடுகளையும் அழகிய விளிம்புகளையும் ஆடைகள் அணியும் முறைகளையும் எந்தெந்த உறுப்புகளில் எந்தெந்த நகைகளை அணிந்திருந்தார்கள் என்ப வற்றையும் நமக்கு அறிவுறுத்தும் நற்சான்றுகளாய் அவை மிளிர் கின்றன.

அதோடு அக்காலத்தில் என்னென்ன உலோகங்கள் கிடைத்தன. விளக்கு எரிக்க எதையெல்லாம் உபயோகித்தனர். பசு நெய்யா? எள் நெய்யா என்றெல்லாம் அறிய முடிகிறது.

அக்காலத்தில் உபயோகப்படுத்திய விளக்குகளில் சிற்பச் சிறப்புடைய விளக்குகள் நாம் தீபலட்சுமி விளக்கு அல்லது பாவை விளக்கு என்கிறோம். உலோகத்தால் செய்யப்பட்ட இவ்விளக்குகள் திருவறையின் அருகில் இருபக்கங்களிலும் அகலேந்தி நிற்பதோடு கோயிலின் கற்றூண்களிலும் காணப்படுகின்றன. இத்தகைய விளக்குகள் கோயிலினுள்ளே இருக்கும் தெய்வத்திற்கு நேர்ச்சையாக சில நன்கொடையாளர்கள் அளித்த பொருள் உதவி மூலம் செய்யப்பட்டவைகளாகும்.

இவ்விளக்குகளை நன்கொடையாக நல்கியவர்களுக்குக் கோயிலில் சில மரியாதைகளும் வழங்குவதுண்டு, பல்வேறு கோயில் களில் மக்கள் அளிக்கும் காணிக்கைகளில் பாவை விளக்குகள் சிறப்புடையனவாகக் கருதப்பட்டு வருகின்றன.

கோயில்களில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகளுக்குப் பாவை விளக்கைக் காணிக்கையாக அளித்தவர்களின் பெயர்களையும்

அவர்கள் எண்ணெய் அல்லது நெய்க்காக அளித்த நிவந்தங்களை யும் கோயில் சுவர்களின்மீது பொறிக்கப்பட்டிருக்கும் கல்வெட்டும் கோயில்களில் பத்திரமாகப் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கும் செப்பேடுகளும் நமக்குத் தெளிவாய் எடுத்துக் காட்டுகின்றன.

இத் திருவிளக்குக் கைங்கரியம் என்றும் குறைவின்றி நடைபெற எண்ணற்ற நிலங்களும் பசுக்களும் கோயிலுக்கு மானியமாக விடப்பட்டுள்ளன. இந்தப் பசுக்களிலிடமிருந்து கிடைக்கும் நெய்யைக் கொண்டும் நிலத்திலிருந்து கிடைக்கும் மகசூல்களினின்றும் இந்த விளக்கிடும் அறப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**குலோத்துங்கன் ஆட்சியில் தண்டனை**

மூன்றாவது குலோத்துங்க சோழன் ஆட்சிக் காலத்தின்போது (கி.பி. 1178 - 1215). ஒரு வழக்கில் குற்றவாளிக்கு அபராதம் விதிக்கப்பட்டது. அதாவது மான் வேட்டை ஆடும் பொழுது வேட்டைக்காரன் தவறுதலாக ஒரு மனிதனைக் கொன்று விட்டான். அக் கொலை குற்றத்துக்காக அவனுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. அந்த அபராதத் தொகையினின்று கோயிலில் எப்பொழுதும் அணையாத நந்தா விளக்கு ஏற்றி வைக்கப் படவேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இறந்து போனவனுடைய ஆவியினால் கொலை செய்தவனுக்கு ஏற்படும் தீங்குகளினின்றும் அவனைக் காக்க வேண்டி இத்தகைய விளக்கேற்றிப் பாவ நிவாரணம் பெறுவ தற்காக இத் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

தெய்வ உருவங்களுக்குமுன் ஆரத்தி சுற்றும் சமயச் சடங்குகளில் உபயோகப்படும் விளக்குகளுக்கும் இந்தப் பாவை விளக்குகளுக்கும் வேற்றுமைகள் உண்டு. தெய்வச் சிலைகளுக்கு முன்பாகத் தங்களின் உருவந் தீட்டிய பாவை விளக்குகளை வைத்து மூர்த்தி களின் அருகே விளக்கேந்தி நிற்பது பெரும் புண்ணியம் என்றே இந்த விளக்குக் காணிக்கைகள் அளிக்கப்பட்டன.

மனித உருவத்தில் அரிய சிற்ப வேலைப்பாடுகள் விளங்க, அணிகளும் ஆடைகளும் நனிசிறந்து இலங்க, இறைவனின் அருகில் எப்பொழுதும் நின்று பணிவிடை செய்யும் பாவணையில் பாவை விளக்கை வைப்பதால் இறைவன் இவ்விளக்கைச் செய்து வைத்தவரே தமக்குத் திருத்தொண்டாற்றுவதாக எண்ணி இன்பந்தருவான், ஈடேற்றம் அளிப்பான் என்ற எண்ணங்களின் பலனாகவே நாட்டில் பாவை விளக்குக் காணிக்கைகள் மல்கின.

திருவிளக்கு, இறை வணக்கத்திற்கு இன்றியமையாத சாதனம், இறைவன் தத்துவத்தை விளக்கும் ஒப்பற்ற எடுத்துக்காட்டு; இருளை யோட்டிப் பொருளைக் காட்டும் அரிய கருவி. அற்புதமானச் சிற்பச் சிறப்புப் பொங்க இன்பம் அளிக்கும் மங்கலப் பொருள்.

எனவே பண்டைக் காலத் தமிழர்கள் கோயில்களுக்கு என்றும் பொன்றாது இரவு பகலாக ஒளிவிட்டோங்கும் வாடாமணி விளக்கை, மங்காமணிவிளக்கை, நந்தாப் பொன் விளக்கை, தூண்டா மணிவிளக்கை, குன்றாத குத்துவிளக்கை, பங்கயப் பாவை விளக்கையெல்லாம் காணிக்கையாக அளித்தார்கள். இவ்விளக்கு களுக்கு வார்ப்பதற்காக அவரவர்கள் சக்திக்கு ஏற்றவாறு ஆடு மாடு களையும் அவைகள் மேய்வதற்காக நஞ்சை புஞ்சை நிலங்களையும் மானியங்களாக அளித்தனர். அவைகளை இன்று நாம் கல்வெட்டுகள் மூலமாயும் செப்பேடுகள் மூலமாயும் நன்கறிகிறோம்.

**இராசராசன் விளக்கு மானியம்**

வரலாற்று ஏடுகளில் என்றும் பொன்றாப் புகழ் உடையன வாகப் போற்றப்படுகிற முதலாம் இராச இராச சோழன் தஞ்சாவூரி லுள்ள திருவுடைய பெருவுடையார் கோயிலுக்கு நாடோறும் நெய் விளக்கு ஏற்ற நாள் ஒன்றுக்கு உழக்கு நெய் வீதம் அளிப்பதற்காக 48 பசுக்களை மானியமாக அளித்தான்.

முதற் பராந்தக சோழன் (கி.பி. 907 - 953) மகள் வீரமாதேவி இராஷ்டிர கூட மன்னன் நான்காம் கோவிந்த வல்லவரையன் மனைவி கி.பி. 935ஆம் ஆண்டில் தக்கோலத்துத் திருவூறல் பெரு மானுக்கு நாள்தோறும் எரியும் நந்தா விளக்கு ஏற்ற நிவந்தமாக அறுபது கழஞ்சுப் பொன் அளித்தாள்.

பிற்காலத்தில் மகாராஷ்டிர மன்னர்களின் ஆட்சி தஞ்சையில் தளிர்த்தது. சரபோஜி என்னும் கலைப் பிரியர் தஞ்சையில் ஆட்சி புரிய ஆரம்பித்தார். அவரது ஆட்சி 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆரம்பித்தது 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை நடைபெற்றது.

அவரது உடன் பிறந்தவராகி பிரதாபசிம்மர் தமக்கு அரச பட்டம் கிடைக்காமையால் திருவிடைமருதூரில் ஒரு அரண் மனையை அமைத்துக் கொண்டு அங்கேயே வாழ்ந்து வந்தார். அவரது மாமன் மகள் அம்முணு அம்மணி எழில்மிக்க யௌவனப் பருவத்தை எய்தியிருந்தாள். இருவருக்கும் காதல் அரும்பியது, ஆனால், மணம் நடைபெறவில்லை.

நாட்கள் உருண்டோடின. திலகவதி பிறந்த திருநாட்டில் வதியும் அம்முணு அம்மணியும் இனிவேறொருவனை உள்ளம் விரும்பாது என்று முடிவு செய்தாள். காலமுழுவதும் கன்னியாகவே கழித்தாள். இறுதியில் தன் உள்ளத்தை இறைவனுக்கு அர்ப்பணிக்க முனைந்தாள். இறைவனருகே இருந்து என்றும் பணி செய்ய எண்ணினாள். தன் வடிவில் ஒரு பாவை விளக்குச் செய்து திருவிடை மருதூர் ஜோதிர்மய மகாலிங்க மூர்த்தியின் பக்கத்தில் இருக்கும்படி செய்து விட்டாள். இப்பாவை விளக்கின் பாதத்தில் தமிழிலும் மகாராஷ்டிரத்திலும் சாலிவாகன சகாப்தம் 1775ஆம் ஆண்டு

(பிரமாதீச வருஷம்) ஆனி மாதம் 22ந் தேதி சோமவாரத்தில் மத்யார்ச் சுனர் சந்நிதியில் இப்பாவை விளக்கு ஏற்றப்பட்டது என்பதும், இவ்விளக்கு இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட காரணமும் அம்முணு அம்மணியின் பெயரும் அழகாகப் பொறிக்கப்பட் டிருக்கின்றன.

**விளக்கு மானியங்கள்**

திருக்கண்டியூர் கோவிலில் அம்மன் கோவில் கீழ்ச் சுவரில் ஒரு கல்வெட்டுக் காணப்படுகிறது. அது தஞ்சையிற் பெரிய கோவிலை எழுப்பித்த முதலாம் இராசராசன் (கி.பி. 985 - 1013) மகன் இராசேந்திர சோழ மன்னனது ஆறாம் ஆண்டுச் சாசனமாகும்.

அதில் ‘இரவு பகல் இடைவிடாது எரியும் திரு நந்தா விளக்கு இரண்டுக்கு எண்ணை உழக்காழாக்கும் சிறுகாலை எரியும் சந்தி விளக்கு இரண்டும் இராவெரியும் சந்தி விளக்கு நாலும் ஆகச் சந்தி விளக்கு எட்டுக்கு எண்ணை உழக்கும் ஆக நள் ஒன்றுக்குத் திருவிளக்கு எண்ணெய் உரி ஆழாக்குக்கு எண்ணெய் நெல்லு தூணி யாக நெல்லுப் பதக்கு நானாழியும்........ கார்த்திகை விளக்கீட்டுக்கு எண்ணெய் நாழிக்கு நெல்லு கலனே தூணியாக ஆண்டு வரை நெல்லு முந்நூற்று இருபத்து இருகலனே இருதூணி இருநாழி உரியும், கொடுக்க வேண்டும் என்று நிவந்தம் அளித்துள்ளான்.’

சோழப் பேரரசன் இராசராசனின் மனைவியான முதற் பெருந்தேவி ஓலோக மாதேவி திருவையாற்றில் அறம் வளர்த்தார் ஆலயத்தில் உள்ள வடக்குப் பிரகாரத்தில் ஒரு கோவில் கட்டி யுள்ளார். அதற்கு ஒலோகமாதேவீச்வரம் என்று பெயர் வழங்குகிறது.

இவ்வாலயத்தில் விமானத்தின் வடபுறம் குமுதப் படையில் தொடங்கி மேற்புறத்தும் தென்புறத்துமாகத் தொடர்ந்து செல்வது ஒரு கல்வெட்டு. அதனை ஆராய்ந்தால் தமிழகத்தில் தனிவடம், திரிசரம், பஞ்சசரி, முகத்தில் மாணிக்கம் கட்டின திருச்சன்னவடம், தாலிகள் கோர்த்த மாலை, முத்துப் பட்டிகை, முத்து வளையல், இடுக்கு வளையல், பொன்னின் காற்காறை, முகத்தின் காற்காறை முடி, குதம்பை, தாழ் கூட்டுக் கம்பி, ஒரணை ‘முத்தினு முத் தோரணை, நிலத்திணுபட்டம் சுட்டி, ஸ்ரீ சந்தம் என்றின்னோரன்ன மணிகள் அழுத்திய அணிகலன்களும் பொன்னின் தளிகை, ஒட்டு தட்டில், மானவட்டில், வெள்ளித் தளிகை, வெள்ளிக் கலசம், வெள்ளிக் கச்சோளம்; வெள்ளிச் சட்டுவம், வெங்கல சிலைத்தட்டு முதலாய பரிகலங்களும் மத்தளம் கொட்டும் பாவை, உடுக்கை வாசிக்கும் பாவை, பாடும் பாவை, ஆடும் பாவையும் அமைத்த பாவைக் கண்ணாடியும் பள்ளித் தொங்கல் மகுடம், ஈச்சோப்பிக்கை தூங்கு விளக்கு, ஈழச்சியல் விளக்கு, மலையான் செயல் விளக்கு,

சோழிச்சியல் விளக்கு, அனத்தலை விளக்கு, ஆரக்குடவிளக்கு, தூபமணி, கைமணி, எறிமணி' பிறவும் இருந்தமை நன்குணரலாம்.

இராசராசன் பட்டத்திற்கு வந்த 24ஆம் ஆண்டில் அவன் மனைவி ஒலோகமா தேவி மற்றொரு கல்வெட்டின் மூலம் திருவை யாற்று ஒலோகமா தேவி ஈச்வரம் ஒலோகவிடங்க தேவர் உள்ளிட்ட திருமேனிகளுக்கு அளித்த ஆபரணங்களுக்கும் பரிகலங்களுக்கும் ஏராளமான பொற்கட்டிகளையும் வெள்ளிக் கட்டிகளையும் அளித்ததோடு 'தூங்கு விளக்கு ஒன்றின் நிறை அறுபலம். தராவிளக்கு ஒன்றினிரை ஐம்பத்து முப்பலம். மேற்படி ஈழச்சியால் விளக் கொன்றின் நிறை உட்கருவும் நாராயமும் உட்பட இருநூற்றுப்படி, மலையாண்சியல் விளக்கு ஒன்று கருவொடும் நாராயத்தோடும் நிறை முந்நூற்றொருபதின்பலம், சோழியச் செயல் விளக்கு உட்கருவும் நாராயமும் உட்பட நிறை நூற்றைம்பத்து நாற்பலமும் ..... அரைதலை விளக்கு உட்கருவும் நாராசமும் உட்பட நிறை முந்நூற்றுபதின் பலமும் விளக்கொன்று நாராயமும் உட்கருவும் உட்பட நிறை இருபத் தெண்பலமும் ஆரக்குட விளக்கு ஒன்றின் நிறை நூற்றி எண்பத் தொன்பதின் பலமும் மேற்படி விளக்கு நிறை நூற்றறுபத்தறு பலமும் நிவந்தமாக அளித்திருப்பதாகக் காணப்படுகிறது.'

விக்கிரம சோழன் (கி.பி. 1120 - 1129) சின்னக் காஞ்சிபுரம் அருளாளப் பெருமாள் கோயிலில் மலை என்று கூறப்படும் கல் தளத்தின் மேற்குச் சுவரில் தீட்டிய கல்வெட்டில் திரு நந்தா விளக்குக்கு நாள் ஒன்றுக்கு எண்ணெய் உழக்காக நாள் அஞ்சுக்கு எண்ணெய் நாழி உழக்குக்கும், திருவிளக்குக்கு எண்ணெய் நாழி உரியும், திரு விளக்குடையார்கள், குழாய் பன்னிரண்டுக்கு எண்ணெய் முந்நாழி யும் பாவை விளக்குக் கெண்ணெய் இருநாழியும் நிவந்தம் அளித் திட்டான்.

பாலாற்றின் உபநதியாகிய நுகாவின் மேற்குக் கரையில் உள்ள திருவள்ளம் என்னும் ஊரில் உள்ள பில்வநாதீசுவரர் கோயிலில் மகா மண்டபத்தின் வட சுவரில் விசயந்திர விக்கிரம வர்மன் (கி.பி. 830 - 847) என்பவன் தீட்டிய கல்வெட்டில், திரு. நுந்தா விளக்குக்குப் பொன் இருபதின் கழஞ்சு நிவந்தம் அளித்ததாகக் காணப்படுகிறது.

சோழ மன்னன் முதல் இராஜராஜ சோழன் அரியணை ஏறிய பத்தாம் ஆண்டில் திருப்புறம்பியத்துக் கோயில் கருவறையின் தென்புறம் எழுதுவித்த கல்வெட்டில், 'அண்டாட்டுக் கூற்றத்துத் திருப்புறம்பியத்தாடியானா'கிற கூத்தப் பெருமானுடைய நம்பிராட் டியார் திருப்பள்ளிக் கட்டிலுக்கு இவ்வூர் வளஞ்சியர் வைத்திருந்த திரு நொந்தா விளக்கு இவை பற்றுக்குப் பழையவானவன் மாதேவி நிலம் வானவன் மாதேவி நதிக்குக் கிழக்கு, ராஜேந்திரி வாய்க்காலுக்கு மேற்கு நின்று சம்மதித்துக் கையோலை கொடுத்தோம்' என்று காணப்படுகிறது.

இதே போன்று இராஜராஜசோழன் பட்டம் சூடிய இருபத் தைந்தாம் ஆண்டில் இராஜேந்திர சிங்கவள நாட்டு அண்டாட்டுக் கூற்றத்துத் திருப்புறம்பியத்துத் திருப்புறம்பிய முடைய மகாதேவர் கோயிலில் உள்ள நுந்தா விளக்கிற்கும் கடவவிளக்கிற்கும் மானியம் அளித்ததாக மேற்படி கோயில் கருவறையின் மேற்புறத்திலுள்ள கல்வெட்டுக் கூறுகிறது.

இன்னும் அவன் அரியணை ஏறிய ஏழாம் ஆண்டிலும் பத்தாம் ஆண்டிலும் பதினேழாம் ஆண்டிலும் விளக்குகளுக்குப் பல மானியங்கள் அளித்ததற்கு அக்கோயில்களின் கல்வெட்டுகள் இன்றும் சான்று பகர்கின்றன.

மன்னர்கள் மட்டுமன்றி, மன்னர்களின் மனைவியும் மகளும் அன்னையும் கல்வெட்டுகள், செப்பேடுகள் மூலம் பல்வேறு விதமான மானியங்களை அளித்துள்ளார்கள் என்பது நாம் அறியக் கிடக்கின்றன.

வாசகர்கள் பண்டைக்காலச் சாசனங்களையும் அக்காலத் தமிழ் நடையும் அறியும் பொருட்டு இங்கு உதாரணமாக ஒரு கல்வெட்டை எடுத்துக் காட்டுகின்றோம்.

இக் கல்வெட்டுக்கு ஒலோகமாதேவீச்வரக் கல்வெட்டு என்று பெயர். ஒலோக மாதேவீச்வரம் என்பது திருவையாற்றில் ஐயாறு அடிகள் கோயில் வடக்குப் பிராகாரத்தில் இருக்கும் ஒரு சிறு கற்கோயிலாகும்.

இதனை எடுப்பித்தவர் இராஜராஜசோழனின் முதற் பெருந் தேவி. அதனால் அவளது பெயரால் ஒலோக மாதேவீச்வரம் என்று இக்கோயிலை அழைப்பர்.

இந்தக் கோயிலில் விமானத்தின் வடபுறக் குமுதப் படையி லிருந்து மேற்புறத்தும் தென்புறத்தும் தொடர்ந்து செல்கிறது இக்கல்வெட்டு.

***'திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்***
***தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்***
***காந்தளூர் சாலை கலமறுத் தருளி***
***வெங்கை நாடுங் கங்கை பாடியும்***
***தடிகை பாடியுய் நுளம்ப பாடியும்***
***குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும்***
***எண்டிசை புகழ்தர ஈழமண்டலமும்***
***இரட்ட பாடி ஏழரை யிலக்கமும்***
***திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட***
***தன்னெழில் வளரூழியில் ளெல்லா யாண்டும்***

***தொழுதெழ விளங்கும் யாண்டே***
***செயவரைத் தேக்கொள்;'***

*ஸ்ரீ கோவி ராஜராஜ கேஸரி பன்மரான ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு 24-வது உடையார் ஸ்ரீ ராஜதேவர் நம்பிராட்டியார். தந்தி சக்தி விடங்கியான ஸ்ரீ ஒலோகமா தேவியார் வடகரை ராஜேந்திர ஸிம்ஹ வளநாட்டு பொய்கை நாட்டுத் திருவையாற்றுப் பால் நாம் எடுப்பித்த திருக்கற்றளி ஒலோகமா தேவீச்வரம் உடைய மகா தேவர்க்கும் ஒலோகவிடங்கதேவர் உள்ளிட்ட திருமேனிகளுக்கும் செய்வித்த பொற்கொள்கை முதலாய உள்ள திருவாபரணங் களுக்கும் திருப்பரிகலங்களுக்கும் கல்லிலே வெட்டுவிக்க வென்ற உடன் கூட்டத்து அதிகாரம் செய்கின்ற கோவலூருடையான் காடன் நூற்றெண்மனையும் அதிகாரிச்சி எருதன் குஞ்சரமல்லிகையும் அருளிச் செய்யக் கல்லின் வெட்டினபடி: கொளகை தேவர் வளையி லிரண்டுள் பட குடிஞைக் கல்லால் பொன்நிறை மூவாயிரத் திருநூற் றெழுபத்து முக்கழஞ்சும் பட்டம் முன்றினால் பொன்நிறை எண்பத் தொன்பதின் கழஞ்சேய்காலும் பொன்னின் தாமரைப் பொற்பூ ஒன்றினால் நிறைபதின் கழஞ்சும் ஒலோக விடங்க தேவர் சாத்தி யருளும் முடி ஒன்று பொன் நிறை நூற்றைங் கழஞ்சறையும் மேற் படியில் கட்டின மாணிக்கம் இருபத்தொன்றும் வயிரம் நூற் றிரண்டும் நீலம் ஒன்றும் தறுப்பறுபத்து நாலும் பொத்தி எழுபத் தொன்பதும் ஸப்ரயோகம் இருநூற்று நாற்பதும் மேற்படியிற் கட்டின தகட்டுப் பொன் முக்கழஞ்சும் மேற்படியிற் கோத்த முத்து ஐந்நூற்று எழுபத்து மூன்றும் மேற்படியிற் கோத்த வெள்ளிக் கழஞ்சும் மேற்படியார் சாத்தும் குதம்பை ஒன்று பொன் இரு கழஞ்சும் மேற் படியிற் கட்டின மாணிக்கமொன்றும் தருப்பிருபத்து மூன்றும் ஸப்ரயோகம் பதினேழும் முத்து இருபத்தேழும்........ தூப பாத்திரம் ஒன்றின் நிறை ஏழு பலம் வரை தூங்கு விளக்கின் தலை ஒன்றின் நிறை அறு பலம் தாரா விளக்க ஒன்றின் நிறை ஐம்பத்து முப்பலம் மேற்படி ஈழச்சியல் விளக்கொன்றின் நிறை உட்கருவும் நாராயமுட்பட்ட இருநூற்று ப. . .டி மலையாண்சியல் விளக்கு ஒன்றும் கருவொடும் நாராயத்தொடும் நிறை முந்நூற்றிருதின் பலம் சோழயச்சியல் விளக்கொன்று ஒன்று உட்கருவும் நாராயமு முட்பட நிறை முந்நூற்றொருபதின் பலம். . . அரை தலை விளக்கு உட்கருவும் நாராசமும் உள்பட நிறை முந்நூற்றறுபதின்பலம் விளக்கொன்று நாராயமுமுட்கருவு முட்பட நிறை இருபத்தெண்பலமும் ஆரக்குட விளக்கொன்று நிறை நூற்று எண்பத்தொன்பதின் பலம் மேற்படி விளக்கு நிறை நூற்று அறுபத்தறு பலம். . . . .' என்று எழுதப்பட் டுள்ளது.*

இதில் திரிசரம், தனிவடம், பஞ்சசரி முகத்தின் மாணிக்கம் கட்டின திருச்சன்னவடம், தாலிகள் கோத்த மாலை, முகத்தின்

*பட்டிகை, முத்தின் வளையில், இடுக்கு வளையில், பொன்னின் காற்காறை, முகத்தின் காற்காறை, முடி, குதம்பை, தாழ்க்கூட்டுக் கம்பி ஓரணை, முத்தினு முத்தோரணை, நீலத்தினு முத்தோரணை பட்டம், சுட்டி ஸ்ரீ சந்தம் போன்ற மணிகள் பதித்த அணிகளும், பொன்னின் தளிகை, ஒட்டு வட்டில், மானவட்டில் வெள்ளித் தளிகை, வெள்ளிக் கலசம், வெள்ளிக் கச்சோலம், வெள்ளிச் சட்டுவம், வெண்கல இலைத் தட்டு போன்ற பரிகலங்களும் மத்தளங் கொட்டும் பாவை, உடுக்கை வாசிக்கும் பாவை, பாடும் பாவை, ஆடும் பாவையும் அமைத்தப்பயவைக் கண்ணாடியும், பள்ளித் தொங்கல் மகுடம் தூபமணி, கைமணி, எறிமணி உள்ளிட்ட பிறவும் அதற்களித்த பொன், வெள்ளி நாராயசம் போன்ற தாதுப் பொருள்களின் எடையும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. (விரிவஞ்சி அவைகளை இங்கு அதிகம் காட்டவில்லை.)*

*சில சாசனங்களில் அவை பதிவு செய்யப்பட்ட ஆவணக்களரி (ரிஜிஸ்டரார் ஆபீஸ்) சாட்சிகள், எழுதியவர் பெயர் முதலிய விவரங் களும் காணப்படுகின்றன. மன்னர்கள் வரைந்த சாசனங்களில் அவர்கள் முத்திரைகள் பொறிக்கப்பட்டுள்ளன.*

## மின் விளக்குகள்

*இன்றைய மனித வர்க்கம், பழைய கற்காலம், இடைக்காலக் கற்காலம் புதிய கற்காலம் இரும்புக்காலங்களையெல்லாம் கடந்து மின்சாரக் காலத்தில் வாழ ஆரம்பித்துவிட்டது. மனித வர்க்கத்தின் புதிய சகாப்தம் புத்துருவோடு எழுந்து விட்டது. மக்கள் வரலாற்றில் ஒரு மாபெரும் திருப்புமுனை அரும்பியுள்ளது.*

*இந்தியாவில் எழுந்த சுதந்திர உணர்ச்சி இலங்கை, பர்மா, சாவகம், சுமத்திரா, போர்னியோ, மலாயா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலெல்லாம் பரவியது. இன்று பல நாடுகள் தம் அடிமைச் சங்கிலிகள் அனைத்தையும் உடைத்தெறிந்து விட்டு உலக அரங்கில் சுதந்திர நாடுகளின் அணியில் தலைநிமிர்ந்து வெற்றி நடை போட்டு வருகின்றன. சுதந்திர உணர்ச்சி தம் நாடு, தம்மொழி, தம்கலை என்ற உணர்வை எழுப்பி விட்டது. விஞ்ஞான விருத்திக்கு வித்திட்டு விட்டது.*

*ஒரு காலத்தில் மக்கள் விளக்குகளைப் பற்றிக் கண்டும் கேட்டும் அறியாதிருந்தனர். மக்கள் மாக்களாய் விலங்குகளோடு விலங்குகளாய் வாழ்ந்து அப்பால் தங்கள் இன்றியமையாத தேவை களின் பொருட்டுத் தம் அறிவைத் தீட்ட ஆரம்பித்தனர். கருவிகள் செய்யத் தெரியாது, மரங்களிலும் குகைகளிலும் வாழ்ந்த மக்கள், மரக்கிளைகள், மூங்கில்கள் முதலியவைகளினால் கருவிகள் இயற்றிக் காலங் கழித்து வந்த மக்கள், பின் கற்களால் கருவிகள் செய்ய ஆரம்பித்தனர்.*

*கற்கருவிகள் பழங்கற் கருவிகள் புதுகற் கருவிகள் என இரு வகைப்படும். பழங்கற் கருவிகள் இன்றைக்கு 20,000 ஆண்டுகளுக்கு முன்னும் புதுக்கற் கருவிகள் 7,000 ஆண்டுகளுக்கு முன்னும் இருந்த காலம் என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.*

*குரங்குகளைப் போல் தங்கள் கைகளையே தங்கள் கருவி களாய்க் கொண்டு காய் கனிகளையும் கிழங்குகளையும் தின்று வாழ்ந்த மக்கள் தம் பகைவர்களாகிய புலி, கரடி முதலிய விலங்குகளையும் அப்பால் மான், மரை, முயல் முதலிய விலங்குகளையும் தின்னத் தொடங்கினர்.*

*புலி, கரடி, யானை முதலிய விலங்குகளினின்று தப்பிப் பிழைக்கச் சிறிய கிளைகளையும் பெரிய தடிகளையும் கொண்டு*

அவைகளுடன் போராடி வெற்றி கண்டனர். அப்பால் மூங்கிலை விரிச்சல்களாக பிளந்து அவற்றை வளைத்துக் கொடிகளால் கட்டி அதில் பெரிய முட்செடியை அம்பாய்த் தொடுத்தும் விலங்குகளைக் கொன்று தின்று சில ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தனர்.

அப்பால் படிகம் போன்ற கல்லை உடைத்துக் கற்கருவிகள் பல செய்து கொண்டனர். இதனைப் பழம் கற்கருவிகள் என்பர்.

பின்னர் பன்றி முதலிய மிருகங்களைப் பிடிப்பதற்குக் கற் களைப் பொறியாக உபயோகித்தனர். அப்பொறியை அடார் என்றும் கல்லடார் என்றும் கூறுவர். அடார் கருங்கல் பலகையை ஒருபால் சாய்வாக நிமிர்த்திக் கீழே முட்டுக் கொடுத்து உள்ளே உணவுப் பொருட்களை வைப்பர். விலங்குகள் உணவை உண்ண, உள்ளே புகுந்து உணவுப் பொருளைத் தொடுதலும் கல் வீழ்ந்து விலங்கைக் கொல்லும் இதனைத்தான் கல்லடார் என்றனர். இதனை நமது பழம் பேரிலக்கியங்களில் நன்கு காணலாம் எடுத்துக்காட்டாக,

***"இரும்புலி வேட்டுவன் பொறியறிந்து மாட்டிய***
***பெருங்கல் லாடரும் போன்மென விரும்பி"*** (புறம். 19 : 56)

***"திணையுண் கேழ விரியப் புனவன்***
***சிறுபொறி மாட்டிய பெருங்கல்லடா***
***ரொண் கேழ் வயப்புலி படூஉ நாடன்"*** (நற். 119)

***"புயைதொறு மாட்டிய விருங்கலம் பொறி"*** (மலைபடு. 194)

மக்கள் முதன் முதலில் கண்ட தொழில், தங்கள் உணவுப் பொருளைப் பெருக்குதலேயாம். ஆதியில் காய்கனிகளைப் பறிக்கவும், கிழங்குகளைத் தோண்டவும் விலங்குகளைக் கொன்று, அவற்றின் ஊனைத் தின்னவுமே மக்கள் அறிந்திருந்தனர். அப்பால் வேட்டைத் தொழிலை மேற்கொண்டனர். ஆடு மாடுகளைப் பழக்கி அவற்றின் பாலை உண்ணத் தலைப்பட்டனர்.

குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் அந்நிலத்தின் இயற்கை யாலும் வேட்டைத் தொழிலாலும் உடல் உரமும் உள உரமும் பெற்றனர். எனவே பிற்காலத்தில் பிற நில மக்களை அடக்கி ஆளும் ஆற்றலும் பெற்றனர். இவர்கள், 'கற்றோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முற்றோன்றி மூத்த குடி' என அழைக்கப் பட்டனர்.

இப்பழங்கால மக்கள் உணவிற்காகவும், ஆடு மாடு மேய்க்க வும் அங்குமிங்கும் அலைந்து திரியும் நிலையில், மூங்கில்கள் ஒன்றோ டொன்று காற்றால் உரசுவதால் அவை தீப்பற்றி எரிவதையும் கண்டு, மரத்தில் தீயுண்டு என்று கண்டு, கட்டைகளை ஒன்றோ டொன்றுத் தேய்த்துத் தீயுண்டாக்கக் கற்றனர். ஒரு கட்டையிற் குழியிட்டு அதைக் கீழே வைத்து அக்குழியில் மற்றொரு கோலை வைத்துக் கடைந்து நெருப்பை உண்டு பண்ணினர்.

நெருப்பை உண்டு பண்ணும் கோலை ஞெலிகோல் மரக்கடை தீக்கோல், தீக்கடைக்கோல், அரணி என்றெல்லாம் கூறினர். இதனை நமது சங்க இலக்கியங்களில் நன்கு காணலாம். எடுத்துக்காட்டாக,

***'இல்லிறைச் செரீஇய ஞெலிகோல்போல'*** (புறம். 315 : 4)

***'ஆங்கதன் கரையின் பாங்கோ***
***ரணிநிழற் கேழலிட்டு***
***வாங்குவிற் காடன்றன்னை மரக்கடை***
***தீங்கோல் பண்ணி***
***ஈங்குநீ நெருப்புக்காண்பா***
***யிம்மலையேறிக் கண்டு***
***நாங்கள் வந்தணைவோ மென்று***
***நாணனும் தாமும் போந்தார்'***

(பெரிய புராணம் கண. 99)

***'இந்தனத்தை முறித்தடுக்கி***
***யெரிகடையும் அரணியில்***
***வெந்தழலைப் பிறப்பித்து'*** (பெரிய புராணம் 145)

இஃதன்றி நெருப்பை ஞெலிதீ என்றனர் - அதாவது ஞெலித் என்றால் கடைந்து கொள்ளப்பட்ட தீ என்று பொருள் ஆகும். (ஞெலிதல் - கடைதல்) தீயுண்டாக்கக் கற்றுக் கொண்ட பின் மக்கள் படிப்படியாய் உயிர்நிலை பெற்றனர். நெருப்பே அவர்கள் வாழ்விற்கு வழிகாட்டியது. அதுவே முன்னேற்றத்திற்கு முதற் படியாய் இருந்தது.

***'இமுதி னன்ன வானிணக்***
***கொழுங்குறை***
***கானதர் மயங்கிய விளையர் வல்லே***
***தாம்வந் தெய்தர் வளவை***
***யொய்யெனத்***
***தான் ஞெலி தீயின் விரைவனன்***
***சுட்டுநின்***
***னிரும்பே ரொக்கலொடு தின்மெனத்***
***தருதலின்'*** (புறம். 150 : 9 - 13)

***புல்லென் மாலைச் சிறு தீ ஞொலியுங்***
***கல்லா விடையன் போலக் குறிப்பின்'***

(புறம். 331 : 4 -5)

***'இடையன்..... ஞெலி கோற் கொண்ட***
***பெருவிறன் ஞெகிழச் செந்தீ -'*** (பெரும்பாண். 325 - 6.)

அப்பால் மக்கள் கற்களால் கருவிகள் இயற்ற ஒரு கல்லால் மற்றொரு கல்லை உடைக்கவே அதனின்று தீப்பொறி பறக்கக் கண்டு

கற்களில் நெருப்பு உண்டென்பதைக் கண்டனர். பொறி யுண்டாக்கு கல்லைத் துருவி எடுத்து ஒரு கல்லை மற்றொரு கல்லால் தாக்கி அதில் இருந்துவரும் தீப்பொறியைப் பக்கத்திலுள்ள சருகு களின் மீதும் பஞ்சின் மீதும் விழச் செய்து நெருப்பையுண் டாக்கினர்.

அன்று அவர்கள் தீ உண்டாக்க உபயோகித்த கற்களுக்குச் சக்கி முக்கிக் கற்கள் என்று பெயர். இதன் மூலம் உணவுப் பொருள் களைச் சுட்டும் வதக்கியும் பல ஆயிரம் ஆண்டுகளைப் பழங்கற் காலத் தமிழர்கள் வாழ்ந்து கழித்தனர்.

இதன் பலனாகத் தமிழர்களிடம் மர வணக்கமும் தீ வணக்க மும் எழுந்தன. அவர்களுக்கு உணவை அளித்த மரங்களும், நிழலை யும் பழங்களையும் வாசனையையும் நல்கிய மரங்களும் தெய்வ மாகத் திகழ்ந்தன.

அப்பால் உணவைப் பக்குவப்படுத்தவும், இருளை ஓட்டவும், குளிர் காயவும் அவர்களின் விரோதிகளான விலங்குகளை விரட்ட வும், அவைகளினின்று அவர்களைக் காக்கவும், துணை செய்த நெருப்பும் தெய்வமாயிற்று.

அன்று நெருப்புக் குச்சிகள் இல்லை. நெருப்புக் கிடைப்பது அரிது. சக்கி முக்கிக் கற்கள் கிடைத்தாலும் நெருப்பையுண்டாக்கப் பெருமுயற்சி தேவையாயிருந்தது.

எனவே ஒரு சில மக்கள் தம் இடத்தில் மரக்கட்டைகளையும் காய்ந்த இலைகளையும் போட்டு இரவும் பகலும் நெருப்பை அணையாது பாதுகாத்து வந்தனர். வேண்டியவர்கள் அந்த நெருப்புக் கட்டைகளிலிருந்து சிறு கங்குகளை எடுத்துக் கொண்டு போய்த் தம் இடத்தில் நெருப்பை வளர்த்துக் கொண்டனர். நெருப்பு வெளிச்சம் தரவும், உணவைப் பக்குவப்படுத்தவும், குளிர் காயவும் பயன்பட்ட தால் நெருப்புக் கடவுளாகக் கருதப்பட்டது.

**விளக்கு எண்ணெய்**

மக்களுக்கு நீண்ட நேரம் வெளிச்சம் தேவைப்பட்டது. பல இடங்களில் வெளிச்சத்திற்கு அவசியம் ஏற்பட்டது. எனவே மக்கள் வெளிச்சம் தரும் ஒரு கருவியைக் கண்டுபிடிக்க முனைந்தனர்.

அப்பால் அவர்கள் கல்விளக்கையும் மண்விளக்கையும் நெய்யையும் கண்டனர். நீண்ட நாளுக்குப் பின்னர் எள்ளினின்று நெய் எடுக்கக் கற்றனர். பின்னர் எள்நெய்யை விட மிகக் கட்டியான ஆமணக்கு (வித்திலிருந்து) நெய்யை எடுக்கக் கற்றனர். அது விளக் கிற்கு ஏற்ற நெய்யாக இருந்ததால், விளக்கிற்கு அதையே உப யோகிக்க முன்வந்தனர்.

பசுவினின்று பாலைக் கறக்கவும் அதனின்றி நெய்யை எடுக்கவும் கண்டனர். எள்ளிலிருந்து நெய்யை எடுத்து அதை எள் - நெய் - எண்ணெய் என்றனர். அதன் பிறகு ஆமணக்கு வித்திலிருந்து நெய்யை எடுத்ததும் ஆமணக்கு எண்ணெய் என்றும் விளக் கெண்ணெய், என்றும் பெயரிட்டனர்.

அப்பால் புன்னை எண்ணெய், வேப்பெண்ணெய், தேங்காய் எண்ணெய், கடுகு எண்ணெய் என்று வளர்ந்து வர வகை செய்தனர்.

அவர்கள் முதன் முதலில் நெய் எடுக்கப் பயன்படுத்திய எள்ளின் பெயரை எந்த வித்திலிருந்து நெய் எடுத்தாலும் அதோடு எள் என்ற பதத்தைப் புகுத்தி எண்ணெய் என்ற வார்த்தையை உபயோகித்து வந்திருக்கிறார்கள். எண்ணெய் கண்டுபிடித்த பின்னரே விளக்கில் பெரு மாறுதல்கள் எழ ஆரம்பித்தன.

திராவிடப் பெருங்குடி மக்களின் தாயகமாக மேனாட்டு வரலாற்றுப் புலவர்கள் கூறும் சுமேரிய நாட்டில் (இன்றைய ஈராக் கில்) பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மண்ணெண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. தமிழ்நாட்டில் இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எண்ணெய் இருந்தது என்று தைரியமாகக் கூறலாம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் மேனாட்டில் மெழுகு வத்தி விளக்கை மக்கள் கண்டதாகத் தெரிகிறது. மரப்பட்டைகளின் நார்களைத் திரிகளாகத் திரித்து அவற்றின் மீது மெழுகைத் தடவி விளக்காக உபயோகப்படுத்தினர். நார்த்திரிகளில் கொழுப்புப் பொருளைத் தேய்த்துச் செய்யப்பட்ட விளக்கே ஆதியில் மெழுகு வர்த்தி விளக்காக இருந்தது.

அப்பால் மெழுகு, கொழுப்புப் பொருள்கள் தேய்க்கப்பட்ட குச்சிகள் நெருப்புக் குச்சிகளாகப் பயன்படுத்தப்பட்டன.

கி.பி. 400ஆம் ஆண்டில் பொனிசியர்கள் தாம் முதலில் மெழுகு வத்தி விளக்கைக் கண்டனர். அப்பால் அதைக் காற்று அணைத்து விடாமல் இருக்கக் கண்ணாடிக் கூடுகளைக் கண்டனர். பின்னர் பல் வேறு வகையான மெழுகு வத்தி விளக்குகள் மேனாட்டில் எழுந்தன.

கி.பி. 6வது நூற்றாண்டில் சப்பானியர்கள் மண்ணெண்ணெயைக் கண்டுபிடித்து அதை 'எரியும் நீர்' என்று விளக்கெரிக்க உபயோகப் படுத்தி வந்தனராம். இந்த மண்ணெண்ணெயிலிருந்து பெட்ரோல் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் மூலம் மேனாட்டில் படுக்கை அறை விளக்கு, சுவரொட்டி விளக்கு, ஹரிகேன் விளக்கு, பவர் விளக்கு போன்றவை அரும்பின. (படம் 42, 43, 44)

எண்ணெய் விளக்கு நாளடைவில் வாயு விளக்குகளாக அபி விருத்தி அடைந்தது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சீனர்கள் வாயு விளக்கைக் கண்டனர் என்று கூறப்படுகிறது. (படம் 45)




படம் **42.**
தகரம் விளக்கு




படம் **43.**
அரிக்கன்
விளக்கு




படம் **44.**
பெட்ரோ
மாக்ஸ்
விளக்கு




படம் **49.**
நியான் காற்றடைத்த
விளக்கு




படம் **51.**
பாதரச ஆவி
விளக்கு



படம் **47.**
கரிக்கம்பி
விளக்கு




படம் **47.**
சூட்டன் கம்பி
விளக்கு




படம் **50.**
காற்றடித்த
ஆவி
விளக்கு



படம் **45.**
ஆவி விளக்கு





படம் **52.**
மின்சார விளக்கு



படம் **46.** சுண்ண விளக்கு




படம் **53.** நியான் விளக்கு



படம் **54.** குழாய் விளக்கு

மேனாட்டில் கி.பி. 17வது நூற்றாண்டிலே நிலக்கரி அஸெடி லீன் போன்ற வாயுக்கள் மூலம் எரிக்கும் முறையைக் கண்டு, வீட்டு விளக்கிற்கும், தெரு விளக்கிற்கும், வாயுவைப் பயன்படுத்தி வந்த தாகத் தெரிகிறது. சுண்ணாம்புக் கட்டியைச் சூடேற்றி அதன் உயர்ந்த வெப்ப நிலையால் கிடைத்த ஒளிமூலம் கண்ட சுண்ண விளக்கும் எழுந்தது.

விளக்கில் எழுந்த புதுமையில் மாண்டில் உபயோகப்படுத்த ஆரம்பித்ததே அரிய முறையாகும். சில ரசாயனப் பொருள்கள் தோய்ந்த துணிவலைதான் மாண்டில் என்று கூறப்படுகிறது. அதில் நெருப்பைக் கொளுத்தினால் சூடேறி வெண்சுடராக மிளிர்கிறது.

வாயுவைப் பயன்படுத்தும் விளக்கில் மாண்டிலைப் பொருத்தி னால், அது காஸ் விளக்கு என்று கூறப்படுகிறது. இந்த அடிப்படை யில் பெட்ரோமாக்ஸ், பேபி பெட்ரோமாக்ஸ் போன்ற பலவகை யான விளக்குகள் எழுந்தன. இவ்விளக்குகள் எண்ணெயாலும் ஆவியாலும் எரிகின்றன.

எண்ணெய் - ஆவிக்குப் பதிலாக ப்யூடேன், ப்ரொபேன் என்னும் வாயுக்களைப் பயன்படுத்தி எரியும் வாயு விளக்குகளும் உண்டு.

மஞ்சள் பாஸ்பரஸ் நச்சுத் தன்மையுடையது என்று கண்டு சிவப்பு பாஸ்பரசில் சிவப்புத் தீச்குச்சிகள் தயாரிக்கப்பட்டன.

அப்பால் குச்சி முனையில் பாஸ்பரஸ் இல்லாத இன்றைய காப்புத் தீக்குச்சிகள் (சேப்டி மேச்சஸ்) உருவாயிற்று.

பெட்டியின் பக்கத்தில் ஒட்டப் பெற்றிருக்கும் தாளில்தான் சிவப்புப் பாஸ்பரஸ் இருக்கும். அது எங்கு தேய்த்தாலும் தீப் பற்றாது. பெட்டியின் மேல் உராசினால்தான் எரியும். அதற்குத் தேவையான பிராண வாயுவைப் பொட்டாசியம் குளோரைடு போன்ற உப்புகள் தருகின்றன.

**விளக்குகளின் வளர்ச்சி**

கி.மு. ஆறாம் நூற்றாண்டிற்கு முன்பே மின்சாரத்தின் இயல்பைக் கிரேக்கர்கள் அறிந்திருந்தனர். ஆனால் இத்துறையில் கிரேக்கர்கள் தம் கவனத்தைச் செலுத்தத் தவறிவிட்டனர். கி.பி. 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருவகை மின்சாரம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

பட்டினால் தேய்க்கப்பட்ட கண்ணாடியில் ஒருவகை மின்சாரமும் கம்பிளியினால் தேய்க்கப்பட்ட 'எபனைட்'டில் இன்னொரு வகை மின்சாரமும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதை நன்காராய்ந்த டூபே என்ற விஞ்ஞானி, முதலில் கூறியதற்குக் கண்ணாடி மின்சாரம் என்றார். அதனை இன்று பாஸிட்டிவ் (நேர்) மின்சாரம் என்று கூறுகிறார்கள். பின்னர் கூறியதற்கு ரெஸின்

மின்சாரம் என்று கூறினர். இதனை இன்று நெகடிவ் (எதிர்) மின்சாரம் என்றும் கூறுகிறார்கள்.

ஸ்டிபன்க்ரே என்ற ஒரு விஞ்ஞானி இந்த மின்சாரத்தைக் கண்ணாடியிலிருந்தோ ரெசினிலிருந்தோ வேறு பொருள்களுக்கு மாற்றலாம் என்று கண்டார். இதன் பின்னர்தான் மின்சாரம் திரவம் போல இயங்கும் சக்தியுடையதென்று தெரிந்தது.

பெஞ்சமின் பிராங்கிளின் ஒரேவகை மின்சாரமே உலகில் உள்ளது. அதினின்றே நேர் மின்சாரமும் எதிர் மின்சாரமும் கிடைக் கின்றன என்று கண்டார். அன்று அவர் கண்ட முடிவு இன்று பெரிதும் மாறுபட்டுள்ளது.

உலகம் சடம், சக்தி என்னும் இருபொருள்களாலானது. சடம் பிரிக்க முடியாத அணுக்களால் ஆக்கப்பட்டது என்று கருதப் படுகிறது. அணுக்கள், எலக்ட்ரான், புரோட்டான், நியூட்டிரான் என்பவைகளால் ஆனது.

புரோட்டான் நேர் (பாசிடிவ்) மின்சுமையுடன் கூடியவை. எலக்ட்ரான் எதிர் (நெகடிவ்) மின் சுமையுடன் கூடியவை. நியூட்டி ரான்களில் மின் சுமை இல்லை.

புரோட்டான்களும் நியூட்டிரான்களும் அணுவின் கருவிலும் எலக்டிரான்கள் அதைச்சுற்றி அடுக்கடுக்காயும் (ஓரடுக்கினும் அடுத்த அடுக்கு இரட்டிப்பு மடங்காய்) இயங்கிக் கொண்டிருக் கின்றன.

மின்சாரத்தை உற்பத்தி செய்ய மின்கலங்களும் டைன மோக்களும் உபயோகிக்கப்படுகின்றன. இவற்றின் அடிப்படைத் தத்துவத்தை மைக்கேல் பாரடே என்பவர் கண்டுபிடித்தார்.

இன்றைய நாகரிக வாழ்விற்கு மின்சாரம் உறுதுணையாக நிற்கிறது. நாம் வாழும் புதிய நாகரிக சகாப்தத்தை மின்சார சகாப்தம் என்று அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

திருவிளக்காகிய எண்ணெய் விளக்கின் அபிவிருத்தி தமிழ் நாட்டில் ஒருவிதமாகவும், மேனாட்டில் மற்றொரு விதமாகவும் இருக்கிறது. மேனாட்டில்தான் அதன் உண்மையான அபிவிருத்தியைக் கிரமப்படி காண முடிகிறது.

மேனாட்டில் கலை அழகு பொருந்திய நமது திருவிளக்குப் போன்ற விளக்குகள் அரும்பவில்லை. உரோமர் நாட்டில் இரண் டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பாவை விளக்கும் ஓதிம (அன்ன) விளக்கும் அரும்பினாலும் அவற்றில் அதிகமான அபிவிருத்தியோ, கலை வளர்ச்சியோ துளிர்க்கவில்லை.

மேனாட்டில் எண்ணெய் விளக்குகள் காற்றில் அணையா திருக்க கண்ணாடிப் புகைபோக்கி (சிம்னி) விளக்குகளின் அபிவிருத்தி

தான் முதலில் முளைத்தது. லியோ நார்டோ டாவின்சி (கி.பி.1452-1519) என்பவர் விளக்கின் சுவாலைக்கு மேலே உலோகப் புகைபோக்கி (சிம்னி)யைப் பொருத்தும் கருத்தை முதன் முதலில் கண்டார். ஆனால் அவருக்குப் பின்னர் - இருநூறு ஆண்டுக்கு அப்பால் கியூன் கொயட் என்ற பிரஞ்சு மருத்துவர் பழைய எண்ணங்களை மாற்றி உலோகச் சிம்னிக்குப் பதிலாகக் கண்ணாடிச் சிம்னியை விளக்குச் சுவாலையைச் சுற்றி வையாது - அதன் மேலே வைக்கலாம் என்று கருதினார்.

எவ்விதமான சிம்னியும் இல்லாத திறந்த வெளியில் பதினெட்டாம் நூற்றாண்டில் சுடர் விட்டு எரிந்த பழைய எண்ணெய் விளக்குகள் பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை நிலவி வந்தன. அப்பால் அதன் எண்ணெய்க் கலயங்களின் அளவு வரையறுக்கப் பட்டது. அப்பால் அதன் திரியில் மாற்றம் செய்வதில் பல கஷ்டங்கள் எழுந்தன.

நாட்டில் விஞ்ஞானக் கருத்துக்கள் துளிர்க்கவும் விளக்கு ஒளியின் சக்தியைப் பொருத்திச் செயற்கை ஒளியை உண்டாக்கும் கொள்கைக்கு ஆதரவு வலுத்தது. ஆவி விளக்குகளைக் கண்டுபிடிக்கும் துறையில் விஞ்ஞானிகள் தம் கருத்தைச் செலுத்த முனைந்தனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் விஞ்ஞானக் கருத்துக்கள் வெள்ளம் போல் பொங்கி எழுந்தன. கெட்டவையும் நல்லவையு மான பல புதிய விஷயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றில் பல அக்காலத்தில் ஏறக்குறைய வெற்றி பெற்றவையாய்த் துலங்கின. ஆனால் அவற்றின் வாழ்வு சுருங்கியதாய் இருந்தது. அவற்றைப் பற்றிய சில விவரங்கள் வருமாறு :

### பியூட் விளக்கு

விளக்கினுள்ளே பிராணவாயுவைச் செலுத்தி விளக்கை எரியச் செய்ய, ஆர்கண்ட் விளக்கு எழுந்தது - பின்னர் இதற்கு நிலக்கரிக் கேஸ் உபகோகப்படுத்தப்பட்டது.

### டிரம்மண்ட் விளக்கு

சுண்ணாம்பின் சுடர் ஊட்டும் பிராணவாயுவின் ஆவியால் உற்பத்தி செய்யப்பட்ட ஒரு வேகமான டிரம்மண்ட் விளக்கு எழுந்தது.

### கோர்சல் விளக்கு

(1800) இந்த விளக்கின் அமைப்பை உருவாக்குவதில் பல கஷ்டங்கள் ஏற்பட்டன. கனமான எண்ணெயால் விளக்கிற்கு எண்ணெய் உதவுவதில் (சப்ளை செய்வதில்) பல கஷ்டங்கள் ஏற்பட்டன. விளக்கெரியும் தட்டின் கீழே எண்ணெய் நிற்கும் கலயம் உள்ளது. அது இரு கடிகாரச் சூத்திரத்தைப் போல இயங்கும் இரு பீச்சாங்குழல் தண்டுகள் (பிஸ்டன்) உடையது. அதன் வழியே விளக்கு

*எரியும் திரிக்குச் செல்லும் குழாயின் மூலம் எண்ணெயை யும் வேகமாகச் செல்லச் செய்யப்படுகிறது.*

### மாடரேட்டர் விளக்கு

*இவ்விளக்கு பிரஞ்சு விஞ்ஞானி பிரஞ்சோட் என்பவரால் 1836இல் கண்டுபிடிக்கப்பட்டது. இது எண்ணெய் நிற்கும் கலையத் திற்கு அடித்தளத்திற்கு நிலக்கரி சப்ளை செய்வதில் அபிவிருத்தி செய்வதன் மற்றொரு முயற்சியாகக் கருதப்பட்டது. இவ்விளக்கு நீண்ட காலம் உபயோகத்தில் இருந்து வந்தது.*

### கோலிடே விளக்கு

*தார் எண்ணெயினின்று எரியும் விளக்கு இது. சுவரின் வெப்பத்தினின்று உண்டாகும் ஆவியினால் ரோஸ் நிறமான விளக்கு எரியும் தட்டிலுள்ள சிறு துவாரங்களின் மூலம் செலுத்தப்பட்டு ஒளி பெறப்பட்டது. (இவ்விளக்குகள் மேனாட்டு தெருக்களிலுள்ள கடைகளில் உபயோகப்படுத்தப்பட்டு வந்தன.)*

### ஒலோஸ்டேட்டிக் விளக்கு

*இத்தகைய விளக்கு வகையில் பல புதிதாகக் கண்டு பிடிக்கப் பட்டன. ஜலசலன சாஸ்திரக் கொள்கை மூலம் திரிக்கு எண்ணெயைச் செலுத்தியும் வேறு பல பகுதிகளில் மாற்றம் செய்தும் உருவான விளக்கு இது.*

### டயாகோன் விளக்கு

*காரசல் விளக்கைப் போல் திரிக்கு எண்ணெய் தேங்கி நிற்கும் கலயத்திலிருந்து குழாய் மூலம் எண்ணெய் வலுவில் செலுத்தும் இயந்திரக் குழாய் அடியில் கடிகாரச் சூத்திரத்தைப் போல் இயங்கு கிறது.*

### கிச்சோக் விளக்கு

*இது ஒரு தட்டையான திரியுள்ள மண்ணெண்ணெய் விளக்கு, கடிகாரச் சூத்திரத்தைப்போல இயங்கும் ஒரு விசிறி, சுடர் ஒளிதரக் காற்றை உந்துகிறது.*

*1830லும் ரெய்ச்சன் பேச் என்பவரும் டாக்டர் கிறிஸ்டிசன் என்பவரும் விளக்கில் புதிய முறையைக் கண்டார்கள். டெர்பிசேரில் சேம்ஸ்எங் என்பவர் கனிச எண்ணெயைக் கண்டார். பெனி சில்வேனியாவில் 1859இல் கலோனியஸ் என்பவர் பெட்ரோலைக் கண்டார்! அதன் பின்னரே ஆவி (கேஸ்) விளக்கும் மின் விளக்கும் தோன்றின.*

### மின் விளக்குகள்

*1809ஆம் ஆண்டிற்கு முன்பே மின் விளக்கைப் பயன்படுத்தும் முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்குப் பல ஆண்டு*

களுக்குப் பின்னரே தொழிற்சாலையில் மின்விளக்கு உற்பத்தி செய்யப்பட்டது.

கி.பி. 1660ஆம் ஆண்டிலே வான்கைரிக் என்பவர் முதன்முதலில் மின்சாரம் உண்டாக்கும் இயந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்ததாகக் கூறப்படுகிறது. 1802ஆம் ஆண்டு டேன் என்பவர் பிளாட்டினம் போன்ற பொருள்களால் ஆன சிறு கம்பிகளில் மின்சாரத்தைப் புகுத்தி அவற்றை வெண்சுடர் நிலைக்கு மாற்றலாம் என்று கண்டார்.

மின்சார விளக்கை முதன்முதலில் கண்டுபிடித்து அதை உபயோகப்படுத்திய பெருமை தனக்கே உரியது என்று இங்கிலாந்தும், அமெரிக்காவும் உரிமை பாராட்டுகின்றன. இன்று ரஷ்யா கூட தனக்கே அப் பெருமை உண்டென்று கூறிக்கொள்கிறது. என்றாலும் இன்றைய மின்விளக்கின் தந்தை அமெரிக்க நாட்டவராகிய தாமஸ் ஆல்வா எடிசன் என்று உலகம் ஏற்றுக் கொண் டுள்ளது. அவர் இறந்த பொழுது அத்துக்க தினத்தைக் கொண்டாட இரவு 8 மணிக்கு அமெரிக்க நாட்டிலுள்ள மின்சார விளக்குகள் அனைத்தும் ஐந்து நிமிடம் அணைக்கப்பட்டு அவருக்கு மரியாதை செய்யப்பட்டது.

1879ஆம் ஆண்டு, மின்சார விளக்கில் வெண்சுடர் நிலையைப் புகுத்தி வெண்மையான ஒளியை அளிக்கும் முறை காணப்பட்டது. அறிஞர் எடிசன் கண்ட மின் விளக்குகளில் இன்று எத்தனையோ மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. குமிழ் விளக்குகளில் (பல்புகளில்) உயர்ந்த உருகு நிலையுடன் கூடிய டங்ஸ்டன் என்னும் இழை புகுத்தப் பட்டது. அதோடு கண்ணாடிக் குமிழ் விளக்குகள் வெற்றிடத்திற்குப் பதிலாக ஆர்கான், நைட்ரசன் போன்ற வாயுக்களை நிரப்புவதனால் இழைகள் நீண்ட நாள் உழைக்க முடியும் என்பதைக் கண்டுபிடித்தனர். (படம் 47)

ஒளி, ஒரே இடத்தில் குவிந்து கண்களைக் கூசச் செய்வதால், அதைத் தவிர்த்துக் கண்கள் கூசாத முறையில் ஒளி தரும் புது விளக்குகள் இன்று செய்யப்பட்டுள்ளன. இதனை ஃபராஸ்ட் விளக்குகள் என்று கூறுகிறார்கள்.

அலங்காரத்திற்கும் வெளிச்சத்திற்கும் விதவிதமான வெண் சுடர் இழை விளக்குகள் இன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பன்னிற வண்ண விளக்குகளும் போட்டோப் பிடிப்பதற்கென்று கணநேர ஒளி வீச்சுகளும் - பிளாஷ் பல்புகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குமிழ் விளக்குகளில் அழுக்கு ஏறுவதில்லை; அபாயம் எழுவதில்லை. எரியும் அறையிலுள்ள வாயுவைப் பயன்படுத்தாமலும் அசுத்தப்படுத்தாமலும் ஒளி தருகின்றன. காற்றிலும் மழையிலும் நனையாது ஓரிடத்திலிருந்தே விசையை அழுத்தினால் பல விளக்குகளை ஒருங்கே ஏற்றியும் அணைக்கவும் முடியும்.

இஃதன்றிக் கைவிளக்காகிய பேட்ரி விளக்கும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. அதோடு ஆர்க்லைட் என்று கூறும் மின்வில் விளக்கும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதைக் கண்டுபிடித்தவர் டேவிட் என்னும் விஞ்ஞானி ஆவார். இவர் கண்டது ஒரு ஆவி விளக்கு இனத்தைச் சேர்ந்தது என்று கூறப்படுகிறது. இத்தகைய 'மின்வில் விளக்குகள்' சினிமாப் படம் காட்டும் புராசெக்டர், கலங்கரை விளக்கு ஆகியவற்றுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

முற்காலத்தில் கலங்கரை விளக்குகள் எண்ணெய் விளக்கு களாகவே இருந்து வந்தன. மின்சக்தியின் மிகுதியான அபிவிருத்தி காரணமாகவே கலங்கரை விளக்குகளில் மின்சாரம் புகுத்தப் பெற்றது. கடற்கரைக்குப் பக்கத்திலுள்ள பாறைகளில் கப்பல்கள் மோதி உடைந்து விடாமல் இருப்பதற்காக அப்பாதைகளின் மீது பல்வேறு வண்ண மின் ஒளிக்கதிர்களை வீசும் விளக்குகள் பொருத்தப் பெற்றுள்ளன.

**நியான் விளக்குகள்**

நியான் என்னும் சடவாயுவை இவ்விளக்குகளில் பயன்படுத்து வதால் இதற்கு நியான் விளக்குகள் என்று பெயர் சூட்டப்பட் டுள்ளது. இன்று இவ்விளக்கு பெரும்பாலும் விளம்பரத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது. (படம். 53)

வாயுவின் அழுத்த நிலையைக் குறைத்தால் மின்சாரம் அதன் வழி செல்லும், அந்நிலையில் அந்த அணுக்கள் ஒளிவீசி வெளிச்சம் தருகின்றன. அழுத்த நிலை குன்றும்பொழுது அந்த ஒளி மறைகிறது. ஏனெனில் அணுக்கள் குறைந்து போகின்றன.

இவ்விளக்குகளில் சூடேறுவதில்லை. எனவே இது குளிர் எதிர்முனை விளக்கு என்று கூறப்படுகிறது.

1910ஆம் ஆண்டில் சார்ச்கிளாட் என்பவர் மங்கிப்போகாத ஆரஞ்சு வண்ணத்தை நல்கும் ஒளிவிளக்கைக் கண்டுபிடித்தார். இவ்விளக்கிற்கு மிகுதியான மின்சார அழுத்தம் தேவையாய் இருப்ப தாலும், மின்சார அமைப்பை அதிக உன்னிப்பாக கவனிக்க வேண்டி யிருப்பதாலும் இது பெரும்பாலும் விளம்பரத்திற்குப் பயன்படுத்தப் பட்டது. வீடுகளில் நடைபெறும் திருமண திரு விழாக்கள் போன்ற இடங்களிலும், 'நல்வரவு' என்ற வரவேற்பு விளம்பரத்திலும் பயன்படுத்தப்படுகிறது.

இவ்விளக்கில் நியானுக்குப் பதிலாக ஹீலியம் என்னும் வாயுவை உபயோகித்தால் வெண்மையான ஊதா நிற ஒளியும் ஆர்கான் வாயுவை உபயோகித்தால் நீலநிறமான வெண்மை ஒளியும் பாதரச ஆவிகலந்த வாயுவை உபயோகித்தால் பச்சை நிற ஒளியும் கிடைக்கும். ஹீலியம் என்னும் வாயுவை மஞ்சள் நிறக் கண்ணாடிக் குழாயில் உபயோகித்தால் மஞ்சள் நிற ஒளி கிடைக்கும். நியானையும்

ஆர்கானையும் கலந்தவுடன் பச்சை நிற ஒளி தருகிறது. சாதாரணக் கண்ணாடிக் குழாயில் கிரிப்டான் என்னும் வாயுவை அடைத்தால் நீல நிற ஒளி உண்டாகும்.

இன்று பாரதரச ஆவி, சோடியம் ஆவி ஆகியவைகளைப் பயன்படுத்திப் புதிய விளக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பாதரச ஆவி விளக்கு நீல வண்ணமாய்க் காணப்படுகிறது. சோடியம் ஆவி விளக்குகள் தெருவிளக்காக பெரிதும் உபயோகப்படுத்தப்படுகிறது.

சோடியம் ஆவி விளக்கின் குமிழ் விளக்கிற்குள் (பல்புக்குள்) சிறிது நியான் வாயும் (ஜடவாயும்) சோடியமும் இருக்கின்றன. இதனுள் இழையாக இருக்கும் டங்ஸ்டன் கம்பியில் மின்சாரத்தை ஏற்றிய உடன் நியான் ஒளி எழுகிறது.

நியான் வாயு மூலம் எழும் மின்சாரம் குமிழ் விளக்கின் (பல்பின்) வெப்ப நிலையை உயர்த்துகிறது. வெப்பம் பெருகியதும் சோடியத்தின் ஆவி நிலை மஞ்சள் நிறமான ஒளியை நமக்கு நல்கு கிறது. இந்த ஒளியில் சடவாயு தனது வலியை இழந்து விடுகிறது.

இன்றைய பாதரச ஆவி விளக்கில் ஆர்கான் வாயுவும் பாத ரசமும் இருக்கின்றன. ஆர்கான் வாயு மின் பாய்ச்சலால் சூடு அடைந் ததும் பாதரசம் ஆவியாய் மாறி ஒளி தருகிறது.

1932ஆம் ஆண்டில் தான் முதன் முதலில் பாதரச ஆவி விளக்குகள் உபயோகப்படுத்தப்பட்டன. இவ் விளக்குகள் தெருக் களுக்கு அதிக வெளிச்சம் தரவும் தொழிற் சாலைகளிலும் பெரிய விழாக்களிலும் அதிகமான வெளிச்சம் பெறவும் உபயோகப்படுத்தப் படுகின்றன. (படம் 51).

ஆனால் இந்த ஒளியில் காணப்படும் பொருள் அதனுடைய சுய நிறத்துடன் காணப்படுவதில்லை. மேலும் இவ்விளக்குகளின் மூலம் அல்ட்ரா வயலட் என்று கூறப்படும் நமது கட்புலனுக்கு எட்டாத புற ஊதாக் கிரணங்களும் உண்டாகின்றன. இக்கிரணங் களைப் பயன்படுத்த விஞ்ஞானிகள் ஆராய்ந்து ஒளிர் விளக்கு களைக் கண்டுபிடித்துள்ளார்கள்.

### ஒளிர் விளக்குகள்

குழாய் விளக்குகள் என்று கூறப்படும் புளோரசண்ட் விளக்கே புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அரிய விளக்காகும். இவ்விளக்கு களில் எந்தப் பொருளும் வெண்சுடர்நிலையை எய்துவதில்லை. சில ரசாயனப் பொருள்கள் அல்ட்ரா வயலட் கிரணங்கள் தரும் சக்தியை இழுத்துப் பின் கண்ணுக்குப் புலப்படும் ஒளியாகச் செய்கின்றன.

கண்ணாடிக் குழாயில் ஆர்கான் வாயுக்களும் பாதரசமும் வைக்கப்பட்டிருக்கும். உள்ளே ஒளிரும் ரசாயனப் பொருள் தடவப் பெற்றிருக்கும். அக்குழாயில் மின்சாரம் புகுத்தப் பெறும் பொழுது

பாதரச ஆவி வெப்பமுற்று அல்ட்ராவயலட் கிரணங்களின் ஆற்றல் வெளிப்படுகிறது. அப்பொழுது அந்த ஆற்றலைக் குழாயின் உட் புறத்தில் தடவப்பட்டுள்ள ஒளிரும் ரசாயன பொருள்கள் உறிஞ்சிக் கண்ணுக்குப் புலப்படுமாறு செய்கின்றன.

ஆவியின் அழுத்தத்தையும் ஒளிரும் பொருள்களையும் நமக்குத் தேவையான வண்ணங்களுக்குத் தகுந்தவாறு தேர்ந் தெடுத்துக் கொள்ளலாம். மேக்னீஷியம், கால்சியம், துத்தநாகம் போன்றவைகள் ஒளிரும் பொருள்களாம். கால்சியம் டல்ஸ்டே நீல வண்ணத்தையும் துத்தநாக சிலிகேட் பச்சை வண்ணத்தையும் காட்மியம் போரேட் வெண்மையான ஊதா நிறத்தையும் உண்டாக்குகின்றன. கால்ஷியம் பாஸ்பேட் வெண்மை ஒளியையும் தருகிறது.

குழாய் விளக்குகளை மக்கள் பெரிதும் விரும்புகின்றனர். இதனால் மின்சார சக்தி அதிகம் செலவாவதில்லை. செலவு குறை கிறது. வெளிச்சம் எல்லாப் பக்கத்திலும் ஒரே அளவில் வீசுகிறது. இவ்வெளிச்சத்தில் கண்கள் கூச்சம் அடைவதில்லை (படம் 54)

மனித சமூக வளர்ச்சியின் ஆரம்ப நிலையில் கண்ட கை விளக்குகள் இன்று விஞ்ஞான அறிவு முதிர்ச்சியால் கண்ட குழாய் விளக்குகள் (ஃப்ளோரசண்ட் விளக்குகள்) ஆகப் பரிணமித்துள்ளன. இருள் சூழ்ந்த இந்த உலகின் ஒவ்வொரு ஊரிலும் காடுகளிலும் மலைகளிலும் தொழிற்சாலைகளிலும் மின்சாரம் பரவி இரவும் பகலும் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.

சூரிய ஒளியைக் கண்டிராத கானகங்களில் கூட இன்று மின் விளக்குகள் ஜெகஜ்ஜோதியாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன.

இந்த மின்னொளி மக்கள் கண்களுக்கு ஒளியூட்டுவதோடன்றி அவர்களின் மூளைக்கும் புத்தொளியூட்டி விஞ்ஞான அறிவை வளர்த்து வருகிறது. (படம் 52)

### மின் விளக்கில் நமது கலை

இன்றைய நாகரிகம் நாடு நகரங்களிலும் சிற்றூர்களிலும், ஏன்? - மூலை முடுக்குகளிலெல்லாம் மின் விளக்கைப் பரப்பி விட்டது. நமது திருவிளக்குகள் பலவற்றிற்கு நாட்டில் இடம் இல்லாமற் செய்து விட்டது.

இனி மின் விளக்கை மாற்றி அதன் இடத்தில் பழைய திரு விளக்கை வைத்துவிடலாம் என்று எண்ணுவது பைத்தியக்காரத்தன மாகும். மின் விளக்குகள் எவ்வளவு வளர்ந்தாலும் குத்து விளக்கு மறைந்துவிடாது. ஆனால், குத்து விளக்கு முன்போல் வளராது என்று திட்டவட்டமாகக் கூறிவிடலாம்.

நமது கைவிளக்குகள் காடேறி விட்டன. இன்று அவைகளைக் காண்பதே அரிதாகிவிட்டது. பாவை விளக்குகளும் தூக்கு

விளக்குகளும், சர விளக்குகளும், பல கோவில் விளக்குகளும் நமது சமயம் உள்ளளவும் நிலைத்து நிற்கும். நமது நாட்டுப்பற்று உள்ளள வும் அவைகளில் சில நமது வீடுகளில் இடம் பெற்றே தீரும்.

இந்த நிலைமையைப் பற்றி நமது நாட்டிலுள்ள கலை ஆர்வ முள்ள மக்களும், சமயப் பற்றுள்ள மக்களும் சிறிதும் கவலைப்படத் தேவையில்லை. இன்று நமது நாட்டிலுள்ள மின் விளக்குத் தண்டுகளில் நமது குத்து விளக்கில் காணப்படும் சிற்பங்களைப் புகுத்தி நமது திருவிளக்கின் சிற்பக் கலை அழியாது பாதுகாத்துக் கொள்ளலாம் தேசபக்தியுள்ள ஒவ்வொரு தமிழ் மகனும், தம் வீட்டிலுள்ள மின் விளக்குகளில் நமது கலையைக் காணுமாறு பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

***'பழையன கழிதலும் புதியன புகுதலும்***
***வழுவல கால வகையினானே'***

என்ற முதுமொழிப்படி பழைய பொருள்கள் மறைந்து அவற்றின் இடத்தில் புதிய பொருள்கள் வந்து அமர்வது இயற்கைதான். என்றா லும் உலகம் சுழன்று கொண்டே இருப்பதுபோல் நமது நாகரிகமும் சுழன்று கொண்டே வருகிறது.

நமது பாட்டனார் உபயோகித்த ஆடைகளும் செருப்புகளும் பாத்திரங்களும் பழையன! நாகரிகமற்றன, என்றும் நமது பாட்டியார் உபயோகித்த ஆடைகளும், அணிகளும், பாத்திரங்களும் நாகரிக மற்றன, அழகற்றன என்றும் ஒதுக்கப்பட்டன. இன்று அவை அழகு வாய்ந்தனவாகவும் நாகரிகம் உள்ளனவாகவும் கருதி நமது பிள்ளைகள் உபயோகித்து வருவதைக் காண்கிறோம். அதுபோல் நமது திருவிளக்குகளும் மீண்டும் தோன்றும்! எங்கும் பரவும் என்று எண்ணுவதில் வியப்பில்லை.

# முடிவுரை

தொன்மையில் மக்கள் குலம் தோன்றிய காலத்தை வரலாற்று நூலார் இருட்காலம் (Dark age) என்று கூறுவார்கள். அவர்கள் கூறிய அவ்வார்த்தையுனுள் பல அரிய பொருள்கள் அமைந்து கிடக் கின்றன. மனிதன், அன்னையின் கருப்பையில் உருவுற்ற காலந் தொட்டு இந்நிலத்தில் பிறக்கும்வரை காரிருளிலே தான் இருந்தான். அவ்விருளில்தான் அவன் வாழ்வு துளிர்க்கிறது. அப்பால் அன்னை யின் அடிவயிற்றிலிருந்து வெளிவந்ததும் சூரிய ஒளியைக் காண் கின்றான். ஆரம்பகாலத்தில் மக்கள் இனம் தோன்றிய மலையில் - மரம் செடி கொடிகள் அடர்ந்த காடுகளிலும் குகைகளிலும் அவன் பேரொளியைப் பார்த்திருக்கவே முடியாது. அவனது வாழ்நாளில் பகுதிக்காலம் இருளாக அமைந்து விட்டது. எஞ்சிய பகுதிக் காலத் திலும் விண்ணில் மேகங்கள் நிறைந்திருந்த பொழுது அவன் இருளையே கண்டான். பூமியின் இருதுருவங்களிலும் 6 மாதங்கள் இருள் மயமாக இருப்பது போலவே பண்டும் இன்றும் இருந்து வரு கின்றன. ஆதிமக்கள் இருளிலே பெரிதும் வதிந்து, மிருகங்களைப் போல் இருள் வாழ்க்கையே இன்ப வாழ்க்கையாக இருந்தது. சூரிய ஒளியைப் பார்க்கவே அவர்கள் கண்கள் கூசின. ஆதிகாலத்தில் வாழ்ந்த மனித குலத்தின் முற் பிதாக்கள் அறிவு விளக்கமின்றி விலங் கோடு விலங்காக வாழ்ந்து வந்தனர். அக்காலத்தைப் பற்றி வரலாற்று ஆசிரியர்கள் ஆராய்ச்சி செய்ய முடியவில்லை. எனவே அக்காலம் அவர்களுக்கும் இருள்காலமாகக் காணப்படுகிறது. உலக வரலாற்றை எழுத முன்வந்த பேராசிரியர்கள், வரலாற்று எல்லைக்கு உட்பட்ட காலம், வரலாற்று எல்லைக்கு முற்பட்டகாலம் என இருவகையாக பிரித்தனர். வரலாற்று எல்லைக்கு உட்பட்ட காலத்தை பழைய கற்காலம் (Eolithic age) என்றும் அதற்கு அடுத்த காலத்தை இடைக் காலக் கற்காலம் (Paleolithic age) என்றும் அதற்கும் அடுத்ததைப் புதுக்கற்காலம் (Neolithic age) என்றும் கூறுவர். இதற்குப் பிற்பட்ட காலத்தை உலோக காலம் என்பர். அந்த உலோக காலத்தையும் செம்புக் காலம், வெண்கலக்காலம், இரும்புக்காலம் என்று பிரித் துள்ளார்கள்.

பழைய கற்காலச் சான்றுகள் நமக்கு பெரும் அளவில் கிடைக்க வில்லை. என்றாலும் தமிழகத்திலும் ஆந்திராவிலும், மைசூர் ஹைதராபாத் ஆகிய இடங்களிலும் கற்கால மக்கள் ஆண்ட

கற்குகைகளிலும் அவர்கள் பயன்படுத்தி வந்த கற்கோடரி பலவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இஃதன்றி அவர்கள் உபயோகப் படுத்திய மரச்சீப்பு ஒன்று கடப்பை மாவட்டத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. சேலம், சாயர்புரம் முதலிய இடங்களில் புதிய கற்காலக் கருவிகள் கிடைத்துள்ளன. கற்கால மக்களுக்கு தீயும் அதன் பயனும் தெரிந்திருக்க வேண்டும் என்றும் எல்லா வரலாற்று நூற்புலவர் களும் கூறுகின்றார்கள்.

முதன் முதலில் மனிதன் ஞாயிறு திங்கள், விண்மீன் போன்ற விண்சுடர்களை விளக்காக கண்ட மக்கள் மரங்கள் ஒன்றோ டொன்று உரசி தீப்பற்றி எங்கும் பரவும் காட்டுத்தீயை விளக்காகக் கண்டான். அப்பால் அவன் வேட்டையாடும் பொழுது கல்லை வீசி னால் அது மற்றொரு கல்லின்மீது பட்டு தீப்பொறிகள் எழுவதையும் அப்பொறிகள் உலர்ந்த சருகுகள் மீது பட்டு எரிவதையும் கண்டான். அப்பால் மனிதன் தீயைத் தானே உண்டாக்க ஆரம்பித்தான். சக்கி முக்கி கற்களைத் தட்டி அதினின்று எழும் தீப்பொறிகளை இலை களின் சருகு, பஞ்சு முதலியவைகளின் மீது வாங்கித் தீயை தயாரித் தான். அப்பால் காய்ந்த கட்டைகளை ஒன்றுடன் ஒன்றை உராயச் செய்து நெருப்பு உண்டாக்கவும் தெரிந்தான். மனிதன் பழைய கற் காலத்திலே தீயைச் செயற்கையாகவே உண்டாக்கும் அற்புத முறையை கண்டுபிடித்துவிட்டான். அது ஆதி மனிதனின் அரிய விஞ்ஞான சாதனை. அப்பால் அவன் சில குச்சிகள் தீப்பற்றியதும் எளிதில் எரிவதை அறிந்தான். அவைகளை இன்று சுளுந்துக் கட்டைகள் என்று அழைக்கின்றோம். மனிதன் செயற்கை முறையில் கண்டுபிடித்த விளக்கு சுளுந்துக் கட்டையேயாகும்.

மனித வாழ்வில் பல ஆயிரம் ஆண்டுகள் சென்ற பின்னரே மக்கள் எண்ணெய் விளக்கைக் கண்டனர். குழிவான சிறு கல்லை விளக்காக்கி அதில் மர வித்துக்களின் நெய்யை வார்த்துச் செடி களின் மீதுள்ள நார் போன்ற பொருள்களைத் திரிகளாக்கி முதன் முதலாக அகல் விளக்கை உருவாக்கினான். இவ்விளக்கிற்கு ஆரம்ப காலத்தில் ஆமணக்கு, இலுப்பை முதலிய மரவித்துக்களில் இருந்து எடுக்கப்பட்ட எண்ணையையும் நெய்யையும் மீன் எண்ணெயையும் திமிங்கலத்தின் கொழுப்பிலிருந்து கிடைக்கும் எண்ணெயையும் பயன்படுத்தினான். இன்று இந்தியா, பாபி லோனியா எகிப்து முதலிய இடங்களில் பழங்கால மக்கள் பயன்படுத்திய கல்விளக்கு, களிமண் விளக்கு, சங்கு விளக்குகள் முதலியவைகள் பூமியை அகழ்ந்து கண் டெடுக்கப்பட்டுள்ளன. திருமணம், திருவிழா முதலியவைகளிலும் இரவில் அயலூர் செல்லவும் தீவர்த்திகளைப் பயன்படுத்தி னான். மனிதன் அறிவு வளர வளர உலோக விளக்குகளைப் பயன்படுத்தி னான். வெண்கலம், பித்தளை, வெள்ளி, தங்கம் இரும்பு முதலிய உலோகங்களில் கலை அழகு பொருந்திய விளக்குகளை கண்டான்.

அவனது நாகரிகம் முதிர பாவைவிளக்கையும் உருவாக்கினான். இவைகளுக்கு எள்ளெண்ணெய், தேங்காய் எண்ணெய் முதலியவை களையும் பயன்படுத்தினான். அப்பால் மிகக்குறைந்த விலையில் கிடைக்கும் மண் எண்ணெயையும் உபயோகப்படுத்தினான். இவை காற்றில் அவிழ்ந்துவிடாது இருக்க கண்ணாடி சிம்னியை உபயோகப் படுத்தினான். இவைகள் சில சமயங்களில் கைகால்களை சுட்டு விடு வதையும் ஆடைகளில் பற்றி உயிர்களுக்கு ஆபத்து உண்டாவதை யும் கண்டு இதில் ஒரு மாற்றம் செய்ய முனைந்தான். படுக்கை அறை விளக்கு, ஹரிகேன் விளக்கு, கூண்டு விளக்கு, சுவரொட்டி விளக்கு, பவர் விளக்கு முதலியவைகளுக்குப் பதிலாக ஆவி விளக்கை உரு வாக்கினான். சுண்ண விளக்கைக் கண்டான். மேன்டில் விளக்கைச் செய்தான். அதில் பலவகையான உருவ அமைப்புகளைச் செய்தான்.

இவ்விளக்குகளைக் கண்டபிறகும் மனிதன் திருப்திப்பட வில்லை. செலவு குறைவாகவும் காற்று மழை முதலியவைகளால் அணையாத மின்விளக்குகளை காண ஆராய்ந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மின்சாரத்தினால் எரியும் விளக்கு களைச் செய்தான். அவ்விளக்குகள் ஐரோப்பாவில்தான் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வந்தது. அப்பால் இருபதாம் நூற்றாண்டின் பிற் பகுதியில் இந்தியாவில் ஏன்? நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் மின் விளக்குகள் ஏற்பட்டு வருகின்றன. இந்த மின்சார விளக்குகளில் புதிய புதிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. நியான் விளக்குகள் பாதரச ஆவி விளக்குகள். ஸோடியம் ஆவிவிளக்குகள் : ப்ளோர ஸண்ட் விளக்குகள், குழாய்விளக்குகள் என்று பல பெயர்களுடன் புதிய விளக்குகள் தோன்றியுள்ளன. இவைகளின் பெருக்கத்தினால், நமது எண்ணெய் விட்டெரிக்கும் திருவிளக்குகள் குறைந்து வரு கின்றன. என்றாலும் கோயில்களும் சமயமும் உள்ளவரை கோயில் களிலும் வீடுகளிலும் திருவிளக்குகள் இருந்து கொண்டுதான் இருக்கும் என்பதில் நமக்குச் சிறிதும் ஐயமில்லை. ஆனால் இன்றும் நமது இல்லங்களில் நிலவும் மின்விளக்குகளை ஒழித்து விட்டு பழைய எண்ணெய் விளக்குகளைக் கொண்டு வந்து விடுவது ஒரு பொழுதும் சாத்தியமில்லை. சில பழமை விரும்பிகள் இன்றைய மின்சார விளக்குகளால் நமது கண்களில் விரைவில் பார்வைகுன்றி வருவதாகவும் பழைய ஆமணக்கு எண்ணெய் விளக்கால் கண்கள் குளிர்ச்சி பெற்று 120 வயது வரை மூக்குக்கண்ணாடி போடாது முன்னோர்கள் வாழ்ந்தார்கள் என்றும் நீண்ட உபதேசங்களுக்கு உலகம் ஒரு பொழுதும் செவி கொடுக்காது. ஆனால் இந்த மின் விளக்கில் நமது கலை அம்சங்கள் இல்லை என்று அவர்கள் கூறு வதை நம்மால் மறுக்க முடியவில்லை. அதைக்கேட்டு அசட்டையாய் இருக்கவும் முடியாது. இவ்விளக்குகளில் கலை அம்சத்தைக் காணத்தவறிய பிறநாட்டார்போல் தமிழர்களும் - இந்தியர்களும்,

நமது அண்டையிலுள்ள இலங்கையர் பர்மியர், மலேசியர் போன்றவர்கள் இருக்க முடியாது. எனவே இன்றைய மின் விளக்குகளில் நமது கலை அம்சத்தை புகுத்தி நமது கூரைகளில் தொங்கும் மின் விளக்குகளின் மேலுள்ள குழாய்களிலும் நமது இல்லத்தின் வரவேற்பு அறைகளில் நிறுத்தப்பட்டிருக்கும் மின்சார விளக்கின் தண்டுகளிலும் மேசை விளக்குகளிலும் நமது குத்துவிளக்கின் அரிய சிற்பச் சிறப்புகளை எல்லாம் செய்து நமது பண்பாடு பழுதுறாது பாதுகாக்கலாம். நமது குத்துவிளக்கில் காணும் வளைவுகளும் குழைவுகளும் உருட்டுகளும் நமது மின்விளக்குகளில் விளங்கச் செய்யலாம். இவைகள் அழகிய தேக்குக் கட்டைகளில் மட்டுமின்றி பித்தளை, வெள்ளி, எவர் சில்வர், ஜெர்மன் சில்வர் முதலிய உலோகங்களிலும் உண்டாக்கலாம். இத்தகைய கலை அழகு ததும்பும் எழில் மிக்க மின்விளக்குகள் பல இலங்கையிலும் சென்னை முதலிய நகரங்களிலும் அத்தி பூத்தாற்போல் சிலவிடங்களில் இருப்பதைக் கண்டு மகிழ்ந்தேன். அவைகள் நிரம்ப நாடெங்கும் பரவ நாம் தூண்டலாம். இஃதன்றி, இன்று நமது இல்லங்களை அலங்கரித்து நிற்கும் குத்துவிளக்கில் கூட மின்விளக்குகளைப் பொறுத்தலாம்.

இப்பொழுது இராமேசுவரம், கன்னியாகுமரி முதலிய இடங்களில் சிப்பு, சங்கு கிளிஞ்சல் முதலியவைகளை விற்போர் நல்ல சிற்ப வேலைப்பாடுகள் செய்யப்பட்ட தேக்குமரத்தாற் செய்யப்பட்ட தண்டுகளின் மேல் யானைத் துதிக்கை என்று கூறும் வெள்ளி போன்றிலங்கும் சங்குகளையும் கௌரி பாத்திரமும் என்று கூறும் செவ்விளநீர்க்காயின் நிறத்தில் விளங்கும் சங்கையும் இணைத்து அதன் நடுவில் மின்சார பல்புகளை இணைத்து அழகுற அமைத்திருக்கிறார்கள். மக்கள் ஆதரவு கிடைத்தால் இத்தகைய பல எழில் விளக்குகளை குறைந்த விலையில் நாம் பெற முடியும்; நமது திருவிளக்கும் நமது பண்பாடும் என்றும் அழியாது ஒளிர்விட்டுச் சிறப்பெய்தும்.

# படங்களின் விளக்கம்

**கை விளக்குகள்**

**1. கல் விளக்கு**

*ஒரு கோணல்மாணலான கல்லின் நடுவில் இயற்கையாக குழி ஏற்பட்டுள்ளது. இதனை எடுத்து குழியில் எண்ணெய் வார்த்து, கற் காலத்தில் வாழ்ந்த குறிஞ்சி நில மக்கள் விளக்காகப் பயன்படுத்தினர். இது மக்களுக்கு இயற்கை அளித்த நன்கொடை. முதன்முதலில் மக்கள் கண்ட விளக்கு மனித முயற்சியால் உருவான விளக்கல்ல.*

**2. செயற்கைக் கை விளக்கு**

*ஒரு கல்லை மற்றொரு கல்லைக் கொண்டு தட்டி குழி யுண்டாக்கி நடுவில் நெய் வார்த்து திரியிட்டு முல்லை நில மக்கள் விளக்காக உபயோகப்படுத்தி வந்தனர். இது மக்கள் தம் முயற்சியால் கண்ட முதல் விளக்காகும்.*

**3. சங்கு விளக்கு**

*ஒரு பெரிய சங்கை எடுத்து, அதில் நெய் விட்டுத் திரியிட்டு விளக்காகப் பயன்படுத்தினர் நெய்தல் நில மக்கள். இது சங்கு விளக்கு என்று கூறப்பட்டது.*

**4. சுடுமண் விளக்கு**

*களிமண்ணைத் தகடுபோல் தட்டி நடுவில் குழியும் பின்புறம் சிறிது உயரமான தடுப்பும் முன்புறம் திரியிட முகமும் அமைத்து அதை நெருப்பில் சுட்டு திரியிட்டு நெய்வார்த்து விளக்காகப் பயன் படுத்தினர் மருத நில மக்கள். இவ்விளக்கு சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன் செய்யப்பட்டது. எனது சேகரிப்பில் உள்ளது.*

**5. மாக்கல் விளக்கு**

*இது மெதுவான மாக்கல்லை, கல் உளியால் தோண்டி அழகு பெறச் செய்யப்பட்டது. இதனை மருத நில மக்கள் திரியிட்டு நெய் வார்த்து விளக்காகப் பயன்படுத்தினர். இதுவும் எனது சேகரிப்பில் உள்ளது. இத்தகைய விளக்குகள் இன்றும் சேலம் மாவட்டத்தில் பயன்படுத்தப்படுகின்றன. ஆத்தூரி (சேலம் மாவட்டம்) சந்தை கூடும் நாளில் விலைக்கு வாங்கலாம்.*

### 6. கஜலட்சுமி கை விளக்கு

இது பித்தளையால் செய்யப்பட்டது. இது மின் விளக்கு வருமுன் கிராமங்களில் அதிகமாக உபயோகப்படுத்தப்பட்டு வந்தது. மண்ணெண்ணெய் விளக்கு வருமுன் இவ்விளக்குகள் ஒவ்வொரு வீட்டிலும் 3, 4 இருந்து வந்தன. இது வீட்டின் வாயிலிலும் பிற இடங் களிலும் தோண்டப்பட்ட மாடக் குழிகளில் கீழே சாணத்தை உருட்டி பீடம் போல் வைத்து அதன் மீது இந்தக் கைவிளக்கை வைத்து நெய் வார்த்துத் திரியிட்டு ஏற்றுவார்கள். இதில் பலவகைகள் உண்டு. இவ் விளக்கில் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கும். இந்தக் கை விளக்கில் திருமகளுக்கு இரண்டு யானைகள் குட முழுக்குச் செய்விக்கின்றன. இவ்விளக்குகளில் சிலவற்றில் குபேர னுடைய பணியாட்கள் இருபக்கங்களிலும் விளக்கினை ஏந்திப் பிடித்துக் கொள்வதுபோல சிற்ப வேலைகள் செய்யப்பட்டுள்ளது. அதில் அன்னம், கிளி, நாகர், சக்கரம் முதலிய வடிவங்களும் அமைத்து அழகுற வார்க்கப்பட்டுள்ளன. இதுவும் என்னுடைய சேகரிப்பில் உள்ளது.

### 7. கணபதி கைவிளக்கு

இது பித்தளையால் வார்க்கப்பட்டது. கைவிளக்குகளில் இது கவின்பெறச் செய்யப்பட்டது. இதைத் தூக்கு விளக்காகவும் பயன் படுத்தலாம் கீழே நடுவில் பிள்ளையார், பீடத்தின் மீது பீடுற வீற்றிருக்கிறார். இரண்டு யாழிகள் இரு மருங்கினும் நின்று, மேல் இருக்கும் அனந்த சயனப் பெருமாளின் உருவத்தைத் தாங்கி நிற் கின்றன. கீழே வட்டவடிவமான தகழி இருக்கிறது. இது திருவாங் கூரில் திருமால் கோயில்களில் உள்ளது.

### 8. சிலுவை விளக்கு

இந்தச் சிலுவை விளக்கு பிற்காலத்தில் உருவானது. இது ஏனைய கைவிளக்குகளைப் போலவே பித்தளையால் வார்க்கப் பட்ட கைவிளக்கேயாகும். இதில் அகலுக்கு மேலே சிலுவை வடிவ மும் இரு மருங்கினும் இரு தேவ தூதர்கள் வணங்கி நிற்பது போல வும் காணப்படுகின்றன. இது பெரிதும் நெல்லை மாவட்டத்தில் உள்ள கிறிஸ்தவர்கள் இல்லத்தில் பயன்படுத்தப்பட்டு வந்தது. இதுவும் எனது சேகரிப்பில் உள்ளது.

### 9. நாகர் விளக்கு

இவ் விளக்கின் பின்புறம் ஏழு தலையுள்ள நாகர் உருவம் அமைக்கப்பட்டிருக்கிறது. இது நாகர்களின் பண்பாட்டினின்று அரும்பியதாக இருந்தாலும் இருக்கலாம். நாக சுவாமி நேர்ச்சையாக முற்காலத்தில் செய்யப்பட்டு அப்பால் வீடுகளில் பயன்படுத்தப் பட்டும் இருக்கலாம். இது அழகுறச் சமைக்கப்பட்டிருக்கிறது. இது பித்தளையால் வார்க்கப்பட்டது. என்னுடைய சேகரிப்பில் உள்ளது.

## 10. வைணவர்களின் கை விளக்கு

இது பித்தளையால் வார்க்கப்பட்ட ஒரு சாதாரணக் கை விளக்காகும். இது இன்று சைவர்கள் வைணவர்கள் ஆகிய இரு சமயத்தவர்களுடைய வீட்டிலும் உபயோகப்படுத்தப்பட்டு வரு கின்றன. இது ஏனைய கை விளக்குகளைப் போன்றதேயாகும். அகலுக்கு மேலே பூக்களும் அரும்புகளும் நடுவே உச்சியில் தாமரை மலரும், அரும்பும் செய்யப்பட்டு மத்தியில் வைணவர்களின் குறி யாகிய நாமமும் இரு பக்கங்களிலும் சங்கு சக்கரமும் பொறிக்கப் பட்டுள்ளன. இதில் நுணுக்கமான வேலைப்பாடுகள் காணப்படா விடினும் கச்சிதமாகச் செய்யப்பட்டிருக்கிறது. இது எனது சேகரிப்பில் உள்ளது.

### கோயில் குத்து விளக்குகள்

## 11. அன்ன விளக்கு

இது அன்னம் வைத்த அழகிய குத்து விளக்கு. எனது சேகரிப் பில் உள்ளது. 40 ஆண்டுகளுக்கு முன் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அம்பாசமுத்திரம் வட்டாரத்தில் உள்ள வாகைக்குளத்தில் பித்தளையால் வார்க்கப்பட்டது. இவ்விளக்கு மூன்று பகுதிளாகச் செய்யப்பட்டுள்ளது. 1. பாதம், 2. தண்டு, 3. கொண்டை. இந்த மூன்று பகுதிகளையும் இணைக்க ஒவ்வொன் றிலும் புரிகள் உள்ளன. எட்டு முகங்களையுடையது. இது தமிழகத் தில் 40 ஆண்டுகளுக்கு முன் வீட்டு விளக்காக இருந்தது. இன்று இது கோயில் விளக்காக மாறி விட்டது. அழகிய வேலைப் பாடுகளையுடையது.

## 12. அன்ன விளக்கு

இது பித்தளையால் வார்க்கப்பட்டது. மேலேயுள்ள விளக்கை விட இது நல்ல வேலைப்பாடுகளையுடையது. ஏனைய அன்ன விளக்குகளைவிட தண்டு அழகிய பூக்களாலும் கொடிகளாலும் சித்திரிக்கப்பட்டுள்ளது. கொண்டையிலிருக்கும் அன்னம் அடியி லிருக்கும் பாதத்திற்கு ஏற்றதாயும் அழகுடையதாகவும் மிகக் கவன மாகச் செய்யப்பட்டிருக்கிறது.

## 13. அன்ன விளக்கு

இதுவும் எழிலுறச் செய்யப்பட்ட அன்னம் வைத்த ஒரு குத்து விளக்கேயாகும். இது பித்தளையால் வார்க்கப்பட்டது.

## 14. மயில் விளக்கு

இது கொண்டையில் மயில் வைத்துச் செய்யப்பட்ட அழகிய குத்து விளக்காகும். உச்சியில் இருக்கும் மயிலின் வயிறே எண்ணெய் தேங்கி நிற்கும் கலயமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதனின்று

எண்ணெய், தகழிக்கு வர ஒரு குழாய் மயிலின் வயிற்றிலிருந்து கீழ் நோக்கி விடப்பட்டிருக்கிறது. இதன் அடிப்பகுதி பூவைப்போல் வெகு அழகாகச் செய்யப்பட்டிருக்கிறது. இது ஏனைய விளக்கு களைப் போலன்றி மூன்று உறுதியான கால்கள் பாதத்தின் விளக்கைப் போன்ற விளக்கு சென்னைத் தொல்பொருள் காட்சி சாலையிலும் இருக்கிறது.

**15. மயில் விளக்கு**

இது ஏனைய குத்து விளக்குகளைப் போல் செய்யப்பட்ட தேயாகும். ஆனால் எண்ணெய் வார்க்கும் தகழி மூடப்பட்டிருக் கிறது. தகழி ஏழு முகங்களையுடையது. இது வெண்கலத்தால் வார்க்கப்பட்டது.

இவ்விளக்கில் மயில் வடிவும் அழகாகச் சித்திரிக்கப்பட் டுள்ளது. சிற்ப வடிவில் இது மயில், இது அன்னம் என்று பிரித் தறிவது சிரமம். ஆனால் அதன் வாலைக் கொண்டு இது மயில் இது அன்னம் என்று எளிதில் அறிந்து கொள்ளலாம். வால் பறவையின் உடலுக்கு நேர் கோணத்தில் இருந்தால் எவரும் அதை மயில் என்று எளிதில் முடிவுகட்டிவிட முடியும். சென்னைத் தொல்பொருள் காட்சி சாலையிலும் இதைப் போன்ற விளக்குகள் உள்ளன.

**16. கிளி விளக்கு**

இவ்விளக்கு வெள்ளியால் செய்யப்பட்ட ஒரு எழில் ஒழுகும் ஒரு அரிய விளக்காகும். இது மதுரை மாவட்டத்தில் உள்ள விளக்கைப்போல் ஐந்து முகம் உடையதாய்க் காணப்படுகிறது. இவ் விளக்கு சாதாரணமாக நமது நாட்டில் காணப்படும் விளக்குகளைப் போல் இன்றி புதிய உருவத்தோடு இலங்குகிறது. இதை வார்த்த சிற்பி தன் கைத் திறனைக்காட்டி இருப்பதோடு புதுமையையும் புகுத்தி இருக்கிறார். இது பணக்காரர்கள் தம் மக்களுக்கு சீதனமாக கொடுப் பதற்கு ஏற்றதாக உயர்ந்த உலோகத்தால் வார்க்கப்பட்டுள்ளது.

இவ்விளக்கில் தகழிக்கு அடியில் - நடுத் தண்டின் உச்சியில் 4 கிளிகள் மிக ஒய்யாரமாக உட்கார்ந்து கொண்டிருக்கின்றன. இதன் பாதங்கள் ஏனைய விளக்குகளைப் போலின்றி மூன்று கால்களால் தாங்கிக் கொண்டிருப்பது போல் செய்யப்பட்டிருக்கிறது. அந்த மூன்று பாதங்களிலும் மூன்று கிளிகள் சித்திரிக்கப்பட்டுள்ளன. இதைப்போன்ற விளக்குகள் சென்னைத் தொல் பொருள்காட்சி சாலையிலும் உள்ளது. இதன் உச்சியில் இருக்கும் பறவை கிளிபோல் இல்லை. அன்னம் போன்று காணப்படுகிறது.

**வீட்டுக் குத்து விளக்கு**

### 17. வாழைப்பூ விளக்கு

*இந்தக் குத்து விளக்கை வாளைப் பூக் குத்து விளக்கு என்பார்கள். இவ்விளக்கு எனது சேகரிப்பில் உள்ளது. இது 80 ஆண்டுகளுக்கு முன் பாளையங்கோட்டையில் செய்யப்பட்டது. இது முன்னர் நெல்லை மாவட்டத்திலும், நாஞ்சில் நாட்டிலும் பயன்படுத்தப்பட்டது. இப்போது நெல்லை மாவட்டத்தில் அதிக மாக உபயோகப்படுத்தப்படுவதில்லை. இது 4 அடி உயரத்திற்கு மேல் இருக்கும். இதில் பெரிதும் சிறிதுமாகப் பலவகைகள் உண்டு. இவ் விளக்கு திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோயிலில் சிறப்பாக நடைபெறும் விழாவில் உபயோகப்படுத்தப் படுகிறது. இது இரங்க விலாசம் அரண்மனையிலும் இருக்கிறது. இவ்விளக்கை கல்கத்தா பல்கலைக் கழகக் கலைப் பேராசிரியை டாக்டர் ஸ்டெல்லா கிராமரிஷ் அம்மையார் திருவாங்கூரின் கலைகளும் கைவினைப் பொருள்களும்* (The arts and crafts of Travancore) *என்ற நூலில் வியந்து பாராட்டியுள்ளார்.*

### 18. இரு கவர் விளக்கு

*இந்த விளக்குப் பித்தளையால் செய்யப்பட்டது. இதன் பாதம் பெரிது. என்றாலும் அழகுடையதாக அமைந்திருக்கிறது. இது ஏனைய விளக்குகளின் தண்டைப் போலின்றி இரு பிரிவாகச் செய்யப்பட்டுள்ளது. அகலில் ஒன்பது முகம் அமைக்கப்பட்டிருக் கிறது. இதில் ஒன்பது திரிகள் போட்டு ஒன்பது ஒளிகள் தெரியும்படி செய்யலாம். இதன் கொண்டை ஏனைய விளக்குகளைப் போலவே காணப்படுகிறது. இது ஒரு புதிய முறையில் செய்யப்பட்ட விளக் காகும் இத்தகைய விளக்குகளை செங்கற்பட்டு மாவட்டத்தில் தான் காணமுடியும்.*

### 19. வாழைப்பூக் குத்து விளக்கு

*இவ்விளக்குச் சென்னைத் தொல் பொருள் காட்சி சாலையில் உள்ளது. பித்தளையால் செய்யப்பட்டது. மிக உயரமாக இருக்கிறது. தண்டு மூங்கில் போல் நீளமாகவும் கனமாகவும் இருக்கிறது. கொண்டை மிகச் சிறிதாகவும் காணப்படுகிறது. பாதம் பெரிது.*

### 20. வாழைப்பூ விளக்கு

*இது எனது சேகரிப்பில் உள்ளது. இவ்விளக்கை செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள தமிழர்கள் இன்றும் பயன்படுத்தி வருகிறார்கள். இவ்விளக்கு பெரிதாகவும் தண்டு கனமாகவும் செய்யப்பட்டிருக் கிறது. கொண்டை மிகச் சிறிதாக இருக்கிறது. பாதம் பெரிதாகவும் உறுதியானதாகவும் இருக்கிறது.*

### 21. நீண்ட கொண்டை விளக்கு

*இவ்விளக்குப் பெரிதும் கேரள நாட்டில் தமிழர்களும் மலையாளிகளும் உபயோகப்படுத்தி வருகிறார்கள். இது 4 பிரிவாகச் செய்யப்பட்டுள்ளது. இது மற்றைய விளக்குகளைப் போலின்றி தகழிக்கு மேல் நீண்ட கொண்டையை உடையதாக இருக்கிறது. மேலே கேரள நாட்டுச் சின்னமான சங்கு சக்கரம் காணப்படுகிறது. இவ்விளக்கு மேனாட்டுப் பாணியைத் தழுவி நமது நாட்டு பண்பு குன்றாது செய்யப்பட்டிருக்கிறது. இது எனது சேகரிப்பில் உள்ளது. பித்தளையால் செய்யப்பட்டது.*

## கிளை விளக்குகள்

### 22. சோடச அன்னச் சங்கிலிக் கிளை விளக்கு

*இது பித்தளையால் செய்யப்பட்டது. ஐந்து அடி உயரம் இருக்கிறது. இதன் கிளைகள் நடுத்தண்டிலிருந்து ஒவ்வொரு பக்கத்திலும் ஒன்றரை அடி நீளம் நீண்டிருக்கிறது. இதனைத் திருமண விளக்கு மௌலூது விளக்கு என்றெல்லாம் கூறுகின்றனர். இவ்விளக்குகள் 3 பகுதிகளாகச் செய்யப்பட்டுள்ளது. இவ்விளக்கில் 217 திரிகள் போடப்பட்டு நெய்வார்த்து விளக்கேற்றப் படுகின்றது. இது அதிகமான வெளிச்சம் தருவதால் விசேஷமான சந்தர்ப் பங்களில் மட்டும் உபயோகப்படுத்தப்படுகிறது. இது சென்னைத் தொல் பொருள் காட்சி சாலையிலும் தென்காசி முதலாளி முஹம்மத் சாகிப் அவர்கள் வீட்டிலும் இருக்கின்றன.*

### 23. திருப்பதிக் கிளை விளக்கு

*இவ்விளக்குப் பித்தளையால் செய்யப்பட்டது. இது திருப்பதிக் கோயிலில் உள்ளது. இதன் உயரம் ஐந்து அடி. இதன் ஒவ்வொரு கிளையிலும் அன்னம் வைக்கப்பட்டிருக்கிறது. இது மேற்கூறிய விளக்கைப் போல் சங்கிலியில் தொங்கவிடப்படவில்லை.*

### 24. கின்னரிக் கிளைவிளக்கு

*இது மூன்றடுக்குள்ள கின்னரிக் கிளை விளக்காகும். இது 22 எண்ணுள்ள விளக்கைப் போன்ற அமைப்பையுடையது. இதில் சங்கிலிகள் தொங்கவிடப்படவில்லை. கொண்டையில் அன்னத் திற்குப் பதிலாகக் கின்னரி வைக்கப்பட்டிருக்கிறது. இது பெரும் பாலும் கோயில்களில்தான் பெரிதும் உபயோகப்படுத்தப்படுகிறது. இது சென்னைத் தொல்பொருள் காட்சி சாலையில் உள்ளது.*

### 25. அன்ன லட்சுமிக் கிளை விளக்கு

*இவ்விளக்கு அழகு பொலிய அற்புதமாக வார்க்கப்பட் டிருக்கிறது. தமிழ்நாட்டுச் சிற்பிகளின் அற்புதமான சிற்பத்திறமையை*

எடுத்துக்காட்ட இது ஒரு சிறந்த சான்றாக இலங்குகிறது. பாதத்தின் மீது மூன்று கிளைகளை அமைத்து அவைகள் பாதங்களைத் தாங்கி நிற்பதுபோல் உருவாக்கப்பட்டுள்ளது. பாதத்தின் மீது நடுவில் சிங்க உருவமும் பாதத்தினின்று நீண்டு நிற்கும் கிளைகளில் மூன்று பாவை விளக்கும் உள்ளன. சிங்கத்தின் முதுகின் மீது நடுத்தண்டு உறுதி யுடையதாகச் செய்யப்பட்டிருக்கிறது. மேலே தகழியும் அதன் கீழே நடுத்தண்டில் மூன்று சிங்கங்கள் தகழியோடு பொருந்தி முன் கால்களைத் தூக்கிக் கொண்டு நிற்கின்றன. கொண்டை நீண்டு உச்சியில் அன்னலட்சுமி அழகுடன் அமர்ந்திருப்பது போல் செய்யப் பட்டிருக்கிறது. இதன் வேலைப்பாடு போற்றத்தக்கது.

### 26. கமலக் கிளை விளக்கு

இது நமது கோயில்களில் உபயோகப் படுத்தப்படும் கற்பூரத் தட்டின் அமைப்பை அனுசரித்துச் செய்யப்பட்டுள்ளது. இவ் விளக்கின் தகழிகள் தாமரை மலர் போலவும் காணப்படுகிறது. இவ் விளக்கின் பாதம் பெரிது. இவ் விளக்கில் மூன்று பிரிவுகளும் பதினெட்டு கிளைகளும் உண்டு. ஒவ்வொரு கிளைக்கும் ஒவ்வொரு தகழியும் ஐந்து முகங்களுமாக 120 முகங்கள் உண்டு. விளக்கின் உச்சியில் ஏனைய விளக்குகளைப் போல் அன்னம் அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது.

## தூக்கு விளக்குகள்

### 27. சர விளக்குகள்

இது பித்தளையால் செய்யப்பட்டுள்ளது. நமது நாட்டிலுள்ள பெரும்பாலான கோயில்களின் கருவறையின் முன் வாயிலின் முன் இந்த சரவிளக்குகள் இருக்கும். இது இரவு நேரங்களில் கோயிலினுள் வெளிச்சம் அளிப்பதோடு மட்டுமின்றி அழகுடனும் திகழ்கிறது. இவ்விளக்குகளின் நடுவில் துவாரமிட்டு அதில் இரும்புக் கம்பிகளை யிட்டு அடுக்கடுக்காய் விளக்குகளை இணைந்து நெய் வார்த்து திரியிட்டு விளக்கேற்றுகிறார்கள். இது தூக்குவிளக்கு வகையைச் சேர்ந்தது.

### 28. நந்தா விளக்கு

இது அன்னம் வைத்த நந்தா விளக்காகும். இவைகள் கோயிலில் மட்டுமன்றி வீடுகளிலும் சுவாமிகளின் உருவத்தின் முன்னரோ படங்களின் பக்கத்திலோ, இவ்விளக்குகள் தொங்க விடப்பட்டிருக்கும் இதை அணையாது இரவும் பகலும் எரியச் செய்கின்றனர். இவ்விளக்கு மேலே சங்கிலியும் வளையமும் இட்டு கூரையிலுள்ள வளையத்தில் தொங்கவிட்டிருப்பர். சங்கிலியின் கீழே அன்னம் அழகாக அமர்ந்திருக்கும். அன்னம் வையாத நந்தா விளக்கு

களும் உண்டு. அன்னத்தின் கீழேயுள்ள கலயத்தில் எண்ணெய் வார்க்கப்பட்டிருக்கும். அதிலிருந்து சிறிது சிறிதாக எண்ணெய் தகழிக்கு வருகிறது.

**29. சங்குத் தூக்கு விளக்கு**

இவ்விளக்கு எங்கு இன்று உபயோகப் படுத்தப்பட்டாலும் பண்டைய தமிழகத்தில் நெய்தல் நில மக்கள் கண்ட சங்கு விளக்கி லிருந்து அபிவிருத்தி அடைந்த ஒரு விளக்காகவே கருதப்படும். இதன் மேலே அழகிற்காக ஒரு அன்ன உருவம் அமைக்கப்பட்டிருக் கிறது. இது 17ஆம் நூற்றாண்டில் தென் இந்தியாவில் உபயோகப் படுத்தப்பட்ட பித்தளையால் செய்யப்பட்ட விளக்கேயாகும்.

**30. சாதாரண தூக்கு விளக்கு**

இது எனது சேகரிப்பில் உள்ளது. இவ்விளக்கு கோயில்களில் உண்டு. இவ்விளக்கு பெரிதும் வணிகர்கள் கடைகளில் உப யோகித்து வந்தனர். இது அடியில் அகன்ற பாதமும் அதன் மேல் குத்து விளக்கைப் போல் தண்டில்லாமல் தகழி வைத்து மேலே சங்கிலி கோர்க்கப்பட்டிருக்கிறது. தகழிக்கு மேல் அன்னம் வைத்த தூக்கு விளக்குகளும் உண்டு.

**31. சங்கிலி வால் விளக்கு**

இது பித்தளையால் செய்யப்பட்டது. இவ்விளக்கு நீண்ட நுனியில் ஒரு பறவையின் கழுத்தைப் போன்ற உருவம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. நடுவில் எண்ணெய் தேங்கி இருக்க ஒரு கலயமும் அதனுள் சங்கிலியால் பிணைக்கப்பட்ட கரண்டியும் பக்கத்தில் உள்ள குழியில் திரிகளும் உள்ளன. இதன் ஒரு பக்கத்து நுனி கைப்பிடியாக உபயோகப்படுத்தப்படுகிறது. மறு பக்கத்தில் உள்ள ஏனைய விளக்குகளுக்கு எண்ணெய் வார்க்கவும் திரியிடவும் ஒரு சாதன விளக்காகப் பயன்படுகிறது இதனைச் சோதி தீபம் என்று சிலர் கூறுகின்றனர். இது உரோமர் நாட்டிலிருந்தோ இத்தாலி நாட்டிலிருந்தோ வந்திருக்கலாம் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் விளக்கு ஆராய்ச்சி நிபுணர்கள் இது தமிழ்நாட்டு விளக்கே என்று உறுதி கூறுகின்றனர்.

**32. தொம்பைத்தூக்கு விளக்கு**

இது கழைக்கூத்தாடும் ஒரு தொம்பச்சியின் உருவில் அமைக்கப்பட்ட ஒரு அரிய தூக்கு விளக்காகும். இத் தொம்பைப் பெண் நிற்கும் நிலை நாட்டிய நூலில் நவிலப்பட்ட நூற்றெட்டுக் கரணங்களில் ஒன்றாகக் காணப்படுகிறது. இது முற்காலத்தில் நடை பெறும் இசைக் கச்சேரிகளில் உபயோகப்படுத்தப்பட்ட விளக்காக இருக்கலாம் என்று எண்ணுகிறேன். இத்தகைய விளக்குகளை இன்று

காண்பதரிது. இது பித்தளையால் செய்யப்பட்டு மேலே சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ளது.

### 33. தூண் விளக்கு

இது கோபுரம் போன்ற தீபஸ் தம்பமாகத் திகழ்கிறது. இது கேரள நாட்டைச் சேர்ந்த குருவாயூர், குருவாயூரப்பன் கோயில் முன்னுள்ள தூண் விளக்காகும். இது சுமார் 20 அடி உயரம் இருக்கும். பித்தளையால் செய்யப்பட்ட பெரிய விளக்காகும். இவ்விளக்கே திருவிளக்குகளில் எல்லாம் பெரிது. விளக்கிட்டால் வெளிச்சம் பல கல் தொலைவுக்குத் தெரியும். இந்த விளக்கை ஏற்ற எப்பொழுதும் இதனோட ஒரு பெரிய ஏணியும் இணைக்கப்பட்டிருக்கிறது.

### 34. தீபச் சட்டங்கள்

இந்தத் தீபச் சட்டங்கள் பெரிதும் கேரளாவிலே உள்ளன. இது கோயில் பிரகாரங்களில் குறுக்கும் நெடுக்குமாக பல மரச் சட்டங்களை அடித்து அதில் அடுக்கடுக்காய், அணி அணியாய் உலோகத்தால் செய்யப்பட்ட சிறு அகல் விளக்குகள் ஆயிரக்கணக் காகப் பொருத்தப்பட்டிருக்கின்றன. இவ் விளக்குகள் குறிப்பிட்ட விழாக்களிலும் சிறப்பாக லட்ச தீபநாளிலும் பொருத்தப்படு கின்றன. இத்தகைய விளக்குகள் திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோயிலில் மிக அழகாக அமைக்கப்பட்டுள்ளன. இலட்ச தீபார்ச் சனையின் பெருமையை இங்குதான் காண வேண்டும்.

### 35. ஏழு தட்டுத் தூண் விளக்கு

இது பித்தளையால் செய்யப்பட்டது. இதனை ஏழுதட்டுத் தூண் விளக்கு என்று கூறுகின்றார்கள். இது சுமார் ஐந்தடிக்கு குறையாது இருக்கும். இது கேரளாவில் உள்ள தூண் விளக்கின் அடிப்படையில் வார்க்கப்பட்ட பெரிய கோயில் விளக்காகும்.

### 36. கலங்கரை விளக்கு

இது கடற்கரையில் பண்டைக் காலத்தில் கல்லாலும் கதை யாலும் கோபுரம் போல் கட்டப்பட்டு மேலே பழைய துணிகளை யிட்டு எண்ணெய் வார்த்தும் பெரிய மரக்கட்டைகளைப் போட்டும் எரித்து வெளிச்சம் உண்டாக்குகின்றனர். இதனைக் கலங்கரை விளக்கு என்பர். இது இருட்டில் கடலில் கப்பலோட்டிச் செல்லும் மாலுமிகளுக்கு கரையைக் காட்டவும் துறை முகத்தை உணர்த்தவும் வேறு பல காரியங்களுக்கும் பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்த விளக்குகள் மாமல்லபுரம், நாகப்பட்டினம், காவிரிப் பூம்பட்டினம், காயல், கொற்கை, உவரி, விழிஞம், முசிரி போன்ற இடங்களில் இருந்து வந்தன.

## பாவை விளக்குகள்

### 37. பாவை விளக்குகள்

இது பித்தளையால் வார்க்கப் பெற்றது. சென்னைத் தொல் பொருள்காட்சி சாலையில் உள்ளது. இதன் உயரம் 14 அங்குலம். இவ்விளக்குகள் சித்திரிக்கப்பட்டிருக்கும் பாவையின் முகம் அழகாக இல்லை என்றாலும் உருவத்தின் சிற்பம் பொதுவாகச் சிறப்புடைய தாக இருக்கிறது. பீடம் சிறிது உயரமாக இருப்பினும் மிக நன்றாக அமைக்கப்பட்டிருக்கிறது.

### 38. அம்மணித் தீப லட்சுமி விளக்கு

இது தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஜோதிர்மய மகாலிங்க மூர்த்தியின் கோயிலில் உள்ளது. இது தஞ்சையில் ஆட்சி புரிந்த மகாராஷ்டிர மன்னர் சரபோஜியின் தம்பி பிரதாப சிம்மனின் மாமன் மகள் பிரதாபன் மீது கொண்ட காதல் நிறைவேறாததால் சிவபக்தி கொண்டு வாழ்நாளின் இறுதி வரைக் கன்னியாகக் காலம் கழித்து இறந்துபோனாள். அவள் உயிரோடு இருக்கும் பொழுது சிவப் பணியை நிரந்தரத் திருப்பணியாக்க எண்ணி கி.பி. 1775ஆம் ஆண்டு ஆனித் திங்கள் 22ஆம் நாளில் தம் உருவில் ஒரு பாவை விளக்குச் செய்து அதைச் சிவபெருமான் சந்நிதியில் வைத்து கையில் இருக்கும் அகலில் அன்றாடம் திரியிட்டு நெய்வார்த்து விளக்கேற்றல் நிபந்தம் அளித்துள்ளார். இவ்வுருவில் அணிவிக்கப்பட்டிருக்கும் அணிகள் அனைத்தும் தமிழ்நாட்டு அணிகளேயாகும்.

இந்தச் சிற்ப வடிவில் தமிழ்நாட்டுச் சிற்பியின் செழுங்கை களில் தாதுப் பொருள்கள் மெழுகென நெகிழ்ந்து கொடுத்திருக் கிறது. அவர்கள் கூரிய உளிகள் அவர்களின் உள்ளத்தில் எழுந்த எண்ணம் உருவக் கலையாகவும் படிமமாகவும் வார்த்தும் செதுக்கி யும் இருக்கிறது. இதை வடித்தெடுத்த சிற்பி தஞ்சை மாவட்டத்தில் பிறந்த அரிய புத்திர பத்தர் என்பவராகும்.

### 39. தீபலட்சுமி விளக்கு

இது பித்தளையால் வார்க்கப்பட்டது. இதன் உயரம் 12½ அங்குலம். இது மிக அழகாகச் செய்யப்பட்டுள்ளது. இதன் சீரிய கண்களும் சிறிய இடையும் செப்பு மார்பும் சிறந்த முகமும் கட்டு வாய்ந்த உடலும் இது ஒரு கிராமப் பெண்ணின் உருவம் போல் காணப்படுகிறது. அணிகள் அதை உறுதிப்படுத்துகின்றன. இவ் விளக்கின் பீடமும் எழிலுற இலங்குகின்றது. இது சென்னைத் தொல்பொருள் காட்சி சாலையில் உள்ளது.

### 40. காமாட்சி அம்மன் விளக்கு

பாவை விளக்கைக் காமாட்சி அம்மன் விளக்கென்றும் தீப லட்சுமி விளக்கென்றும் கூறுகிறார்கள். இது தஞ்சை மாவட்டத்தில்

உள்ள வைத்தியநாத சுவாமி சன்னதியில் உள்ளது. இது மிக அழகிய பாவை விளக்காக மதிக்கப்படுகிறது. இது கி.பி. 1875ஆம் ஆண்டில் செய்யப்பட்டது. இதன் உயரம் சுமார் 4½ அடி இருக்கும். இதன் எடை 411 3/4 சேர், இது பித்தளையால் வார்க்கப்பட்டது. இவ் வுருவில் சிறிய தோடுகளும் சிமிக்கிகளும் இதர காதணிகளும் அஜந்தா ஓவியத்தில் காணும் அழகிய ஆடைகளும் அமராவதிச் சிற்பத்தில் காணும் சூடாமணியும் காலணிகளும் அழகிற்கு அழகு செய்வதுபோல் சிறப்புடன் காணப்படுகிறது.

### 41. தீபலட்சுமி விளக்கு

இது சென்னைக்கு மேற்கே 13 கல் தொலைவில் உள்ள திருமுல்லைவாயில் என்னும் ஊரில் உள்ள மாசிலாமணி ஈசுவரர் கோயிலில் உள்ள அழகிய பாவை விளக்காகும். இது முன்னர் தொண்டை நாட்டில் ஒரு பகுதியாக இருந்தது. அம்பிகையின் பெயர் கொடியிடை நாயகி. ஒரு காலத்தில் இங்கு சோழர், பாண்டியர் விஜய நகர மன்னர்களின் ஆட்சி நடைபெற்று வந்தன என்பதற்குச் சான்றுகள் உள. இக் கோயிலில் இரண்டு எழில்தரும் பாவை விளக்குகள் உள்ளன. இதன் முன்னழகும் பின்னழகும் போற்றத்தக் கனவாகச் செய்யப்பட்டுள்ளன. இது சுமார் 4 அடி உயரம் இருக்கும். ஒரு பக்தை தனது உருவத்தைச் செய்து எப்பொழுதும் ஆண்டவன் சந்நிதியில் தீபம் ஏந்தி நிற்கும் பேறு பெற எண்ணி, தனது உருவத்தைச் செய்து கையில் அகல் ஏந்தி இருக்குமாறு செய்து நாடோறும் விளக்கேற்ற, நெய்க்கும் திரிக்கும் மானியம் விட்டிருக் கிறாள். இவ்விளக்கு மிக அழகாகச் செய்யப்பட்டுள்ளது.

## மண்ணெண்ணெய் விளக்கு

### 42. தகர விளக்கு

இது 40 ஆண்டுகளுக்கு முன்னர் பித்தளைக் கை விளக்கிற்குப் பதிலாக வந்த விளக்காகும். இது மண்ணெண்ணையால் எரியும். ஏழை எளியவர்கள் இல்லங்களில் இவ்விளக்கே பெரிதும் உப யோகப்படுத்தப்பட்டு வந்தது.

### 43. அரிக்கன் விளக்கு

தகர விளக்கிற்குப் பின் தகரத்தினால் செய்யப்பட்டு கண்ணாடி மூடி போட்ட சுவரொட்டி விளக்கும் அதன் பின்னர் மேனாட்டி லிருந்து அரிக்கன் லைட், பவர் லைட் போன்றவைகளும் வந்தன.

### 44. பெட்ரோ மாக்ஸ் விளக்கு

காற்றும் கலந்து எரியும் கேஸ்லைட், பெட்ரோமாக்ஸ் லைட்கள் பின்னர் வந்தன.

**45. ஆவி விளக்குகள்**

*அப்பால் ஆவியின் சக்தியினால் எரியும் வாயு விளக்குகள் வந்தன.*

**46. சுண்ண விளக்கு**

*இது மேனாட்டார் மின் விளக்கிற்கு முன் கண்ட விளக்காகும்.*

**மின் விளக்குகள்**

**47. கரிக் கம்பி விளக்கு**

**48. சூட்டன் கம்பி விளக்கு**

**49. நியான் காற்றடைத்த விளக்கு**

**50. காற்றடைத்த ஆவி விளக்கு**

**51. பாதரச ஆவி விளக்கு**

# இந்நூல் எழுத உதவியாக இருந்த நூற்கள்


| | | |
|---|---|---|
| ***அகநானூறு*** *(சங்க இலக்கியம்)* | : | *சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு* |
| ***களவழி நாற்பது*** *(உரையும்)* | : | *ந.மு. வெங்கடசாமி நாடார்* |
| ***கார்நாற்பது*** *(மூலமும் உரையும்)* | : | *(மதுரைக்கண்ணன் கூத்தனார்) க.ரா. கோவிந்தராஜ முதலியார்* |
| ***கார்த்திகைப் புராணம்*** | : | *மு. சோமசுந்தரம் பிள்ளை* |
| ***சிலப்பதிகாரம்*** | : | *இளங்கோவடிகள் (அடியார்க்கு நல்லார் உரையுடன்)* |
| ***சீவக சிந்தாமணி*** | : | *திருத்தக்கத்தேவர்* |
| ***சூடாமணி நிகண்டு*** | : | *மண்டல புருடன்* |
| ***சைவத்தின் சமரசம்*** | : | *திரு.வி. கல்யாண சுந்தர முதலியார்* |
| ***தாயுமான சுவாமிகள் பாடல்*** | : | *(மூலம்) ஆறுமுக நாவலார்.* |
| ***திருவருட்பா*** | : | *சமரச சுத்த சன்மார்க்க சங்கம்* |
| ***திருவாசகம்*** | : | *மாணிக்கவாசக சுவாமிகள்* |
| ***திருவிளையாடற் புராணம்*** | : | *ஆறுமுக நாவலர்* |
| ***திருமுருகாற்றுப் படை*** *(மூலமும் உரையும்)* | : | *ஆறுமுக நாவலர்* |
| ***திருத்தாண்டகம்*** | : | *திருமங்கை ஆழ்வார்* |
| ***திருமந்திரம்*** | : | *திருமூலர்* |
| ***திருவிசைப்பா*** | : | *திருமாளிகைத் தேவர்* |
| ***திருவாய்மொழி*** | : | *இராமசுவாமி நாயுடு* |
| ***தேவாரம்*** | : | *திருநாவுக்கரசு சுவாமிகள்* |

| | | |
|---|---|---|
| **தேவாரம்** | : | *திருஞானசம்பந்த சுவாமிகள்* |
| **தேவாரம்** | : | *சுந்தரமூர்த்தி சுவாமிகள்* |
| **நற்றிணை** | : | *பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் பதிப்புரை* |
| **நெடுநல்வாடை** | : | *(பா. நலன்) கோதண்டபாணிப் பிள்ளை* |
| **மதுரைக் காஞ்சி** | : | *மாங்குடி மருதனார் (பத்துப்பாட்டு)* |
| **மலைபடுகடாம்** | : | *பொ. வே. சோமசுந்தரனார் (விளக்க உரையுடன்)* |
| **மணிமேகலை** | : | *ந.மு. வேங்கடசாமி நாடார் (உரையுடன்)* |
| **முல்லைப்பாட்டு** | : | *பொ.வே. சோமசுந்தரனார் (விளக்க உரையுடன்)* |
| **முருகன்** | : | *திரு.வி. கலியாணசுந்தர முதலியார்* |
| **பரிபாடல்** | : | *டாக்டர். உ.வே. சாமிநாத ஐயர் பதிப்பு* |
| **பழந்தமிழர் நாகரிகம்** | : | *திரு.கா. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ. எம்.எல்.* |
| **புறப்பொருள் வெண்பா மாலை** | : | *உ.வே. சாமிநாத ஐயர் பதிப்பு* |
| **பெரிய புராணம்** | : | *ஆறுமுக நாவலர்* |
| **பெரும்பாணாற்றுப்படை** | : | *பொ.வே. சோமசுந்தரனார்* |
| **பெருங்கதை** | : | *டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர்* |
| **பைபிள்** | : | *(தமிழ் மொழிபெயர்ப்பு)* |
| **விளக்கின் கதை** | : | *அ. நடராஜன். பி.எஸ்.சி.* |
| **வைத்தீசுவரன் கோவிற் புராணம்** | : | *சு. இராசமாணிக்க பிள்ளை* |
| **Ancient Jaffna** | : | Mudaliar C.R. Rasanayagam, C.C.S., |
| **Ancient Dravidians** | : | T.R. Sesha Iyengar, M.A., |

| | | |
|---|---|---|
| **Art and Crafts of Travancore** | : | Dr. Stella Kramrisch |
| **Colas** | : | K.A. Neelakanta Sastry |
| **Encyclopaedia of Britanica** | | |
| **History of Tamils** | : | P.T. Srinivasa Iyengar, M.A., |
| **Indian Metal Sculpture** | : | Chintamoni Kar |
| **Indian Shipping** | : | Radha Kumuth Mukerji |
| **Kassiles** | : | R.H. Hall |
| **Lamps of India** | : | D.G. Kelkar |
| **Mahavamsa** | : | The or The great Chronicle of Ceylon - Wilhelm Geiger Ph. D., |
| **Sinhalese Medival Art** | : | Dr. Ananda K. Coomaraswamy |
| **Sucintram Temple** | : | K.K. Pillai |
| **Screpture History** | : | |
| **South Indian Lamps** | : | O.C. Kangoly (The Journal of Indian Art - London) |
| **Srikarnam** | : | (Sivagamam) |
| **The story of the Lamp** | : | F.W. Robins |
| **Travels in Asia & Africa** | : | Ibn Battuta. Translated by H.A. R. Gibb |
| **Omens and Beliefs of the Early Tamils** | : | Vidwan G. Subramania Pillai M.A., B.L., |
| **Illustrations of Metal works in Brass & Copper. Morstel South India** | : | by Edcar Thurstor & C.I.E Velayudha Asary |
| **Historical Inscriptions of South India** | : | Robert Sewell |
| **History of Indian & Indonesian Art** | : | Dr. Ananda K. Coomaraswam |

## Journals & Periodicals

| | | |
|---|---|---|
| **Hindu** | : | Madras |
| **Indian Art & Letters** | : | The India Society London<br>Journal of the Indian Society<br>of Oriental Art, Calcutta. |
| **MARG** | : | Edited by Dr. Mulk Raj Anand,<br>Bombay. |
| ***கலைமகள்*** | *:* | *சென்னை* |
| ***கல்கி*** | *:* | *சென்னை* |
| ***மஞ்சரி*** | *:* | *சென்னை* |

❖❖❖❖

## நுண்கலைச் செல்வர் சாத்தான் குளம்

# அ. இராகவன் தொகுதிகள்

சமூகச் சீர்திருத்தம்

1. குடியரசுக் கட்டுரைகள்

பண்பாட்டு வரலாறு

2. தமிழர் பண்பாட்டில் தாமரை
3. தமிழ்நாட்டு திருவிளக்குகள்
4. தமிழக சாவகக் கலைத்தொடர்புகள்
5. இறைவனின் எண்வகை வடிவங்கள்
6. வேளாளர் வரலாறு

தொழில்நுட்ப வரலாறு

7. நம்நாட்டுக் கப்பற்கலை
8. தமிழ்நாட்டு அணிகலன்கள்
9. தமிழ்நாட்டு படைகலன்கள்
10. தென்னிந்திய கோயில் கட்டிடகலை
11. இசையும் யாழும்

தொல்பொருள் ஆய்வு

12. கோநகர் கொற்கை
13. ஆதிச்ச நல்லூரும் பொருநைவெளி நாகரிகமும்

தமிழியல் ஆய்வு

14. அறிவு இதழ்க் கட்டுரைகள்
15. ஆய்வுக் கட்டுரைகள்

(இதுவரை தொகுக்கப்படாதவை)

## குறிப்புகள்